பல்கலைக்கழகத் தலைவர் பிறந்த நாளையொட்டி (30 ஜூன் 2022)

திருமந்திரத்தில் இடைச்சொற்கள்

முனைவர் கீ அருள்ஜோதி

ஆய்வேட்டின் நூல்வடிவு

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை 600 095.

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை - 600 095.

தமிழ்த்துறை வெளியீடு எண் : 4

திருமந்திரத்தில் இடைச்சொற்கள்

(ஆய்வேட்டின் நூல்வடிவு)

திருமந்திரத்தில் இடைச்சொற்கள்

முனைவர் கீ அருள்ஜோதி

சென்னைப் பல்கலைக்கழக
முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் நூல்வடிவு

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை 600 095.

திருமந்திரத்தில் இடைச்சொற்கள்

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

வெளியீடு:
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயில், சென்னை – 600 095

ஜூன் 2022

Funded by:
Na Subbu Reddiar 100 Educational Trust
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai - 600 040

ISBN 978-93-950540-0-3

Printed at:
DJ Printers, Chennai – 600 095

திருமந்திரத்தில் இடைச்சொற்கள்

பொருளடக்கம்

இயல்	தலைப்பு	பக்கம்
	முன்னுரை	1-6
ஒன்று	திருமந்திரம் அறிமுகமும் இடைச்சொல் வரலாறும்	7-99
இரண்டு	திருமந்திரத்தில் புணரியல், வினைசெயல், வேற்றுமை இடைச்சொற்கள்	100-178
மூன்று	திருமந்திரத்தில் அசைநிலை, இசைநிறை இடைச்சொற்கள்	179-210
நான்கு	திருமந்திரத்தில் தத்தம் குறிப்பு, ஒப்பியல், பிற இடைச்சொற்கள்	211-265
	நிறைவுரை	266-271
	துணைநூற்பட்டியல்	272-281
	பின்னிணைப்புகள்	1-13

முன்னுரை

“என்னை இறைவன் நன்றாக படைத்தனன்

தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே”

சங்க இலக்கியத்திற்கு அடுத்ததாக வைத்துப் போற்றப்படுவது பக்தி இலக்கியம். அது ஒரு புதுவகையான இலக்கியம் என்று கூறலாம். சைவம் தழைத்தோங்க பல சித்தர்கள், யோகிகள், ஞானிகள் போன்றோர் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்து பெரும் பங்காற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு மூவாயிரம் பாடல்கள் திருமூலரால் பாடப்பெற்றதே இத்திருமந்திரம் என்பர். தமிழ் வேதாகமத்திற்கு முழுமுதற் கருவூலமாகத் திகழ்வதோடு யோகநெறியைக் கூறும் தமிழ் மக்களின் ஒரே நூலாகவும் விளங்குவது திருமந்திரமேயாகும். இதனை முதல் நூலாகக் கொண்டு, பதினான்கு சித்தாந்த நூல்களும் எழுந்தன என்பர்.

இந்நூல் ஏனைய சமய இலக்கியத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்து சமய உண்மைகளையும் உலகியல் ஒழுக்கங்களையும் கூறுகின்றது. சித்தாந்தம் என்ற தொடரை முதன் முதலில் பயன்படுத்தியது திருமந்திரமாகும். தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற மூன்று பரிணாமங்களில் இத்திருமந்திரம் அமைந்துள்ளன. இந்நூல் மனித வாழ்வில் ஒற்றுமையைச் சேர்த்து உடல், உள்ள வளத்திற்கு வழிவகுக்கின்றன. அத்தகையச் சிறப்பு வாய்ந்த இத்திருமந்திரத்தை இலக்கண அடிப்படையில் நோக்குவதாக இந்த ஆய்வு அமைகிறது.

ஒரு மொழியின் வளத்திற்கு சிறந்த இலக்கண கட்டமைப்பு என்பது அவசியமாகும். உலக மொழிகளுள் ஒன்றான தமிழ்மொழியில் சிறந்த இலக்கண நூல்கள் தோன்றி வளம் சேர்த்திருக்கின்றன. எழுத்து, சொல்,

பொருள் என்ற மூன்றிற்கும் முழுமையான இலக்கணம் கண்ட தொல்காப்பியத்தின் அடிப்படையில் இடைச்சொற்களின் வரலாறு பற்றி இவ்வாய்வில் முழுமையாக ஆராயப்பெற்றுள்ளன.

இடைச்சொல் என்பது பெயருக்கும் வினைக்கும் ஒரு இணைப்புச்சொல்லாக முன்னும், பின்னும், இடையிலும் வந்து பொருள் தருகின்றன. பெரும்பான்மையாக இடையில் வந்து பொருள் தருவதால் இடைச்சொல்லாயிற்று என்று சேனாவரையர் உரைவிளக்கம் தருகிறார். அதே கருத்தை நச்சினார்க்கினியரும் ஏற்றுக் கூறியுள்ளார். எந்தவொரு கருத்தும் இடைச்சொல்லின்றி அதன் பொருள் முழுமைப்பெறாது. அந்த வகையில் பக்தி மொழியின் கருவூலமாகவும், சமூக இலக்கியமாகவும், அறச்சிந்தனையை வளர்க்கும் நீதி நூலாகவும் அமைந்துள்ள இத்திருமந்திரத்தில் மொழியின் அடிப்படைத்தளமான இலக்கண நோக்கில் ஆராய்வது மிக அவசியமான ஒன்று. இதன் அடிப்படையில் திருமந்திரத்தில் இடைச்சொற்களின் தன்மையினை கண்டறிந்து மொழியின் வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வு அமைகிறது.

ஆய்வின் நோக்கம்

திருமூலரின் திருமந்திரப் பாடல்களில் தொல்காப்பியரின் இடைச்சொற்களைக் கண்டறிந்து பகுத்துப்பார்த்து விளக்குவதே இந்த ஆய்வின் முதன்மையான நோக்கம் ஆகும்.

கருதுகோள்

பெயருக்கும் வினைக்கும் இடையில் வந்து பொருள் உணர்த்துவதால் இடைச்சொல் என்கிறோம். மேலும், இடைச்சொல் தனித்து நின்று அகராதிப் பொருண்மையைச் சுட்டுகின்றன. இவ் இடைச்சொற்கள் முற்காலத்திலும்

பிற்காலத்திலும் தத்தம் காலச் சூழலுக்கேற்ப எவ்வாறு பயின்று வந்துள்ளன என்பது இவ்வாய்வின் கருதுகோளாக முன் வைக்கப்படுகிறது.

ஆய்வு எல்லை

பக்தி இலக்கியத்தின் சைவக் கருவூலமாக விளங்கக்கூடிய சுப. அண்ணாமலை செய்த திருமந்திர மூலப்பாட ஆய்வுப்பதிப்பை அடிப்படையாகக் கொண்டு திருமந்திரத்தின் முதல் ஐந்நூறு பாடல்களை இந்த ஆய்வு எல்லையாக கொண்டிருக்கிறது.

ஆய்வு மூலங்கள்

சுப. அண்ணாமலையின் திருமந்திர மூலப்பாட ஆய்வுப்பதிப்பு பாடல்களும் அதற்குரிய சுருக்க உரையும் தொல்காப்பிய சொல்லதிகாரம் சேனாவரையர் உரையும் இந்த ஆய்வின் முதன்மைத் தரவுகள் ஆகும்.

இந்த ஆய்வுத்தலைப்புத் தொடர்பாக பிற இலக்கண நூல்கள், மொழியியல் நூல்கள், இக்கால அறிஞர்களின் இலக்கணப்படைப்புகள், ஆய்வுக்கட்டுரைகள், இதழ்கள், கலைக்களஞ்சியங்கள், ஆய்வேடுகள் ஆகியன இந்த ஆய்விற்குரிய துணைமைத் தரவுகள் ஆகும்.

ஆய்வு அணுகுமுறை

சைவ இலக்கிய நூல்களில் ஒன்றாகிய திருமந்திரத்தில் தொல்காப்பிய இடைச்சொற்களை மையப்படுத்தி ஆராயும் இந்த ஆய்வு விளக்கமுறை, திறனாய்வு முறை, பகுப்பாய்வுமுறை ஆகிய அணுகுமுறைகள் பின்பற்றியுள்ளன.

ஆய்வுப்பகுப்பு

"திருமந்திரத்தில் இடைச்சொல்" என்னும் தலைப்பிலான இந்த ஆய்வேடு முன்னுரை, நிறைவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

இயல் ஒன்று	-	**திருமந்திரம் அறிமுகமும் இடைச்சொல் வரலாறும்**
இயல் இரண்டு	-	**திருமந்திரத்தில் புணரியல், வினை செயல், வேற்றுமை இடைச்சொற்கள்**
மூன்று	-	**திருமந்திரத்தில் அசைநிலை, இசைநிறை இடைச்சொற்கள்**
இயல் நான்கு	-	**திருமந்திரத்தில் தத்தம் குறிப்பு, ஒப்பியல், பிற இடைச்சொற்கள்**
		நிறைவுரை
		துணைநூற்பட்டியல்
		பின்னிணைப்புகள்

முன்னுரை

முன்னுரையில் ஆய்வின் நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு மூலங்கள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுப்பகுப்பு ஆகியன பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இயல் ஒன்று

"திருமந்திரம் அறிமுகமும் இடைச்சொல் வரலாறும்" என்னும் இவ்வியலில் திருமூலரின் வரலாறு, காலம், நூல் அமைப்பு, பக்தியின்

உயர்ச்சிறப்பு, பிற நூல்களில் திருமந்திரத்தின் சொல்லாட்சி, சொல்-பொருள், வரையறை, அதன் வகைகள், பாகுபாடுகள், இடைச்சொல்லின் பொருள், அமைப்பு, எண்ணிக்கைகள், அதன் பாகுபாடுகள், இலக்கண உரையாசிரியர்கள், மொழியியல் அறிஞர்களின் கருத்துக்கள், இடைச்சொல்லின் தனிச்சிறப்புகள் போன்ற இடைச்சொல் வரலாறு பற்றிய செய்திகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இயல் இரண்டு

"திருமந்திரத்தில் புணரியல், வினைசெயல், வேற்றுமை இடைச்சொற்கள்" என்னும் இரண்டாம் இயலில் இவற்றிற்கான பொருள், பிற இலக்கண நூல்களோடு ஒப்பிட்டு அதன் எண்ணிக்கைகள், உரையாசிரியர், மொழியியல் அறிஞர், இலக்கண நூலார் ஆகியோரின் கருத்துக்களோடு திருமந்திரத்தில் இவ்விடைச் சொற்களின் சாரியைகள், காலம் காட்டும் இடைச்சொற்கள், வேற்றுமை உருபுகள் ஆகிய செய்திகள் விளக்கமுறையில் கண்டறிந்து தரப்பட்டுள்ளன.

இயல் மூன்று

"திருமந்திரத்தில் அசைநிலை, இசைநிறை இடைச்சொற்கள்" என்பது மூன்றாம் இயலாகும். இவ்வியலில் அசை, இசைநிறைக்கான பெயர், பொருள், ஆகியவற்றோடு திருமந்திரத்தில் இடைச்சொற்களுக்கான பொருள், சான்று, பயன் இதனோடு பொருள் மாற்றம் இருப்பின் அவ்விடத்தில் சீரின் அசைக்காகவும் இசைநிறைக்காகவும் வருவதை இவ்வியலில் கண்டறிந்து சான்றுகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல் நான்கு

"திருமந்திரத்தில் தத்தம் குறிப்பு, ஒப்பியல், பிற இடைச்சொற்கள்" என்னும் நான்காவது இயலில் தத்தம் குறிப்புப்பொருள் தரும்

இடைச்சொற்களுக்கும் ஒப்பின் வழியால் வரும் உவமஉருபு இடைச்சொற்களுக்கும் பொருள், வரையறை, பிற இலக்கண நூற்களின் எண்ணிக்கை பகுப்போடு உரையாசிரியர், இலக்கண நூலார் கருத்துக்கள் கொண்டு திருமந்திரத்தில் கண்டறிந்து சான்றுகளுடன் எடுத்துக்காட்டுவதாக இவ்வியல் அமைக்கப்பட்டுள்ளன.

நிறைவுரை

மேற்கண்ட நான்கு இயல்களிலும் கூறப்பெற்றுள்ள ஆய்வு முடிவுகள் இந்த நிறைவுரைப் பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மேலும் மேலாய்வுக்கான களங்களும் சுட்டப்பெற்றுள்ளன.

இந்த ஆய்வேட்டில் உள்ள நான்கு இயல்களிலும் உள்ள திருமந்திரப்பாடல் மேற்கோள்களின் நூல் எண்கள் அந்தந்த மேற்கோளுக்கு அருகிலேயே அடைப்புக் குறியீட்டிலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வேட்டின் நான்கு இயல்களிலும் சுருக்கக் குறியீட்டு விளக்கப் பகுதியில் குறிக்கப்பட்டுள்ள சுருக்கக் குறியீடுகள் ஆய்வு முழுவதும் ஆங்காங்கே தரப்பெற்றுள்ளன.

ஆய்விற்குதவிய நூல்கள், ஆய்வேடுகள் முதலியன துணைநூற் பட்டியலில் தரப்பெற்றுள்ளன.

ஆய்விற்குதவிய பிற தகவல்கள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல் – ஒன்று

திருமந்திரம் அறிமுகமும் இடைச்சொல் வரலாறும்

காலந்தோறும் உருவான தமிழிலக்கியங்களுள் பக்தி இலக்கியங்களுக்கு முக்கியப் பங்குண்டு. அவற்றுள் பன்னிருத் திருமுறை என்பது சைவர்கள் போற்றக்கூடிய நூல்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இதில் உள்ள பத்தாம் திருமுறையான திருமந்திரம் மிகவும் போற்றப்பட வேண்டிய நூலாகும். சைவத்தின் பெருமை பேசுவதை அடிக்கருத்தாகக் கொண்டாலும், மக்களுக்கான வாழ்வியலையும் வாழ்வியல் சார்ந்த முறைகளையும் கூறக்கூடிய ஒரு நூலாக விளங்குகிறது. குறிப்பாக, மெய்ஞானம், தத்துவம், வாழ்வியல், மருத்துவம், கணிதம் (காலம், வயது தொடர்பானவை) போன்ற பல்வேறு வகையான துறைகள் சார்ந்த ஒரு அறிவுக் களஞ்சியமாக இத்திருமந்திரம் விளங்குகிறது. ஒரு நூல் புகழ்பெறுவதற்கு நூலில் உள்ள கருத்துக்கள் எந்தளவிற்கு முக்கியமோ அந்தளவிற்கு, கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய மொழியமைப்பும் அவ்வமைப்பில் பின்பற்றப்பட்டுள்ள இலக்கண முறைகளும் முக்கியம் எனலாம். அவ்வாறு தமிழ்மொழியின் இலக்கணக் கூறுகளையும் மக்களின் வாழ்வியலையும் ஒன்றாகக் கூறிய முதல் தமிழ்நூல் தொல்காப்பியமாகும்.

மேலும் மக்களைப் பற்றி பாடாமல் இறைவனை நினைத்துப் பாடுவது பக்தி இலக்கியமாகும். புலவர் பெருமக்களின் இறையனுபவம் அவர்களுடைய பாடல்களில் வெளிப்படும். பக்திப்பாடல்கள் பாடுபவர்களை மெய்யுணர்வாளர்கள் என்று அழைப்பர். இவர்களின் உயிர்த்துடிப்பு இறைத்துடிப்பு என்று ஆணித்தரமாகக் கூறலாம். தாம் பெற்று அனுபவித்த தெய்வ அனுபவத்தை தாம் பெற்றதோடு மட்டும் நில்லாமல், பிறரும் அனுபவிக்கச் சிறந்த தத்துவார்த்தக் கவிதைகளைத் தம் படைப்புகளில் உருவாக்கியுள்ளனர். இவர்களை அருட்கவிஞர்கள் என்றும் கூறலாம். மேலும்,

“யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”[1]

என்று அருள்நோக்கில் கூறியிருப்பது பக்தியின் வளர்ச்சிப்பெருக்கை காண்பிக்கிறது. மெய்மையாளனாகிய இறைவனைப் பாடினால் இவ்வுலக வாழ்க்கைக்குரிய பொருட் செல்வத்தோடு மறுமை நலனும் வாய்க்கும். இது போன்ற நல்லதொரு கருத்தைச் சமூகத்திற்கு பக்தியின் வழி உணர்த்திச் சென்றுள்ளார் திருமூலர். இத்திருமந்திர வரிகளுக்கேற்பத் தமிழ் பக்தி இலக்கியத்தில் சைவ இலக்கியம் அதிக வளர்ச்சி அடைந்துள்ளது எனலாம்.

பக்தி இயக்கம் வளர்வதற்கு இந்நூல் துணை செய்தது. ஒவ்வொரு பாடலும் 4 அடிகளைக் கொண்டு இந்நூல் திருமந்திரம் என்ற தலைப்பிற்கு ஏற்றவாறு மந்திரம் போல் சுருக்கமான சொற்களில் மிகவும் நுட்பமான பொருள்களைக் கொண்டு அமையப்பெற்றுள்ளது. யோகத்திற்கு முதன்மை கொடுத்து எழுதப்பட்ட முதல் நூலாகவும், தத்துவக் கருத்துக்களையும் சித்த வைத்தியக் கருத்துக்களையும் உள்ளடக்கிய நூலாகவும் இத்திருமந்திரம் அமைந்துள்ளது. இவை போன்று உலகிற்குத் தேவையான நற்கருத்துக்களைக் கூறிச்சென்றுள்ள இந்நூலில் தமிழ்மொழி இலக்கணக் கட்டமைப்பு அடிப்படையில் இடைச்சொல்லைக் கண்டறிந்து பொருள் புலப்படுத்திச் சுட்டிக்காட்ட வேண்டியது மிகவும் பயனுள்ள அவசியமானதாகும் என்பதை இவ்வாய்வின் மூலம் வெளிக்கொணரப்படுகிறது.

மேலும் திருமூலர் இயற்றிய திருமந்திரத்தில் உள்ள பெரும்பான்மை சொற்களும் அவசியமானதே. இடைச்சொற்களின் தன்மையை இப்பாடல்களைக் கொண்டு தனிநோக்கு, முழுநோக்கு ஆகிய அடிப்படையில் பார்க்கப்படுகிறது. உதராணமாக செய்யுள் முழுவதும் நோக்கும் விதமாக ஏகார இடைச்சொல் இறுதியில் வந்துள்ளது. இந்த வகையில் பாடல் முழுமையும் நோக்குத் தன்மையை கையாண்டவர் திருமூலர் மட்டுமே என்று கூறுவது தனிச்சிறப்பு.

திரு

திருமந்திரம் சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவதாக வைக்கப்பட்டுள்ளது. இத்தொடரை திரு, மந்திரம் என இரு சொற்களாகப் பிரிக்கலாம். திரு என்ற சொல்லுக்குப் பலபொருள் இருக்க, தெய்வத்தன்மை வாய்ந்தது என்னும் பொருளே ஏற்புடையதாகக்

கொள்ளப்படுகிறது. அவ்வாறு தெய்வத்தன்மைப் பெற்றது என்ற பொருளைத் தரும் இச்சொல் இறைவனைப் பாடும் நூலோடு சேர்த்துக் குறிக்கப்படுகிறது.

மந்திரம்

மந்திரம் என்னும் சொல்லுக்கும் பலபொருள் இருக்க மறைபொருள் (இரகசியச்செய்திகள்) என்பதைப் பொருளாகக் கொள்வது பொருத்தமாக உள்ளது.

மந்திரம் குப்த பாஷேன-மந்திரம் ரகசிய மொழியாகும் என்றும் "மனனாத் த்ராயதே – மனனம் காப்பாற்றும் என்று விளக்கிக் கூறி ஜபித்தவரைக் காப்பாற்றத்தக்க ரகசியமொழி மந்திரமாகும்"[2] என்றும் கூறுவர். மனத்தை உறுதிப்படுத்துவதற்கும் மந்திரம் கூறுதல் பொருந்தும்.

மாலை

இந்நூல் திருமந்திரமாலை என்றே வழங்கப்பட்டிருக்கலாம். "ஞானம் முதல் நான்குமலர் நற்றிரு மந்திரமாலை"[3] எனச் சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில் குறிக்கின்றார். இந்நூலின் தற்சிறப்பினைப் பாயிரத்தில் இது பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

"மறப்பிலார் நெஞ்சினுள் மந்திர மாலை

உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே"[4]

இவ்விரண்டு உறுதியான சான்றுகளினாலும் இந்நூல் திருமந்திரமாலை என்ற பெயரோடு வழங்கப்பட்டது என்பது உறுதியாகத் தெரிகின்றது.

நூல் அமைப்பு

திருமூலர் நூல் முழுவதையும் கலிவிருத்த யாப்பில் பாடியுள்ளார். பலவகைக் கலிவிருத்தங்களைக் கொண்டிருந்தாலும் இவர் ஒரு வகையையே கையாண்டுள்ளார். தொல்காப்பிய நெறியும் எழுத்து எண்ணி, முதல் மூன்று அடிகளாலும் அடிதோறும் 12 எழுத்தும், இறுதியடி நேரிசையில் தொடங்குகின்றது. எழுத்தும் நிரையசையில் தொடங்கி 12 எழுத்தும் வரத் தொடுத்துள்ளார். பெரும்பாலும் இயற்சீர் வெண்டளையும் சிறுபான்மை வெண்சீர் வெண்டளையும்

இப்பாடல்களில் அமைந்துள்ளன. இத்தகைய கலிவிருத்தம் பிறிதொரு நூலிலும் இல்லாமையால் இதனைத் "திருமந்திர யாப்பு" என்றே வழங்கலாம் என்று க. வெள்ளைவாரணர்"[5] குறிப்பிடுகின்றார்.

திருமந்திரம் 9 தந்திரங்களையும் 232 அதிகாரங்களையும் 3000 பாடல்களையும் கொண்டுள்ளது. பாடல் எண்ணிக்கையில் கருத்து வேறுபாடு உண்டு என்பது அறியப்படுகிறது. இம்மந்திரத்தில் 3071 பாடல்கள் என்றும் சில ஆசிரியர் கூறியுள்ளனர்.

1-4 வரையுள்ள தந்திரங்கள் சிவஞானத்தைப் பெறுவதற்கான சாதனங்களைக் கூறுகின்றன.

5 வது தந்திரம் சைவ சித்தாந்த உண்மைகளைக் கூறுகிறது.

6-9 வரையுள்ள தந்திரங்கள் சிவஞானத்தால் பிறக்கும் நன்மைகளைக் கூறுகின்றன.

நூற் சிறப்பு

தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க சிறப்புடைய இலக்கியமாகத் திகழ்வது திருமந்திரமாகும். பெரும்பாலான பாடல்கள் வேதாந்த சித்தாந்த சமரசக் கருத்துக்களைக் கூறுவனவாக இருப்பினும் உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கான எல்லா வழிவகைகளையும் சுட்டிக்காட்டும் போக்கில் இந்நூல் விளங்குகின்றது. மிக ஆழமான பொருளை மிக எளிதாக விளக்கும் முறையும், மிக எளிதுபோல் தோன்றி மிக ஆழமான பொருளுடையதாகக் காட்டும் முறையும், திருமூலருக்குக் கைவந்த கலையாகத் தோன்றுகிறது. இயல்பாகவே எளிமையும் இனிமையும் புதுமையும் அருமையும் நிறைந்து விளங்கும் இப்பாடல்களில் ஆங்காங்கு விரவிவரும் பல்வேறு சிறப்புகளும் அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் இடைச்சொற்கள் அமைந்துள்ளன.

திருமந்திரம் - பெயர்க்காரணம்

திருமந்திரம் என்பதை திரு + மந்திரம் எனப் பிரித்து, 'திரு' என்றால் தெய்வத்தன்மை பொருந்தியது' என்றும் மந்திரம் என்றால் 'மறைப்பொருள்' என்றும் பொருள் கூறுவர். இதனை,

“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த

மறைமொழி தானே மந்திரம் என்ப”[6]

என்ற நூற்பா மூலம் சொல்லக்கூடிய சொற்களின் பொருளானது எந்த விதத்திலும் எங்கும் குறைவில்லாமல் பயன்பெறும் (கொள்ளும்) வகையில் சொல்லும் ஆற்றல் உடையார், அவற்றால் சொல்லப்பட்டு மற்றவர்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரே ‘மந்திரம்’ என்று தொல்காப்பியர் கூறுகிறார். மேலும் இம்மந்திரம் பற்றி இளம்பூரணர், “வாய்மொழியும் மந்திரம் ஒக்கும்”[7]எனக் கூறுகிறார். பேராசிரியர் “பாட்டாகிய அங்கதம்”[8] என்கிறார்.

உரையாசிரியர்களின் கருத்துக்களுக்கு ஏற்பத் தொல்காப்பியர் கூறும் மந்திரம் வாய்மொழி மந்திரம் என்பது ஏற்கத்தக்கதாக அமைகிறது. மேலும் இத் திருமந்திரத்தைப் பற்றி திருவள்ளுவரும்,

“நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து

மறைமொழி காட்டி விடும்”[9]

என்ற குறள் மூலம் சொல்லியது சொல்லியவாறே பலிக்கும் சொற்களைச் சொல்லவல்ல துறந்தாரது பெருமையை அவரது மந்திரமொழிகளே தெளிவுப் படுத்திவிடுகிறது என்கிறார். அதாவது மந்திரங்களுக்கு எப்பொழுதும் பெருமை உண்டாகும் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ‘மறைபொருள்’ என்பதனை மறைந்து நிற்கின்ற இரகசியப் பொருள் என்று கூறுவர். மறைமொழியின் உள்ளே அரிய உண்மைப்பொருள் உள்ளது என்றும், அந்த உண்மைப் பொருளினை உணர்ந்தால் மனத்தின் எல்லையில் இருந்து விடுபடலாம். எனவே தான் மந்திரம் என்பதை “மன + த்ர” எனப் பிரித்துப் பொருள் கூறுவர். பல பொருள்கள் இருந்தாலும் மறைபொருள் என்னும் பொருள்படக் கூறியிருப்பதை அறிய முடிகிறது.

‘திருமந்திரம்’ என்பது தந்திரங்களாக வகுக்கப்பெற்றுப் பதிப்பிக்கப்பட்டாலும், தந்திரப் பிரிவுகளும் அதிகாரப் பகுப்புகளும் ஆசிரியர் செய்தவை அல்ல என்றொரு கருத்துண்டு.

திருமூலர் தம் நூலினை "ஆகமம்" எனக் குறிப்பிட்டாலும் வடமொழி ஆகமங்களைப் போன்று சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களாக வகுக்கவில்லை. ஆயினும் இந்நான்கு பாதங்களுக்குரிய செய்திகள் பரவலாக இடம் பெற்றமையாலே, சரியை முதலான நான்குவகை மலர்களால் தொகுக்கப்பெற்ற மாலையாகத் திருமந்திரத்தொகையில் சேக்கிழார்,

"ஞான முதல் நான்குமலர் நற்றிரு மந்திர மாலை"[10]

என்று கூறியுள்ளார். திருமூலநாதர் என்னும் பெயர் 'திரு' 'மூல' 'நாதர்' என்னும் மூன்று சொற்களின் சேர்க்கையாகும். திரு என்பது சிறப்பினைக் குறிக்கும் அடையாகும். தமிழிற் காணப்படும் நூல்களில் தொன்மையானது எனக் கருதப்படும் தொல்காப்பியத்தில் இத்திரு என்னும் சொல் அதிக வழக்கத்தில் இல்லையாயினும், பின் வந்த சங்க இலக்கியங்களில் மிகப்பரவலாகப் பல்வேறு பொருள்களில் இடம்பெற்றுள்ளன. இச்சொல் 'இலக்குமி, செல்வம், சிறப்பு, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை"[11] முதலிய பொருள்களைக் குறிப்பதாக பரமசிவானந்தம் கூறியுள்ளார்.

தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் திருக்கோவையார் என்னும் நூலுக்கு உரை எழுதும்போது "திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மையின் நோக்கம்"[12] எனக் குறிக்கின்றார். எனவே திரு என்பதற்குத் தெய்வத்தன்மை பொருந்திய அல்லது வணக்கத்திற்குரிய என்று பொருள் கொள்வது தகும். ஆகவே தான் இறைவனைப் பற்றி பாடப்பட்ட நூல்களை இத் திரு என்னும் சொல்லைச் சேர்த்துக் குறித்தனர்."[13] இவை திருமுறைகள் என்றே வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பாடிய அடியார்களையும் திரு என்னும் சொல் சேர்த்துக் குறிக்கும் மரபே தமிழிலும் காணப்படுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, திருமங்கையாழ்வார் முதலியன.

பரணியில் தோன்றியதால் பரணர் என்றும், உத்திரத்தில் தோன்றியதால் உருத்திரனார் என்றும், புலவர்கள் பெயர் பெற்றது போல மூல நட்சத்திரத்தில் பிறந்தமையால் இவர் மூலர் எனப் பெயர்

பெற்றிருக்கலாம் என்பது பலருடைய கருத்தாக இருக்கிறது. இதனோடு திரு என்னும் சிறப்பு அடை பின்னர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

மூலன் என்பதைக் காரணப்பெயராகவும் கொள்ள இடம் இருக்கிறது. தமிழில் சாத்திரங்களுக்கு மூலமாகவும் இருந்தாராதலின் இவர் இப்பெயர் பெற்றார் எனவும் சான்றோர் கருதுவர்.

யோக மார்க்கத்தில் அனைத்து ஆதாரங்களுக்கும் மூலமாக கருதப்படுவது மூலாதாரமாகும். இதனை மூலம் எனக் குறிப்பர். அனைத்துச் சமயங்களுக்கும் மூலமாய் அமையும் ஒருவனை "சமயத்து மூலத் தன்னைத் தேறான்"[14] "மூலத்தில் வழிநிற்கும் யோகப் பயிற்சியால்"[15] அடைதல் ஒல்லும் என யோக மார்க்கத்தைப் பாடியதால் இவர் மூலன் எனப் பெயர் பெற்றார் என எண்ணவும் இடமுண்டு.

பெரியபுராணத்தின் மூலம் கிடைக்கின்ற செய்தியாலும் இவரது இயற்பெயர் தெரியவில்லை. கைலாயத்திலிருந்து வந்த சிவயோகியார் மூலன் என்னும் இடையன் உடலில் புகுந்து அப்பெயர் பெற்றார் எனத் தெரிகின்றது. இங்கு பெரியபுராணம் கூறும் செய்தியை உண்மை எனக்கொள்ளின் மூலன் என்பது இவரது இயற்பெயர் அன்று என்பதும் புகுந்த உடலுக்குச் சொந்தமான பெயர் என்பதும் விளங்குகின்றது. திருமந்திரத்தின் தற்சிறப்பு பாயிரத்தில் இரண்டு இடங்களில் இப்பெரியபுராணக் கருத்துக்குத் துணைநிற்கும் கருத்துக்களாக வருகின்றன. அவை,

திருமூலரைப் பற்றி பல சைவ நூல்கள் பேசுகின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய முதல் நூலாகிய திருத்தொண்டத்தொகையில் "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"[16] என்று கூறும், அதன் வகை நூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதி, திருமூலரின் உடம்பு சாத்தனூர் கோக்குலம் மேய்ப்பான் உடல் புகுந்து சிவாகமவேதப் பொருளைத் தமிழால் அருளிச்செய்தார் என இயம்புகின்றது.

"குடிமன்னு சாத்தனூர்க் கோகுலம் மேய்ப்போன் குரம்பை புக்கு

முடிமன்னு கூனல் பிறையாளன் தன்னை முத்தமிழின்

படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டென் உச்சி

அடிமன்ன வைத்த பிரான் மூலன்”[17]

மேற்கூறிய திருத்தொண்டத்தொகையை முதல் நூலாகவும், திருத்தொண்டத் திருவந்தாதியை வழி நூலாகவும் வைத்துக்கொண்டு, தான் திரட்டிய செவிவழிச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு, சேக்கிழார் தன் பெரியபுராணத்தில் திருமூலர் வரலாற்றை நம்பியாரூரரின் படைப்புக்கு விரி நூலாகக் கூறியுள்ளார். மேலும் திருமூலரைப் பற்றிச் சேக்கிழார் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில்,

“கயிலாயத்து ஒரு சித்தர் பொதியில் சேர்வார்

காவிரிசூழ் சாத்தனூர் கருதும் மூலன்”[18]

என்ற பாடல் மூலம் திருமூலர் கயிலையிலிருந்து புறப்பட்டுத் தென்னாடு வந்தார் என்பதற்கு ஆதாரமாகச் சான்றளிக்கின்றார். இதனை பாடியதன் வழி திருமூலர் பற்றிய ஒரு செய்தி நம்பியாண்டார் நம்பி வாக்கு மூலம் அறியப்படுகிறது. இந்த வரலாறு பெரியபுராணம் கொண்டு தொகுக்கப்பட்டவை ஆகும்.

சுந்தரநாதர் என்ற இயற்பெயர் கொண்ட திருமூலர் நந்தியம் பெருமான், திருவருள் பெற்ற நான்கு மறைகளை அறிந்த யோகியருள் ஒருவர். இவர் பொதிகை மலையில் உள்ள அகத்திய முனிவருடன் சில நாள் தங்குவதற்குக் கயிலையினின்றும் புறப்பட்டார் என்பது இப்பாடல் வழி அறியமுடிகிறது. இங்ஙனம் புறப்பட்ட வழியில் பல திருத்தலங்களையும் வணங்கி இறுதியாகத் திருவாவடுதுறையை அடைந்தார். இத்தலத்தை அடைந்த திருமூலர், திருத்தலத்தை வலங்கொண்டு, அத்தலத்துப் பெருமானார் மீது மிகுந்த பற்றுக் கொண்டார். அத்தலத்தை விட்டு நீங்காத தன்மையைக் கொண்டவராக இருந்தாலும், பிறகு அவ்விடத்தை விட்டு சென்றவர் தம் கண்முன் காவிரிக்கரையில் பசுக்கூட்டங்கள் அழுவதைக்கண்டும் அப்பசுக்களை மேய்க்கும் இடையன் இறந்து கிடப்பதையும் பார்த்தார். யோகியருள் ஒருவரான திருமூலர் பசுக்கள் கதறியதைக் கண்டு அவரது உள்ளத்தில் இறைவன் திருவருளால் இப்பசுக் கூட்டங்களுக்கு நேர்ந்த துன்பங்களை

நீக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. பிறகு கூடுவிட்டுக் கூடுபாயும் ஆற்றலைப் பயன்படுத்தி இடையனான மூலனின் உடலில் புகுந்தார். தம் உடம்பை ஒரு மரப்பொந்தில் ஒளித்து வைத்தார்.

பின்பு ஒரு முறை தம் சொந்த உடம்பை மரப்பொந்தில் தேட அங்கு அவர் உடல் காணாததைக் கண்டு திகைத்துப்போனார். இதற்கெல்லாம் மூலகாரணமான சிவபெருமானே இப்படிச் செய்திருக்க வேண்டும் என்று கருதினார். மேலும் தமிழ் வழியில் வாழ்வின் உண்மைப் பொருளை உணர்த்தவே இப்படி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டு மூலன் உடலோடு உயிர் கொண்டு உலவியதால் அன்று முதல் திருமூலர் என்று அறியப்பட்டு திருவாவடுதுறையை அடைந்தார். சிவபெருமான் ஒருவனையே தம் உள்ளத்தில் கொண்டு சிவயோக நிலையில் அமர்ந்து ஆண்டுக்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்கள் அடங்கிய திருமந்திரம் என்னும் நூலை அவர் வாக்காகவே,

"மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்

மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்

மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்

மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே"[19]

என்ற பாடல் மூலம் உணரமுடிகிறது.

திருமந்திரம் இயற்றல்

இங்ஙனம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலநாயனார், அதனோடு தொடர்ந்த இப்பிறவியாகிய தீய நஞ்சினா லுளவாம் துயரம் நீங்கி இவ்வுலகத்தார் உய்யும் பொருட்டு ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் நால்வகை நன்னெறிகளும் நால்வகை மலர்களாக விரிந்து விளங்கும் நல்ல திருமந்திரமாலையாகிய பனுவலை இறைவன் திருவடிக்கு அணிந்து போற்றும் நிலையில்,

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்

நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து

வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்

சென்றனர் தானுணர்ந்தான் விரிந்து எட்டே”[20]

எனும் எண்ணுவண்ணத் திருப்பாடல் தொடங்கி மூவாயிரம் திருப்பாடல்களை அருளிச்செய்து, தமிழ் மூவாயிரமாகிய இத்திருமந்திரத் திருமுறையினை நிறைவு செய்து சிவபெருமான் திருவருளாலே அடைந்து அம் முதல்வனுடைய திருவடி நிழலில் என்றும் பிரியாது உறையும் பேரின்பப் பெருவாழ்வினைப் பெற்றுத் திகழ்ந்துள்ளார்.

திருமூலர் சித்தர் வரிசையில் மிகச்சிறந்த ஒருவராக வைத்து மதிக்கப்படுபவர் ஆவார். அங்ஙனம் கருதக்கூடிய அளவிற்கு அவர் சிறந்த சித்தர்கட்குரிய சிறப்பு நிலைகளைப் பெற்றிருந்தவர். அன்னவர் சித்தர்கள் எல்லாம் தமிழிலே படைத்த நூலமைப்புகளைவிட அதிக எண்ணிக்கையுடைய, அரும் பாடல்கள் மூவாயிரத்தைப் பாடியுள்ளார். தவத்தோர் சிறப்புடைய நிலையில் அந்தாதி யாப்புப் பொருந்திய நிலையில் அரும் பேரிலக்கியமாகத் திருமந்திரத்தை இயற்றினார்.

பன்னிரு திருமுறைகளுள் திருமந்திரம் காலத்தால் முந்தைய சிறப்புடையது. “திருமூலர் சங்க காலத்துப் போக்கினையுடையவர் என்பதை உற்றுநோக்கும்போது சங்க காலத்துப் புலவர் என்பது தெரியவருகிறது”[21] என்று பாலூர் கண்ணப்ப முதலியார் தம் நூலுள் குறிக்கிறார்.

திருமூலர் யார்?

சேக்கிழார் பெருமான் திருமூல நாயனாருடைய புராணத்தில் ‘நந்தி திருவருள் பெற்றவர்’, ‘நான்மறை யோகியருள் ஒருவர், அணிமாதி சித்தி பெற்றுடையார், ‘தவமுனிவர்’ என்று பெயர் குறிப்பிடாமல் கதறிக்கொண்டு வந்தவர், ‘சாத்தனூர் ஆமேய்ப்பார் குடி தோன்றியமூலன்’ என்னும் பெயருடைய இடையன் வினை மாள நிலத்தில் வீழ, அப்பசுக்களின் துயரை நீக்குவான் எனக்கருதி மூலனுடைய உடலில் தவமுனிவர், ‘தம்முயிரை மாய்த்துத் திருமூலராய் எழலும்’ என்று கூறி முடித்துள்ளார்.

ஆதலின் திருமூலர் என்ற பெயர் மூலனுடைய உடம்பில் புகுந்து எழுந்தபின் ஏற்பட்டது ஆகும். ஆனால் அவர் பெயர் என்ன என்பது பற்றி எண்ணியதில் இயற்பெயர் 'சுந்தரநாதர்' என்பது தெளிவாகுகிறது. இதனை அறியும்பொருட்டுத் தமிழ் மூவாயிரம் சிறப்புப்பாயிரச் செய்யுளில்,

"தந்திரம் ஒப்பது சார்வு மூவாயிரம்

சுந்தரன் ஆகமச் சொன் மொழிந்தானே"[22]

என்று கூறப்பட்டிருப்பதால் அறிய முடிகிறது. மூலருடைய உடலில் புகுமுன் சுந்தரநாதர் என்ற தம் இயற்பெயருடன் விளங்கினார்.

ஆகவே சுந்தரர் என்பது அவருடைய இயற்பெயர் என்றும் தாய், தந்தையர் இட்ட பெயர் என்றும் தெளிவாகிறது. 'நாதன்' என்ற பட்டத்தை அவர் எப்போது பெற்றார்? என்றால் 'நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றாம்' என்று அவரே கூறியிருக்கிறபடியால் நந்தி திருவருள் பெற்றவர்கட்கு எல்லாம் நாதன் என்ற பட்டம் உண்டு என்று அறிய முடிகிறது. நாதன் என்பது ஆகுபெயர் என்று இலக்கண நூலார் கூறுவர். ஆகவே சுந்தரநாதர் என்பது அவர் இயற்பெயர் ஆகும். அருணகரிநாதர் எனும் பெயரும் காட்டாகும்.

பதினெண் சித்தர்களுள் ஒருவர்

சதுரகிரி மலையில் வாழ்ந்த சித்தர் கூட்டம் பற்றி அகத்தியர் ஆயிரத்து இருநூறு என்ற நூல் வரலாறு இங்கே எண்ணத்தக்கது.

1. எக்கிய மா முனி என்பவர் அகத்தியருக்குச் சிங்கி வித்தை கற்றுக் கொடுத்தார். அதனால் அகத்தியர் சிங்கி வித்தையில் குருமுடித்தார்
2. சிங்கி வித்தை கருவூரார்க்கு உணர்த்தப்பட்டு அவர் சிங்கி வேதை முடித்து யோகத்தில் இருந்து பூரணத்தில் மகிழ்ந்தார்.
3. கொங்கணர் வீரம் என்கிற பாடாணத்தால் வேதை முடித்து சிவயோக நிட்டையில் பலகாலம் இருந்து மேருகிரியில் பூரணத்தில் நின்று ஒடுங்கினார்.
4. போகர் ஏமரசம் கண்டு அதனை உண்டு ஒருகோடி காலம் சிவயோகம் இருந்து பூரணத்தில் தங்கினார்.

5. கயிலாயச் சட்டைமுனி சவுகாரச் சுண்ணம் உண்டு வேதை பார்த்துக் கோடி கற்பகாலம் இருந்து சிவயோகியாய் சாலோக பதவியை அடைந்தார்
6. கமல முனி அண்டச்சத்துக் கண்டு மெழுகுபண்ணி வேதை பார்த்து மதியமிர்தமுண்டு மேருவில் தவம் பண்ணி சதகோடி யுகாந்தம் இருந்து கமல மலரில் சென்று பரவெளியில் கலந்தார்.
7. மச்ச முனி கெந்தியில் சத்து எடுத்து வேதை பார்த்து திருமூலர் கௌரி சத்து எடுத்து வேதை பார்த்துச் செந்தூரம் செய்து சடம் அழியாமல் சிவயோகத்தில் இருந்து சிவமயமானார்.
8. நந்தீசர் அயக்காந்த சத்து எடுத்து வேதை பார்த்துச் செந்தூரம் செய்து கோடான கோடி காலம் பூரணமாய் நிட்டை கூடி மணி மகுட முடியில் சென்று பூரணத்தில் அடங்கினார்.
9. நந்தீசர் அயக்காந்த சத்து எடுத்து வேதை பார்த்துப்ச் செந்தூரித்துப் பூரணத்தில் நின்று கோடி யுகாந்த காலம் இருந்து சோதியில் கலந்தார்.
10. சுந்தரானந்தர் களி உப்பு வாங்கி நீற்றிச் சுண்ணாம்பாக்கி நவலோக வேதை பார்த்துத் தன்னிலை அறிந்து பொற்கமலம் மீதேறி அனந்தகாலம் தவம் இருந்து பூரணத்தில் இருந்து மகிழ்ந்தார்.
11. கோரக்கர் நவக்கிரக பூசை பண்ணி புராணத்தில் சொக்கி கோடியும் நிட்டை கூடி கைலாயம் சென்று பூரணத்தில் இருந்து பரமபதம் அடைந்தார்.
12. காலாங்கி
13. புண்ணாக்கீர்
14. வியாக்கிரபாதர்
15. கூனக்கண்ணார்
16. சிவவாக்கியர்
17. இடைக்காடர்
18. சண்டிகேசர்

ஆகியோர் வாசியோகம் செய்து மௌனமாகி ஏழு பேரும் சிவபூசை செய்து மௌனமாகி சோதியில் கலந்தனர். இதனால் பதினெண் சித்தர்கள் யாவர் என்பதும் அவர்கள் நவபாடாணங்களை வேதை செய்து குரு

முடித்துக் காயகல்பம் உண்டு பன்னெடுங்காலம் வாழ்ந்து சோதியில் கலந்தனர் என்பதும் அறியத்தக்கது.

திருமூலரின் வேறு பெயர்கள்

இவர் தம் பெயரின் முன்னரும் பின்னரும் அடை மொழிகளுடன் இல்லாமலும், பலவகைப்பட்ட அடைமொழிகளுடன் கூடியும் இவரது பெயர் காணப்படுகிறது. அவற்றுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. "மூலர்
2. மாமூலர்
3. திருமூலர்
4. திருமூல தேவர்
5. திருமூலநாதர்
6. திருமூலத்தம்பிரான்
7. திருமூலதேவ சிவாச்சாரியார்
8. திருமூலநாயனார்
9. ஸ்ரீமூலர்
10. ஸ்ரீமூல தேவர்
11. ஸ்ரீமூல தேவ சிவாச்சாரியார்
12. ஸ்ரீமூலதேவ நாயனார்
13. ஸ்ரீமூலநாதர்
14. ஸ்ரீமூலதேவநாதர்
15. சதாசிவ தேவர்
16. சதாசிவ முனிகள்
17. சதாசிவதேவ சிவாசாரியார்
18. சாதசிவன்"[23]

திருமூலரின் காலம்

திருமூலரது வரலாறு எங்ஙனம் தெளிவின்றிக் காணப்படுகின்றதோ அவ்வண்ணமே இவரது காலத்தை கணிப்பதிலும் சிக்கல் உள்ளது. எனினும் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களிலிருந்து ஒருவாறு, இவரது காலத்தை கணித்து அறிதல் கூடும்.

"திருமூலர், பதஞ்சலி வியாக்ரமர் முதலியோர் காலத்தவர். வசிட்டர், தசரதர், இராமர் முதலியோர்க்குக் குலகுரு ஆவர். ஆதலின், இவர்கள்

எல்லோரும் சம காலத்தவர். இராமாயணம் காலம் என்பது கி.மு ஆறாயிரம் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. ஆதலின் திருமூலர் காலம் கி.மு. ஆறாயிரம் என்று கொள்ளுதல் பொருந்தும். இடைச்சங்க காலம் என்பது கி.மு.6705 முதல் கி.மு. 6000 வரைப்பட்டது. என இரு காரணங்கள் காட்டித் திருமூலர் காலத்தைக் கி.மு 6000 எனக் கூறுவர். இக்கருத்து திருப்பணந்தாள் வெளியிட்டுள்ள திருமந்திரத்தில் குறிக்கப்படுகிறது."[24]

சேக்கிழார், நம்பியாண்டார் நம்பி, சுந்தரர் இவர்களால் குறிக்கப்படுவதால் இவர்களுக்கு முற்பட்டவர் என்பது விளங்கும் என்பதையும், சுந்தரர்க்கு முந்திய சம்பந்தர், நாவுக்கரசர் இவரைக் குறிக்கமால் போனதாலேயே இவர் அவர்களுக்கு முற்பட்டவராய் இருத்தல் முடியாது எனக் கருத முடியாதென்பதையும், இவர் வேதாந்த சித்தாந்த சமரசம் பேசியதாலும், சமயப் பொதுமையும், யோக மார்க்கமும் பரப்பியதாலும், சமயப்பற்றுடன் சைவத்தின் பெருமையைக் காக்க போராடிய சம்பந்தரும் நாவுக்கரசரும் இவரைக் குறிக்காமல் விட்டிருக்கலாம் என்பதையும், இவர் சக்தி வழிபாட்டையும், தந்திரங்களைப் பற்றியும் கூறுவதால் அம்முறை உச்சநிலையில் இருந்த காலநிலையில் இவர் தோன்றி இருத்தல் வேண்டும் என்பதையும், அம்பலம் என்னும் பரிபாஷைச் சொல் தில்லையைக் குறிப்பதாகக் கொண்டாலும் இராசசிம்மன் காலத்திலேயே தில்லை அம்பலமாயிற்று என்பதையும் ஐந்து மண்டலம் என்ற சொல் சேரநாடு முதலிய மண்டலங்களைக் குறிக்காது என்பதையும் அறியலாம்."[25] இதன் மூலம் திருமூலரின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு எனக் கொள்வது பொருத்தமாகும் என்றும் கூறுவர்.

"திருமந்திரத்தில் 51 எழுத்துக்களைப் பற்றிக் குறிப்பு வருகின்றது. 35 மெய்யும் 16 உயிருமாக 51 எழுத்துக்கள் வட்டெழுத்துக் காலமாகிய இடைச்சங்க காலத்தில் பயின்றன. இடைச்சங்க காலம் என்பது கி.மு. 6000 வரை உட்பட்டது என இருகாரணங்களைக் காட்டித் திருமூலர் காலத்தைக் கி.மு 6000 எனக் கூறுவர். இக்கருத்து திருப்பனந்தாள் வெளியிட்டுள்ள திருமந்திரத்தில் குறிக்கப்படுகிறது."[26]

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் வெளியீட்டில் "திருவள்ளுவர் கி.மு.75 முதல்36 வரை வாழ்ந்தார் ஆனபடியால் அவர் பிறப்பதற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கி.மு. 100இல் திருமூலர் மூவாயிரம் என்னும் நூலை இயற்றிச் சீடர்களுக்கு உபதேசித்திருக்கலாம் எனக் கூறித் திருக்குறளிலும் திருமந்திரத்திலும் காணத்தக்க ஒற்றுமை சிலவற்றைக் காட்டித் திருமூலர் காலத்தை கி.மு6000 முதல் கி.மு100 வரை எனக் குறிக்கப்பட்டுள்ளது."[27]

தமிழ் மண்டிலம் ஐந்து எனத் திருமந்திரத்தில் வரும் (பாடல் – 1619) குறிப்பை வைத்து **க. வெள்ளைவாரணன்,** திருமூலர் காலத்தை ஆராய்கிறார். கடைச்சங்க கால இறுதியில் சேரவேந்தர்க்குரிய குடபுலம் மலைநாடு, கொங்குநாடு என இரண்டு நாடுகளாகவும் சோழனுக்குரிய குணபுலம் தொண்டைநாடு, சோழநாடு என இரண்டு நாடுகளாகவும் பிரித்து தனித்தனி நாடுகளாயின. இவ்வாறு தமிழ்நாடு சேரமண்டலம், பாண்டியமண்டலம், சோழமண்டலம், தொண்டைமண்டலம், கொங்குமண்டலம் என ஐந்து மண்டலங்களாகப் பிரிந்து தனித்தனி ஆட்சியில் நிலைபெற்ற காலம் கடைச்சங்க காலத்திற்குப் பின் கி.பி. 3 ஆம் நூற்றாண்டினை ஒட்டியதாக இருக்க வேண்டும். திருமூலர் இச்செய்தியைக் குறிப்பிடுவதால் இந்நூல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு பிற்பட்டதாதல் வேண்டும். திருமூலர் அம்பலத்தைக் குறிப்பதால் சிம்மவர்மன் காலத்திற்குப் பின்னர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் அன்றி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ வாழ்ந்திருத்தல் வேண்டும் என முடிவு காட்டுகிறார்."[28]

கே. ஆர். சுப்பரமணியம், திருமூலர் சங்க காலத்திற்கு மிக முற்பட்டவர் எனக் கருதுகின்றார். ஆனால் இதற்கான சான்றுகள் எதுவும் காட்டவில்லை. திருக்குறளிலும் திருமந்திரத்திலும் காணத்தக்க ஒற்றுமை சிலவற்றைக் காட்டித் திருமூலர் காலத்தை கி.மு. 6000 முதல் கி.மு100 வரை எனக் குறிக்கப்பட்டுள்ளது. திருமூலர் கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று சிவபாத சுந்தரமும், சுரேந்திரநாத் தாஸ்குப்தாவும் கருதுகின்றனர். திருமூலர் சங்க காலத்துப் போக்கினையுடையவர் என்பதை உற்று நோக்கும் போது சங்க காலப் புலவர் என்பது

தெரியவருகிறது எனப் பாலூர் கண்ணப்பமுதலியார்"[29] தம் நூலுள் குறிக்கிறார்.

திருஞானசம்பந்தர் திருவாடுதுறை சென்ற போது அவ்வூர்க் கோயில் கொடிமரத்தின் அருகில் புனிதமணம் வீசியதென்றும் அதன்கீழ் தோண்டியபோது திருமந்திரப்பாடல்கள் அடங்கிய ஏடுகள் காணப்பட்டன என்றும் ஒரு வரலாறு தொன்றுதொட்டு வழங்கி வருகிறது. இவ்வுண்மை வரலாறு கொண்டு இவரின் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் என மறைமலையடிகள் கருதுகின்றார்."[30] வேறு சிலர் திருமூலரை கி.பி. 7,8,9 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியவர் என்றும் குறிக்கின்றனர்.

இவ்வாறு பல அறிஞர்களின் கருத்துக்களை வைத்துக் கொண்டு ஆராய்ந்தால் திருமூலரின் காலத்தினை உறுதி செய்து எந்தக் காலத்தினைச் சார்ந்தவர் என்று கூற இயலாமல் இருந்தாலும் கி.பி ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனக் கருத இடமுண்டு என்றும், இக்கருத்தினையே பரஞ்சோதி அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்"[31] என்று இரா. மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

மேலும் இராமநாத பிள்ளை "1942 ல் தன் காலத்து வரலாறு, தொல்லியல் போன்றவற்றின் அறிவு நிலையையும் மரபிலக்கிய பயிற்சியையும் அடிப்படையாகக் கொண்டு திருமூலர் வரலாற்றை விரிவாகக் கூறியுள்ளார். சர் ஜான் மார்ஷல், ஈராஸ்பாதிரியார் ஆகிய இரு ஐரோப்பிய அறிஞர்களின் அகழ்வாராய்ச்சி முடிவுகளிலிருந்து ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகங்கள் தமிழர் நாகரிகம் என்றும் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட கட்டடங்களில் உள்ள எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களைக் குறிப்பதாகவும் அந்த அறிஞர்கள் கூறுவதாக இவர் பதிவு செய்துள்ளார்."[32]

மேலே குறிப்பிட்ட அறிஞர்கள் கருத்தையும், நூற்றாண்டையும் அக்கால நிகழ்வுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் எதுவும் தெளிவாக இல்லாததால் இதனை எளிதில் தெளிவுபெற இயலவில்லை.

திருமந்திரத்தில் 51 எழுத்துக்கள் இருந்ததாக ஒரு பாடல் சான்றளிக்கின்றது. (கழக.942) அப்பாடலை ஆதாரமாகக் கொண்டு

முன்பு கூறிய வட்டெழுத்து காலத்தைக் கொண்டும் திருமூலர் இக்காலத்தைச் சேர்ந்தவர் என்றும் இதன் கணக்குப்படி 5900 வருடங்கள் வாழ்ந்திருக்கிறார் என்பதற்குத் தக்கச்சான்றுடன்,

"அண்டம் சுருங்கில் ஆக்கைக்கு அழிவில்லை"[33]

"காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்

கூற்றை யுதைக்கும் குறியது வாமே"[34]

என்னும் பாடலில் விளக்குகிறார். மேலும், மூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும், பலகோடி ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும் அவருடைய பாடல்களால், ஒரு செய்தி நமக்கு கிடைத்துள்ளது. வேறெதுவும் சரியான குறிப்புகள் இல்லை என்பதும் தவிர்க்க முடியாத ஒன்று. ஆகவே,

"இருந்தேன் காயத்தில் எண்ணிலி கோடி

இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே"[35]

என்ற பாடல் மூலமும்

"நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி

மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்

என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே"[36]

என்றும்,

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்

இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்"[37]

கந்துரு காலாங்கி கஞ்ச மலையானோடு

இந்த எழுவரும் என்வழி ஆமே"[38]

என்று திருமூலரே தம் பாடல்வரிகள் மூலம் மந்திரம், புராணம், வேதம் போன்றவற்றிற்கெல்லாம் பழமை வாய்ந்தவர் என்றும் அவர் வாழ்ந்த காலத்தை அவரே குறிப்பிட்டதோடு, வாழ்ந்த காலத்துக்கு அவரே ஒரு பட்டியல் தந்துள்ளார் என்பதும் அறிய முடிகிறது. இந்தப் பாடல்கள்

மூலம் திருமூலருடைய காலம் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை இவ்வரிகள் மூலம் தெளியமுடிகிறது. இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கும் போது திருமூலர் கி.பி 6ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர் என்று கொள்வது பொருந்தினாலும் மேலும் ஆய்வுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது.

யாப்பு

திருமந்திரத்தில் வரும் பாடல்கள் முழுமையும் கலிவிருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்துள்ளன. மூவாயிரம் பாடல்களும் ஒரே வகையான யாப்பில் அமைந்துள்ளன. இது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

கலிவிருத்தம் என்பது நான்கு அடிகளைக்கொண்டு ஒவ்வோர் அடிக்கும் நான்கு சீர்களுடன் வரும். கலிப்பாவின் ஓசையாகிய துள்ளல் இன்றி அமையும். பொழிப்பு மோனையுடன் வருதல் வேண்டும். பொழிப்பு மோனை என்பது முதற்சீரின் முதல் எழுத்தும் மூன்றாம் சீரின் முதல் எழுத்தும் ஒன்றி வருவது ஆகும்."[39] திருமந்திரப் பாடல்களிலும் இப்பொழிப்பு மோனை அடிதோறும் பொருந்தி வருதலைக் காணமுடிகிறது. வேறு ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பும் உண்டு. ஒற்றெழுத்து நீக்கி அடிதோறும் 12 எழுத்து கொண்டும் ஈற்றடி நேரசை கொண்டு தொடங்கியதாயின் 11 எழுத்து கொண்டும் வரும். திருமந்திரத்தில் இச்சிறப்பைக் காணமுடிகிறது.

இந்நூல் வெண்பாவிற்குரிய தளைக்கட்டமைப்பும், விருத்தத்திற்குரிய எல்லா அடிகளின் சீர்களும் சரிசம எண்ணிக்கையும், ஆசிரிப்பாவிற்குரிய ஏகாரம் முடிதலும் எனத் திருமந்திரக் கலிவிருத்த யாப்பிலக்கணக் கூறுகளையும் பெற்றுள்ளது. 99 விழுக்காடு ஏகாரம் பெற்று முடிந்துள்ளமை இந்நூலுக்கு எட்டாக்கனிச் சிறப்பு என்று கூறலாம்.

திருமந்திரத் தனிச்சிறப்பு

சித்தாந்த சாத்திர நூல்கள் எனக் கருதப்படும் 14 நூல்களும் திருமந்திரத்திற்குப் பின் எழுந்தவையாகும். சாத்திர நூல்களுக்கு முதல் நூலாக விளங்கும் சிறப்புடையது திருமந்திரமே. பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையான இறைவனைப் பற்றிய தோத்திர நூல்களாகக்

காணமுடிகிறது. பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம் இறையடியார்களின் பெருமையைக் கூறுகிறது.

பத்தாம் திருமுறை ஒன்றே தோத்திரமாகவும் சாத்திரமாகவும் விளங்கும் பெருமையுடையது. இவ்விரண்டு இயல்பும் பொருந்திய நூல் வேறு எதுவும் இல்லாமை குறிப்பிடத்தக்கது.இது திருமந்திரத்திற்கேயுரிய தனிச்சிறப்பாகும்.

மொழி

மனிதன் கண்டறிந்தவற்றுள் மிக முக்கியமான படைப்பு மொழி ஆகும். கருத்துக்களை உணரவும் உணர்த்தவும் உற்ற கருவியாய் விளங்குகிறது. மொழியைக் கண்டறிந்ததால் அவன் சிந்தனை மேலும் வளர்ச்சி பெற்றது. அச்சிந்தனை வளர்ச்சியினால் நாகரிகம் அடைவதோடு, படிப்படியான அவனது வளர்ச்சிக்கு மொழியே முதன்மையானக் காரணமாக அமைகிறது."[40] என்று செ.வை. சண்முகம் குறிப்பிடுகிறார். மனிதனை விலங்கு முதலாய மற்ற உயிர்களிலிருந்து வேறுபடுத்தி எல்லாவற்றிற்கும் முதன்மைப்படுத்தி பிரித்துக்காட்டுவது அவன் பெற்ற பகுத்தறிவின் கண்டுபிடிப்பான பேச்சாற்றலோடு கூடிய மொழித்திறனேயாகும். கண்டு, கேட்டு, சிந்திப்பதற்கும் பின்னர் தனது கருத்துக்களை வெளியிடுவதற்கும் ஒரு ஒப்பற்ற கருவியாகவும் மொழி பயன்படுகிறது. மேலும் மனிதனால் மொழியும் மொழியால் மனிதனும் காலவோட்டத்திற்கு ஏற்ப இன்றும் வளர்ச்சி கண்டு சமுதாய ஒற்றுமைக்கும் அதன் வளர்ச்சிக்கும் மொழியே முதற்காரணமாக அமைந்து வருகிறது.

இலக்கணம்

இலக்கணம் என்பது ஒரு மொழியின் பயன்பாட்டையும், அதன் கட்டமைப்பையும் பொருத்தது. செ.வை. சண்முகம் "அவர்கள் மொழியைப் பிழையின்றித் திருத்தமாகவும், செம்மையாகவும், உரையாடுவதற்கும், எழுதுவதற்கும் மொழியின் அடிப்படை முழுவதும் உணர்வதற்கும் விதிமுறைகளை விளக்குவதற்கும் வாய்ப்பாக இருப்பது இலக்கணமாகும்"[41] என்று கூறியுள்ளார்.

“இலக்கணம் என்ற சொல் பல்வேறு பொருண்மைகளில் கையாளப்படுகிறது என்று சு.ராசாராம் குறிப்பிடுகிறார். அவை குறி, புலன், எழுத்து, இயல்பு, முறை, மரபு, நூல்”[42] போன்றவையாகும். “இலக்கணம் என்ற சொல் தொல்காப்பியத்தில் நான்கு முறையும், சங்கம் மருவிய காலத்தில் நான்கு முறையும், நாலடியாரில் ஒரு முறையும், ஆசாரக்கோவையில் ஒரு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது”[43] என்று செ.வை.சண்முகம் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே இலக்கணம் என்ற சொல் பல்வேறு பொருண்மையில் வழங்கப்பட்டு வந்துள்ளது. இதனைப் பாவாணர் “இலக்கு - இலக்கணம் = சிறந்த நடைக்கு எடுத்துக்காட்டாக அல்லது கற்றோர் பின்பற்றும் இலக்காகக் கூறப்படும் மொழியமைதி”[44] என்கிறார். இளங்குமரன் புலன், குறி, நூல், எழுத்து, இயல்பு, முறை, மரபு என்னும் அனைத்துச் சொற்களும் இலக்கணத்தையே குறிக்கின்றன”[45] என நிறுவியுள்ளார். எனவே தமிழ்மொழி சிறப்பான இலக்கண மரபைக் கொண்டுள்ளது எனத் தெளியலாம். இலக்கணம் நமது மொழியின் கட்டமைப்பைக் காலந்தோறும் பாதுகாத்து வந்துள்ளது என்பது திண்ணம்.

தமிழில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணப் பகுப்பு இருந்து வருகின்றது. எழுத்துக்கள் தனிமொழியிலும் புணர்மொழியிலும் செயல்படும் மாற்றங்களை எழுத்திலக்கணமும், எழுத்துக்கள் சேர்ந்து தொடர் அல்லது சொல் வடிவம் பெறுவதைச் சொல்லிலக்கணமும், அகப்புற வாழ்வியல் நெறிகளை மையமிட்டதாகப் பொருளிலக்கணமும், பா அமைப்பு மற்றும் வகைகளை யாப்பிலக்கணமும், கவிதை புனைய ஏற்ற முறையில் அமைவதை அணி இலக்கணமும் பேசுகின்றன.

தொல்காப்பியம் மேற்கண்ட ஐந்திலக்கணங்களைப் பற்றிப் பேசியுள்ளது. எழுத்தை எழுத்ததிகாரமும், சொல்லைச் சொல்லதிகாரமும், பொருளைப் பொருளதிகாரமும், யாப்பைப் பொருளதிகாரச் செய்யுளிலும், அணியை உவமையியலும் விவரிக்கின்றன. இவ்வாய்வு சொல்லிலக் கணத்தைப் பொதுவான முறையில் அறிமுகப்படுத்தி அதில் இடைச்சொல் பற்றிய கருத்துக்களை ஆய்வு செய்ய முற்படுகின்றது.

மொழியும் சொல்லும்

மொழியானது வழக்கையும் செய்யுள் முதலாகிய இலக்கிய கூறுகளையும் முதன்மையாகக் (அடிப்படையாகக்) கொண்டு எழுத்தையும் சொல்லையும் பொருளையும் நாடுவதாக இருக்க வேண்டும் என்பது இலக்கண அடிப்படை. எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றையும் கருத்து வேறுபாடு என்ற ஒன்றின் மூலமே பயன் கொள்கிறோம். அத்தகைய பொருள் புலப்பாட்டுத் தன்மையை எளிய பொருள் கூற்றிலிருந்து உயர்நிலை பொருள் வரை தன்னகத்தே அடக்கிக் கொண்டிருப்பது மொழி; அதன் வெளியீட்டமைப்பு மொழி நடை எனப்பெற்றது.

மொழி என்பதை தொல்காப்பியர் முதன்முதலாகப் பயன்படுத்தும் போது பொருள் குறித்த சொல் என்ற கருத்தின் அடிப்படையில் பயன்படுத்துகிறார். தொல்காப்பியத்தின் முதல் இயலான நூன்மரபில் எழுத்துக்கள் எல்லாவற்றையும் இலக்கிய வரையறை செய்த தொல்காப்பியர், மொழிமரபு என்னும் இரண்டாம் இயலில் ஓர் எழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி ஆகியன பற்றி பேசுகின்றார். அவ்வாறு சுட்டப்பெறும் மொழிச்செய்திகள் யாவும் பொருள் குறித்த சொற்கள் என்ற அடிப்படையில் விவரிக்கப் பெறுவனவாக அமைகிறது.

எழுத்தும் சொல்லும்

சொல்லானது எழுத்துக்களால் ஆனதும் பொருள் குறிப்பதும் சொல் எனப்படும். எழுத்து தனித்து வந்தும் தொடர்ந்து வந்தும் பொருள் தருமாயின் அதனைச் சொல் அல்லது கிளவி அல்லது பதம் எனலாம். இக்கருத்திற்கேற்ப நன்னூலார் வரிவடிவ எழுத்து தோன்றுவதற்கு முன்பே ஒலிவடிவச் சொல் (Sound) தோற்றம் பெற்றது என்று குறிப்பிடுகின்றனர். இருப்பினும் எழுத்தின் பயன்பாடு கருதி வரிவடிவ எழுத்திற்கே சிறப்பிடம் கொடுக்கப்படுகிறது. எழுத்தானது ஒலிவடிவம், வரிவடிவம் ஆகிய இரண்டையும் கொண்டதாயினும் வரிவடிவத்திற்கே முக்கியத்துவம் நல்கப்படுகிறது. காரணம் வரிவடிவ எழுத்துக்களாலே சொல்லும், தொடரும் அது உணர்த்தும் கருத்துச்செறிவும் சிறப்புப்பெற்று

காலத்தைக் கடந்து மொழியைக் காத்து நிற்க வழிவகை செய்வது வரிவடிவ எழுத்தேயாகும்.

தொல்காப்பியம்

தமிழ் மொழியிலுள்ள இலக்கண நூல்களுக்கெல்லாம் முதன்மை நூலாக இன்றும் சிறப்புப்பெறும் நூல் என்றால் அது தொல்காப்பியம் மட்டுமே என உறுதியாகக் கூறலாம். பின்வந்த இலக்கண நூல்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாகவும் முழுமையும் கிடைக்கப்பெற்ற நூலாகவும் தொல்காப்பியம் விளங்குகிறது. இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டு பகுக்கப்பட்டு 1610 நூற்பாக்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுதியவர் இளம்பூரணர் ஆவார்.

எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களைக் கொண்டு, நூன்மரபு முதல் குற்றியலுகரப் புணரியல் வரை ஒன்பது இயல்களைக் கொண்டது. சொல்லதிகாரம் கிளவியாக்கம் முதல் எச்சவியல் வரை 463 நூற்பாக்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பொருளதிகாரம் 664 நூற்பாக்களைக் கொண்டு அகத்திணையியல் முதல் மரபியல் வரை ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் தொடரியல் கோட்பாடு பற்றி கிளிவியாக்கத்திலும், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களிலும் சொல்வகைகளைப் பற்றிப் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகிய இயல்களில் விளக்கியும் மீதமுள்ளதை எச்சவியலில் குறிப்பிட்டுள்ளது. இத்தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் இடைச்சொல் பற்றிய வரலாறு காணப்படுகின்றது.

சொல் - விளக்கம்

எழுத்து தனித்து நின்றும் எழுத்தோடு தொடர்ந்து நின்றும் பொருள் தருவது சொல். மேலும், எழுத்துக்களால் உண்டாக்கியதே சொல். இவை ஒலிகளால் வடிவம் பெறும் அமைப்பாகும். என்பதை,

“எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்த

சொல்லிய பள்ளி யெழுதரு வளியின்”[46]

என்று தொல்காப்பியர் கூறுகிறார். நன்னூலாரும் இதையே,

“மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி”[47]

என்று சொல்லுக்கு முதற்காரணமாக அமைகின்றதை விளக்குகிறார். மேலும் எழுப்பப்படுதலின் எழுத்து என்றும், அவ்வோசையை வெளிப்படுத்தி எழுத்து வடிவம் கொடுக்கப்படுகிறது என்றும் வரையறை செய்கிறார். மேலும் நேமிநாதம் என்ற இலக்கண நூலில்,

“உந்தியிற் தோன்றும் உதான வளிப்பிறந்து”[48]

என்று சொல்லுக்கு காரியமாகிய ஓசை பிறக்குமிடத்தைக் குறிப்பிட்டுள்ளது. இக்கருத்துக்கள் யாவும் சொல் பிறக்கக் காரணமாகிய ஓசை தோன்றுமிடத்தைத் தெளிவுப்படுத்துகின்றன.

“நெட்டெழுத்து ஏழும் ஓரெழுத்தொருமொழி”[49]

என்றும் குறில் எழுத்துக்கள் சொல் ஆகாது என்பதை,

“குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே”[50]

என்றும் கூறப்பட்டுள்ளது. இதுபோன்று மேலும், தெளிவாக நன்னூல் குறிப்பிடுகின்றது. ஓரெழுத்து ஒரு சொல்லாக மொத்தம் 42 எழுத்துக்கள் உள்ளன.

பொதுவாக சொல் என்றாலே பொருள்தரக்கூடியது ஆகும். பொருள் இல்லா சொல்லே தமிழில் இல்லை எனலாம். அச்சொல்லின் பொருள் பார்த்து புலப்படுவதும் உண்டு, ஆழ்ந்து நோக்கி அதன்பின்பு தெளிவதும் உண்டு. சொற்கள் அனைத்திற்கும் இலக்கணப் பொருளும் தன்னைக் குறித்த சொற்பொருளும் உண்டு என்பதற்குச் சான்றாக,

“எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே”[51]

“மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா”[52]

என்று இரண்டு விதிகளால் தெளிவாகச் சுட்டுகின்றார். சொல் என்பதற்கு தொல்காப்பியர் சொல்லதிகாரம் முதல் நூற்பாவிலே குறிப்பிட்டுள்ளார்.

“உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே

ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே”[53]

என்ற நூற்பாவால் இலக்கணம் வகுத்து சொல்லுக்கு குறிப்பால், பொருள் விளங்கச் செய்துள்ளமையைக் கண்டு தெளியலாம்.

“பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்

சொல்லினாகும் என்மனார் புலவர்”[54]

போன்ற நூற்பாக்கள் மூலம் சொற்களுக்கு இலக்கணம் வகுத்து குறிப்பால் பொருள் விளங்கச் செய்துள்ளமையைக் காண முடிகிறது. மேலும் இந்நூற்பாவின் மூலமாக அறியப்படும் இரண்டு கூறுகளை விளக்குவது,

1. சொல்லின் மூலமாக ‘பொருள் தெரிதல்’
2. சொல்லின் மூலமாக ‘சொல்லே தெரிதல்’

எனப் பொருள் தன்மையும், சொல் தன்மையும் வேறுபடுத்தப்பட்ட நிலையை ‘சொல்’ ஒன்றே கொண்டிருக்கிறது. சொல்தன்மை, பொருள்தன்மை தனித்தனியாக (வெவ்வேறாய்) இருந்தாலும் சொல்லால் குறிக்கப்படும் பொருள், சரியான பொருள் தன்மையை குறிக்காவிடின் இலக்கணம் பிழைபடும் அல்லது மொழி அறியாமை புலப்படும். தவறாகச் சொன்னால் இலக்கணப் பிழை, சரியாகக் கூறியும் பொருள் உணராராயின் மொழி அறிவு இல்லாதவர் ஆவர்.

சொன்மை தெரிதல், பொருண்மை தெரிதல் என்பதை மூன்றுவகையில் உரையாசிரியர்களால் பொருள் கொள்ளப்பட்டதென சிவலிங்கனார்,

“சொன்மை தெரிதல்

பொருண்மை தெரிதல்

சொன்மையும் பொருண்மையும் தெரிதல்”[55]

என்ற மூவகை விளக்கங்கள் அமையும் என்று கூறுவதை எடுத்துக்காட்டி, முதல் இரண்டே போதும் என்கிறார். ஒருவன் ஒன்றைச் சொல்லால் சுட்டி அறியும்போது இரண்டு தன்மையால் உணர்கிறான் என்பதை விளக்க எடுத்துக்கொள்வதைவிடச் ‘சொல்லினால் ஆவது’ சொன்மை, பொருண்மை இரண்டு என்பதே பொருந்தும். அதனை அறிவோர் அவர் அறிவின் வலிமையால் பல வகை ஆக்கலாம் என்பதும் வேறு. இவற்றிலிருந்து சொல்லின் ஆக்கம் சொன்மைக்கும் பொருண்மைக்கும் ஆகும் என்பதே தொல்காப்பியர் கருத்து. அதன் மூலமாக அறியப்படும் பொருள் அமையும் முறையை, அடுத்த நூற்பாவில்,

“தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்

இருபாற் றென்ப பொருண்மை நிலையே”[57]

என்றவாறு கூறுவார்.

சொல் இலக்கணத்தின் சிறப்புகள்



என சொல் குறித்த விளக்கங்களைத் தொல்காப்பியர் தொடர்ந்து விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் சொல்லிலக்கணத்தை விளக்குவதற்கெனச் சொல்லதிகாரத்தில் ஒன்பது இயல்களை வகுத்திருக்கின்றார். மொழியின் அமைப்பை விளக்கும் இலக்கணங்களில் எழுத்ததிகாரத்தைக் காட்டிலும் சொல்லதிகாரத்திற்கே மிகுந்த சிறப்புகள் உண்டு என்பது அறிஞர்களின் இடையே இருக்கக்கூடியச் செய்தி.

இலக்கண வளர்ச்சியில் எழுத்ததிகாரத்தைவிட சொல்லதிகாரம் பரந்து விரிந்தது. எழுத்ததிகாரத்தைப் போலவே சொல்லதிகாரத்துக்கும்

தொல்காப்பியர் ஒன்பது இயலை அமைத்திருந்தாலும் சொல்லதிகாரத்தின் சிறப்பு ஆய்வுலகில் இரண்டு விதத்தில் புலனாகிறது. ஒன்று தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவர் மட்டுமே உரை எழுதியிருக்க, சொல்லதிகாரத்திற்கு அந்த இருவரோடு சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய மூவரும் உரை கண்டுள்ளார்கள். பின்னுள்ள மூவரும் சொல்லதிகாரத்துக்கு மட்டுமே உரை எழுதியுள்ளார்கள் என்பதும், சுட்டிக்காட்டத் தகுந்த இரண்டு சிறப்பு. மேலும் பிற்கால இலக்கணங்களில் சில (வீரசோழியம், நேமிநாதம்) எழுத்ததிகாரத்தை ஒரு இயலாகவும், சொல்லதிகாரத்தைப் பல இயலாகவும் (வீரசோழியம் ஆறு படலம், நேமிநாதம் ஒன்பது இயல்) விவரித்துள்ளன.

இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம் ஆகிய நூல்கள் எழுத்ததிகாரத்தைச் சொல்லதிகாரத்தின் ஒரு கூறாய் இலக்கணக்கொத்து வேற்றுமையியலின் தொடக்கப் பகுதியில் எழுத்ததிகாரச் சில செய்திகளை விளக்கியுள்ளது. இதே போன்று "பிரயோக விவேகம், காரகம், சமாசம், தந்திரம், என்ற நான்கு படலங்களாக பகுத்து அவற்றுள் காரக படலத்தின் முற்பகுதிகளில் சில எழுத்திலக்கணக் கொள்கைகளைப் பட்டியலிட்டுருக்கின்றது. இதனை அறிந்துணர்ந்த சிவஞான முனிவர் வேறு நிலையில் இது பற்றிக் கூறியிருக்கும் செய்தியை செ.வை.சண்முகம் தம்முடைய நூலொன்றில் பதிவு செய்திருக்கின்றார்."[58]

இந்த உண்மையைச் சிவஞான முனிவர் (19ம் நூற்றாண்டில்) வேறுவிதமாகக் கூறியுள்ளார். சேனாவரையர் ஏன் எழுத்ததிகாரத்திற்கு உரை எழுதவில்லை என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு பதில் கூறும்போது எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் போல அதிக பயன் தராது என்று சொன்னதன் மூலம் (அவர் சேனாவரையர்) சொல்லதிகாரம் போலப் பெரும் பயன்படாமை கருதி எழுத்ததிகாரத்துக்கு உரை செய்யாது விடுத்தார். முதல் சூத்திரவிருத்தி (பக். 28)இல் அதன் சிறப்பைப் புலப்படுத்தியுள்ளார் என்பதாகும்.

இதைப்போன்றே இன்றைய மொழியியலறிஞர்களும், இலக்கண நூலார்களும், ஆய்வாளர்களும் சொல்லிலக்கண அமைப்புக்கே முக்கியத்துவம் தருகின்றனர் என்பன போன்ற செய்திகளை எண்ணிப் பார்க்கும்போது மொழி அமைப்பில் சொல்லிலக்கணம் பெறும் இன்றியமையாத இடத்தைப் பிடித்துள்ளது என்பது புலப்படும்.

சொல்லிலக்கண அமைப்பு முறை

தொல்காப்பியர் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்ற ஒன்பது இயல்களின் வாயிலாகச் சொல்லிலக்கணக் கோட்பாட்டை விளக்கியிருக்கின்றார்.

இன்றைய காலக்கட்டத்தில் மொழியியலாளர்கள் இலக்கணம் எழுதுவதற்கான அடிப்படை மூலத்தைத் தொல்காப்பியத்தை வைத்து கண்டறிகின்றனர் மொழியியலறிஞர்கள் ஒரு மொழிக்கு இலக்கணம் வகுக்கின்ற போது அடிப்படையில் ஒலியன்களிலிருந்து தொடங்குவர். பின்னர் ஒலியன்கள் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களையும், உருபன்களையும், தொடரமைப்பினையும் ஒரு வரிசையமைப்பில் விளக்குவர். இவற்றை எழுத்தியல் (Phonology), புணரியல் (Morpho phonemies), உருபனியல் (Morphology), தொடரியல் (Syntex) என்று பெயரிட்டிருக்கின்றனர். அதன் பின்புலத்தை, தொல்காப்பியம் எழுத்து மற்றும் சொல்லதிகாரத்தில் காணமுடிகிறது. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் உருபனியல், தொடரியல் பற்றியும் ச.அகத்தியலிங்கம்”[59] கூறியுள்ளார். என்ற குறிப்பின் மூலம் இன்றைய மொழியியல் அறிஞர்களுக்குத் தொல்காப்பியர் வழிகாட்டுதலாய் அமைந்திருப்பதை அறியமுடிகிறது.

தொல்காப்பியர் வகுத்தமைத்த ஒன்பது இயல்களின் அமைப்பிலேயே உருபனியல், தொடரியல் சிந்தனைகள் ஒரு நெறிமுறையோடு அமைக்கப்பட்டிருப்பதை அறியமுடியும்.

திணை, பால், இடம், எண் முதலான வழக்குகளின்றி இயைபு நோக்கில் தொடர்கள் அமைய வேண்டும் என்ற கருத்தே முதன்மையாகச் சொல்லதிகாரத்தில் சுட்டப்படுவதால் ஆசிரியர் கொண்டிருந்த கோட்பாடு

நன்கு விளங்கும் என்ற செய்தி தொல்காப்பியர் சொல்லதிகார இயல்களை ஓர் அமைப்பு முறையோடு விளக்கிச் சென்றுள்ளமை வெளிப்படுகின்றது. தொல்காப்பியத்தின் ஒன்பது இயல்களையும் ஒருங்கு நோக்கிப் பார்க்கின்ற போது அவற்றின் ஒட்டுமொத்த அமைப்பு முறையைக் கீழ்வருமாறு சுருங்கக் கூறிவிடலாம்.

பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு சொற்களின் அடிப்படையில் தொடரிலக்கணம் கூறுகிறார். சொல்லிலக்கணத்தில் தொடருக்கு முக்கியத்துவம் அளித்தாரானால் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கையே இயல் அமைத்து அவற்றில் தொடர் பற்றிய செய்திகளைத் தந்திருப்பார். ஆனால் தொல்காப்பியர் தொடரிலக்கணத்திற்கு முக்கியத்துவம் தந்து அது பற்றிக் கூறுமிடத்து அதற்குரிய சொல் இலக்கணம் பற்றிப் பேசுவதால் முதலில் தொடர், தொடர் இயைபு, தொடராக்கம் ஆகியவற்றைக் கிளவியாக்கத்தில் கூறிச் சொற்களைத் தொடர் ஆக்கும் இலக்கணக் கூறான வேற்றுமைகளைப் பற்றி அடுத்தடுத்த வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய இயல்களில் கூறித் தொடராக்கத்தில் பெயர், வினை, இடை, உரிச்சொற்களின் பங்கைப் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகிய இயல்களில் கூறாத பிற செய்திகளை எச்சவியலிலும் கூறுகின்றார்.

இவ்வாறாகத் தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் சொல்லிலக்கணக் கோட்பாடுகளை ஒன்பது இயல்களிலும் ஒரு திட்டமிட்ட வரன்முறை அமைப்போடு உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இனி இந்த இயலில் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் குறித்த பொதுவான செய்திகளும் இந்த ஆய்வேட்டின் மையப்பகுதியான இடையியல் குறித்த பொதுவான மற்றும் பரந்துபட்ட பல்வேறு பரிமாணங்களும் எடுத்து விளக்கப்பெறுகின்றன.

சொல்லின் இலக்கணம்

சொற்கள் பற்றியும் தொடர்கள் பற்றியும் விளக்கமாகக் காண்பதற்கு முன்பாக **சொல்** பற்றிய செய்திகள் பல்வேறு இடங்களில்

பல நிலைகளில் கையாளப்பட்டிருக்கும் தன்மையும் அறிந்துகொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

தொல்காப்பியர் கூறும் சொல்லிற்கான இலக்கணம்

தொல்காப்பியர் சொல்லுக்கான பொது இலக்கணத்தையும் சொல்லின் வகைகளையும் பெயரியலின் முதல் ஐந்து நூற்பாக்களில் தெளிவுப்படுத்தியுள்ளார். முதல் மூன்று நூற்பாக்கள் சொல்லின் பொது இலக்கணத்தையும் ஏனைய நான்கு மற்றும் ஐந்தாவது நூற்பாக்கள் சொல்லுக்குரிய வகைகளை விளக்குகின்றன.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"[60]

என்ற பெயரியலின் முதல் நூற்பாவிலே சொற்கள் அனைத்தும் பொருள் குறிக்கும் தன்மை உடையவை என்பதையும்,

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்

சொல்லி னாகும் என்மனார் புலவர்"[61]

என்ற இரண்டாவது நூற்பாவில் சொற்களின் வரிவடிவமும், பொருளும் எவை என்பதை,

"தெரிபுவேறு நிலையிலும் குறிப்பின் தோன்றலும்

இருபாற் றென்ப பொருண்மை நிலையே"[62]

என்ற நூற்பாவில் சொல்லுக்கான பொருளானது தெரிநிலையாகவும், குறிப்பாகவும் அமையும் என்பதையும் விளக்கி நிற்கின்றன. ஆனாலும் இச்சூத்திரங்களுக்கு உரை காணும் உரையாசிரியர்களிடையே பல்வேறு கருத்து மாறுபாடுகள் காணக்கிடக்கின்றன.

சொல் வகைபாடு

சொற்களின் வகைகளை தொல்காப்பியர் நான்காகப் பகுத்துள்ளார். அவை

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல்

“சொல்லெனப் படுப பெயரே வினையென்று

ஆயிரண் டென்ப அறிந்திசினோரே”[63]

எனத் தொல்காப்பியர் தமிழ்மொழியில் சொற்களைப் பெயர், வினை என இருவகைப்படுத்திக் கூறிய பின்னர்,

“இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்

அவற்றுவழி மருங்கின் தோன்று மென்ப”[64]

என்று பெயர், வினைச்சொற்களை அடுத்து அவற்றின் மருங்கில் தோன்றும் இரு சொற்களாக இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் கூறியுள்ளார். இவற்றால் இடைச்சொற்களுக்கும், உரிச்சொற்களுக்கும் பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றின் இடமாக வழங்கும் என்றும் அறியலாம். மேலும் சொல்லின் பெயர் வகைகளை நன்கு உணர்த்தி வருவன பெயர்ச்சொல் என்றும், பெயரோடு தொழிற்படும் தன்மையையும், செயலையும், காலத்தையும் உணர்த்தி நிற்கும் இயல்பை உடையது வினைச்சொல் என்றும், இது போன்று பெயரையும் வினையையும் சார்ந்து இடையில் வந்து பொருளைத் தருவது இடைச்சொல் என்றும், பெயரினும் வினையினும் தன் தன்மையில் சார்ந்து மிகுதிப்படுத்திக் கூறுவது உரிச்சொல் என்றும் சொற்களின் வகைத்தன்மையினை தெளிவுப்படுத்துகிறது.

மேற்குறிப்பிட்ட நால்வகைப் பகுப்போடு இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று மேலும் நால்வகையினதாய்ச் சொற்களை வகைப்படுத்தலாம். இந்நான்குச் சொற்களையும் செய்யுள் ஈட்டுவதற்கு பயன்படக்கூடிய சொற்கள் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். மொழியில் இயல்பாய் வழங்கப்பட்டு வரும் சொல்லை இயற்சொல் என்றும் கற்றோர்களால் (சான்றோர்களால்) மட்டுமே உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் செய்யுளில் பயின்று வரும் சொல்லைத் திரிசொல் என்றும் வடமொழிச் சொல்லானது தமிழுக்கேற்ப சிதைத்தும் சிதைக்காமலும் வழங்கப்பட்டு வரும் சொல்லை வடசொல் என்றும் பாகுபடுத்தியுள்ளார். இப்பகுப்பின் வழியாகத் தமிழ் மொழியில் பிற மொழிக்கலப்பானது தொல்காப்பியர் காலத்தில் தோற்றம்

பெற்றுள்ளமையை அறியலாம். தொல்காப்பியரைத் தொடர்ந்து பிற்கால இலக்கண ஆசிரியர்களும் இவ்வகைப்பாட்டினைத் தம் நூல்களில் குறிப்பிடுகின்றனர். இவற்றை நன்னூலார்,

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று

அனைத்தே செய்யுள் ஈட்டச்சொல்லே"[65]

என்ற நூற்பா மூலம் கூறிப்பிடுகிறார். மேலும் சொல்லின் வகைபாட்டை கீழ்வருமாறு காணலாம்.



(சேனாவரையர் சொல் வகைபாடு)



(தெய்வச்சிலையார் சொல் வகைபாடு)



ஆனால் ச. அகத்தியலிங்கம் சொற்களை ஐவகைப்படுத்துகிறார். அவை 1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. பெயரடை 4. வினையடை 5. இடைச்சொல் என்பனவாகும்.

மொழியியல் பார்வை

மொழியியல் நோக்கில் பெயரும் வினையும் கட்டிலா உருபன் (free morphme) என்றும், இடையும் உரியும் கட்டுண்ட உருபன் (bound morphme) என்று பகுப்பர்.



அதாவது கட்டுண்ட உருபன் தனித்து இயங்காது. கட்டிலா உருபன் தனித்து இயங்கும்.

ஓரெழுத்து ஒரு சொல்

ஓரெழுத்துக்கு நன்னூலார் மிகத் தெளிவான விளக்கத்துடன் குறிப்பிட்டுள்ளார். இதனை,

"உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்

கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்

ஆகும் நெடில் நொது ஆங்குறில் இரண்டோடு

ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின."[66]

என்ற நூற்பாவழி அறியலாம்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ	- 6
மா, மீ, மூ, மே, மை, மோ	- 6
தா, தீ, தூ, தே, தை	-5
பா, பூ, பே, பை, போ	-5
நா, நீ, நே, நை, நோ	- 5
கா, கூ, கை, கோ	- 4
சா, சீ, சே, சோ	- 4
வா, வீ, வை, வெள	- 4
யா	- 1
நொ, து	- 2
மொத்தம்	**42**

ஆ - பசு	மோ - முகர்	நா - தடு	வை - வைத்தல்
ஈ - பூச்சி	தா - துன்பம்	நீ-முன்னிலை ஒருமை	வெள - கவர்
ஊ - இறைச்சி	தீ - நெருப்பு	நே - அன்பு	சீ - சீழ்
ஏ - அம்பு	தூ - தூய்மை	நை - நைதல்	சே-சே என்னும் மரம்
ஐ - அழகு	தே - இனிமை	நோ - நோவு	நொ - துன்பம்
ஓ - மதகு	தை - ஒரு மாதம்	கா - சோலை	து - உண்
மா - விலங்கு	பா -பாட்டு	கூ - கூவுதல்	
மீ - மேல்	பூ - மலர்	கை - மனித உறுப்பு	
மூ - முதுமை	பே - அச்சம்	கோ - அரசன்	
மே - மேல்	பை - கைப்பை	வா - அழைத்தல்	
மை - முகில், மை	போ-போ என்னும் (ஏவல்)	வீ - மலர்	

சொல் - இலக்கணம் கூறும் நூல்களின் பட்டியல்

வ. எண்	**நூல்**	**ஆசிரியர்**	**காலம், நூற்**	**நுவல் பொருள்**
1.	தொல்	தொல்காப்பியர்	கி.மு 5. நூற்	எழுத்து, சொல், பொருள்
2.	அவிநயம்	அவிநயனார்	கி.மு 5 - 6 நூற்	ஐந்திலக்கணம்

3.	வீரசோழியம்	புத்தமித்திரர்	கி.பி.11 நூற்	”
4.	நேமிநாதம்	குணவீர பண்டிதர்	கி.பி.11 நூற்	எழுத்து, சொல்
5.	நன்னூல்	பவணந்தி முனிவர்	கி.பி.13 நூற்	”
6.	பிரயோக விவேகம்	சுப்ரமணிய தீட்சிதர்	கி.பி.17 நூற்	”
7.	இலக்கண விளக்கம்	வைத்தியநாத தேசிகர்	கி.பி.17 நூற்	ஐந்திலக்கணம்
8.	இலக்கணக் கொத்து	சுவாமிநாத தேசிகர்	கி.பி.17 நூற்	சொல்
9.	தொன்னூல் விளக்கம்	வீரமாமுனிவர்	கி.பி.17 நூற்	ஐந்திலக்கணம்
10.	இலக்கண சூறாவளி	சிவஞான முனிவர்	கி.பி. 18 நூற்	மறுப்பு நூல்
11.	முத்துவீரியம்	முத்துவீர உபத்தியாயர்	கி.பி.19 நூற்	ஐந்திலக்கணம்
12.	சுவாமிநாதம்	சுவாமிநாத கவிராயர்	கி.பி.19 நூற்	”
13.	அறுவகை இலக்கணம்	வண்ணச்சரபம் தண்டபாணி தேசிகர்	கி.பி. 19நூற்	ஐந்திலக்கணத்துடன் ஆறாவதாக புலமை இலக்கணம்
14.	மாணவர் தமிழ்	திருமலைவேற்	கி.பி.20 நூற்	எழுத்து, சொல்

	இலக்கணம்	கவிராயர்		பொருள்
15.	தமிழ் இலக்கணம் கும்மி	துரை கனகசபை	கி.பி.20 நூற்	எழுத்து, சொல்
16.	தமிழ் நூல் (தமிணூல்)	சரவணத் தமிழன்	1972	”
17.	தென்னூல்	ச.பாலசுந்தரனார்	1990	எழுத்து, சொல், இலக்கியம்

இடைச்சொல் - பொது இலக்கணம்

இடைச்சொல் என்பது சொற்கள் புணருமிடத்துச் சாரியையாய் நின்றும், உருபாய் நின்றும், தத்தம் குறிப்பின் பொருள் செய்ய நின்றும், அசைச்சொல்லாய் நின்றும், வினைச்சொற்களுக்கு இறுதியாய் நின்றும், இசைநிறையாய் நின்றும் அசைநிலையாய் நின்றும் வரும். தனித்து நின்று நடைபெறுவன அல்ல.

இடைச்சொல் - ஒரு விளக்கம்

இடை என்பதற்கு இடம், இடை, நடு என மாறுபட்ட பொருள் விளக்கம் கூறுவர். இச்சொல் பெயர்ச்சொல்லின் இடமாகவும் வினைச்சொல்லின் இடமாகவும் கொண்டு செயல்படும் காரணத்தால், இடச்சொல் (இடைச்சொல்) என்னும் பெயர் பெற்றன என்று ஒருபுறம் கூற, இதற்கு மாறாக மொழிக்கு முன்னும் பின்னும் வந்தாலும் மிகப் பெரும்பான்மையும் இடையில் வருவதால் இடைச்சொல் எனப் பெயர்ப்பெற்றன என்றும் மறுபக்க சாரார் கூறுவர்.

இவ் இடைச்சொற்கள் மொழிக்கு, முன்னோ, பின்னோ, இடையிலோ வரும்பொழுது பெயரைச் சார்ந்துவரின் அப்பெயர்ப் பொருளையே தமக்கும் பொருளாகவும் வினையைச் சார்ந்துவரின் அவ்வினைச் சொற்பொருளையே தமக்கும் பொருளாகவும் பெற்று வரும். ஆகையால் இடைச்சொல்லிற்கு தனிப் பொருளுடையவை அல்ல என்பது

தெளிவு. மேலும் இடைச்சொற்கள் செய்யுளில் பயின்று வருகையில் அவற்றின் இறுதி எழுத்துக்கள் திரிந்து வருதலும் உண்டு. இதனால் இரண்டோ, மூன்றோ இடைச்சொற்கள் சேர்ந்து வருதலும் உண்டு.

இடைச்சொற்கள் மொழிக்கு முன், பின், இடை, இரண்டு, மூன்று சொற்கள் சேர்ந்து வந்தாலும் தனக்கென்று தனிப்பொருள் கொண்டு அமைவதில்லை என்பது திண்ணம். இருப்பினும் பெயர், வினையோடு சேர்ந்துவரும் பொழுது பொருளின் செறிவு இடைச்சொற்களால் என்பது அவற்றிற்கு உண்டாகும் தனிச்சிறப்பு எனலாம். இடைச்சொல் பற்றிய பொதுவான கருத்தமைவுகள் இவ்வாறிருக்க, இச்சொற்களின் வரைவிலக்கணத்தைத் தமிழின் முதன்மை நூலான தொல்காப்பியத்தை முதன்மையாக வைத்து நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், வீரசோழியம், தொன்னூல் விளக்கம் ஆகிய இலக்கண நூலார் வகுத்தளித்த இலக்கண நூலின் வழி மேலும் விரிவாகக் காணலாம்.

இடைச்சொல் - பெயர்க்காரணம்

இடைச்சொற்களை ஆராயும் போது வினைவிகுதிகள், வேற்றுமை உருபுகள் என்பது சொற்களின் இறுதியிலும், சாரியையானது பெரும்பான்மை இடையிலும், அசைநிலை, இசைநிறை என்பன தனிமொழி போன்றும், தத்தம் குறிப்பு, ஒப்பு, உருபு என்பன சொற்களின் இடையிலும் என வெவ்வேறு இடங்களில் இடைச்சொற்கள் வருகின்ற வருகை முறைமையைக் காணமுடிகிறது.

1. **மொழி முதல்**
   - (i) **அசைநிலை** - ஓஒ சொல்லுக
   - (ii) **இசைநிறை –** ஏஎ இல்தொத்தன்
2. **மொழி இடை**
   - (i) **சாரியை –** பழத்தை (பழம் + அத்து + ஐ)
   - (ii) **உவம உருபு -** அமிழ்தம் போலும் தமிழ்மொழி
3. **மொழி இறுதி**
   - (i) **வினைவிகுதி –** படித்தான் (படி + த்த + ஆன்)
   - (ii) **வேற்றுமை உருபு –** மன்னனை (மன்னனை + ஐ)
   - (iii) **இசைநிறை –** தான் ஒருகூறு சலமயன் ஆமே

(iv) **தத்தம் குறிப்பு –** இவனோ வந்தான் (இவன் + ஓ)

இது போன்ற எடுத்துக்காட்டுகளைப் பகுத்துப்பார்க்கும் போது சாரியை ஒன்றே மொழியின் இடையில் வருவதை காணமுடிகிறது. இவ்விடத்து உவம உருபுகளும் மொழியிடையில் வரும் வாய்ப்பாக எண்ணலாம். ஆனால் இடைச்சொற்களின் வகைகள் அனைத்தையும் உற்றுநோக்கி ஆராய்கையில் தொடரினிடையே வந்துள்ளது புலப்படும். அதைத் தவிர்த்து பிற இடைச்சொற்களை ஆராயும்போது சாரியை ஒன்றே மொழியின் இடையில் வருவது என்பதை அறிய முடிகிறது.

இருப்பினும் சாரியைகளின் எண்ணிக்கை மற்றவற்றின் எண்ணிக்கையை விட குறைவாக இருப்பது இலக்கண நூற்களின்வழிப் புலனாகிறது. எல்லாவித இடைச்சொற்களையும் வருமிடத்தை ஆராய்ந்த சுப்பிரமணிய சாஸ்திரி "இடைச்சொற்கள் யாவும் பெரும்பான்மையும் மொழிக்கு இடையில் வாரா"[67] என விளக்கியுள்ளார். ஆகையால் இவற்றையெல்லாம் கொண்டு பார்க்கும் போது இடையில் வருவதால் இடைச்சொல்லாயிற்று என்ற பொருள் விளக்கம் எந்த அளவிற்குப் பொருத்தமாக அமையும் என்பது மேலும் ஆராய்வதற்குரியது.

இடைச்சொல் என்பதனைக் காரணப்பெயராகக் கொள்ள இடமுண்டு. ஏனெனில் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் தோன்றிய பிறகே இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தோன்றியுள்ளது என்பதை 'அவற்றுவழி மருங்கில் இடையும் உரியும் தோன்றுமென்ப' என்று தொல்காப்பியர் கூறுவதிலே அக்கருத்து நன்கு புலனாகிறது. இவற்றில் உரிச்சொற்கள் பெயரையும் வினையையும் சார்ந்து வந்தாலும் தனக்கெனத் தனிப்பொருள் உடையது. இக்காரணத்தினால் இடைச்சொல்லினின்று உரிச்சொல் வேறுபட்டு நிற்கக் காணலாம். 'இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' என்ற தொல்காப்பிய நூற்பாவினால் இடைச்சொல்லுக்குரிய சிறப்பும் நன்கு புலனாகிறது.

பெயரினையும் வினையினையும் சார்ந்து, அவற்றின் பொருள் மாற்றத்திற்கு உதவி, கருத்துத் தொடர்ச்சிக்குத் தான் இடைநின்றும், அவ்வாறு சார்ந்த இடத்தினால் இடைச்சொல் என்ற சிறப்பைப் பெற்றும், கருத்துச் செறிவிற்கு பொருள்பட விளங்குவதற்கு நின்றும்,

மொழியின் வளர்ச்சிக்கு உதவுவதும் பெயர் வினைக்கு உயிர்நாடியாக பலவிடங்களில் உதவுவதும் 'இடைச்சொல்' என்று கூறினால் பொருத்தமுடையது.

இடைச்சொல் - பொருள்

ஏழு பிரிவுகளில் இடைச்சொற்களை பகுத்து அதற்குள் உட்பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. அவை, தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விழைவு, ஒழியிசை, கழிவு, ஆக்கம், பிரிநிலை ஆகிய பதினான்கும் இடைச்சொற்களுக்கு விரித்துக் கூறப்பட்டுள்ளன.

"முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்"[68]

எனத் தொல்காப்பியமும் பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து என நன்னூலும் கூறுமிடத்து இடைச்சொற்கள் சொல் நிலையிலும் தொடர் நிலையிலும் சொற்களின் முன்னும் பின்னும் இடையிலும் வழங்குவன என்று அறியலாம். உரையாசிரியர் சேனாவரையரும் மொழி - இடையில் வருவதால் இடைச்சொல் எனப் பெயர் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்.

பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றினிடமாக நின்று பொருள் உணர்த்தலால் 'இடைச்சொல்' எனப்பெயர் பெற்று அது போலியாதலால் இடைச்சொல் என்றாயிற்று எனக் கருதுதல் பொருத்தம் உடைத்து என்று கூறுவதும் ஏற்கத்தகும்.

இடைச்சொற்களின் வகைகள்

தொல்காப்பயிர் இடைச்சொற்களை 7 வகைகளாக பகுத்துள்ளார். அவையாவன,

1. புணரியல் நிலையிடைப் பொருணிலைக்கு உதவுன
2. வினைசெயல் மருங்கின் காலமொடு வருந
3. வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந
4. அசைநிலைக் கிளவியாகி வருந
5. இசைநிறைக் கிளவியாகி வருந
6. தத்தங் குறிப்பிற் பொருள் செய்குந

7. ஒப்பில் வழியால் பொருள் செய்குந

இதனை,

“அவைதாம்,

புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதவுநவு

வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவு

வேற்றுமைப் பொருவயின் னுருபா குநவு

அசைநிலைக் கிளவியாகி வருநவு

மிசைநிறைக் கிளவியாகி வருநவு

தத்தங் குறிப்பிற் பொருள்செய்குநவு

மொப்பில் வழியாற் பொருள் செய்குநவுமென்

றப்பண் பினவே நுவலுங் காலை.”[69]

தொல்காப்பிய நூற்பாவால் தெளியலாம். நேமிநாதம், தொல்காப்பியத்தைப் பின்பற்றினாலும் இடைச்சொற்களை ஆறு வகையில் அடக்கியவையாக ‘ஒப்பில்போலி அசைநிலை’ இரண்டும் ஒரே வகையில் அடங்கும் எனக் கூறுகிறது. அவற்றை,

“சாரியையாய் ஒன்றல் உருபாதல் தங்குறிப்பின்

நேரும் பொருளாதல் நின்றிசையாய்ப் - பேரதல்

வினைச்சொற்கீ றாதல் இசை நிறைத்து மேவல்

அனைத்தே யிடைச்சொல் அளவு”[70]

என்று குணவீரபண்டிதர் மொழிந்துள்ளார். மேலும், பவணந்தி முனிவர் நன்னூலில் இடைச்சொற்களின் வகைகளைப் பற்றி,

“வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்

தத்தம் பொருள இசைநிறை யசைநிலை

குறிப்பென்எண் பகுதியின் தனித்திய லின்றிப்

பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து

ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்”[71]

வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய இலக்கண நூல்களிலும் இடைச்சொற்களை நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இடைச்சொற்களின் வகைகளை இவ்வியலில் பின்வருமாறு அட்டவணைகளில் காணலாம்.

இவற்றுள் தொல்காப்பியம் ‘தத்தம் குறிப்பில் பொருள் செய்வன’ என்ற வகையை நன்னூல் இரண்டாக பிரித்து தத்தம் பொருள் செய்வன, தத்தம் குறிப்பில் பொருள் செய்வன” என இரண்டு வகையில் இதனை அடக்க முடியும். எனவே நன்னூல் வகைபாடு அவ்வளவு பொருத்தமாக தோன்றவில்லை. தொல்காப்பியம் சுட்டிய ஒப்பிலிபோலி என்பதை நேமிநாதம் நீக்கியுள்ளது. ‘ஒப்பில் போலி அப்பொருட்டாகும்’ எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது. இதன் கருத்துப்படி ஒப்பில் போலியாக வருவன அசைநிலைச் சொற்களில் அடங்கும் என்பதாகும். எனவே இதனை அசைநிலையுடன் அடங்கும் என நேமிநாத உரையாசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுநவும்

என்ற அடியில் சாரியைகளைப் பற்றித் தொல்காப்பியர் சுட்டியுள்ளதாக உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். இதைப் பற்றி தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் கூறியுள்ளார். தெய்வச்சிலையார் பொருள்நிலைக்கு உதவுவதாவது அல்வழிப் பொருட்கு உரியன. இவை, வேற்றுமைப் பொருட்கு உரியன இவையென வரும் “இன்னே, வற்றே”[72] என்கிறார். சாரியைகள் தாம்சார்ந்த பொருளை வேறுபடுத்தவில்லை யென்றால் அதனைச் சொல்லாகக் கருதமுடியாது என்று சேனாவரையர் சுட்டியுள்ளார்”[78] எனவே சாரியைகள் பொருள் வேறுபாடு செய்வனவற்றை இடைச்சொல்லாகக் கூறமுடியும்.

வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்

சேனாவரையர் “எல்லா விகுதிகளும் பாலுணர்த்துவது கிடையாது, காலமும் காட்டாது. ஆனால் வினை இடைநிலைகள் எல்லாம் காலம்

காட்டும். ஆகவே வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும் என்று தொல்காப்பியர் சுட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார்."[73] தெய்வச்சிலையார் பால்காட்டும் விகுதிகளையும், கால இடைநிலைகளையும் குறிப்பிட்டுள்ளார். எனவே இதன்படி இளம்பூரணர் அன், ஆன் என்னும் விகுதிகளும், அம், ஆம் என்னும் விகுதிகளும் இடம் பெறுவதாகச் சுட்டியுள்ளார். எனவே இவை கால இடைநிலைகள், உயர்திணை, அஃறிணை பால்காட்டும் விகுதிகள் ஆகியவற்றைக் கூறுகிறது.

வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்

இளம்பூரணர் வேற்றுமை உருபுகளாக ஐ, ஒடு உருபுகளை குறித்ததாகக் கூறியுள்ளார். ஆனால் தெய்வச்சிலையார் வேற்றுமை உருபுகள் மட்டும் அல்ல, அவை இடம்பெறும் சொற்களும் என்கிறார். எனவே இதன்படி வேற்றுமை உருபுகள், அவை இடம்பெறும் சொற்கள், மாற்றம் பெறும் சொற்றொடர்களை இதில் கூறமுடியும்.

ஒப்பில் வழியாற்பொருள் செய்குநவும்

இது பொருளதிகாரத்தில் கூறப்பட்டுள்ள உவம உருபுகளைக் குறிக்கும். மீதமுள்ள அசைநிலை, இசைநிறை, தத்தம்குறிப்பில் பொருள் செய்வனவாகிய மூன்றும் இடையியலில் கூறப்படுகின்றன. அசைநிலை என்பதில் மியா, இக என்பனவும் இசைநிறை என்பதில் ஏ, குரை போன்ற சொற்களும் தத்தம் குறிப்பில் பொருள் செய்வன மன், தில் போன்றவையும் கூறப்பட்டுள்ளன.

இடைச்சொற்களின் பாகுபாடு

1. **புணரியல்** - இரண்டு சொல் சேருமிடத்து(புணரும் போது) அப்பொருள் விளங்குவதற்கு வரும்
2. **வினைச்செயல்** - வினைச்சொல்லை முடிக்குமிடத்துக் காலத்தை உணர்த்தி வரும்
3. **வேற்றுமைப்பொருள்** - வேற்றுமைப் பொருளிடத்து உருபாய் வரும்.
4. **அசைநிலைக்கிளவி** - பொருளற்று (பொருள் இல்லாமல்) துணையாய் வரும்

5. **இசைநிறைக்கிளவி** - ஒலியை நிறைத்தலே பொருளாக வரும்.
6. **தத்தம் குறிப்பு** - தத்தம் உடைய குறிப்பால் பொருளை உணர்த்தி வரும்.
7. **ஒப்பில் வழி** - ஒப்புமையான பொருள் தோன்றாத இடத்தில் தான் அப்பொருள் தருதலும் ஆகும்.

இடைச்சொல் வருமிடம்

இடைச்சொற்கள் வருமிடங்களை தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன. நேமிநாதமும் முத்துவீரியமும் இதனைக் குறிப்பிடவில்லை. தொல்காப்பியம் இச்சொற்களை நான்கு இடங்களில் வரும் என்கிறது. இதனை,

"அவைதாம்

முன்னும் பின்னும் மொழி அடுத்து வருதலும்

தம் ஈறு திரிதலும் பிறிது அவண் நிலையலும்

அன்னவை எல்லாம் உரிய என்ப"[74]

என்ற நூற்பா மூலம் தெளியலாம்.

எ.கா : அது**மன்**, **கொன்**னூர், உயிர்போகுக**தில்**ல, வருக**தில்** அம்ம.

இடைச்சொல் அடையும் வேறுபாடு

இடைச்சொற்கள் தம் இடையே வருவது மட்டும் இல்லாமல், தம்மால் சாரப்படும் சொற்களுக்கு முன்னும் பின்னும் தாம் அடைந்து வருதலும் என்கிறது.

- இடைச்சொற்கள் என்பதற்கு ஏற்றவாறு இடையிடையே வரும்.
- தம்மால் சாரப்படும் சொற்களுக்கு முன்னும் பின்னும் அடைந்து வரும்
- தம் ஈற்றழுத்து (இறுதியெழுத்து) வேறுபட்டு வரும்.
- இடைச்சொல் நின்ற இடத்தே மற்றோர் இடைச்சொல்லும் வந்து பொருள் தரும்.
- அதாவது இரண்டு இடைச்சொற்கள் இணைந்து வரும்.

இடைச்சொல்லின் பொருண்மை

இடைச்சொல் ஒருவிதப் பொருளைச் சுட்டிக்காட்டுவதை அனைத்து இலக்கண நூல்களும் கூறுகின்றன. அந்தப் பொருளைப் பெயர், வினை ஆகியவற்றுடன் சார்ந்து தருகிறது. இலக்கண நூல்கள் அனைத்தும் இடைச்சொல்லிற்கு வரும் பொருள்கள் எவையெனச் சுட்டவில்லை. ஆனால் நன்னூல் மட்டும் இடைச்சொல் வரும் பொருள்களாகப் பதினான்கைக் கூறுகிறது.

"தெரிநிலை தேற்றம்ஐயம் முற்றுஎண் சிறப்பு

எதிர்மறை எச்சம்வினா விழைவு ஒழியிசை

சிறப்பு கழிவுஆக்கம் இன்னன்ன இடைப்பொருள்"[75]

என்ற நன்னூல் நூற்பா மூலம் இன்னன்ன என்றதால் சுட்டுப்பொருளையும், வினாப்பொருளையும், இடம், காலப்பொருளையும், கால இடங்களின் எல்லைப்பொருளையும், விகற்பப்பொருளையும், வியப்புப்பொருளையும், பயனின்மை பொருளையும், இகழ்ச்சி பொருளையும் தருமென உரையாசிரயர்கள் கூறுகின்றனர். "தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்கள் இருபது பொருள்களைத் தருவதாக தா.ஞானமூர்த்தி"[76] கூறியுள்ளார். அவை,

1. கழிவு
2. ஆக்கம்
3. ஒழியிசை
4. அச்சம்
5. பயனின்மை
6. காலம்
7. பெருமை
8. எச்சம்
9. சிறப்பு
10. ஐயம்
11. எதிர்மறை

12. முற்று
13. எண்
14. தெரிநிலை
15. பிரிநிலை
16. வினா
17. தேற்றம்
18. அசைநிலை
19. வினை
20. குறிப்பு

இந்த இருபது பொருள்களைத் தொல்காப்பியம் சுட்டியதைத் தொடர்ந்து, பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களான நன்னூல், இலக்கண விளக்கம், நேமிநாதம், முத்துவீரியம் போன்ற நூல்களும் இடைச்சொல் வரும் பொருள்களைக் கூறியுள்ளன. இலக்கண நூல்கள் கூறியதைத் தவிர்த்து உரையாசிரியர்கள் பலபொருள்களைக் கூறியுள்ளனர். எனவே தத்தம் குறிப்பில் பொருள் சுட்டுவதாகக் கூறப்பட்ட இடைச்சொல்லின் ஆறாவது வகை இதனுள் அடங்குகிறது. தொல்காப்பியர் 'மன்' எனும் இடைச்சொல் மூன்று பொருளில் வருமெனக் கூறியுள்ளார். ஆனால் பிற்கால இலக்கண நூல்களில் அசைநிலை, மிகுதி, நிலைபேறு என்ற பொருளைச் சேர்த்து ஆறாக வழங்குகிறது. எனவே இடைச்சொற்கள் தமிழ் இலக்கண நூல்களில் பல்வேறு வகையான மாறுதல்களை அடைந்துள்ளன. இதனை ஆராய்ந்த இசுரயேல் தொல்காப்பியத்தில் தத்தம் பொருள் தருவன என 25 இடைச்சொற்களைக் கூறியுள்ளார். இச்சொற்களின் பிற்கால இலக்கண நூல்களில் சில சொற்கள் நிலைபெற்றும் சில சொற்கள் நிலைபெறாமலும் போய்விட்டன.

இடைச்சொல் இயல்புகள்

இடைச்சொல் பெயரையும் வினையையும் சார்ந்து வரும். தொல்காப்பியர் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றதால் இடைச்சொல்லும் ஒருவிதப் பொருளைத் தருகின்றது. சீனமொழியில் வெறுஞ்சொற்கள் எனப்படுபவை தமிழில் இடைச்சொற்கள் எனப்படும் என்று மு.வ. கூறுகிறார்."[77]எனவே இடைச்சொல்லில் ஒருவகைத்

தொக்கும் தொகாமலும் வரும். இதுபோலவே சீனமொழியில் வருமென்று குறிப்பிட்டுள்ளார். அதற்குச் சான்றாக தமிழில்,

மக்கள் விருப்பம் (தொகை)

மக்களது விருப்பம் (தொகா நிலை)

(அது – ஆறாம் வேற்றுமை)

சீனமொழியில்,

மின் (மக்கள்)

லிக் (வலிமை)

மின் லிக் (மக்கள் வலிமை - தொகை)

மின் சிலிக் (மக்களுடைய வலிமை தொகாநிலை)

இவ்வாறு நுட்பமான பொருள் வேறுபாட்டை உணர்த்தப் பயன்படும் சொற்களைத் தமிழில் இடைச்சொற்கள் என்று பாகுபாடு செய்வர். இதைப் போன்றே சீனமொழியிலும் பொருள் வேறுபாடு செய்யும் வெறுஞ்சொற்களை இடைச்சொல்லாகக் கருத முடியும். இடைச்சொல்லின் இயல்பாக

"இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே"[78]

என்று தொல்காப்பியர் கூறுகிறார். இந்நூற்பா சில வினாக்களை எழுப்புகிறது. அதாவது,

1. இடைச்சொல்லின் ஒருவகையை வேற்றுமையில் கூற, எல்லா இடைச்சொல்லையும் வேற்றுமையாகக் கருதமுடியுமா?
2. வேற்றுமை, பெயருக்கு இறுதியில் வரும். ஆனால் இடைச்சொல் பெயருக்கும், வினைக்கும் முன்னும் பின்னும் வருமென்பதால் இதனைத் தொல்காப்பியர் கூறிய காரணமென்ன?
3. இடைச்சொல் வேற்றுமைபோலப் பொருளை வேறுபடுத்திக் காட்டும் என்றால் அசைநிலைச் சொற்களைக் கூறுவது பொருந்துமா?

4. இடைச்சொல் பெயரையும், வினையையும் சார்ந்து பொருளை வேறுபடுத்தும். ஆனால் வேற்றுமை பெயரை மட்டுமே வேறுபடுத்தி நிற்கும், எனவே இதன் இரண்டையும் ஒன்றாகக் கூறியதன் காரணமென்ன?

இதனை ஆராய்ந்த இசரயேல் "இடைச்சொல் சொல்நிலையிலும் தொடர்நிலையிலும் வேறுபாடு செய்வன என்று கூறியுள்ளார்."[79] இந்தக் கருத்து அவ்வளவாக ஏற்புடையதாகத் தோன்றவில்லை. செ.வை. சண்முகம், "தொடரியல் நிலையிலும், சொல்லியல் நிலையிலும் பொருளை வேற்றுமைப்படுத்தும் என்று பரந்த நிலையில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார் என்று தோன்றுகிறது என்கிறார்."[80]ஆனால் இடைச்சொல், வேற்றுமை இரண்டும் தான் சார்ந்திருக்கும் பொருளை வேறுபடுத்தி நிற்கும். இவை இரண்டும் சில குறிப்பிட்ட பொருண்மையில் மட்டும்தான் வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அதனை,

"கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்

றம்முன் றென்ப மன்னைச் சொல்லே"[81]

அதுபோல இரண்டாம் வேற்றுமையாகிய "ஐ" என்னும் உருபும் கீழ்க்கண்ட பொருண்மையில் மட்டும்தான் வரும் என்கிறார்.

காப்பின், ஒப்பின், ஊர்தியின் இழையின்"[82]

என்று கூறுகிறார். மேலும் இடைச்சொல், வேற்றுமை ஆகிய இரண்டுமே இலக்கியத்தில் பொருள் வேறுபாடு செய்யும் வகையில் இடம்பெறுகின்றன. எனவே இவையிரண்டும் பயன்பாட்டு முறையில் இலக்கியத்தில் இடம்பெறுவதைக் கொண்டும், அதன்பொருண்மை அமையும் முறைகளைக் கொண்டும் இந்நூற்பா அமைந்துள்ளது.

அகராதி விளக்கும் இடைச்சொற்கள்

கிரியாவின் தற்கால தமிழகராதி "தனக்கென்று ஒரு பொருள் இல்லாமல் பெயர்ச்சொல்லோடு அல்லது வினைச்சொல்லோடு இணைந்துவரும் (வேற்றுமை உருபு, காலம் காட்டும் இடைநிலை போன்ற) கூறுகளையும் வாக்கிய அமைப்பில் பயன்படும் (விதிநிலை

வாக்கியத்தைக் காட்டும் – 'ஆல்' வாக்கியங்களை இணைக்கும் 'ஆனால்' போன்ற) கூறுகளையும் உள்ளடக்கிய சொல் பிரிவு"[83] என்று விளக்கம் தருகிறது.

"பெயர் வினைகளோடே சார்ந்து வழங்கும் சொல் என்று தமிழ் மொழி அகராதி"[84] பொருள் கூறுகிறது.

"பெயர் வினைகளைச் சார்ந்து வழங்கும் சொல் இடைச்சொல் என்று மெய்யப்பன் தமிழகராதி"[85] பொருள் விளக்கம் தருகிறது.

பாலூர் கண்ணப்பமுதலியார், "இடை, நடு, இடுப்பு, துன்பம், அளவு, வேறுபாடு இடையின எழுத்து"[86] என்று இடைப்பொருளில் குறிப்பிட்டுள்ளார்.

இடைச்சொல் என்பதை, "அம், ஆம், அல், ஆல், உம், எம், ஏம், ஏ, தம், தில், நம், பாக்கு, பான், மன், மன், வான் போன்ற சொற்களை நெல்லை எஸ் சங்கரலிங்க முதலியார் வெள்ளிவிழா தமிழ்ப் பேரகராதி"[87] மொழிகின்றது.

இடைச்சொல்லை, "இடைநடுவினிலே, in the meantime, in the middle" என்று மிகவும் சுருக்கமாக இடைச்சொல் இடையில் மட்டும் வரும் என்பதை தரங்கம்பாடி அகராதி என்கிற பெப்ரிசியஸ் அகராதி"[88] செப்புகிறது.

யாழ்ப்பாண அகராதியும் "பெயர்வினைகளைச் சார்ந்து வழங்கும் சொல்"[89] என்று குறிப்பிடுகிறது.

மொழியியல் அறிஞர்களின் சொற்பாகுபாடு

இடைச்சொல் பற்றி மொழியியலாளர்கள் பல்வேறு கருத்துக்களைத் தொகுத்து அளிக்கின்றனர். மொழியியல் அறிஞர்கள் சொல் பாகுபாடுகளை பல்வேறு மொழிகளில் எப்படி அமைகின்றது எனக் குறிப்பிடுவதுடன், அதன் வகைகளை வகைப்படுத்துகிற முறைமையையும் விளக்கியுள்ளனர்.

லெனார்டு புளூம் ஃபீல்டு (Leonard Bloomfield)

இவர், தனித்தியல் வடிவங்கள் (Free Forms) எனவும், சேர்ந்து வருவதை இரண்டாம் தரமான சொற்கள் (Scondary Words) எனவும், ஒட்டுவடிவங்கள் (Affix Forms) அடங்கிய சொற்களை முதலாவதான சொற்கள் (Primary Words) எனவும் பாகுபடுத்தியுள்ளார்."[90]இவரது பகுப்பின்படி முதலாவதான சொல் வகையில் இடைச்சொற்கள் அடங்கும்.

ஹாக்கெட் (Hocket)

"சொற்பாகுபாடு சில மொழிகளில் இருவகைப் பாகுபாடாகவும் (Bipartite Systems)வேறு சில மொழிகளில் மூன்று வகைப்பாடாகவும் (Tripartite Systems) இன்னும் சில மொழிகளில் பல்வகைப் பாகுபாடாகவும் அமைந்திருக்கும்"[91] என குறிப்பிடுகிறார்.

1. **இருவகைப்பாகுபாடு**
   - (i) ஒட்டுக்களைப் பெறுவன
   - (ii) ஒட்டுக்களைப் பெறாதன
2. **மூவகைப்பாகுபாடு**
   - (i) பெயர்
   - (ii) வினை
   - (iii) ஒருநிலைச்சொற்கள்
3. **பல்வகைப் பாகுபாடு**
   - (i) பெயர்
   - (ii) வினை
   - (iii) பெயர் + வினை
   - (iv) பெயர் + வினை + வினையடை

என அமையும் இவர் கூறும் மேற்கொண்ட சொல்வகைகளின் அடிப்படையில் தமிழை ஆராய்ந்தால் ஒட்டுக்களை ஏற்காதன என்ற பகுப்பினுள் இடைச்சொற்கள் அடங்கும்.

ஆண்ட்ரோனோவ்

இவர் தமிழ்ச்சொற்கள் "பெயர், எண்ணுப்பெயர், பிரதிப்பெயர், இடப்பெயர், வினை, வினையடை, ஒரு நிலைச்சொற்கள்,

தொடக்கநிலைச்சொற்கள், எதிரொலிச்சொற்கள், வியப்பிடைச்சொற்கள் என்னும் பாகுபாட்டில் அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார்."[92]

ஆஷர்

தமிழ்ச்சொற்களைப் "பெயர்ச்சொல், மாற்றுப்பெயர், வினைச்சொல், பெயரடை, பின்னுருபு, இடைச்சொற்கள் என ஆறாகப் பகுத்துள்ளார்."[93]

லேமன்

என்பவர், வேர்களின் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளார். "பெயர் வேர்கள், வினைவேர்கள் என்னும் இரண்டை இரு பெரும் பிரிவுகளாகக் கொள்கிறார். மேலும் இவர் சிறு பிரிவாகப் பெயரடை வேர்கள், வினையடை வேர்கள் எனக் கொள்கிறார். இதனோடு பின்னுருபுகள், இணைப்புச்சொற்கள் ஆகியவற்றைப் பெயர், வினை வேர்களின் திரிபுற்ற அல்லது திரிபுறாத வடிவங்கள் எனக் கருதலாம்" [94] என்று கூறுகிறார்.

சொற்களை வகைப்படுத்தும் போது சொல், சார்நிலைக்கிளவி என இருவகைப்படுத்துகிறார். அவற்றுள், முதல் பகுப்பில்

1. பெயர்
2. வினை
3. பெயரடை
4. வினையிடை
5. வல்லடை
6. இணைப்பான்
7. உணர்ச்சி வெடிப்புச்சொல்
8. உணர்வுக் குறிப்புச்சொல்
9. விளிப்புச்சொல்
10. விளி ஏற்புச்சொல்

என பத்தாக வகைப்படுத்தியுள்ளார்.

இதற்கு மேலும் ஆதாரமாக ஆதித்தன் குறிப்பிட்டக் கருத்தை, "தொல்காப்பியர் நெறிப்படி ஒட்டுக்களும் ஒருநிலைச்சொற்களும் இணைந்த சொல்வகையே இடைச்சொல் எனப்படும். தொல்காப்பியர் பெயர், வினை, பெயரடை, வினையிடை இடைச்சொற்கள் எனப் பகுப்பதே ஏற்புடையதாகும். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பெற்ற தொல்காப்பியம் பொருண்மை அடிப்படையில்

ஒட்டுக்களையும் ஒருநிலைச்சொற்களையும் உள்ளடக்கி இடைச்சொற்கள் எனக் குறிப்பிட்டுள்ளமை”[95] முறையானதாகும். இதிலிருந்து தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ள இடைச்சொல் என்பது சொல் வகைகளுள் ஒன்று என்பது தெளிவாகிறது.

தெ.பொ.மீனாட்சிசுந்தரன்

இவர், இடைச்சொற்களை “வேரல் உருபன்கள் (non-root morpnemes) எனக் கூறுகின்றார். இவர் குறிப்பிடும் கருத்து ஆராய்வதற்குரியது. சில இடைச்சொற்கள் வேர்ச்சொற்களைக் கொண்டு உள்ளன. ஒரு நிலைச்சொற்கள் வேர்ச்சொல் உடையவைகளே”[96] என்று குறிப்பிட்டுள்ளதை ப.வேல்முருகன் தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

சான்றுகள்

(i) என, எனா, என்று, என்றா - என் (வேர்ச்சொல்)

(ii) போலும் – போல் (வேர்ச்சொல்)

இவை அனைத்தும் வினையடியிலிருந்து தோன்றிய இடைச்சொற்கள்.

மோ. இசரயேல்

சொற்களை ஐந்து வகைப்படுத்தலாம் என்கிறார்.

1. பெயர்
2. வினை
3. பெயருரிச்சொல்
4. வினையுரிச்சொல்
5. ஒரு நிலைச்சொற்கள் ஆகியன ஆகும்.

மேலும் ஒரு நிலைச்சொற்களை ஐந்துவகையாக பகுத்துள்ளார்.

1. ஒட்டி
2. இணைப்புச்சொல்
3. விளி

4. வியப்பிடைச்சொல்

5. உவம உருபுகள்”[97] என பகுத்துள்ளார்.

இப்பகுப்பின்படி இடைச்சொல்லை ஒருநிலைச்சொல் என்ற பகுப்பில் அடக்கலாம். ஆனால் அனைத்து இடைச்சொல்லும் அடிச்சொல்லைக் கொண்டு அமையாததால், எல்லாவற்றையும் இவ்வகுப்பில் விளக்க முடியாது. அதாவது ஒட்டுக்களாய் வரும் சாரியை, வினைவிகுதி, வேற்றுமையுருபுகள் ஆகியவற்றை விளக்க முடியாது.

இவர் இடைச்சொற்களை ஒட்டுக்கள், ஒருநிலைச்சொற்கள் என்ற இரு பகுப்பில் அடக்கி, ஒருநிலைச்சொற்களின் ஒட்டிகள், இணைப்புச்சொல், விளிச்சொல், வியப்பிடைச்சொல், உவம உருபுகள் என்பன அடங்கும் எனவும் சுட்டியுள்ளார். சாரியை, வேற்றுமை உருபுகள், கால இடைநிலைகள் ஆகியன ஒட்டுக்கள். மற்றவை ஒருநிலைச்சொற்கள்.

“இலக்கண ஆய்வில் சொற்களிடையே உயர்வு தாழ்வு பேசுவது பொருத்தமானதாகக் கருதப்படாது”[98] என்று செ.வை. சண்முகம் அவர்கள் கூறுகிறார்.

உரையாசிரியர்களில் இளம்பூரணரைத் தவிர அனைவரும் சொற்களை நான்கு வகைப்படும் என்று கூறி அவைகளை மீண்டும் தொகுத்தற்குரிய காரணங்களை விளக்கியுள்ளனர். இளம்பூரணர், சொற்கள் மொத்தத்தில் நான்கு வகைப்படும் என்று கூறிவிட்டாலும் இரண்டாகப் பிரித்ததற்குக் காரணம் கூறியுள்ளார். இக்காரணத்தை சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் ஒப்புக்கொள்கின்றனர்.

தெய்வச்சிலையாரால் சொன்மைநிலை பெயர், வினை என சிறப்புடையச்சொல் இரண்டும் இடை, உரி என சிறப்பால் சொல் இரண்டும் நால்வகைப்படும்”[99] என்று மொழிந்துள்ளார்.

ஆ.சிவலிங்கனார், “தான் சார்ந்த இடத்தாற் பொருள் வலியுறுத்துஞ்சொல். தமக்கெனத் தனிப்பொருள் இருந்தும் பெயர் வினைகளோடு இடம்பெற்றே தெளிபொருள் தருஞ்சொல் இடைச்சொல்”[100] என்று கூறியுள்ளார்.

தேவநேயப்பாவணார், “பெரும்பாலும் தனித்துவராது, பெயருக்கும், வினைக்கும் உறுப்பாக அவற்றினிடத்து வரும் சொற்கள் இடைச்சொல்லாம் என்றும் இடைச்சொல்லின் வகைப்பாட்டை வித்தியாசமான முறையில் விளக்கியுள்ளார். அதாவது இடை, இடம், சிறுபான்மை, தனித்தும் வருவதால் தனித்து வருவன, சொல்லிடத்து வருவன என இடைச்சொற்கள் இருபாற்படும் தனித்துவருவனவும் இயற்கை இடைச்சொல்லும் செயற்கை இடைச்சொல்லுமாக இரு திறப்படும் இடைச்சொல்லாகவே தோன்றியவை இயற்கை. பெயரும் வினையும் பல்வேறு பொருளுணர்த்தி இடைச்சொல்லாகத் திரிந்தவை செயற்கை”[101] என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் தனித்து வருவனவாக, சுட்டிடைச்சொற்கள், வினா இடைச்சொற்கள், உவம உருபுகள், உடன்பாட்டிடைச் சொற்கள், ஒத்துக்கோளிடைச் சொற்கள், வேசாற்றிடைச் சொற்கள், விளியிடைச்சொற்கள், உரைமுக இடைச்சொற்கள், தொகைமுக இடைச்சொற்கள், விழுக்காட்டிடைச் சொற்கள், தோல்வியாட்டிடைச் சொற்கள் அடைக்கலம் வேண்டிடைச்சொல் எனப்பொருள் உணர்த்தும் முறையில் இடைச்சொற்களை வகைப்படுத்தியுள்ளார். மேலும் இணைப்புச் சொற்கள் (Conjuction) என்ற வகையில்,

1. அடுக்கிணைப்புச் சொற்கள்(Cumulative conjuction)
2. மறுப்பிணைச் சொற்கள் (Adversative conjuction)
3. மறுநிலையிணைப்புச் சொற்கள் (Alternative conjuction)
4. உய்த்துணர் இணைப்புச்சொற்கள் (illative conjuction)

இவ்வாறு இணைப்புச்சொற்களையும் வகைப்படுத்தியுள்ளார்.

மேலும் தனித்து வருவனவாக, தாலாட்டிடைச் சொற்கள், பிதற்றற்குறிப்பிடைச் சொற்கள், ஆளதியிடைச்சொற்கள், வண்ண மெட்டிடைச்சொற்கள், வண்ணக் குழிப்பிடைச்சொற்கள், தில்லானா இடைச்சொற்கள், மகுட இடைச்சொற்கள், கூப்பீட்டிடைச் சொற்கள், நாயேவலிடைச் சொற்கள், பல்குறிப்பிடைச் சொற்கள் என வகைப்படுத்தியுள்ளார்.

சொல்லிடத்து வருவனவாக 1.முன்னொட்டுகள் 2.வரிசையிடைச் சொற்கள் 3.இணைப்புச்சொற்கள் 4.பல்பொருளிடைச்சொற்கள் 5.ஈறுகள் 6. இடைநிலைகள் 7.சாரியைகள் 8.வேற்றுமைஉருபுகள் என எட்டாக வகைப்படுத்தியுள்ளார். இவற்றில் இவர் தனித்து வருவனவற்றிலும் இணைப்புச் சொற்களைக் குறிப்பிட்டுள்ளார். உம், ஏ ஆகிய இரண்டும் சொல்லிடத்து வரும் இணைப்புச் சொற்களாகப் பாகுபாடு செய்யப்பட்டத் தன்மையில் அமைக்கப் பட்டுள்ளது.

செ.வை. சண்முகம்

இவர் தெ.பொ.மீ, மோ.இசரயேல், பி.எஸ்.சு போன்றோர் வகுத்த இடைச்சொற்களை மதிப்பீடு செய்து இவர் கீழ்க்காணும் பாகுபாட்டை தருகிறார்."[102] அவை

1. **அடிச்சொற்கள் : கால முன் இடப்பின்னாக வருபவை**

   இவை கட்டில்லாது (கொன், தஞ்சம், எல்) கட்டுண்டது (மற்றை, பிற) என இருவகைகளில் அமையும்.

2. **ஒருநிலைச்சொற்கள் :**

   இவற்றையும் மேலும் இருவகையாகப் பிரிக்கிறார். அவை யாவன, விகுதி எதுவும் ஏற்காது வாக்கியத்தின் புறத்துறுப்பாய் வருவது (அம்ம, அன்னோ, அன்றே) விகுதி எதுவும் ஏற்காது வாக்கியத்தின் அகத்துறுப்பாய் வருவது (மன்ற, போலும், மற்று)

3. **ஒட்டுக்கள் :**

   இதில் வேற்றுமையுருபுகள், கால இடைநிலைகள், விகுதிகள் அசைச்சொற்கள் போன்றவை அடங்கும்.

4. **ஒட்டிகள் :**

   1. இதுவும் இரு பிரிவுகளைக் கொண்டது
   2. இன்னொரு விகுதி ஏற்றுவருவது (மன், கொல், தில்)
   3. இன்னொரு விகுதி ஏற்காது (உம், ஏ, ஓ)

பொற்கோ

இவர் சொற்களை வகைப்படுத்தும் போது "சார்நிலைக்கிளவி என்று குறித்துள்ளார்.[103] இவை இடைச்சொற்களைக் குறிக்கும். அதாவது சார்நிலைக் கிளவியினை,

1. விகுதி
2. சொல்லுருபு
3. வினைசார் கிளவி
4. ஒட்டு
5. சாரியை அல்லது நிரப்பி

என ஐந்தாகப் பகுத்துள்ளார்.

இவர் கூறிய சார்நிலைக்கிளவிகள் அனைத்தும் இடைச்சொல்லினுள் அடங்கும். மேலும் இவர் குறிப்பிட்டுள்ள இணைப்பான் உணர்ச்சி வெடிப்புச்சொல், உணர்வு குறிப்புச்சொல், விளிப்புச்சொல், விளி ஏற்புச்சொல் ஆகியவை அகராதிகளில் இடைச்சொற்களாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன. எனவே இவையும் இடைச்சொற்களின் வகை எனலாம்.

அறிஞர்களின் கருத்துக்கள் ஆராய்ந்து இடைச்சொற்களை ஏழு வகைப்படுத்தலாம்"[104] என்கிறார் பா. மல்லிகா.

1. ஒட்டுக்கள் – சாரியை, இடைநிலை, வேற்றுமை உருபுகள்
2. ஒரு நிலைச்சொற்கள் - மற்றையது, மன்ற, தஞ்சம், போலும்
3. இணைப்புச் சொற்கள் - என, என்று, எனா, என்றா
4. வியப்புச் சொற்கள் - நன்றே, அந்தோ
5. விளி - அம்ம
6. உவம உருபுகள் - அன்ன, போல, புரைய
7. ஒட்டிகள்

1. முன் ஒட்டிகள் - ஆர், குரை, புரைய
2. பின் ஒட்டிகள் - கொன், எற்று, எல்

இவர் பகுத்துக் கூறியது பின்வரும் ஆய்வாளர்க்கு சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல் என்ற நன்னூலாரின் நூற்பாவிற்கு உதாரணமாக

இடைச்சொல்லை விரிவாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இதனோடு முன்னோடி ஆய்வாளர் வேல்முருகன் அவர்கள் இலக்கண ஆசிரியர்கள் மொழியியல் அறிஞர்களின் கருத்துக்கள் அடிப்படையில் ஆராய்ந்து இரு பிரிவுகளில் இடைச்சொற்களை அடக்கியுள்ளார்.

1. ஒட்டுக்கள் - இதில் வேற்றுமை, சாரியைகள், வினைவிகுதிகள் கால இடைநிலைகள் ஆகியன அடங்கும்.
2. ஒரு நிலைச்சொற்கள் - இசைநிறைச் சொற்கள், அசைநிலைச்சொற்கள், தத்தம் குறிப்புச்சொற்கள், உவம உருபுகள் ஆகியன. இன்றைய காலக்கட்டத்தில் மொழியியல் ஆய்வு வளர்ந்துள்ள நிலையில் இப்பாகுபாடு ஏற்றுக்கொள்ளும் தன்மையில் உள்ளது.

இவ்வாறு மொழியியல் அறிஞர்கள் இடைச்சொற்களை வகைப்படுத்தி உள்ளனர். இவர்களது பாகுபாடு இலக்கண ஆசிரியர்கள் பாகுபாட்டின் அடிப்படையில் விரிவாக அமைந்துள்ளதை காணமுடிகிறது. மேலும் இவ்விடைச்சொற்களுக்கு விளக்கம் கூறும் வகையில்,

தே. ஆண்டியப்பன்

1. தத்தம் குறிப்பில் பொருள் செய்வன
2. அசைநிலை
3. இசைநிறை

1. தத்தம் குறிப்பில் பொருள் செய்வன

மன், தில், கொன், உம், ஏ, என, என்று, மற்று, மற்றை, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல், ஆர், என்பவற்றையும் குறிப்போசையாக ஒளஒள, ஒளஉ, நன்றே, அன்றே, அந்தோ, அன்னோ ஆகியன குறிப்பிட்டுள்ளார்.

2. அசைநிலை

அசைநிலையினை அசைநிலை, வியங்கோள் அசை, முன்னிலை அசை, உரையசை, தனியிசை, பிரிவிலசை எனப்பிரித்துள்ளார்.

(I) அசைநிலை - அந்தில், ஆர், குரை, ஏ

(II) வியங்கோளசை - மா

(III) முன்னிலை அசை - மியா, இக, மோ, இகும், சின்

(IV) உரையசை - அம்ம, ஆங்க

(IV) தனியிசை – யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது

(V) பிரிவிலசை – ஆக ஆக, ஆகல் ஆகல், என்பது என்பது எனத் தொல்காப்பியர் சுட்டியவற்றைத் தொகுத்துத் தந்துள்ளார்.

3. இசைநிறை

ஏஎ, ஓஒ, ஏ ஆகிய தொல்காப்பியர் கூறியவற்றை இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளனர். மேலும் இவர் தத்தம் குறிப்பில் பொருள் செய்வனவற்றை,

1. இரண்டிற்கு மேற்பட்ட பொருளைத் தரும் சொற்கள்
2. ஒரு பொருள்தரும் இடைச்சொல்
3. அசைநிலையும் குறிப்பும் அமைந்தவை
4. குறிப்பிசைச் சொற்கள்

எனப் பாகுபடுத்தி தெளிவு பெறுவதற்கு நூற்பாக்களையும் தந்துள்ளார். இவ்வாறு தொல்காப்பியர் இடையியலில் விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் இடையியலில் கூறியுள்ள இடைச்சொற்களை ஆராய்ந்த மோ. இசரயேல் ஆறு வகைப்படுத்தி ஆராய்ந்துள்ளார்.

1. **வினையடியினின்று தோன்றிய இணைப்புச்சொற்களும் (Connectors) பிறவும்**

   என, என்று, எனா, என்றா, மன், மன்ற, போலும் என்பன.

2. **இடவேறுபாட்டுடன் அமைந்த துணைவினைகள்**

   இக, இகும், சின் போன்றன.

3. **அன்பேவவ் வழக்குகள்**

   மியா, மோ, மதி என்பன

4. **பகுத்தறிவிற்கு இயலாதவை சில**

   உந்து, எற்று, மா, போ, கா முதலியன

5. **வினைப்பொருள் இழந்த பிற சொற்கள்**

   ஆக, ஆகல், என்பது, நன்றே, அன்றே, சென்றதே, போயிற்றே, கேட்டை, நின்றை, காத்தை, கண்டை முதலியன

6. பிற அசைநிலைகள் சில

ஆர், ஒள, அம்ம, அரோ போன்றன. இவ்வாறு இசரயேல் விளக்கியுள்ளார்.

இடைச்சொல் என்றால் "பெயரிடையேயும் வினையிடையேயும் சொற்றொடர் இடையேயும் பொருந்தி நின்று பொருள் விளக்கத்திற்குத் துணை புரிவது என்று பொருளாகும்"[105] என சி. இலக்குவனார் தன் தொல்காப்பிய ஆராய்ச்சியில் விளக்கியுள்ளார்.

வேற்றுமை உருபு, கால இடைநிலை, சாரியை, பாலிட விகுதி, குறிப்புப் பொருட்கிளவி, அசைநிலை, இசைநிறை, முதலானவை இடைச்சொல் என்று பெயர் பெறும்"[106] எனக் குறிப்பிட்டுள்ளார் பொற்கோ அவர்கள்.

தே. ஆண்டியப்பன் "இடைச்சொல் பெயரும் வினையும் சார்ந்து தோன்றும், அப்போது பெயர்ப்பொருளையும் வினைப்பொருளையும் வேறுவகையில் வெளிப்படுத்தும். இடைச்சொல்லானது பெயரோடும் வினையொடும் நடைபெற்று இயலும் என்பதால் சாரப்படும் சொல்லின் வேறாக (FREEFORM) வருதலே அன்றி, அவற்றிற்கு உறுப்பாய் (BOUND FROM) வருவதையும் கொள்ளலாம்"[107] என்கிறார்.

கே.ராஜகோபாலாச்சாரியார், "ஒரு பெயர் அல்லது வினையின் அகத்திலாவது புறத்திலாவது இடங்கொண்டு பொருள் உணர்த்துகின்றபடியால் அது இடைச்சொல் என்ற பெயர் பெறுவதாயிற்று"[108] என்று விளக்குகிறார்.

பி.சா. சுப்ரமணியசாஸ்திரி, "இடைச்சொல், பெயர்ச்சொல், வினைச்சொல் இவற்றின் விகுதியாகும் எனக் கூறப்பட்டது. சில சொற்றொடரின் இடையிலும் இறுதியிலும் வரும். அவை உம், ஏ முதலியன. ஆகலின் தமிழ் மொழி இடைச்சொல்லும் வடமொழி பிரத்திய நிபாதங்களும் ஒன்றாகும்."[109] என்று உரைத்துள்ளார்.

மரங்கள், மரங்களை, மரங்களுக்கு முதலிய சொற்களில் வரும் கள் - ஐ - கு ஆகிய பன்மை விகுதி, வேற்றுமை உருபு போன்றவையும், வந்தான், போன, போனால், போன்ற கால இடைநிலைகள், பால்

விகுதிகள், நிபந்தனை விகுதிகள் போன்றனவும் தனித்து நின்று பொருள் தராமல், பெயர், வினை ஆகியவற்றுடன் சேர்ந்து வந்து இலக்கணப் பொருள் தருகின்றன. இத்தகைய சொல் உறுப்புகளையே இலக்கண ஆசிரியர் இடைச்சொல் என்பர்"[110] என்று எடுத்துக்காட்டுடன் தெளிவாக்குகிறார் நுஃமான் அவர்கள்.

இசரயேல், "பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றினிடமாக நின்று பொருள் உணர்த்தலால் இடைச்சொல் என்று பெயர் பெற்று, அது போலியால் இடைச்சொல் என்றாயிற்று எனக் கருதுதல் பொருத்தம் உடைத்து"[111] என்று கூறியுள்ளார்.

அகத்தியலிங்கம், "பெயரோ அல்லது வினையோ, பெயரடையோ (அ) வினையடையோ ஆகாமல் உள்ள சொற்கள் இடைச்சொற்கள்"[112] எனப்படும்.

உரையாசிரியர்களின் கருத்துக்கள்

"தமக்கியல்பிலவே என்றதனான் இடைச்சொற்கள் பிரித்தலின்றி நின்றசைப்பனவும் உள என்கிறார்"[113] இளம்பூரணர்.

சேனாவரையார் மற்றும் நச்சிசனார்க்கினியர் ஆகிய இருவரும் "மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடைவருதலின் இடைச்சொல்"[114] என்று கூறுகின்றனர்.

கல்லாடனார், "பெயர் வினைகள் உணர்த்தும் பொருட்டு தான் இடமாக நிற்றலான் இடைச்சொல்லாயிற்று. இதனோடு பெயர்ச் சொல்லையும், வினைச்சொல்லையும் சார்ந்து வருமேயல்லாமல் தாமாக வரும் இயல்பினை உடையன அல்ல"[115] என்று இருவகைப்படுத்திக் கூறுகிறார். வெள்ளைவாரணார், ஆதித்தன், சுப்ரமணிய சாஸ்திரி, சிவலிங்கன், பாலசுந்தரம் ஆகியோரும் கல்லாடனார் கருத்தையே உரைக்கின்றனர்.

மயிலைநாதர், "வேற்றுமை உருபு, வினையுருபு, சாரியையுருபு, உவம உருபு, இவைகளாகியும் தத்தம் பொருள் காட்டுவனவும், இசைநிறைப்பனவும், அசைநிலையனவும் குறிப்பின் வருவனவும்

என்னும் 8 பகுதியின்பால் தானாகத் தனித்து நடத்தலின்றிப் பெயர் வினைகள் இரண்டின் முன்னும் பின்னும் ஓரிடத்து ஒன்றானும் பலவானும் வந்துநிற்பது இடைச்சொல்"[116] என்கிறார். மேலும் இடைச்சொல் என்பது உருபன்கள் எனவும் கருதுகிறார்.

சங்கர நமச்சிவாயர், "தனித்து நடத்தலின்றிப் பெயர், வினைகள் இடமாக நடத்தலின் இடைச்சொல் என்னும் காரணக்குறி போந்தது. பெயர், வினைகளுக்கு அகத்துறுப்பாகவும், புறத்துறுப்பாகவும் அவற்றின் முன்னும் பின்னும் ஒன்றும் பலவுமாக இடைச்சொற்கள் வரும். பகுபதத்தில் பகுதி நீங்கிய ஏனைய உறுப்புக்கள் இடைச்சொற்கள்" [117]என விளக்கியுள்ளார்.

"பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகாது இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல்"[118] என்பது சிவஞானமுனிவர் கருத்து.

நன்னூலின் காண்டிகையுரை, சொல்லுக்கு முன்னும் பின்னுமாக வருமாயினும் பெரும்பாலும் இடையில் வருதலால் இடைச்சொல் எனக் குறியீடு பெற்றது என்ற கருத்தினை உரைக்கிறது. இதனை பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார் மறுத்து, பெரும்பாலும் இடைச்சொல் என்பதன் பொருள் அங்ஙனமாயின் இடச்சொல் என்பதேயாம் என்று உரைக்கிறார்.

இவ்வாறு இலக்கண நூலாரும், உரையாசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் கூறும் கருத்திலிருந்து தனக்கென்று தனியான குறிப்புப்பொருளை இடைச்சொல் கொண்டிருந்தும் முன்னும் பின்னும் இடையிலும் வந்தாலும் தனித்து நின்று இயங்கமுடியாமல் பெயரையும் வினையையும் இணைந்து நின்று சொல்லுக்கும் தொடருக்கும் தெளிவான பொருளைத் தருவதும் பொருளை வேறுபட வைப்பதும் இடைச்சொல் எனத் துணியலாம்.

இடைச்சொல் வருமிடம் - இலக்கண ஆசிரியர் கருத்து

இடைச்சொல் வருமிடங்களாகத் தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன. இவற்றுள் நன்னூல் என்னென்ன பொருளில் வரும்

என்பதையும் குறிப்பிட்டுள்ளது. ஆனால் நேமிநாதமும் முத்துவீரியமும் இடைச்சொற்களை குறிப்பிட்டுள்ளனவே தவிர அவை வருமிடங்களை குறிப்பிடவில்லை.

தொல்காப்பியம் இச்சொற்களை நான்கு வகை இடங்களில் வரும் என்கிறது.

"அவைதாம் முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்

தம்மீறு திரிதலும் பிரிதவன் நிலையிலும்

அன்னவை எல்லாம் உரிய என்ப"[119]

எ.கா; முன்வருதல் - கொல்

பின்வருதல் - கொன்னூர்

தம்மிறு திரிதல் - உடனுயிர் போகுக தில்ல

பிறிதவன் நிலையில் - வருகதில் அம்ம வெஞ்சேரி சேர

இவற்றுள் நன்னூல் இடைச்சொற்களை மூன்று வகைகளில் வரும் என்கிறது.

முன்வருதல்

பின்வருதல்

பல இணைந்து வருதல். அதனை,

"பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து

ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்"[120]

என்னும் நூற்பா புலப்படுத்துகிறது.

'மொழி வரலாற்றில் இடைச்சொற்கள்' எனும் தலைப்பில் முன்னோடி ஆய்வு நிகழ்த்திய மு. மூர்த்தி அவர்கள் இடைச்சொல் பயின்று வரும் இடங்கள் குறித்து அட்டவணை ஒன்றினை கொடுத்துள்ளார். அப்பட்டியல்,

பெயர் + வினை + இடை

வினை + பெயர் + இடை

வினை + இடை + பெயர்

பெயர் + இடை +வினை

இடை + வினை + பெயர்

இடை + பெயர் + வினை

இவ்வாறு இடைச்சொற்களின் பட்டியல் விரிந்து செல்கிறது. இதனை வைத்து பார்க்கும் போது இடைச்சொல் மொழி முதலிலும் மொழி இடையிலும் மொழி இறுதியிலும் வரும் என்பது பெறப்படுகிறது. மேலும் பெயருக்கும் வினைக்கும் முன்னரும் நடுவிலும் பெயர் வினைகளுக்கு பின்னரும் இடைச்சொல்லோடு இடைச்சொல் இணைந்து வரும் என்பதும் அறிய முடிகிறது. இதிலிருந்து இடைச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் நடுவிலும் இறுதியிலும் தொடர் முதலிலும் இடையிலும் பயின்று வருவதைக் காணமுடிகின்றன.

வகைப்பாட்டின் வரிசைக்குரிய காரணம்

இடைச்சொற்களின் வகைபாட்டினை சாரியை, வினை, வேற்றுமை உருபு ஆகிய மூன்றையும் செய்யுள் வழக்கில் காணப்படுவதால், இம்மூன்று இடைச்சொற்களை முதன்மையாகவும் அடுத்ததாக வைக்கப்பட்டுள்ள அசைநிலை, இசைநிறை, தத்தம் பொருள் ஆகியவை செய்யுளுக்கே அடிப்படையானது என்பதால், இம்மூன்றை அடுத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இறுதியாக உள்ள ஒப்பியல் உருபுகள் மற்ற சொற்களுக்கு ஒப்புமை கூறுவதாலும் தொல்காப்பியத்தின் கடைசி அதிகாரமான பொருளதிகாரத்தில் காணப்படுவதாலும் அதிகப்பட்சமாகப் பேச்சு வழக்கிற்கு பயன்படுவதாலும் இடைச்சொற்கள் இறுதியாக வைக்கப்பட்டுள்ளது எனக் கருதலாம். இக்காரணம் தொல்காப்பியத்திற்கு மட்டும் அடங்கும். மற்ற இலக்கண நூல்களுக்கு வரையறுக்கப்படவில்லை. இவ்வாய்வின் முதன்மையாக தொல்காப்பிய நூல் இருப்பதால் இவற்றிற்கு மட்டுமே அடிப்படையாக வைத்துப் பார்க்கப்படுகிறது.

இடைச்சொற்களின் வகைகளைப் பற்றியும் அதில் இலக்கண நூலார்கள் மாறுபட்டு இருப்பதையும் ஆராயப்பட்டுள்ளது. மேலும் சொற்களின் பாகுபாட்டை மொழியியல் அறிஞர்களின் வழி பின்வருமாறு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

இடைச்சொல் – இயல்பகுப்பும் அதன் வகைபாடும்

வ.எண்	**தொல்காப்பியம்**	**இயல்பகுப்பு**	**இடைச்சொல் வகைபாடு**
1.	தொல்காப்பியம்	இடையியல்	7
2.	நேமிநாதம்	இடைச்சொல் மரபு	6
3.	நன்னூல்	இடையியல்	8
4.	இலக்கண விளக்கம்	இடைச்சொல்லியல்	7
5.	தொன்னூல் விளக்கம்	இடைச்சொல்லியல்	8
6.	முத்து வீரியம்	ஒழிபியல்	6
7.	சுவாமிநாதம்	எச்ச மரபு	9

இடைச்சொல் (ம) நூற்பாக்களின் எண்ணிக்கை

வ.எண்	**இல. நூல்கள்**	**இ.சொ எண்ணிக்கை**	**நூற்.எண்ணிக்கை**
1.	தொல்	47	38
2.	நேமி	12	5
3.	நன்	48	22

4.	இல வி	53	27
5.	தொ.வி	48	8
6.	மு.வீ	35	22

அகரவரிசையில் இடைச்சொற்கள்

வ.எண்	**இடைச்சொற்கள்**
1.	அந்தில் - ஆங்கு
2.	அந்தில் - அசைநிலை
3.	அம்ம - கேட்பித்தல்
4.	அரோ - அசைநிலை
5.	ஆக - பிரிவில் அசைநிலை
6.	ஆகல் - பிரிவில் அசைநிலை
7.	ஆங்க - உரையசை
8.	ஆர் - பலர்பால்
9.	ஆர் - அசைச்சொல்
10.	இக - முன்னிலை அசைச்சொல்
11.	இகும் - மூவிட அடைச்சொல்
12.	இசின் - மூவிட அசைச்சொல்
13.	உம் - எச்சம், சிறப்பு
14.	எல் - இலக்கம்

15.	எற்று - இறப்பு
16.	என - வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர்
17.	என்பது - பிரிவில் அசைநிலை
18.	என்று - வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர்
19.	ஏ - தேற்றம், வினா, பிரிவு, எண், ஈற்றசை
20.	ஏ - இசைநிறை
21.	ஏ - அசைநிலை
22.	ஏ - குறிப்பு (அன்றே, நன்றே)
23.	ஒடு - எண்
24.	ஓ - குறிப்பு (அந்தோ, அன்னோ)
25.	ஓ - பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு
26.	ஔ - குறிப்பு
27.	கா - அசைநிலை
28.	குரை - அசைநிலை
29.	குரை - இசைநிறை
30.	கொல் - ஐயம்
31.	கொன் - அச்சம், பயமிலி, காலம், ஒழியிசை

32.	தஞ்சம் - எளிமை
33.	தில் - விழைவு, காலம், ஒழியிசை
34.	பிற - மூவிட அசைநிலை
35.	பிறக்கு - ”
36.	போ - ”
37.	போலும் - உரையசை
38.	மதி - முன்னிலை அசைச்சொல்
39.	மற்று - வினைமாற்று
40.	மற்று - அசைநிலை
41.	மற்றையது - சுட்டியதற்கினம்
42.	மன்- கழிவு, ஆக்கம், ஒழியிசை
43.	மன்ற - தெளிவு
44.	மா - வியங்கோள் அசைச்சொல்
45.	மாது - அசைநிலை
46.	மியா - முன்னிலை அசைச்சொல்
47.	மோ - ”
48.	யா - மூவிட அசைச்சொல்

இடைச்சொல்: வகைகள் – விளக்கப்படும் இயல்கள் – நூற்பாக்கள்

வ. எ	இல. நூ/ இ. சொ. வ	தொல்	நேமி	நன்	இல.வி	தொன். வி	மு.வீ	சு.நா
1	சாரியை	எழுத். புணரி – 112, 118, 121, 123, 133, 134, 137 உரு. – 173, 201 உயி. ம. – 229, 346, 374 புள். மய. – 320, 344	-	எழு. உரு. பு. 243–253 எழு-126	எழு. உரு.பு – 149-157 எ. சா – 37	சொல். சொ. பொது – 52 பகு. பெ- 95	எழு. 173-182 205-207 209-212 214-220 224-228 232-233 247-248 250	எழு. எழு. மரபு- 22, 26
2.	காலம் காட்டும் இடைநிலைகள்	-	-	எழு. பத. 47-49 காலம் காட்டும் விகுதி 145	எழு. 47-49 இடைநிலையின்றி காலம் காட்டுவன 50	-	-	எழு. ம 25

3.	வினைவிகுதி	வினையியல்-203, 205, 206, 216, 217, 223, 224	வி. மதன்மை-64 படர்க்கை-65,66 முன்னிலை-67-	பதவியல்-140 வினையியல்-தன்மை 331-332 முன்னிலை 335,337 படர்க்கை325-329	எழுத்து-பதவியல் 46 சொல்-வினையியல் தன்மை-232,105,237 முன்னிலை-238 படர்க்கை-232-234	வினைச் சொல்லியல் 105	வினையியல் தன்மை598-602 முன்னிலை-617,619 படர்க்கை-604,606,612,613	சொல் – வினை மரபு 50-51
4.	அசைநிலை	இடையியல்-262,267, 271,272-277, 279, 280 எச்சவியல்-425, 426	-	இடையியல் 423, 432, 433, 435, 437-441	இடைச் சொல்லியல் – 252,253,263,266,269,273,274, 277	இடைச் சொல்லியல்131, 132	ஒழிபியல் 653,657,659, 661-668	சொல். எச்ச மரபு 54,55,56
5.	இசைநிறை	இடையியல் 272 எச்சவியல் -423	வினை மரபு – 74	422, 436	272	131	644,661	56
6.	தத்தம்	ஒழியிசை 252,	ஒழியிசை7	ஒழியிசை –	ஒழியிசை-253,263,	131-136	ஒழியிசை	54, 55

	குறிப்பு	253,255 256,269, 272,276, 281,282, 284,285, 292,294	6-79, 89 வினை மரபு	421,423 ,431,43 2,422-438	264, 253-274		645-658, 664	
7.	உவம உருபு	பொருள் உவமையியல் – 286	-	பொதுவியல் – 367	பொருள் அணியியல் 642	பொருளணியியல் 328	-	-
8.	குறிப்பு	-	-	இடையியல் 420	-	இடையியல் 130	-	-
9.	எழுத்தணவல்	-	-	-	-	-	-	54

தொல்காப்பியம் தரும் இடைச்சொற்களும் அதன் பொருள்களும்

வ.எண்	**நூற்பா எண்**	**இடைச் சொற்கள்**	**தரும்பொருள்**
1.	737	மன்	கழிவு, ஆக்கம், ஒழியிசை
2.	738 (745)	தில்	விழைவு, காலம், ஒழியிசை, (விருப்பம் என்ற பொருளில் தன்மைக்கு மட்டும் வரும்)
3.	739	கொன்	அச்சம், பயமிலி, காலம், பெருமை
4.	740	உம்	எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை,முற்று, எண், தெரிநிலை, ஆக்கம்

5.	768	”	எச்சப்பொருள் வரும் உம்மை முதலில் வராது
6.	769	”	முற்று உம்மை தொகைச் சொற்பொருளில் வரும்போது எச்சப் பொருளை உணர்த்தும்
7.	770		எண்ணும்மைகள் வரும்போது வேற்றுமை உருபு மறைந்து வரும்.
8.	776	”	உம் என்ற சொல் ஈறுதிரிந்து உந்து ஆகும்
9.	777	ஓ	பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலைக்கிளவி, சிறப்பு, தெளிவு, அளபெடுத்து வரும்
10.	741 (746)	ஓ	அந்து என்ற சொல்லில் வரும் ஓவும், அன் என்ற சொல்லில் வரும் ஓவும் குறிப்பால் பொருள் உணர்த்தும், (அந்தோ, அன்னோ).
11.	767	ஏ	தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை, தெளிவு அளபெடுத்து வரும்
12.	742 (746)	”	நன்றே, அன்றே என்ற சொற்களில் வரும் ஏ குறிப்பால் பொருள் உணர்த்தும்.
13.	767		ஈற்றசையில் ஏ ஒரு மாத்திரையாக ஒலிக்கும்
14.	771		எண்ணிடைச் சொல்லாகிய ஏகாரம் இடையில் மட்டும் வந்தாலும், ஏனைய இடத்திலும் வந்ததாகக் கொள்ளப்பெறும்
15.	743	என	வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் என்ற ஆறு சொற்களையும் சார்ந்து வரும்.
16.	744	என்று	என்று என்ற சொல்லும், மேற்கூறிய

			ஆறுசொற்களையும் சார்ந்து வரும்.
17.	747	மற்று	வினைமாற்று- அசைதிலை
18.	748	எற்று	கழிந்தது
19.	749	மற்றையது	இனமான பொருள்
20.	750	மன்ற	தேற்றம்-தெளிவு
21.	751	தஞ்சம்	எளிது
22.	752	அந்தில்	ஆங்க, அசைநிலை
23.	753	கொல்	ஐயம்
24.	754	எல்	இலக்கம்
25.	755	ஆர்	பலர்பால்வினை- சிறப்பு
26.	756	ஆர்	அசைநிலை
27.	757	குரை	இசைநிறை, அசைநிலை
28.	758	மா	வியங்கோள் அசைச்சொல்
29.	759	மியா, இக, மோ, மதி, இகும், சின்	முன்னிலை அசைச்சொல்
30.	760	இகும்- சின்	தன்மை, படர்க்கை, இடத்திலும் வரும்
31.	761	அம்ம	பிறரைத் தன்முகப்படுத்தும்
32.	762	ஆங்க	உரையாடலில் உரையிசை

33.	763	போலும்	உரையசை
34.	764	யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ,மாது	அசைச்சொற்கள்
35.	765	ஆக, ஆகல், என்பது	பிரிவில்லாத அசைநிலை
36.	766	ஒள	பிரிவில்லாத அசைநிலை, அளபெடை, அளபெடை இன்றி வருதல், பொருள் வேறு பெறும்
37.	774	எனா, என்றா	எண்ணுப்பொருள்
38.	779	என்று, என, ஒடு	என்று, என, ஒடு என்ற மூன்று எண்ணிடைச்சொற்கள் ஓர் இடத்தில் வந்தாலும், ஏனைய இடங்களிலும் சேரும்.

தத்தம்குறிப்பில் பொருள் தருவன	**அசைநிலைகள்**	**இசைநிறை**
மன்	யா	ஏ
தில்	பிற	குறை
கொன்	பிறக்கு	
உம்	அரோ	
ஓ	போ	
ஏ	மாது	

என	மியா	
என்று	இக	
மற்று	மோ	
மற்றையது	மதி	
மன்ற	இகும்	
தஞ்சம்	சின்	
அந்தில்	மா	
கொல்	ஆர்	
எல்	அந்தில்	
	ஏ	
	குரை	
	அம்ம	
	ஆங்க	
	போலும்	
	ஆக	
	ஆகல்	
	என்றும்	

மரபிலக்கண நூல்களில் இடைச்சொற்கள்

வ.எ	இல.நூ	நூ.எ	சாரி	வி.வி	வே	அ.நி	இ.நி	த.கு	ஒ.உ	குறி	எழு.த
1	தொல்.	250	✓	✓	✓	✓	✓	✓	✓	-	-
2	நேமி.	75	✓	✓	✓	✓	✓	✓	-		-
3	நன்.	420	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	-
4	இல. வி	251	✓	✓	✓	✓	✓	✓	✓		-
5	தொ.வி	130	✓	✓	✓	✓	✓	✓	✓	✓	-
6	மு.வீ	644	✓	✓	✓	✓	✓		✓	-	-
7	சு. நா	54	✓	✓	✓	✓	✓	✓	✓	-	✓

வேற்றுமை உருபுகள்

வ.எ	இ.நூல்	இ.வே	மூ.வே	நா.வே	ஐ.வே	ஆ.வே	ஏ.வே
1.	தொல்	ஐ	ஒடு, (ஆன்)	கு	இன்	அது	கண்
2.	வீ.சோ	ஐ, கருமம்	ஒடு, ஓடு, ஆல்	கு, பொருட்டு	நின்று(7-வேற்றுமையின் பின் வரும்)	உடை, அ	கே,உழைவயின், பக்கல், வழி, இல், கண்
3.	நேமி	ஐ	ஆன், ஒடு	கு	இன்	அது	கண்

4.	நன்	ஐ	ஆல்,ஆன், ஒடு,ஓடு	கு	இல், இன்	அது,ஆது-ஒருமைஅ-பன்மை	கண்
5.	பி. விவே	ஐ, கருமம்	ஆன், ஒடு	கு, பொருட்டு	இன்	அது, கு, உடைய, அ	கண்
6.	இல.வி	ஐ	ஆல், ஆன், ஒடு, ஓடு	கு	இல், இன்	அது, ஆது -ஒருமை அ – பன்மை	கண்
7.	இல. கொ	செயப்படு பொருள்	கருவி வேற்றுமை	கொள்வோன்	நீக்கம்	குறை	இடம்
8.	தொ. வி	ஐ	ஆல், ஆன், ஒடு, ஓடு	கு	இல், இன்	அது,ஆது-ஒருமை,அ-பன்மை	கண்
9.	மு.வீ	ஐ	ஆல், ஆன், ஒடு, ஓடு	கு	இல், இன்	அது-ஒருமைஅ-பன்மை	கண்
10.	சு. நா	ஐ(செயப் படுபொருள்)	ஆல், ஆன், ஒடு, ஓடு, கொண்டு	கு	இல், இன்	அது,ஆது-ஒருமைஅ-பன்மை	கண்

இலக்கண நூல்களில் இடைச்சொல் ஒப்பீடு

- இடைச்சொற்கள் ஏழுவகைப்படுமெனத் தொல் (250) கூற, எட்டுவகையென நன்னூல்(420) விளக்க, மு.வீ ஆறென விளக்குகின்றது (ஒ.1)

- இடைச்சொற்கள் என்பது இன்னின்ன பொருளில் வருமென நன் (421) கூறுகின்றது.
- 'கொன்' என்ற சொல்லைப்பற்றி நன்னூல் மட்டும் சுட்டப்படவில்லை. மற்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.
- 'ஓ' என்ற சொல் ஆறுபொருளில் வரும் எனத்தொல்காப்பியம் (256) கூற, எட்டுபொருளில் வருமென நன்னூல் (423) உரைக்கின்றது.
- 'ஏ' என்ற சொல் ஐந்து பொருள்களில் வருகிறதென்று தொல் (257) எடுத்து இயம்ப ஆறென நன்னூல் கூறுகின்றது. மேலும் 'ஏ' இறுதியில் ஓரளபாகுமெனத் தொல் (286) மட்டுமே கூறுகின்றது.
- 'மற்று' என்ற சொல் இரண்டு பொருளில் வருமெனத் தொல் (262) ஏற்க, மூன்று பொருளில் வரும் என நன் (433) குறிக்கின்றது.
- 'ஆர்' இயற்பெயரோடு இயையுமெனத் தொல் (270) கூற மு.வீ (ஒ - 16) பின்பற்றுகின்றது. மற்ற நூல்களில் இது பற்றிக் குறிப்பிடவில்லை.
- 'குரை' என்ற சொல்லைத் தொல் (272) மு.வீ (ஒ - 18) இரண்டுமே சுட்டுகின்றன.
- தொல் (274) ஆறு சொற்களை முன்னிலை அசைச்சொற்களாக கொள்கின்றது. நன் (440) பத்துச் சொற்களை பகர்கின்றது. இவற்றுள் இ.வி நன்னூலைப் பின்பற்றுகின்றது.
- அசைச்சொற்களாக ஏழு சொற்களைத் தொல் (279) கூற நன்னூல் (441) என்றும் இ.வி (277) என்றும் குறிப்பிடுகின்றன. நன்னூல் கூறும் கின்று, நின்று என்ற இரண்டை நீக்கி என், ஆல் என்பதை இணைக்கின்றது.
- 'ஔ' என்னும் வடிவத்தை இடைச்சொற்களாக தொல் (281) மட்டுமே சுட்டுகின்றது
- ஒடு, தெய்ய என்ற சொற்களைப் பற்றி நன்னூல் (436) குறிப்பிட இதனை இலக்கண விளக்கம் பின்பற்றுகிறது.
- 'எற்று' என்ற சொல்லைத் தொல் (263) கூற, இ.வி, மூ.வீ, தொல்காப்பிய வழியை பின்பற்றுகின்றன.
- 'மன்ற' 'தஞ்ச' என்னும் சொற்களும் மேற்கூரியவாறு தொல்(265, 266), இ.வி (270) மு.வீ (ஒ .12, 13) பின்பற்றுகின்றன.

- ‘எல்’ என்ற சொல்லைத் தொல் (269) கூற, மு.வீ (15) குறிப்பிடுகின்றன.
- ‘ஆங்க’ என்ற சொல்லையும் தொல் (277) குறிப்பிட மு.வீ (ஒ.21) குறிப்பிடுகின்றன. நன்னூல் ஆங்க என்பதை ஆங்கு எனச் சுட்டுகின்றது.
- ‘ஆக’ ‘ஆகல்’ ‘என்பது’ இவற்றைத் தொல் (280) செப்ப, மூ.வீ(25) அதனையே மொழிந்தன.

நிகண்டுகளில் இடைச்சொற்கள்

நிகண்டு நூல்களில் பல்வேறு இடைச்சொற்கள் காணப் படுகின்றன. அவற்றுள் திவாகர நிகண்டு மற்ற நிகண்டுகளைவிட அதிக எண்ணிக்கையில் இடைச்சொற்களைக் குறிப்பிட்டுள்ளது. மொத்தமாக நிகண்டு நூலில் 51 இடைச்சொற்கள் கண்டறியப் பட்டுள்ளன.”[121] அவை பின்வருமாறு அட்டவணையில் என்னென்ன இடைச்சொற்கள் பயின்று வந்துள்ளன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

திவாகர நிகண்டு		**பிங்கல நிகண்டு**	**சூடாமணி நிகண்டு**
அம்	தம்	அந்தில்	அம்
அல்	தில்லை	அரோ	அல்
அன்	தெய்ய	அல்	ஆம்
அன்று	நம்	ஆங்கு	உம்
ஆம்	நும்	ஆல்	எம்
ஆல்	பாக்கு	உறை	ஏ
ஆன்	மன்	என	ஏம்
உம்	முறை	ஏ	தம்

எம்	வான்(1817)	ஓரும்	தில்
என		கெழு	நும்
ஏ		ஞான்று(2103)	பாக்கு(690)
ஏம்		தெய்ய	பான்
கெழு		போ	மன்
ஞான்று		மாது	வான்

இடைச்சொற்களின் கூடுதல் எண்ணிக்கை

பொதுவாக இடைச்சொற்களின் கூடுதல் எண்ணிக்கை 83 என ஆராயப்படுகிறது. இலக்கண நூல்கள், நிகண்டு நூல்கள், எல்லாவற்றையும் ஆராய்ந்து அவற்றை அகரவரிசையில் கீழ்வருமாறு அமைக்கப்பட்டுள்ளன.

அ	இர்	ஓரும்	தெய்
அத்து	இல்	கடை	தொறு
அத்தை	இழும்	கதும்	தொறும்
அந்தில்	இன்	கல்	நிர்
அந்தோ	ஈர்	கிடின்	பின்
அம்	உ	கில்	பிறக்கு
அம்ம	உடன்	கு	பொரேர்
அர்	உள்	குய்	போ
அரோ	உம்	குரை	மதி

அள்	எ	கூக்கு	மல்
அன்	என்பது	கொல்	மற்று
அனனோ	என்னா	கொன்	மன்ற
ஆ	என (என்னாது)	சார்	மன்
ஆங்க	ஏ	சின்	மாது
ஆம்	ஏம்	செத்து	மா
ஆர்	ஏல்	ஞெரோர்	மார்
ஆல்	ஒடு	தஞ்சம்	மாள
ஆள்	ஓடு	தவ்	முன்
ஆன்	ஒல்	தில்	மோ
இ	ஓ	அதுடும்	யாழ
இய	ஓம்	துண்	

ஏழாவது இலக்கணத்தில் இடைச்சொற்கள்

தண்டபாணி சுவாமிகள், தொல்காப்பியர் கூறுவது போன்று இடைச்சொற்களின் பாகுபாடு குறித்தும், அவை நிற்கும் இடமும் வேறுபாடு குறித்தும் தெளிவாக விளக்குகின்றார். இவ்விலக்கண நூலில் இடைச்சொற்களைப் பற்றி ஒன்பது நூற்பாக்களில் குறிப்பிடுகின்றார். ஆனால் இடைச்சொல் என்றால் என்ன என்பதைக் குறித்து விளக்கவில்லை. இவர் கூறும் இடைச்சொற்களும் அதற்கு எடுத்துக்காட்டும் அதன் பாகுபாடும் பின்வருமாறு அட்டவணையில் காணலாம்.

வ.எண்	இ.சொல்	எ.கா	பாகுபாடு
1.	அ	அவன்	சுட்டுப்பொருள் தரும்
2	இ	இவன்	”
3	உ	உவன்	”
4	எ	எவன், எவள்	வினாப்பொருள்
5	ஏ	உதராணமே	ஈற்றசை
		ஆமே	எதிர்மறை
		அவனே கொண்டான்	”
		அயனேமாலே	”
		அரனே	எண்பொருள்
		மறந்திட்டீரே	வினாப்பொருள்
		வானவர் தம்மில் மகவானே முதல்	பிரிநிலைப்பொருள்
6	ஆ	-	-
7	ஓ	-	-
8	மன்னும்	-	-
9	மற்று	-	-

மேற்கண்ட இடைச்சொற்கள் யாவும் தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய இலக்கண மரபுகளுக்குப் பொருந்த அமைந்திருக்கின்றன. இவர் தொல்காப்பியரையும் நன்னூலாரையும்

பின்பற்றி இருக்கிறார் என்பதற்குச் சான்றாக இடைச்சொற்களைத் தொகுத்துக் கூறுமிடத்துத் தண்டபாணி சுவாமிகள்,

"ஆன்றோர் ஆட்சி அறிந்தறிந் தமைக்கும்

உழியறிந் துரைக்கை ஒவ்வியர் பொறுப்பே"[122]

என்ற நூற்பா மூலம் அறியலாம். இவர் இப்படி கூறுவதற்குக் காரணம் தொல்காப்பியரின் என்மனார் புலவர், மொழிமனார் புலவர், என்ப, மொழிப என்பதும்,

"கிளந்த அல்ல வேறுபிற தோன்றும்

கிளந்த வற்றியலான் உணர்ந்தனர் கொளலே"[123]

என்றும் வருகின்ற தொல்காப்பிய மரபு என்று நாம் உய்த்துணரலாம். மேலும்,

"கிளந்த அல்ல செய்யுளில் திரிநவும்

வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்

விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்

வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்

நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்" [124]

என்ற நூற்பா வழி முன்பு கூறியவை அல்லாதன செய்யுளில் வேறுபட்டு வருவனவற்றையும், உலக வழக்கில் மரூஉ மொழியாய் திரிந்து வழங்குவனவும், முன் கூறிய இலக்கண வரையறைக்கு வேறுபடத் தோன்றினால் நல்ல அறிவின் ஆராய்ச்சியின்படி செய்யுள் வழக்கு, உலக வழக்கு என இரண்டையும் அறிந்து அதன்படி நடத்த அறிவுடையோர் கூறுவர் என்பதைக் கொண்டு நோக்கலாம்.

மேற்கூறியவற்றிலிருந்து இடைச்சொற்களை நான்கு நிலைகளில் குறிப்பிடலாம். அவை ஒரு சொல் பல பொருள், ஒரு சொல் ஒரு பொருள், பல சொல் ஒரு பொருள், பல சொல் பல பொருள் எனப் பகுக்கப்பட்டு அட்டவணையில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஒரு சொல் பல பொருள்

வ.எண்	சொல்	பொருள்
1.	மன்	கழிவே, ஆக்கம், ஒழியிசை
1.	தில்	விழைவு, காலம், ஒழியிசை
2.	கொன்	அச்சம், பயமிலி, காலம், பெருமை
3.	உம்	எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம்
4.	ஓ	பிரிநிலை, வினா, எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம்
5.	ஏ	தேற்றம், வினா, பிரிநிலை, எண், பெயர்
6.	என	வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர்
7.	என்று	”
8.	மற்று	வினைமாற்று, அசைநிலை
9.	ஆங்க	உரையசை
10.	அந்தில்	ஆங்கு, அசைநிலை
11.	குரை	இசைநிறை, அசைநிலை
	ஆர்	பலர்பால் வினை, அசைநிலை

ஒரு சொல் ஒரு பொருள்

வ.எண்	சொல்	பொருள்
1.	எற்று	இறந்த பொருள்
2.	மற்றை	இனங்குறித்தல்
3.	மன்ற	தேற்றம்
4.	தஞ்சம்	எண்மை
5.	கொல்	ஐயம்
6.	எல்	இலக்கம்
7.	அம்ம	கேட்பிக்கும்
8.	ஒள	குறிப்பின் இசை
9.	என்றா	எண்
10.	என்றா	எண்
11.	ஒடு	எண்
12.	யா	அசைநிலை
	கா	”
	பிற	”
	பிறக்கு	”
	அரோ	”
	மாது	”
	மியா	”
	இக	”

	இகும் சின் ஆக ஆகல் என்பது	” ” ” ”

பல சொல் ஒரு பொருள்

வ.எண்	சொல்	பொருள்
1.	தின், கொன்	காலம்
2.	தில், மன், ஓ	ஒழியிசை
3.	மன், உம்	ஆக்கம்
4.	உம், கொல்	ஐயம்
5.	உம், ஏ, என, என்று	எண்
6.	ஏ, மன்ற	தேற்றம்
7.	ஏ, குரை	இசைநிறை
8.	மியா, இக, மோ, மதி	முன்னிலை அசை
9.	இகும், சின்	அசைநிலை
10.	ஆக ஆக, ஆகல் ஆகல், என்பது என்பது	பிரிவில் அசைநிலை

பல சொல் ஒரு பொருள்

வ.எண்	சொல்	பொருள்
1.	ஓ, ஏ	பிரிநிலை, வினா
2.	என, என்று	சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை
3.	உம், ஓ	சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை

இடைச்சொல்லின் தனிச்சிறப்புகள்

இடைச்சொல் என்று தனிவகைப்படுத்தப்பட்டு சொற்களின் வகைகளில் ஒன்றாக கூறப்பட்டுள்ளது. பெயர், வினை போன்று முதன்மை பெறாவிடினும் இடைச்சொல்லுக்கு தனி மதிப்பு உண்டு.

- காரணம் என்று கேட்டால் பெயர்ச்சொற்களுக்கும், வினைச்சொற்களுக்கும் ஓர் இணைப்பு (பாலமாக) சொற்களாக அமைகின்றது.
- பெயர் வினைபோன்று தனித்து வராவிடினும் இவை இரண்டிற்கும் உயிர்நாடியாக செயல்படுகிறது என்றால் அது மிகையாகாது.
- முன், பின், இடையில் என்று மூன்று நிலைகளிலும் வந்து பொருள் தரும்.
- அசை, இசை வடிவிலும் வரும்.
- சொல்லின் வகையில் பெயர், வினை, இடை என்று மூன்றாவது இடத்தில் வந்தாலும் சொற்களின் பொருள் புரிந்து முழுவடிவத்தையும் தருவது இடைச்சொற்கள் மட்டுமே.

இவ்வாறு பெயர் வினைச்சொற்களோடு ஒப்பிடும்போது இடைச்சொற்கள் குறைத்தன்மை பெற்றவையாகக் கருதப்பட்டாலும் தொல்காப்பியர் பெயரியலில் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல். சொல். 155) என்று கூறுவது எண்ணத்தக்கது. மேலும்

"இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே"[125]

என்ற நூற்பா மூலமும் இடைச்சொல் என்பது ஏதோ ஒரு வகையில் தெளிவான பொருளுணர்த்தும் தன்மையை பெறுகிறது என்பதை அறியமுடிகிறது.

தொகுப்புரை

திருமூலரின் திருமந்திரம் பக்தி இலக்கியத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்து சைவத்தில் புகழைப்பெற்று சிவனுக்குத் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் அமைந்துள்ளது.

- தமிழ் நூல்களில் தந்திரம் என்ற பெயருடன் பிரிவுகள் அமைவது இத்திருமந்திரம் ஒன்றிலேயாகும்.
- திருமூலரின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டாக இருக்காலம் என்று முடிவுபெறப்படுகிறது.
- மந்திரம் என்ற சொல்லாட்சி தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்களில் கூறப்பட்ட வாய்மொழி, அங்கதம் ஆகிய சொல்லாட்சிகளோடு உரையாசிரியர்கள் தொடர்புடையது என்று கூறுகிறார்கள். மந்திரம் என்பது வாய்மொழியைக்காட்டிலும் சற்று உயர்ந்து காணப்படுகிறது என்பது (சான்றோரால்) திருமந்திரத்தில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது.
- தொல்காப்பியம் கூறும் மந்திரமும் திருமந்திரம் கூறும் மந்திரமும் ஒரே வரையறைக்குள் அமைந்துள்ளதை இவ்வாய்வு வழி அறியப்படுகிறது.
- மொழியின் முக்கியத்துவம் எழுத்துவடிவம், வரிவடிவம் ஆகிய இரண்டையும் கொண்டதாயினும் கருத்துச்செறிவிற்கு காலம் கடந்து மொழியைக் காத்துநிற்க வரிவடிவமே என்பது சிறப்பு பெறுகிறது.
- சொல்-பொருள், வரையறை, வகைகள், உரையாசிரியர்களின் பாகுபாடுகள் ஆகியவற்றோடு சொல்லிலக்கணம் கூறும் இலக்கண நூல்களின் பட்டியல்கள் ஆகியவை தொகுத்து தரப்பட்டுள்ளன.
- இடைச்சொல் பற்றி ஒரு விளக்கம், வரையறை, பெயர்க்காரணம், வகைகள், அகராதி விளக்கம் ஆகியன தொகுக்கப்பட்டு பிற சொல்லிலக்கண நூல்களோடு ஒப்பிட்டு அதன் எண்ணிக்கை பாகுபாடு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.
- இது போன்று இடைச்சொற்களின் எண்ணிக்கையைப் பகுத்துப்பார்க்கும் போது தொல்காப்பியத்தைவிட இலக்கண

விளக்கம் அதிகமாகக் கூறியுள்ளது. அதாவது தொல் (47) இடைச்சொற்களையும் இ.வி (53) சொற்களையும் என கூறப்பட்டுள்ளன.

- இடைச்சொல் பற்றி உரையாசிரியர்கள், மொழியியல் அறிஞர்கள், இலக்கண நூலார் குறிப்பிடும் கருத்துக்கள் அனைத்தும் பகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பா.மல்லிகா அவர்கள் குறிப்பிட்ட இடைச்சொல் அமைப்பு எளிமையான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இடைச்சொல் வருமிடங்களையும் அதன் வகைப்பாட்டின் வரிசைக்குரிய காரணம் என்ன என்பதை மொழியியல் அறிஞர்கள் கொண்டு ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.
- இடைச்சொல் வகைகளான புணரியல், வினை, வேற்றுமை, அசைநிலை, இசைநிறை, தத்தம், ஒப்பியல் ஆகியவற்றிற்கான தன்மைகளை பிற இலக்கண நூல்களோடு ஒப்பிட்டு அவற்றை தொகுத்து இடைச்சொல்லின் தன்மையை ஆராயப்பெற்றுள்ளன.
- இவ் இடைச்சொற்கள் என்னென்ன பொருளில் வரும் என்பதை நன்னூல் கொண்டு பகுத்துத் தரப்பட்டுள்ளன.
- தொல்காப்பியம் இடைச்சொல் பொருண்மைகளாக, இருப்பதைச் சுட்டி இருந்தாலும் பிற்காலத்தில் அவை மாற்றம் அடைந்துள்ளன. இந்த மாற்றம் கால மாறுதலாலும் சொற்களின் பொருள் மாறுபாடுகளாலும் நிகழ்ந்தனவாகும்.
- தொல்காப்பியம் கூறும் இடைச்சொல் பொருண்மைகளாக இருப்பதைச் சுட்டுவதாக ஏ. ஞானமூர்த்தி கூறியுள்ளார். ஆனால் பிற்கால நூலான நன்னூல் 14 பொருள்களைக் கொண்டு கூறியுள்ளது.
- பொதுவாக இடைச்சொற்களின் கூடுதல் எண்ணிக்கை 83 என்பதை தொல்காப்பியம் முதல் பிற இலக்கண நூல்களோடு நிகண்டுகளின் இடைச்சொற்களையும் கண்டறிந்து தொகுத்து அகரவரிசையில் தரப்பட்டுள்ளன.
- தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்களில் இருந்து இடைச்சொற்களின் தன்மையினை ஆராயும்

போது பெயர், வினைக்கு இடைச்சொற்கள் ஒரு இன்றியமையாத தன்மையாக விளங்குவதை இவ்வாய்வின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

- தொல்காப்பியம் கூறிய இடைச்சொல் பிற்கால நூல்களான நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் போன்ற நூல்களில் இடைச்சொல் பொருள் மாறுபட உரையாசிரியர்களின் உரையும் துணை புரிந்துள்ளன. தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரையை சில நூல்கள் நூற்பாவாகக் கூறியுள்ளன என்பது அறியப்பட்டுள்ளது.
- பொருள் மாறுபடும் இடைச்சொற்களாக மன், உம், ஓகாரம், ஏகாரம், மற்று, அந்தில், ஆங்கு, கொல், அம்ம ஆகிய ஒன்பது சொற்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவை இலக்கண நூல்களுக்கு ஏற்பவும் சொல் வளர்ச்சிக்கு ஏற்பவும் மாற்றமடைந்துள்ளன.
- தொல்காப்பியர் சுட்டிய இடைச்சொல் மரபிலிருந்து பெருமளவு நன்னூல் மட்டுமே வேறுபடுகிறது. இலக்கண விளக்கம் ஒருசில இடங்களில் நன்னூலையும் தொல்காப்பியத்தையும் சார்ந்துள்ளது. ஆனால் முத்துவீரியம் இடைச்சொல் மரபில் பெருமளவு தொல்காப்பியத்தைத் தழுவி செல்கின்றது.
- பொருள் மாறுபடாத இடைச்சொற்களாக காலந்தோறும் தோன்றிய இலக்கண நூல்களில் 15 சொற்கள் சுட்டப்பட்டுள்ளன. அவை தில், கொன், என்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், எல், ஆர், மா, ஆங்கு, ஒப்பில்போலி, ஆக, ஆகல் போன்ற சொற்கள் குறிப்பிட்டுள்ளன.
- தொல்காப்பியம் கூறிய இடைச்சொல் நூற்பாக்களைச் சிறிதும் மாற்றமில்லாமல் இலக்கண விளக்கமும், முத்துவீரியமும் கூறியுள்ளன.
- இடைச்சொற்களின் கூடுதல் எண்ணிக்கையாக 82 இடைச்சொற்கள் கண்டறியப்பட்டுள்ளது. அதனோடு இடைச்சொற்களின் வகையாக ஒரு சொல் ஒரு பொருள், ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள், பல சொல் பல பொருள் எனப்பகுத்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. சுப. அண்ணாமலை, திருமந்திரம் மூலப்பாட ஆய்வுப் பதிப்பு, பா. 26
2. வி.வி. ரமணசாஸ்திரி, திருமந்திரம், முன்னுரை, ப.16
3. திரு. பா.48
4. சுப. அண்ணாமலை, திருமந்திரம் மூலபாட ஆய்வுப்பதிப்பு, ஆய்வு முன்னுரை
5. திருத்தொண்டர் புராணம், திருமூலர்.26
6. தொல்.செய். 490
7. தொல்.கழகபதிப்பு, ப.155
8. தொல். கணேசையர் பதிப்பு, ப.568
9. நாமக்கல் கவிஞர், திருக்குறள்- 28
10. பெரியபுராணம் திருமூலர் பாடல் எண்.26
11. அ.மு.பரமசிவானந்தம், மானுடம் வென்றது, ப.134
12. திருக்கோவையார், பேராசிரியர் உரை, பக்.7-8
13. திருவாசகம், திருப்புகழ், திருவாய்மொழி, திருவருட்பா முதலியன
14. திருமந்திரம், 1482
15. மேலது, 2134
16. சுந்தரர், தேவாரப் பாடல்.
17. திருத்தொண்டர் திருவந்தாதி, பா.எண்.36
18. திருத்தொண்டர் புராணம்.
19. திரு.பா.81
20. மேலது. பா.1
21. திருமந்திர ஆராய்ச்சி பக். 73-74
22. திருமந்திர கழக. சிறப்புப்பாயிரம்
23. திருமூலர் பூரண மாலை
24. இரா. மாணிக்கவாசகம் திருமந்திர ஆராய்ச்சி, ப.73
25. மேலது ப.79
26. திருமந்திரம், திருப்பனந்தாள் வெளியீடு, பக் 21-23

27. திருமந்திரம், கழக வெளியீடு ப.82
28. க.வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு 2.ப.417
29. திருமந்திர ஆராய்ச்சி, பக்.73-74
30. மேலது. ப.75-76
31. இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, ப.75
32. திருமந்திரம், கழகப்பதிப்பு, ப.72
33. திரு.பா.715
34. திரு.கழக.553
35. திரு.பா.68
36. மேலது. பா.50
37. மேலது. பா.52
38. யாப்பருங்கலக்காரிகை. 21
39. செ.வை. சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு-1, முன்னுரை
40. செ.வை.சண்முகம், இலக்கண உருவாக்கம், ப.3
41. மேலது, ப.12
42. சு.இராசாராம், இலக்கணவியல், ப.26
43. செ.வை.சண்முகம், இலக்கண உருவாக்கம், ப.2
44. பாவணர், வடமொழி வரலாறு, ப.90
45. இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, பக்.43-45
46. இளம், தொல். எழு. பி. 20
47. தண்டபாணி தேசிகர், நன். எழு. 3
48. நேமி. நூற். 6
49. இளம். தொல். எழு.43
50. மேலது.44
51. சேனா.தொல்.சொல்.155
52. மேலது. 394
53. மேலது.1
54. மேலது.156
55. ஆ. சிவலிங்கனார், பதிப்பாசிரியர், தொல்.உரை சொல் பெயரியல். ப.15

56. சேனா. சொல்.157
57. தொல்.சொல். 157
58. செ.வை. சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு – 1 முன்னுரை
59. ச.அகத்தியலிங்கம், க.முருகையன், தொல்காப்பிய மொழியியல்,ப.9
60. தொல்.சொல்.155
61. மேலது.156
62. மேலது.157
63. மேலது.158
64. மேலது.159
65. நன்னூல். சொல். 402
66. தண்டபாணி தேசிகர், நன். 129
67. சுப்ரமணிய சாஸ்த்திரி, தமிழ்மொழி நூல், ப.102
68. தொல்.சொல்.251
69. தொல். சொல்.250
70. நேமி. சொல்.75
71. நன்.420
72. சேனா.உரை, தொல்.சொல்.250,
73. தெய்.உரை, தொல். சொல்.250,
74. மேலது.சொல். 251
75. நன்.421
76. தா. ஞானமூர்த்தி, இடைச்சொல், ப.129 -134
77. மு.வ.மொழி நூல், ப.88
78. சேனா. சொல்.455
79. மு. இஸ்ரேல், இடையும் உரியும், ப.3.
80. செ.வை.சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு, ப.150
81. சொல்.247
82. மேலது.72
83. கிரியாவின் தற்கால தமிழ் அகராதி, பக்.93-94.
84. நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, ப.214
85. ச.வே.சு., மெய்யப்பன் தமிழ் அகராதி, ப.637

86. பாலூர் கண்ணப்ப முதலியார், தமிழ் இலக்கிய அகராதி, ப.42
87. எஸ்.சங்கரலிங்க முதலியார், வெள்ளிவிழா தமிழ்ப் பேரகராதி, ப.47
88. சந்தியா நடராஜன், தரங்கபாடி அகராதி, ப.70
89. சந்திரசேகரப் பண்டிதர், சரவண முத்துப்பிள்ளை, தமிழ்மண் யாழ்ப்பாண அகராதி, ப.94
90. Leonard Bloomfield, Language, p.209
91. C.F. Hocket, "A Course in Modern Linguistics, pp.221-229
92. M.S.Andronov: The Standard Grammer of Modern and Classical Tamil, P. 59
93. Asher, "Operational Definitons For Word Classes,"pp.101,102
94. Thomas Lehman, "A Grammer or modern tamil, P.911
95. ஏ. ஆதித்தன், சொல் வகைகள், அரிமா நோக்கு, பக்.15-16
96. ப.வேல்முருகன், தமிழ் மரப்பிலக்கணங்களில் இடைச்சொற்கள், ப.38
97. மோ.இசரயேல், இலக்கண ஆய்வு – பெயர்ச்சொல், ப.7-15
98. செ.வை. சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு தொகுதி.1. ப. 56
99. தெய். உரை, தொல். சொல். பெயரியல், நூற். 5
100. ஆ. சிவலிங்கம், தொல்காப்பியர் உரைவளம் இடையியல் ப.13
101. ஞா. தேவநேயப்பாவணர், தமிழ் வரலாறு 2, ப.1
102. செ.வை. சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு தொகுதி.1. ப. 278-281
103. பொற்கோ, தமிழிலக்கணக் கோட்பாடு, பக்- 34-35
104. பா.மல்லிகா, தமிழ் இலக்கணங்களில் இடைச்சொற்கள், ப100-104
105. சி. இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, ப.23
106. பொற்கோ, சொல்வகை அல்லது இலக்கணக் கூறுகள் – புலமை – சூன், ப.72
107. தே. ஆண்டியப்பன், காப்பியர் நெறி சொல்லியல், ப.108
108. கே. இராஜகோபாலாச்சாரியார் இலக்கண விளக்கம்- சொல்லியல், ப.87

109. பி.சா. சுப்ரமணியசாஸ்திரி, தமிழ் மொழி நூல், பக்107-108
110. எம்.ஏ.நுஃமான், அடிப்படைத் தமிழ் இலக்கணம், 2007, ப.168
111. மோ.இஸ்ரேல், இடையும் உரியும், 1977, ப.3
112. ச. அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல், ப.270
113. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம் இடையியல், ப.7
114. மேலது, ப.10 & தொல்காப்பியம், சொல்லதிகாரம் -சேனாவரையம், ப.233
115. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம் இடையியல், ப.11
116. இரா.கண்ணன், நன்னூல் உரைவளம், இடைச்சொல்லியல், ப.13 -14
117. இரா. கண்ணன், நன். உரை இடைச்சொல்லியல், ப.15
118. புலவர் குழு. ப.ஆ, நன்.மூலமும் விரித்திரையும், ப.396
119. தொல். சொல்.251
120. நன்.சொல்.420
121. சா.வே. சுப்பிரமணியன், தமிழ் நிகண்டுகள் (தொகுதி 2), ப. 382.
122. தண்டபாணி தேசிகர், ஏழாம். நூற். 246
123. தொல்.சொல்.117
124. தொல்.சொல்.296
125. தொல். சொல். 455

இயல் இரண்டு

திருமந்திரத்தில் புணரியல், வினைசெயல், வேற்றுமை இடைச்சொற்கள்

இடைச்சொற்களுள் முதல் மூன்று இடைச்சொற்களான சாரியைகள், காலம் காட்டும் வினைச்சொற்கள், வேற்றுமையுருபுகள் ஆகிய மூன்று கூறுகளைத் திருமந்திரத்தில் உள்ள முதல் 500 பாடல்களில் இவ்வியல் ஆராய்கிறது. மேலும் மற்ற இலக்கண நூலான நேமிநாதம், நன்னூல், வீரசோழியம், தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், இக்கால இலக்கண நூலார், ஆய்வாளர் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வியல் முழுமைப் படுத்தப்பட்டு இடைச்சொற்களின் தன்மையையும் ஆராய்ந்து விளக்குகின்றது.

புணரியல்

நிறுத்தசொல்லும் குறித்துவருங் கிளவியும் சேருவது புணர்ச்சி ஆகும். இப் புணர்ச்சி எழுத்துக்களின் ஈற்றின் அடிப்படையில் உயிரும் உயிரும், உயிரும் மெய்யும், மெய்யும் உயிரும், மெய்யும் மெய்யும் தோன்றும் என்றும் சொல்லடிப்படையில் பெயரும் பெயரும், பெயரும் வினையும், வினையும் பெயரும், வினையும் வினையும் வரும் என்கிறார் தொல்காப்பியர். ஒரு மொழிக்கு அடிப்படை ஒலி (sound) என்றும், அவ்வொலிகளின் தொகுப்பு சொல் என்றும் அச்சொற்களின் இணைவு புணர்ச்சி (word juncture) என்றும் குறிக்கப்படுகிறது. தொல்காப்பியர் புணர்ச்சிக்கான பொதுவிதிகளையும் சிறப்பு விதிகளையும் புணரியியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஆறு இயல்களில் விரிவாக விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் வகுத்த இலக்கணக் கூறுகள், பின்னர் எழுதப்பட்ட நன்னூல் போன்ற மரபிலக்கணங்களுக்கு விதைகளாக உள்ளன என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் போன்ற உரையாசிரியர்கள் இடைச்சொல்லிற்குப்

பொருள் இல்லை என்ற சிந்தனையை அவரவர் உரைகளின் வழி மறுத்தனர். அவ் உரையாசிரியர்களின் கருத்துகளை அடியொற்றி ச. அகத்தியலிங்கம், பொற்கோ, செ.வை. சண்முகம் போன்ற மொழியியல் அறிஞர்கள் 'இடைச்சொல்லிற்குப் பொருள் உண்டு' என்ற சிந்தனையை மீட்டுருவாக்கம் செய்தனர். நிலைமொழியும் வருமொழியும் சேரும் போது தோன்றும் ஏழு இடைநிலைகள் கீழ்வருமாறு,

- பொருளை விளக்க வருவன (சாரியை)
- வினைச்சொல்லில் வரும் கால இடைநிலைகள்
- வேற்றுமையுருபுகள்
- அசைநிலை
- நிறைத்தல் பொருள்
- தத்தம் குறிப்பு
- ஒப்பு

மேற்குறித்த இடைநிலைகளுள் சாரியை முக்கிய இடம் வகிக்கிறது. மேலும் அச்சாரியைப் பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இரண்டிலும் இடம்பெற்று, பெரும்பாலும் வினையாலணையும் பெயர்களில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

சாரியை

தொல்காப்பியர் பெயரை உயர்திணை, அஃறிணை என இரண்டு வகையாகவும் வினைச்சொல்லைத் தெரிநிலை, குறிப்பு என இரண்டாகப் பகுத்து, சாரியையை எழுத்துச்சாரியை, சொல் சாரியை என இரண்டாக வகைப்படுத்தியுள்ளார். எழுத்துச் சாரியை என்பது எழுத்துக்களை உச்சரிக்க இலக்கண அறிஞர்கள் கண்டறிந்த ஓர் எளிய உத்தி எனக் கருதலாம். அவை கரம், காரம், கான் என்பன. தொல்காப்பியர் ஒன்பது சொல் சாரியைகளைக் கூறிப் பின் பிறவும் அன்ன என்று கூறுகிறார். நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய நூல்கள் உ,

எ, ஐ, கு, சு, தம், நம், நும், ன் என்னும் ஒன்பது சாரியைகளைக் கூறுகின்றன.

சாரியை என்பது பொருள் வேறுபாடு செய்யும் தன்மையினை உடையது என்ற கருத்தைப் 'புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவுந' என்னும் நூற்பாவால் அறியலாம். நேமிநாதம் சாரியையினை இடைச்சொற்களுள் ஒன்றாகக் குறிப்பிடவில்லை. இலக்கண விளக்கம் சாரியைகளை உருபுப் புணரியல், உயிரீற்றுப் புணரியல் ஆகிய இரண்டு இயல்களிலும் தொன்னூல் விளக்கம் சொற்பொதுவியல், பகுபதப் பெயரியல் என்னும் இரண்டு இயல்களிலும் முத்துவீரியம் புணரியல் என்ற ஓர் இயலிலும் விளக்கியுள்ளன. தொல்காப்பியம் சாரியை வருமிடத்தை,

"அவற்றுவழி மருங்கில் சாரியை வருமே"[1]

என்றும் அவற்றின் வகைகளை,

"அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே"[2]

என்றும் கூறுகின்றன. சொற்கள் ஒன்றோடொன்று பொருந்தும் புணர்ச்சியில் அச்சொற்களின் இடையில் அதனைச் சார்ந்து நின்று பொருள் உணர்த்துவது சாரியைகளாகும். தொல்காப்பியர் சாரியையைப் 'புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுந' என்று கூறுகிறார். மேலும் 'பெயர்களின் பின்னரே சாரியை வரும்' என்கிறார். மாறாக, வினைப்பகுபதத்தில் வரும் சாரியையினைக் குறிப்பிடவில்லை. பெயருக்கும் வேற்றுமையுருபுக்கும் இடையிலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையிலும் சாரியை வருகின்றன. நன்னூல் சாரியையை விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, உருபுப் புணர்ச்சி என மூன்று வகையாகப் பகுத்து விளக்குகிறது. தொல்காப்பியம், நன்னூல், இலக்கண

விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய நூல்களில் உள்ள சாரியைகளையும் அந்நூல்களுக்கு உரையாசிரியர்கள் கூறக்கூடிய சாரியைகள் எவையெவை என்பதைக் கீழ்வரும் பட்டியல் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

இலக்கணிகள், உரையாசிரியர்கள் கூறும் சாரியைகளின் எண்ணிக்கை

நூல்	உரை	நூல்	உரை	நூல்	உரை	நூல்	நூல்	உரை	நூல்
-இ ன்- -வற்று- -அத்து- -அம்- -ஒன்- -ஆன்- -இக்கு- -அன்- (எழுத்.119) -ஏ- (எழுத்.164)	-தம்- -நம்- -நும்- -உம்- -ஞான்று- -கெழு- -ஐ- எழுத்.(119) -தன்- -ஆ- -தாம்- -தான்- -ஆம்- -து-	-அன்- -ஆன்- -இன்- -அல்- -அற்று- -இற்று- -அத்து- -அம்- -தம்- -நம்- -நும்- -ஏ- -அ- -உ- -ஐ- -க- -ன்- (244)	-தன்- -தாம்- -ஆ- - தான்- -ஆம்- -து- (244) -தம்- -நம்- -தம்- -நும்-	-அன்- -ஆன்- -இன்- -அல்- - அற்று- - இற்று- - அத்து- -அம்- -தம்- -நம்- -நும்- -ஏ- -அ- -உ- -ஓ- -கு- -ன் - (50)	-தன்- -தாம்- -ஆ- - தான்- -ஆம்- -து- (244) -தம்- -நம்- -நும்-	-அ- -எ- -உ- -ஐ- -கு- -அன்- -ஆன்- -இன்- - அற்று- - இற்று- - அத்து- -அம்- -தம்- -நம்- -நும்- (52)	- அத்து- -அம்- -ஆன்- - அக்கு- -இன்- -அன்- -இன்- -அன்- -ஒன்- - இக்கு- - அற்று- -தம்- -நம்- -நும்- (174)	- மான்- (174)	-அன்- -ஆன்- -இன்- - அத்து- -நம்- -தன்- -கு- -ன்- -அல்- (26)

கால்டுவெல், சாரியைகளை வேற்றுமையுருபுகளாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஆறாம் வேற்றுமையுருபு ஏழாம் வேற்றுமையுருபு ஆகியவற்றை ஏற்கும் சாரியைகள் அவ் உருபுகள் இன்றியே ஆறாம் வேற்றுமைப் பொருளையும் ஏழாம் வேற்றுமைப்

பொருளையும் தருகின்றன என்று கூறுகிறார். சாரியைகள் பழைய வேற்றுமையுருபுகளாக இருந்தன என்பது அவருடைய கருத்தாகும். தமிழ்மொழியில் இடம்பெறும் சாரியைகள் குறித்து தொல்காப்பியர், பவணந்தி போன்ற இலக்கண அறிஞர்களும் அவரவர் எழுதிய நூல்களில் கூறியுள்ளனர். மேலும் அவ் இலக்கண நூல்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர்களும் வெவ்வேறு சாரியைகளைப் பதிவுசெய்துள்ளனர். திருமந்திரத்தில் இடம்பெறும் சாரியைகள் தொல்காப்பியம் குறிப்பிடும் வரிசையில் இங்கு விளக்கப்படுகிறது. இந்நூலில் அன், இன், அத்து போன்ற சாரியைகள் இடம்பெற்றுள்ளன.

அன் சாரியை

அன் சாரியை பதினைந்து இடங்களில் வருகின்றன.

வி. அ + சாரியை + விகுதி என்ற அமைப்பில் உள்ளது.

நின்ற**னன்** மூன்றினுள் (1:2)

வென்ற**னன்** (1:3), விரிந்த**னன்** (1:3), சென்ற**னன்** (1:4), வந்த**னன்** (72:4), கொடுத்த**னன்** (153:3, 173:3,4), தரித்த**னன்** (173:4), அடைந்த**னன்** (241:2), படைத்த**னன்** (254:1,2,3,4), இசைந்த**னன்** (449:2).

பெயர் + சாரியை + விகுதி + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது. அன் விகுதி உம் என்ற ஒட்டைப் பெற்றுள்ளது.

கண்ண**னும்** காய்கதிரோன் உலகினை (358:1)

இன் சாரியை

பெயர் + சாரியை + ஒட்டு என்ற அமைப்பில் ஆறு இடங்களில் இடம்பெற்றுள்ளன. இன் சாரியை உம் ஒட்டைப் பெறுகிறது.

தீயினும் வெய்யன் (7:1)

சேயி**னும்** (7:3), தாயி**னும்** (7:4,114:3) புனலி**னும்** (7:1), தீயி**னும்** (148:4)

வி.அ. + சாரியை + ஒட்டு என்ற அமைப்பில் பதினோரு இடங்களில் அமைந்துள்ளன. இன் சாரியை உம் என்ற ஒட்டைப் பெறுகிறது.

காயம் இரண்டு கலந்து கொதிக்**கினும்** (16:1)

எண்ணி**னும்** (16:3), கலங்கி**னும்** (65:1, 476:3), அணுகி**னும்** (229:1), நணுகி**னும்** (229:2), பணிகி**னும்** (229:3), தணிகி**னும்** (229:4), அடங்கி**னும்** (238:2), இருக்கி**னும்** (240:3), கொடுக்கி**னும்** (352:3).

அத்துச் சாரியை

பெயர் + அத்து + விகுதி என்ற அமைப்பில் மூன்று இடங்களில் வந்துள்ளன.

மண்ண**கத்தான்** ஒக்கும் (30:1)

வான**கத்தான்** (30:1), விண்ண**கத்தான்** (30:2).

பெயர் + சாரியை என்ற அமைப்பில் மூன்று இடங்களில் வந்துள்ளன.

பண்ண**கத்து** இன்னிசை பாடல் உற்றானுக்கு (30:3)

கண்**ணத்து** (30:4), வருத்**தத்து** (156:2).

பெயர் + சாரியை + ஒட்டு என்ற அமைப்பில் ஆறு இடங்களில் வருகின்றன. அத்து சாரியை ஏ என்ற ஒட்டைப் பெறுகிறது.

இருந்தேன் இமையவர் ஏத்தும் பத**த்தே** (62:3)

மன்றத்**தே** (322:1,2,3), நேசத்**தே** (323:2), நரகத்**தே** (431:4).

ஒரே பாடலில் மூன்று இடங்களில் 'மன்றத்தே' என்ற சொல் இடம்பெற்றுள்ளன. சான்றாக,

மன்றத்தே நம்பிக்கு மாடம் எடுத்தது

மன்றத்தே நம்பி சிவிகை பெற்று ஏவினான்

மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்

சென்று, ‘அத்தா’ என்ன, திரிந்திலன் தானே (322)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

பெயர் + சாரியை + சாரியை + விகுதி என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

வேதத்தினான் ஒக்கும் (30:2).

பெயரை அடுத்து வரும் அத்து சாரியையுடன் இன் சாரியையும் சேர்ந்து வருகிறது.

வி.அ+ உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

துணை துணை வைத்ததின் உட்பொருள் ஆன (371:2)

வி.அ. + சாரியை + விகுதி + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வந்துள்ளது. ஆன் விகுதி உம் என்ற ஒட்டைப் பெறுகிறது.

வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன் (86:1)

காலம் காட்டும் இடைநிலைகளும் வினை விகுதிகளும்

“வினைசெயல் மருங்கிற் காலமொடு வருவதவும்” என்ற தொடர் குறித்த விளக்கத்தில், வினை விகுதிகளை மட்டும் குறிக்கும் என்று இளம்பூரணர் கூறுகிறார். ஆனால் நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர் கால இடைநிலை, வினை விகுதி என்னும் இரண்டினையும் குறிக்கும் என்கின்றனர். வினைச்சொற்களில் அடிச்சொற்களை விடுத்து, ஒட்டுகளாக வரும் இடைநிலைகளையும் விகுதிகளையும் இத்தொடர் குறிக்கிறது எனலாம். அதனடிப்படையில் இவ்வாய்வில் இடைநிலைகள், விகுதிகள் குறித்து விவரிக்கப்படுகின்றன. கால இடைநிலைகள் வினைச்சொற்களில் மட்டும் வரும் என்பதை,

“குறிப்பினும் வினையினும் நெறிபடத் தோன்றிக்

காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்”[3]

என்னும் நூற்பாவின் வழி அறியமுடிகிறது. தெரிநிலை வினைமுற்று வெளிப்படையாகக் காலம் காட்டும். குறிப்பு வினைமுற்று வெளிப்படையாகக் காலத்தைக் காட்டாது. குறிப்பாகப் பண்பையும் குறிப்பிட்ட காலத்தையும் காட்டும். இதற்கு "வினைக்குறிப்பு காலமொடு தோன்றுங்கால் பண்டு கரியன், இப்பொழுது கரியன் என இறந்தகாலமும் நிகழ்காலமும் முறையானே பற்றி வருதலாலும் நாளை கரியனாம் என எதிர்காலத்து ஆக்கமொடு வருதலும் அறிக"[4] என்று சேனாவரையரின் உரையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

வினைசெயல் மருங்கின் காலமொடு வருவனவும்

தொல்காப்பியம், நேமிநாதம், முத்துவீரியம் ஆகிய இலக்கண நூல்கள் கால இடைநிலைகளைப் பகுத்துக் கூறவில்லை. ஆனால் நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகியன மூன்று காலங்களையும் அவற்றின் இடைநிலைகளையும் பகுத்துக் கூறுகின்றன.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"[5]

என்ற வினையியிலிருந்து முதல் நூற்பாவே பொது இலக்கணத்தை வரையறை செய்கிறது. வினைச்சொல் வேற்றுமை உருபை ஏற்காது. ஆனால், பெயர்ச்சொல் வேற்றுமையை ஏற்கும். வினைச்சொல் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய காலங்களையும் ஏற்று வரும். தெரிநிலைவினை அம்மூன்று காலங்களை உணர்த்தும். சான்றாக, உண்டான் (இ.கா.), உண்கின்றான் (நி.கா.), உண்பான் (எ.கா.) என்பன, குறிப்புவினையானது இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் குறிப்பாகக் காட்டும். தெரிநிலை, குறிப்பு ஆகிய இரண்டு வினைச்சொல்லிற்கும் உரிய விதிகளைத் தொல்காப்பியர் வினையியலிலும் வேற்றுமை மயங்கியலிலும் கூறியுள்ளார்.

"வினையே செய்வது செய்யப்படு பொருளே

நிலனே என், காலங் கருவி என்றா

இன்னதற்கு இதுபயன் ஆக

..... தொழில் முதல்நிலையே”[6]

ஒரு தொழில் தனக்குரிய செயலையும் காலத்தையும் காட்டுவதோடு செய்வதாகிய எழுவாய் முதலான வேற்றுமைக் கூறுகளையும் தோன்ற வைக்கும் என்ற விளக்கம் வினைச்சொல்லின் வரையறையை வேற்றுமை இலக்கணத்தோடு தொடர்புபடுத்துகிறது.

வினைச்சொல் வகைபாடு

தொல்காப்பியர் வினைச்சொற்களை உயர்திணை, அஃறிணை என இருதிணைக்கும் பொது என்று கூறுகிறார்.

“குறிப்பினும் வினையினும் நெறிபடத்தோன்றி

காலமொடு வருஉம் வினைச்சொல் எல்லாம்

உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்

ஆயிரு திணைக்குமொ ரன்ன வுரிமையும்

அம்மூ உருபின தொன்ற லாறே”[7]

இப்பாகுபாடு தெரிநிலை, குறிப்பு ஆகிய இருவகை வினைச்சொல்லிற்கும் பொருந்தும். சான்றாக,

உயர்திணை தெரிநிலை வினை (பார்க்கின்றாள்)

உயர்திணை குறிப்பு வினை (கரியாள்)

அஃறிணை தெரிநிலை வினை (மாடுகள் ஓடின)

அஃறிணை குறிப்பு வினை (குறுந்தாட்டு)

எனத் தமிழில் வினைச்சொற்கள் நான்காக அமைகின்றன.

பெயர் விகுதிகள்

பொதுவாக ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய உயர்திணை பால்களைக் குறிக்கும் விகுதிகள் முறையே ன, ள, அர் விகுதிகளாகும். அஃறிணையைக் குறிக்கும் ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவை முறையே து, ன விகுதிகளாகும். திருமந்திரத்திலும் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆண்பால் பெயர் விகுதிகள்

விகுதி என்பது பெயர், வினை ஆகிய இரண்டு சொற்களிலும் இடம்பெறும் முக்கிய உறுப்பாகும். விகுதியைப் பொறுத்துப் பொருள் மாறுபடும்.

போற்றி என்பார் அம**ரர்** புனிதன் அடி (43:1)

அமரர் (33:2), **தேவர்** (43:1), **அசுரர்** (43:2), **பரன்** (45:3), **பிரான்** (49:1), **நிமலன்** (205:1), **சீவரை(ர்)** (255:3). போன்ற பல ஆண்பால் சொற்களைத் திருமூலர் பதிவு செய்துள்ளார். இவர் ஆண்பால் ஒருமைக்கு 'னகர' விகுதியையும் பன்மைக்கு 'கள்' விகுதியையும் அதிகமாகப் பயன்படுத்தி உயர்வுப் பொருளில் 'அர்' விகுதியைப் பயன்படுத்தியுள்ளார்.

பெண்பால் பெயர் விகுதிகள்

நீலாங்க மேனிய ணேரிழை யாளொடு (74:2)

வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி (213:1)

விரும்புவர் முன்னென்னை மெல்லி**யன்** மாதர் (354:1)

ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே (491:1)

பெண்பாலைக் குறிக்க 'ளகர' விகுதியை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார் திருமூலர். ஓர் இடத்தில் 'மெல்லியன்' என்று கூறுகிறார். ஆண்பாலைக் குறிக்கும் னகர விகுதியைப் பெண்பாலுக்குப் பயன்படுத்தியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. பெண்பாலில் பன்மையைக் குறிக்க,

மாரியும் கோடையும் வார்பனி தூங்க, நின்று

ஏரியும் நின்று அங்கு இளைக்கின்ற காலத்தது

ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்

காரிகையார்க்குக் கருணை செய்தானே (99)

'அர்' விகுதியைப் பயன்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

தெரிநிலை, குறிப்பு வினைமுற்று சொற்கள்

வினைமுற்று விகுதிகள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடங்களிலும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் வரும். தெரிநிலை வினை காலத்தை வெளிப்படையாகக் காட்டும். செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய ஆறினையும் பெற்று வரும். குறிப்புவினை செய்பவனை மட்டும் முன்னிறுத்தி பொருள், இடம், காலம், செயல், சினை, குணம், தொழில் ஆகிய ஆறினையும் பெற்று வரும்.

தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுச் சொற்களில் இடம்பெறும் இடைநிலைகள்

தன்மை, முன்னிலை வினைமுற்றுகளில் இன்ன பால் என்று தெரியாது. படர்க்கையில் தான் பால் தெரியும். தன்மை, முன்னிலை வினைமுற்றுகள் ஒருமை, பன்மையைக் காட்டும். ஆனால் பால் காட்டாது. படர்க்கை வினைமுற்றுகள் உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டு திணைகளையும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐந்து பால்களையும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களையும் உணர்த்தி வரும். திருமந்திரத்தில் மூன்று காலங்களிலும் இடம்பெற்றுள்ள இடைநிலைகள் கீழ்வருமாறு,

இறந்தகாலம் (த், ட், ற், ன்)

நிகழ்காலம் (கிறு, கின்று, ஆநின்று)

எதிர்காலம் (ப், வ்) என்று வகைப்படுத்தலாம். இவ்வகையிலான கால இடைநிலைகள் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளன.

வினைமுற்றுச் சொற்கள்

இப்பகுதி திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள வினைமுற்றுச் சொற்களை, மூன்று காலங்களின் அடிப்படையில் பகுக்கிறது. அம்மூன்று காலங்களை உணர்த்தும் வினைமுற்றுச் சொற்களைத் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களின் அடிப்படையில் விவரிக்கிறது. இவ் விளக்கத்தின் மூலம் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள வினைமுற்றுச் சொற்களையும் அச்சொற்களில் இடம்பெறும் இடைநிலைகளையும் வினைமுற்று விகுதிகளையும் தெரிந்து கொள்ளலாம்.

இறந்தகால இடைநிலைகளும் அவற்றோடு சேரும் விகுதிகளும்

வினைமுற்றுச் சொற்களில் இடம்பெற்றுள்ள மூன்று காலங்களை உணர்த்தும் இடைநிலைகள் குறித்தும் அவ் இடைநிலைகளோடு சேரும் விகுதிகள் பற்றியும் இங்கு விளக்கப்படுகிறது.

தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்

நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்**றேன்** (51:1)

ஒளித்து வைத்**தேன்** உள்உற உணர்ந்து ஈசனை (246:1)

எய்திய நாளில் இரந்து கண்டே**னே** (360:4)

நின்**றேன்** (4:4, 280:1), காதலித்**தேன்** (30:4), நாடி**னேன்** (51:2), இருந்**தேன்** (51:4, 61:1,2,3,4, 71:4, 73:2,3), சேர்ந்திருந்**தேன்** (60:4), விளங்கியிட்**டேன்** (69:4) நண்ணி**னேன்** (71:3).

தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகளில் பெரும்பாலும் 'ஏன்' என்ற விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளன. சில பாடல்களில் ஒரே வினைமுற்றுச் சொல்லை அப்பாடல் நான்கு அடிகளிலும் திருமூலர் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

இருந்**தேன்** இக்காயத்தை எண்ணிலி கோடி;

இருந்**தேன்** இராப்பகல் அற்ற இடத்தே

இருந்**தேன்** இமையவர் ஏத்தும் பதத்தே

இருந்**தேன்** என் நந்தி இணையடிக் கீழே.(62).

'இருந்தேன்' என்ற சொல்லில் இறந்தகாலத்தைக் குறிக்கும் 'த்' இடம்பெற்றுள்ளது. மேற்குறித்த வகையில், கண்**டேன்** (452:1,2,3,4) என்ற சொல்லும் ஒரே பாடலில் நான்கு இடங்களில் வருவதை அறியலாம். சான்றாக,

கண்**டேன்** கழல்தரு கொன்றையினான் அடி,

கண்**டேன்** கரி உரியான்தன் கழல் இணை,

கண்**டேன்** கமல மலர் உறைவான் அடி,

கண்**டேன்** கழல் – அது; என் அன்பின் உளனே (452)

தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று விகுதிகள்

காண **நில்லேன்** உனை நான் தழுவிக் கொள்ள (28:2)

நில்லேன் என்ற வினைமுற்றில் எதிர்மறைப் பொருள் உள்ளதை அறியலாம். திருமூலர் ஒரே பாடலில் நான்கடிகளிலும் எதிர்மறை வினைமுற்று சொல்லான 'அறிகிலேன்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடவல் லார்நெறி **பாட வறிகிலே**

னாடவல் லார்நெறி **யாட வறிகிலே**

னாடவல் லார்நெறி ஞான **மறிகிலேன்**

றேடவல் லார்நெறி தேடுகில் **லேனே** (78)

அறிகிலேன் என்ற சொல், ஈற்று குறைந்து, 'அறிகிலே' இடம்பெற்றுள்ளது. ஒரே பாடலில் இரண்டு இடங்களில் 'கைவிட்டிலேன்'

என மேற்கோள் பாடலில் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

கைவிட்டிலேன் கருவாகிய காலத்தும்

மெய்**விட்டிலேன்** விகிர்தன் அடி தேடுவன்

பொய்விட்டு நானே; புரிசடையான் அடி

நெய் விட்டிலாத இடிஞ்சிலும் ஆமே (310)

என்ற பாடலில் காணமுடிகிறது. 'இலேன்' என்ற விகுதி எதிர்மறையைக் குறித்து வந்துள்ளன.

நிகழ்கால இடைநிலைகளும் அவற்றோடு சேரும் விகுதிகளும்

நிகழ்காலத்தைக் குறிக்கும் தன்மை ஒருமை வினைமுற்று சொற்களாக,

கூற்று உதைத்தானை யான் கூறு**கின்றே**னே (2:4)

நாடு**கின்றேன்** (155:4), பிதற்று**கின்றேன்** (59:1), விளம்பு**கின்றே**ன் (77:4) போன்ற சொற்களைக் காணமுடிகின்றன. நிகழ்காலத்தைக் குறிக்கும் 'கிறு' என்ற இடைநிலையையும் பயன்படுத்தியுள்ளார். நிகழ்காலத்தைக் குறிக்கும் எதிர்மறை சொற்கள் எதனையும் திருமூலர் பயன்படுத்தவில்லை எனலாம்.

எதிர்கால இடைநிலைகளும் அவற்றோடு சேரும் விகுதிகளும்

எதிர்காலத்தைக் குறிக்கும் வினைமுற்றுச் சொற்கள் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளன.

புக்கு நின்று, உன்னி, யான் போற்றி**செய்வேன்** (3:4)

குடு**வன்** (49:1), பாடு**வன்** (49:2), ஆடு**வன்** (49:3), நாடு**வன்** (49:4) போன்றவை.

மேலும் வினைமுற்றுச் சொற்கள் குறித்த பாடலில்,

குடுவன்; நெஞ்சிடை வைப்பன்; பிரான் என்று

பாடுவன்; பன்மலர் தூவி, தொழுது நின்று

ஆடுவன்; ஆடி, அமரர் பிரான் என்று

நாடுவன்; நான் நின்று அறிவதுதானே (49)

எதிர்காலத்தைக் குறிக்கும் வினைமுற்று விகுதிகளாக 'ஏன்' 'அன்' (ஏன் பொருளில்) ஆகிய விகுதிகளைத் திருமூலர் பயன்படுத்தியுள்ளார். மேற்குறித்த குடுவன், பாடுவன், ஆடுவன், நாடுவன் ஆகிய சொற்களுக்கு முறையே வணங்குவேன், பாடுவேன், ஆடுவேன், நாடுவேன் என்ற பொருள்களைக் குறிக்கும் 'ஏத்துவன்' (92:4) என்ற சொல்லும் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளது.

தன்மை பன்மை வினைமுற்று விகுதிகள்

தன்மை பன்மை வினைமுற்று விகுதிகளுள் இறந்த காலத்தைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

வளப்பின் கயிலை வழியில் வந்**தோமே** (70:4)

"மலம் களைந்**தாம்**" – என மாற்றி, அருளி (116:1)

அன்பு இல் இறைவனை யாம் அறி**யோம்** என்பர் (455:2)

தன்மை பன்மை வினைமுற்று விகுதிகளாக ஓம், ஆம் ஆகிய விகுதிகள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்

முன்னிலை ஒருமையைக் குறிக்கும் வினைமுற்று சொல்லாக, நில்லாய் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

காண நில்லாய், அடியேற்கு உறவு ஆர் உளர் (28:1)

முன்னிலை பன்மை வினைமுற்று விகுதிகள்

முன்னிலை பன்மை வினைமுற்று விகுதிகளாக இர், ஈர் போன்ற விகுதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மண் ணொன்று கண்**டீர்** இருவகைப்பாத்திரம் (316:1)

கீவபெரும்பிழை யென்று கொள் **ளீரே** (313:4, 344:4, 494:4)

அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்**மின்** (416:1),

வன்**மின்** (416:2), உண்**மின்** (416:4, 417:2, 468:3), இடு**மின்** (417:1), என்னன்**மின்** (417:1), போற்றன்**மின்** (417:2), உண்ணன்**மின்** (417:3), அறி**மின்** (417:4), எண்ணு**மின்** (435:3), தொழு**மின்** (459:3), பற்று**மின்** (465:1), ஓது**மின்** (468:3), கேண்**மின்** (468:3), தேடு**வீர்** (500:2), ஏத்து**மின்** (500:3) போன்ற சொற்கள் முன்னிலை வினைமுற்று சொற்களைக் குறிக்கின்றன. இர், ஈர் ஆகிய விகுதிகளோடு 'மின்' என்ற விகுதியையும் அதிகமான இடங்களில் திருமூலர் பயன்படுத்தியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. குறிப்பாக ஒரே பாடலில் முன்னிலை பன்மையைக் குறிக்கும் வினைமுற்று விகுதிகளைப் பயன்படுத்தியிருப்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். அப்பாடல் அதிகமான இயைபுத் தன்மை கொண்டதாக உள்ளதை அறியமுடிகிறது. சான்றாக,

ஆர்க்கும் இடு**மின்**, அவர் இவர் என்னன்**மின்**

பார்த்து இருந்து, உண்**மின்**; பழம்பொருள் போற்றன்**மின்**

வேட்கை உடையிர் விரைந்து ஒல்லை உண்ணன்**மின்**

காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே (417).

என்ற பாடல் மூலம் அறியலாம். இது போன்று முன்னிலை பன்மை வினைமுற்றுச் சொற்களை வேறொரு பாடலிலும் பயன்படுத்தியுள்ளார் திருமூலர். சான்றாக,

தேவர் பிரான்தனை, திவ்விய மூர்த்தியை

யாவர் ஒருவர் அறிவார் – அறிந்த பின்

ஓதுமின்; கேண்மின்; உணர்மின்; உணர்ந்த பின்

ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின்றாரே (468).

மேற்குறித்த பாடலில் ஒரே அடியில் மூன்று முன்னிலைப் பன்மையைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அச்சொற்கள் முறையே ஓதுங்கள், கேளுங்கள், உணருங்கள் ஆகிய பொருள்களைக் குறிக்கும்.

படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள்

திருமந்திரத்தில் ஆண்பால் வினைமுற்றுச் சொற்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, மூன்று காலங்களுள் இறந்த காலத்தைக் குறிக்கும் சொற்களை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.

இறந்தகால இடைநிலைகளும் வினைமுற்று விகுதிகளும்

பளிங்கில் பவளம் பதித்**தான்** பதியே (112:4)

நின்**றான்** (3:3, 23:4, 27:4, 208:4, 218:4, 301:4, 375:4, 468:4), நயந்**தான்** (116:4), கொன்**றான்** (143:4, 170:4), கொண்**டான்** (145:4), கொடுத்**தான்** (153:4), உணர்ந்**தான்** (201:4), புணர்ந்திருந்**தான்** (25:4), இருந்**தான்** (144:2,146:4), உமிழ்ந்**தான்** (200:1), இசைந்திருந்**தான்** (247:4).

இறந்த காலத்தைக் குறிக்கும் வினைமுற்றுச் சொற்கள் நூற்றிற்கும் மேற்பட்டு திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளன. மேலே உள்ள சொற்களைத் தவிர்த்து, பிற சொற்களின் பட்டியல் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

ஒரு சொல் ஒரே பாடலில் நான்கடிகளிலும் இடம்பெற்றுள்ளது. சான்றாக, அளித்தான் என்ற சொல்லைக் கொண்ட ஒரு பாடலைக் காணலாம்.

அளித்தான் உலகுஎங்கும் தான் ஆன உண்மை

அளித்தான் அமரர் அறியா உலகம்

அளித்தான் திருமன்றுள் ஆடும் திருத்தாள்

அளித்தான் பேரின்பத்து அருள்வெளி தானே (121).

வைத்தான் என்ற சொல் நான்கடிகளிலும் நடுவில் இடம்பெற்றுள்ளது. சான்றாக,

அங்கி மிகாமை **வைத்தான்** உடல்; வைத்தபின்

எங்கும் மிகாமை **வைத்தான்** உலகு ஏழையும்

தங்கி மிகாமை **வைத்தான்** தமிழ்ச்சாத்திரம்

பொங்கி மிகாமை **வைத்தான்** பொருள்தானுமே (68)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

நிகழ்கால இடைநிலைகளும் வினைமுற்று விகுதிகளும்

அதி பதியாக அமரு**கின்றா**னே (18:4)

அப்பரிசே சிவன் ஆலிக்**கின்றா**னே (159:4)

மூட்டு**கின்றா**ன் முதல் யோனி மயன் அவன் (280:2),

அல்லும் பகலும் அருளு**கின்றா**னே (22:4, 217:4)

மேற்குறித்த நிகழ்காலத்தைக் காட்டும் வினைமுற்று விகுதிகள் பாடலின் இறுதியில் இடம்பெற்றுள்ளன. ஆக்குகின்றான் (260:1,2,3,4) என்ற ஒரு வினைமுற்றுச் சொல் பாடலின் நான்கடிகளிலும் முதலில் இடம்பெற்றுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. சான்றாக,

ஆக்குகின்றான் முன் பிரிந்த இருபத்தஞ்சு

ஆக்குகின்றான் அவன் ஆதி எம் ஆருயிர்

ஆக்குகின்றான் கருக்கோளையுள் இருந்து

ஆக்குகின்றான் அவன் ஆவது அறிந்தே (260)

என்ற பாடல் விளங்குகிறது. நிகழ்காலத்தைக் குறிக்கும் வினைமுற்று சொல்லில் ஆன் விகுதி இடம்பெற்றுள்ளது.

எதிர்கால இடைநிலைகளும் வினைமுற்று விகுதிகளும்

குறி அறிவிப்**பான்** குருபரன் ஆமே (117:4)

காண்**பான்** (128:1), படைப்**பான்** (197:4), அறி**வான்** (208:1,2), செய்**வான்** (229:4), வனை**வான்** (226:1,2,277:2), உணர்**வான்** (365:1,2), வரு**வான்** (424:4), கற்பிப்**போன்** (414:3).

ஒரே பாடலில் இரண்டு எதிர்காலத்தைக் குறிக்கும் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். சான்றாக,

உற்று வனைவான் அவனே உலகினை

பெற்று வனைவான் அவனே பிறவியைச்

சுற்றிய சாலும் குடமும் சிறுதூதை

மற்றும் அவனே வனைய வல்லானே (226)

இப்பாடலில் இடம்பெறுவதை அறியலாம். அவ்வாறே உணர்வான் என்ற சொல்லும்,

சென்று **உணர்வான்** திசை பத்தும் திவாகரன்

அன்று **உணர்வான்** அளக்கின்றது அறிகிலர்

நின்று உணரார்இந் நிலத்தில் மனிதர்கள்

பொன்று உணர்வாரின் புணர்க்கின்ற மாயனே (365)

என்ற பாடலில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

படர்க்கை ஆண்பால் எதிர்மறை வினைமுற்று விகுதிகள்

படர்க்கை ஆண்பால் எதிர்மறை வினைமுற்று விகுதிகள் இடம்பெறும் வினைமுற்று சொற்கள் ஐந்து இடங்களில் இடம்பெற்றுள்ளன. சான்றாக,

'அடி கண்**டிலன்**' என்று அச்சுதன் சொல்ல (177:3)

அறிந்**திலன்** (295:1), உரைத்**திலன்** (295:2), திரிந்**திலன்** (322:4), வந்**திலன்** (423:3).

படர்க்கை ஆண்பால் எதிர்மறை வினைமுற்று விகுதியாக 'இலன்' என்ற விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

படர்க்கை பெண்பால் வினைமுற்று விகுதிகள்

திருமந்திரத்தில் சிவன், திருமால், பிரமன், பிற ஆண் கடவுளர்களின் பெயர்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. பெண்பாலைக் குறிக்கும் வினைமுற்றுச் சொற்கள் குறைவாகவே உள்ளன.

படியார அர்ச்சித்துப் பத்தி **செய்தாளே** (151:4)

கொண்**டாள்** (233:4), வளர்க்கின்**றாள்** (297:4)

இச்சொற்களின் மூலம் பெண்பாலைக் குறிக்க 'ஆள்' விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

படர்க்கை பெண்பால் எதிர்மறை வினைமுற்று விகுதிகள்

படர்க்கை பெண்பால் எதிர்மறை வினைமுற்று விகுதிகளைக் குறிக்கும் சொற்கள் திருமந்திரத்தில் குறைவு.

இட்டான் அறிந்திலன் ஏற்றவல கண்**டிலள்** (295:1)

என்ற தொடரின் மூலம் அறியலாம். மேற்குறித்த தொடரில் 'இலள்' விகுதி இடம்பெற்றுள்ளதை அறிந்துகொள்ளலாம்.

படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதிகள்

படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதிகள் சொற்கள் நூற்றிற்கும் மிகுதியான சொற்கள் இடம்பெற்றுள்ளன. சில சொற்கள் மட்டும் இங்கு சான்று காட்டப்படுகிறது. பிற சொற்கள் பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களில் இடம்பெற்றுள்ள வினைமுற்று விகுதிகளை,

- இறந்த காலம்
- நிகழ்காலம்
- எதிர்காலம்

ஆகிய மூன்று காலங்களின் வரிசையில் விளக்கப்படுகின்றன.

இறந்த காலத்தைக் காட்டும் வினைமுற்றுச் சொற்களில் உள்ள பலர்பால் விகுதிகள்

வேதம் துதித்திடப் போயடைந்**தார்** (140:4)

படுத்**தார்** (321:4), கொண்**டார்** (321:2),

ஒரே வினைமுற்றுச் சொல் ஒரு பாடலில் நான்கடிகளின் முதலில் பயன்படுத்தியுள்ளார் திருமூலர். சான்றாக,

இருந்தார் சிவமாகி, எங்கும் தாம் ஆகி

இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி

இருந்தார் முக்காலத்து இயல்பைக் குறித்து; அங்கு

இருந்தார் இழவு வந்து, எய்திய சோம்பே (125)

என்ற பாடல் மூலம் அறியலாம். மேலும் ஒரு பாடலில்,

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே

சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே

சோம்பர் உணர்வு சுருதி முடிந்த இடம்

சோம்பர் கண்டார் அச் சுருதிக்கண் தூக்கமே (126).

சோம்பர் என்ற சொல் மேற்குறித்தவாறே வருகின்றது.

நிகழ்காலத்தைக் காட்டும் வினைமுற்றுச் சொற்களில் உள்ள பலர்பால் விகுதிகள்

நிகழ்காலத்தைக் காட்டும் வினைமுற்றுச் சொற்களில் 'கின்று' என்ற இடைநிலையை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார் திருமூலர்.

ஊனில் நின்றாங்கே உயிர்க்**கின்ற** வாரே (36:4)

வாடு**கின்றா**ர் (32:4), பிணங்கு**கின்ற**னர் (102:4), பிதற்று**கின்ற**னர் (108:4), போன்ற சொற்களில் 'அர்' விகுதியையும் பயன்படுத்தியுள்ளார்.

எதிர்காலத்தைக் காட்டும் வினைமுற்றுச் சொற்களில் உள்ள பலர்பால் விகுதிகள்

கோது குலாவிக் குணம் **பயில்வாரே** (15:4)

பயில்**வார்** (89:2), செய்**வார்** (212:4), காண்**பர்** (433:4, 440:1,2,3), நிற்**போர்** (392:2, 485:4), அறி**வார்** (71:1,2, 80:1, 187:2, 294:4, 418:1,2,3), அறி**வோர்** (388:4), மேற்குறித்த சொற்கள் அனைத்திலும் 'அர்' விகுதி வந்துள்ளது. பலர்பாலிலும் 'கள்' விகுதியைத் திருமூலர் பயன்படுத்தியுள்ளார்.

படர்க்கை பலர்பால் எதிர்மறை வினைமுற்று விகுதிகள்

தருமம் செய்யா**தவர்**தம் பால ஆகும் (430:2)

படி கண்**டிலர்**, மீண்டும் பார்மிசைக் கூடி (177:2)

'அவர்' 'இலர்' ஆகிய விகுதிகள் இடம்பெற்றுள்ளன.

படர்க்கை ஒன்றல்பால் வினைமுற்று விகுதிகள்

படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் திருமந்திரத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் பயின்று வந்துள்ளன. அவற்றுள், சில சொற்கள் இங்குச் சான்றாகக் காட்டப்படுகின்றன.

இறந்தகாலத்தைக் குறிக்கும் வினைமுற்றுச் சொற்கள்

நினைத்**தது** அறிவனே; நீசர் நினையார் (21:2)

உரைத்**தது** (80:1), எழுந்**தது** (94:4), அழிந்**தது** (117:3), உமிழ்ந்**தது** (174:4), வைத்**தது** (183:3), கொடுத்**தது** (184:3) விளைந்**தது** (277:4, 320:1), கலந்**தது** (268:3), திரண்**டது** (293:4), பிரிந்**தது** (320:2,325:1), பழுத்**தது** (320:2), எடுத்**தது** (322:1), கிடந்**தது** (332:4, 335:1), பரந்**தது** (421:3), அழிந்**தது** (428:4).

இறந்த காலத்தைக் குறிக்கும் ஒரு சொல் ஒரே பாடலில் நான்கடிகளிலும் பயன்படுத்தியுள்ளார் திருமூலர். சான்றாக,

கலந்தது நீர் – அது உடம்பில் கறுக்கும்;

கலந்தது நீர் – அது உடம்பில் சிவக்கும்;

கலந்தது நீர் – அது உடம்பில் வெளுக்கும்

கலந்தது நீர் – அனல், காற்று – அது ஆமே (திரு. 410).

நிகழ்காலம் குறித்த சொற்கள் சிலவே உள்ளன.

“நடுவுநில்லாது இவ் உலகம் சரிந்து

கெடு**கின்றது** எம்பெருமான் என, ஈசன் (141:2)

வளர்க்**கின்றது** (297:2), அலக்**கின்றது** (365:2) போன்றவை.

படர்க்கை பலவின்பால் வினைமுற்று விகுதிகள்

படர்க்கை பலவின்பால் வினைமுற்று விகுதிகளாக,

வீழ்ந்**தன** (427:1) கழிந்**தன** (352:1, 428:2), நீண்**டன** (352:3), சென்**றன** (366:4), ஒழிந்**தன** (428:1), பிழிந்**தன** (428:3).

முன்னிலை ஒருமையும் பன்மையும்

கட்டளைப்பொருளில் வரும் ஏவல் வினைகள், முன்னிலை இடத்தில் ஒருமை, பன்மை ஆகியவற்றை உணர்த்தி வரும். திருமந்திரத்தில் உள்ள முன்னிலை ஏவல் ஒருமை வினைகள் விகுதி பெற்றும் பெறாமலும் வருகின்றன. ஆய், உம், ஈர் ஆகிய ஈறுகளைப் பெற்ற செய்யாய், செய்யும், செய்யீர் ஆகிய வாய்ப்பாட்டு ஏவல் வினைகள் திருமந்திரத்தில் கண்டறியப்பட்டுள்ளன.

சான்று:

காண **நில்லாய்** (28-1) நான் பார்க்குமாறு நீ என்முன் நில்

"செய்யாய் என்னு முன்னிலை வினைச்சொல்

செய் என் கிளவி யாகிட னுடைத்தே"[8]

என்ற நூற்பாவின் கருத்து இங்குள்ள திருமந்திர எடுத்துக்காட்டிற்குப் பொருந்தக்கூடியதே. இதில் நில்லாய் என்பது பழந்தமிழ் மரபுப்படி எதிர்மறை அமைப்பைப் பெற்றிருந்தாலும், ஏவலாகவே பாடல் தொடரில் உணரப்படுகிறது.

தன்மையும் நல்லதவம் **செய்யும்** நீரே (422-4)

எமன் வருமுன் நீங்கள் தவம் செய்யுங்கள். இவ்வடிக்கு கூற்றம் வருவதற்குமுன் செய்யத்தக்கது நல்ல தவம் ஆகும். 'செய்யும்' என்பது செய்யும் வாய்ப்பாட்டு ஏவலாகவே இங்கு பதிவு செய்யப்படுகிறது. அவ்வடியில் உள்ள இறுதிச்சீரான நீர் என்பது முன்னிலை பன்மை மாற்றுப்பெயர் ஆகும்.

செய்யும் என் ஏவல்

அற்ற என்பதற்குப் பெயரெச்ச வடிவு கொண்டாலும் சுப. அண்ணாமலை அவர்களின் பொருள்கோளாலும் அவர் கொள்ளும் கால

வழுவமைதியாலும் அது **'அறும்'** என்று கொண்டு, செய்யும் என் ஏவல் வினைமுற்றாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாய்வில் கண்டறிந்த தரவுகளின் அடிப்படையில், செய்யும் என் ஏவல் வினைகள் 2 என்றும் செய்யாய் என் ஏவல் 1 என்றும் பதியப்படுகின்றன.

ஒருமை ஏவல் வினை (விகுதியற்ற)

எந்த விகுதியுமில்லாமல், வினைப்பகுதியாக ஏவலை உணர்த்தி நிற்கும் 15, வினைகள் திருமந்திரத்தில் பயின்று வருகின்றன.

நில் என நிற்பித்த நீதியுள் ஈசனை (22:2) கடல் அலையை, மிகாமல் நில் என்று நிற்கவைத்த ஈசன்.

.....அகத்திய நீ போய்

முடுகிய வைத்துமுன் **இரு** என்றானே (367:1)

அகத்தியனே நீ உலகத்தின் முன்பு இரு என்று சொன்னான்.

ஏவல் - முன்னிலை பன்மை ஈறுகள்

'ஈர், மின், மின்கள்' ஆகிய முன்னிலை பன்மை ஈறுகள் ஏவலில் பயின்றுவரும் விதங்கள் திருமந்திரத்தில் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் **'மின்கள்'** ஒரு இடத்தில் மட்டும்தான் வருகின்றது. **'ஈர்'** விகுதி ஏவலில் இடம்பெறும்பொழுது, அவ்வினை எதிர்காலத்தில் வருகின்றது.

சான்று;

"மாற்றிக் **களைவீர்** மறுத்துங்கள் செல்வத்தை"(346:3) உங்கள் செல்வத்தை மறுத்து, எண்ணத்தை மாற்றி, அச்செல்வத்தைக் களையுங்கள்.

"தேற்றத் **தெளிமின்** (346:1) மனதைத் தேற்றிக்கொண்டு தெளிந்திடுங்கள்

தீயவைத்து **ஆர்மின்கள்**....வினைதனை (239:1)

வினைகளைத் தீயில் பொழுக்குமாறு செய்து ஆரவாரித்து முழக்கம் செய்யுங்கள்.

திருமந்திரத்தில் பாலிட விகுதிகள்

மூன்று இடம் ஐம்பாலுக்குரிய பாலிட விகுதிகளும் அந்தந்த விகுதிகளின் மாற்று விகுதிகளும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன. அவற்றுள் சில மாதிரிகளை, இப்பகுதி சுட்டிக்காட்டுகிறது. மேலும், பொற்கோ அவர்கள் இக்கால இலக்கணத்தில் விளக்கிய உயர்பாலுக்குரிய விகுதியும் திருமந்திரத்தில் பயின்று வருவதையும் இவ்வியல் குறிக்கிறது. இவற்றுள் சில விகுதிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பால்களைக் குறிக்கின்றன. சில இன்ன பாலைக் குறிக்கின்றன என்பது பல வாசிப்புகளுக்குப் பிறகே விளங்குகிறது. இவற்றில் சில தொடரியல் சார்ந்தது எனலாம்.

தெரிநிலை வினைகளில் பாலிட விகுதிகள்

தன்மை ஒருமை விகுதிகள்.

ஏன், அன் ஆகியவை திருமந்திரத்தில் ஆட்சிக்கொள்ளும் தன்மை ஒருமை விகுதிகள் ஆகும்.

சா; **இருந்தேன்** (75-4), **பிதற்றுகின்றேன்** (59-1)

நடுவண் (49-4) நாடுவேன், **இயற்றுவன்** (59-2) இயற்றுவேன்.

ஏன் என்ற விகுதி இக்காலத்தில் சற்று பிரதானமான விகுதி. அன் என்பது தன்மை ஒருமைக்கு வரும் என்ற தகவல் இளம்பூரணர் உரையிலும் அதன்பின் வந்த நன்னூலிலும் காணலாம்.

தன்மை பன்மை ஒருமை விகுதிகள்

களைந்தாம் (116:1) களைகிறோம்.

என்ற முற்று, தொல்காப்பியம் உரைக்கும் பன்மைக்கான 'ஆம்' விகுதியைக்கொண்டு தன்மை ஒருமையைக் குறிக்கிறது.

முன்னிலை ஒருமை

ஆய், ஈர் என்ற முன்னிலைகளைக்கொண்டு வந்துள்ளன. முன்பு ஏவல் வினைகளில் 'ஆய்' என்ற விகுதி சுட்டப்பட்டது.

காண **நில்லாய்**…….. (27:1) நிற்பாயாக

கண்டீர் **(316:1)** பார்த்**தீர்**கள், செய்**வீர்** (421:3) பண்ணு**வீர்**கள், தேடு**வீர்** (500:2) தேடு**வீர்**கள்.

படர்க்கை ஆண்பால்

இங்கு 'அன்' சாரியையை இறந்தகால வடிவத்தில் மட்டும் பெறும் 'அன்' என்ற விகுதியையும் 'ஆன்' என்ற அதன் மாற்று விகுதியையும் திருமூலர் பயன்படுத்தியுள்ளார்.

கடந்து நின்**றான்** கமலமலர் ஆதி (13:1)

வென்ற**னன்** (1:3) வென்**றான்**, இசைந்**தான்** (449:2) விருப்பம் தெரிவித்**தான்**, அறி**வன்** (21:2) அறி**வான்**, செய்**வன்** (128:2) பண்ணு**வான்**, அளித்**தான்** (56:4), ஆக்குகின்**றான்** (260:1), அகன்**றான்** (257:1)

படர்க்கை பெண்பால்

பாடல் முழுதும் சிவபெருமானைப் பற்றி பாடியுள்ளதால் ஆண்பால் (விகுதி) மட்டுமே மிகுந்து காணப்படுகின்றன. 'ஆள்' என்ற விகுதிமட்டும் பெண்பாலுக்கு வருகின்றது.

நேரிழை **ஆவாள்……** (60-1)

படர்க்கை உயர்பால் ஒருமை

பொற்கோ, "தொடர்ந்து இக்கால இலக்கண நூலார் குறிப்பிடும் உயர்பால் (அ) உயர்வு ஒருமை"[9]என்ற இலக்கணக்கூற்றைக் காட்டும் 'அர், ஆர்' ஆகிய விகுதிகளை, திருமூலர் கையாண்டுள்ளார்.

போந்தார் (211:3); போனார், **உண்டார்** (321:1)

படர்க்கை பலர்பால்

அர், ஆர், அர்கள், ஆர்கள் ஆகிய நான்கு மாற்று விகுதிகள் பலர்பாலைக் காட்டுகின்றன.

அஞ்சினர் (180:2) பயந்தார்கள் ; **ஆவர்** (469:3) ஆவார்கள்

சென்றார் (180:3) சென்றார்கள் ; **அகன்றார்** (328:4) நீங்கினார்கள்

இருப்பர்கள் (344:2) இருப்பார்கள்; **அகன்றார்கள்** (325:4) நீங்கினார்கள்

அட்டினார்கள் (333:4) படைத்தார்கள்.

படர்க்கை ஒன்றன்பால்

அது ஈறு அஃறிணை ஒருமையைக் காட்டுகின்றது.

உமிழ்ந்தது (174:4) பொழிந்தது; **ஆவது** (32:1)ஆகும்.

படர்க்கை பலவின்பால்

ஆண்பால் அன் விகுதியைப்போல, அஃறிணை பன்மை விகுதியான 'அகர விகுதியும்' இறப்பு வடிவத்தில் அன் சாரியையுடன் வருகின்றது. ஏனைய வடிவத்தில் சாரியை இல்லை.

ஆவ (311:1) உண்டாகும்; **ஒழிந்தன** (428:1) மறைந்தன

கண்டறிந்தவரையில், திருமந்திரம் சிவனைப் பற்றிய பாடல் என்பதால், அதில் பெரும்பாலும் ஆண்பால் விகுதிகளே இடம்பெற்றுள்ளன. அதற்கு அடுத்த நிலையில் பலர்பால் விகுதிகளும் தன்மை ஒருமையும் முன்னிலை விகுதிகளும் ஓரிரு பாடல்களில் உயர்பாலைக் குறிப்பதும் கள் விகுதியோடு சேர்ந்த 'ஆர்கள்' என்ற விகுதி பலரைக் குறிப்பதும் திருமூலரின் காலத்தில் அவற்றின் ஆட்சியின் தோற்றத்தை உணரமுடிகிறது.

வேற்றுமை உருபுகள்

வேற்றுமை எட்டு வகைப்படும். இதனை தொல்காப்பியர்,

“வேற்றுமை தாமே ஏழென மொழிப”[10]

“விளி கொள்வதன்கண் விளியொடு எட்டென”[11]

எனும் நூற்பாக்கள் மூலம் வேற்றுமை எட்டென மொழிகின்றது.

முதலாம் வேற்றுமை	-	எழுவாய் உருபாக வரும்
இரண்டாம் வேற்றுமை	-	ஐ
மூன்றாம் வேற்றுமை	-	ஒடு
நான்காம் வேற்றுமை	-	கு
ஐந்தாம் வேற்றுமை	-	இன்
ஆறாம் வேற்றுமை	-	அது
ஏழாவது வேற்றுமை	-	கண்
எட்டாம் வேற்றுமை	-	விளியினை உருபுகளாகப் பெற்று வரும்.

எட்டு வேற்றுமை உருபுகளைத் தொல்காப்பியர்,

“அவைதாம்

பெயர் ஐ ஒடு கு

இன் அது கண் விளி என்னும் ஈற்ற”[12]

என்னும் நூற்பா மூலம் குறிப்பிடுகிறார். இவ்வுருபுகள் பெயரைச் சார்ந்து வந்து பொருளை வேறுபடுத்துகின்றன.

தொல்காப்பியம் மூன்றாம் வேற்றுமை உருபாக ‘ஒடு’ என்பதனை மட்டும் கூறியுள்ளது. நன்னூல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்

போன்ற மற்ற இலக்கண நூல்கள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்னும் நான்கு உருபுகளை மூன்றாம் வேற்றுமையில் பயன்படுத்தியுள்ளன.

இரண்டாம் வேற்றுமை உருபுகள்

வ. எ	நூற்கள்	வே.உ	அடிப்படை	பொருட்பயன் வகைகள்
1.	தொல்.	ஐ	வினை, வினைக் குறிப்பு	காப்பு, ஒப்பு, ஊர்தி, இழை, ஒப்பு, புகழ், பழி, பெறல், இழவு, காதல், வெகுளி, செறல், உவத்தல், கற்பு, அறுத்தல்,குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், நிறுத்தல், அளவு, எண், ஆக்கல், சார்தல், செலவு, கன்றல், நோக்கல், அஞ்சல், சிதைப்பு(28)
2.	வீர.	ஐ, கருமம்	-	பற்றுக்கருமம், வீட்டுக்கருமம், இருபுறக்கருமம், தான் தெரிக்கருமம், தான் தெரியாக் கருமம், கருத்தா கருமம்
3.	நேமி.	ஐ	வினை, வினைக் குறிப்பு	-
4.	நன்.	ஐ	-	ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை
5.	பிரயோக.	ஐ, கருமம்	-	ஈச்சிதகருமம், அநீச்சிதகருமம், ஈச்சிதானீச்சித கருமம், அபிகிம கருமம், கர்த்தா கருமம்
6.	இல.வி.	ஐ	-	இயற்றவும், திரிக்கவும், எய்தவும்படும்
7.	இ.கொ.	செயப்படு பொருள்	-	கருத்துண்டாதல், கருத்தின்றாதல், இருமையுமாதல்
8.	தொ.வி.	ஐ	-	ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை
9.	மு.வீ.	ஐ	-	காப்பு, ஒப்பு, ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், அஞ்சல், உடைமை

10.	சு.நா.	ஐ (செயப் படு பொருள்)	வினை, வினைக்கு றிப்பு	-

மூன்றாம் வேற்றுமை உருபு

வ. எ	நூற்கள்	வே.உ	அடிப்படை	பொருட்பயன் வகைகள்
1.	தொல்	ஒடு (ஆன்)	வினைமுதல், கருவி	அதனின் இயறல், அதற்றகு கிளவி, அதனை வினைப் படுதல், அதனினாதல், அதனின் கோடல், கொண்டு, உளி, அதனொடு மயங்கல், அதனொடு இயைந்த ஒரு வினைக் கிளவி, அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை, இன்னான் ஏது.
2.	வீர	ஒடு, ஓடு, ஆல்	-	புறக்காரணம், அகக்காரணம்
3.	நேமி.	ஆன், ஒடு	வினை முதல், கருவி	-
4.	நன்.	ஆல், ஆன், ஓடு, ஒடு	-	கருவி, கருத்தா, உடனிகழ்வு
5.	பிரயோக	ஆன், ஒடு	-	புறக்காரணம், அகக்காரணம்
6.	இல.வி.	ஆல், ஆன், ஒடு, ஓடு	-	கருவி, கருத்தா, உடனிகழ்வு
7.	இல.கொ.	கருவி வேற்றுமை	-	புறக்கருவி, அகக்கருவி, ஒற்றுமைக்கருவி (கருவி, கருத்தா, உடனிகழ்வு)
8.	தொ.வி.	ஆல், ஆன், ஒடு, ஓடு	-	கருவி, கருத்தா, உடனிகழ்வு

9.	மு.வீ	ஆல், ஆன், ஒடு, ஓடு	-	கருவி, கருத்தா, உடனிகழ்வு
10.	சு.நா	ஆல், ஆன், ஒடு, ஓடு, கொண்டு	-	கருவி, கருத்தா, உடனிகழ்வு

நான்காம் வேற்றுமை

வ. எ	நூற்கள்	வே. உ	அடிப்படை	பொருட்பயன் வகைகள்
1.	தொல்.	கு	கொள்ளுதல்	அதற்கு வினையுடைமை, அதற்கு உடம்படுதல், அதற்கு படுபொருள், அதுவாகு கிளவி, அதற்கு யாப்புடைமை, அதன் பொருட்டாதல், நட்பு, பகை, காதல், சிறப்பு
2.	வீர.	கு, பொருட்டு	-	கோளி 1) ஆர்வக்கோளி 2)கிடப்புக்கோளி, 3)இருப்புக்கோளி
3.	நேமி.	கு	ஏற்றல்	ஈதல் பொருட்டு
4.	நன்.	கு	-	கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல்
5.	பிரயோக.	கு, பொருட்டு	-	அனுமந்தர சம்பிரதானம், அநிராகருத்தா, சம்பிரதானம்
6.	இல.வி.	கு	-	கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல்
7.	இல.கொ.	கொள்வோன்	-	விருப்பாய் ஏற்றல், கேளாது ஏற்றல், கேட்டே ஏற்றல், ஈவோன் ஏற்றல், உயர்வின்றி ஏற்றல், வழக்கு கொடை, உரிமைக்கொடை, அச்சக்கொடை, பாவினைக் கொடை

8.	தொ.வி.	கு	-	கொடை, பகை, சிறப்பு, காதல், தகுதி, அதுவாதல்
9.	மு.வீ.	கு	-	கொடை, பகை, சிறப்பு, காதல், தகுதி, அதுவாதல்
10.	சு.நா.	கு	-	கொடை

ஐந்தாம் வேற்றுமை

வ.எ	**நூற்கள்**	**வே. உ**	**அடிப்படை**	**பொருட்பயன் வகைகள்**
1.	தொல்.	அது	தற்கிழமை, பிறிதின் கிழமை	இயற்கை, உடைமை, முறைமை, கிழமை, செயற்கை, முதுமை, வினை, கருவி, துணை, கலம், முதல், ஒருவழி உறுப்பு, குழு, தெரிந்து மொழி செய்தி, நிலை, வாழ்ச்சி,
2.	வீர.	உடை, அ	-	பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபனாக்கம்.
3.	நேமி.	அது	தற்கிழமை, பிறிதின் கிழமை	-
4.	நன்.	அது, ஆது- ஒருமை அ- பன்மை	தற்கிழமை, பிறிதின் கிழமை	பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபினாக்கம்
5.	பிரயோக.	அது, கு, .உடைய, அ	தற்கிழமை, பிறிதின் கிழமை	ஒற்றுமைக் குறை, வேற்றுமைக்குறை
6.	இல.வி.	அது, ஆது – ஒருமை அ- பன்மை	தற்கிழமை, பிறிதின் கிழமை	-
7.	இல.கொ.	குறை	-	ஒன்றாய்த் தோன்றல், உரிமையாய்த் தோன்றல், வேறாய்த் தோன்றல்
8.	தொ.வி.	அது, ஆது-	தற்கிழமை,	பண்பு, உறுப்பு, ஒன்றன்

		ஒருமை அ- பன்மை	பிறிதின் கிழமை	கூட்டம், பலவின் ஈட்டம், திரிபினாக்கம்.
9.	மு.வீ.	அது- ஒருமை, அ- பன்மை	தற்கிழமை, பிறிதின் கிழமை	பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபினாக்கம்.
10.	சு.நா.	அது, ஆது- ஒருமை அ- பன்மை	தற்கிழமை, பிறிதின் கிழமை	பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபினாக்கம்.

ஆறாம் வேற்றுமை

வ.எ	நூற்கள்	வே. உ	அடிப்படை	பொருட்பயன் வகைகள்
1.	தொல்.	கு	கொள்ளுதல்	அதற்கு வினையுடைமை, அதற்கு உடம்படுதல், அதற்கு படுபொருள், அதுவாகு கிளவி, அதற்கு யாப்புடைமை, அதன் பொருட்டாதல், நட்பு, பகை, காதல், சிறப்பு
2.	வீர.	கு, பொருட்டு	-	கோளி 1) ஆர்வக்கோளி 2)கிடப்புக்கோளி, 3)இருப்புக்கோளி
3.	நேமி.	கு	ஏற்றல்	ஈதல் பொருட்டு
4.	நன்.	கு	-	கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல்
5.	பிரயோக.	கு, பொருட்டு	-	அனுமந்தர சம்பிரதானம், அநிராகருத்தா, சம்பிரதானம்
6.	இல.வி.	கு	-	கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல்
7.	இல.கொ.	நீக்கம்	-	நிலைத்திணை, இயங்குதிணை, பண்பு
8.	தொ.வி.	இல், இன்	-	நீங்கல், ஒப்பல், எல்லை, ஏது
9.	மு.வீ.	இல், இன்	-	அச்சம், ஆக்கம், அதனோடு

				தீர்தல், பற்றுவிடல், நீங்கல், ஒப்பு, ஏது
10.	சு.நா.	இல், இன்	-	ஏது, எல்லை, நீங்கல், உவமை

ஏழாம் வேற்றுமை

வ.எ	நூற்கள்	வே. உ.	அடிப்படை	பொருட்பயன் வகைகள்
1.	தொல்.	கண்	இடம், நிலம், காலம்	-
2.	வீர.	கே, உழை, வயின், பக்கல், வழி, இல்	பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், - இவை தற்கிழமை, பிறதின் கிழமை பொருளில் வரும்	-
3.	நேமி.	கண்	காலம், வினை, செய், இடம், நிலம்	-
4.	நன்.	கண்	பொருள் முதல் ஆறும் இருகிழமைப் பொருளுக்கும் இடமாக நிற்கும்	-
5.	பிரயோக.	இல், கண்	பொருள் முதல் ஆறும் - இருகிழமைப் பொருளுக்கும் இடமாக நிற்கும்	சமயோகம்- வியாகம், அபிவியாபகம், எங்கும் வியாபகம், யோக வியாகம், விபாக யோகம்
6.	இல.வி.	கண்	வினை, செய், இடம், நிலம், காலம்	-
7.	இல. கொ.	இடம்	உரிமை, ஒற்றுமைக் கூட்டம், எங்குமிடம்	எங்குமிடம் – இடமில்லா இடம், சுட்டிப்

				பிரித்தல் பிரித்துக்கூட்டல், இருவரின் முடியும் ஒருவினை.
8.	தொ.வி.	கண்	பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்- இவை தற்கிழமை, பிறிதின் கிழமை பொருளில் வரும்	-
9.	மு.வீ.		பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்- இவை தற்கிழமை, பிறிதின் கிழமை பொருளில் வரும்	-
10.	சு.நா.		பொருள் முதல் ஆறும் – இருகிழமைப் பொருளுக்கும் இடமாக நிற்கும்	-

முதல் வேற்றுமை (எழுவாய்)

முதல் வேற்றுமையைப் பற்றித் தொல்காப்பியர்,

அவற்றுள்,

எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே[13]

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் இடத்தில் பெயருக்கு துணையாய் நிற்கும் தன்மை கொண்டது. தனித்து இயங்கும் தன்மையற்றது. இதற்கு தனி உருபும் இல்லை. இவ்வேற்றுமையை தொல்காப்பியர் **'எழுவாய் வேற்றுமை'** (தொல். சொல்.65), **'பெயர் வேற்றுமை'** (மேலது.64), **'திரிபு இல்லாத பெயரே எழுவாய் வேற்றுமை'** (மேலது.65) என்று மூன்று பெயர்களில் வழங்கியுள்ளதை அறியலாம். மேலும் மொழியியல் அறிஞர்கள் இதனை 'உருபியில் வேற்றுமை' என அழைப்பர்.

மண் அளந்தான் மலரோன் முதல் தேவர்கள் (12:1)

மண் என்னும் அஃறிணைப் பெயரோடு அளந்தான் எனும் வினைநிலையை உணர்த்துகிறது.

விண் அளந்தான் (12:3), கண் அளந்தான் (கண் - இடத்தைக் குறிக்கிறது) (12:4), தாள் கொடுத்தான் (184:4)

இரண்டாம் வேற்றுமை

தொல்காப்பியம் இரண்டாம் வேற்றுமையினை "ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி"[14] எனவும் 'இரண்டாகுவதே' என்ற எண்ணிக்கை அடிப்படையிலும் கூறுகின்றது. நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்கள் இரண்டாம் வேற்றுமை என்றும் பெயரிடப்பட்டுள்ளன. ஆனால், இலக்கணக் கொத்து பொருண்மை அடிப்படையில் செயப்படுபொருள் வேற்றுமை என்கிறது. இவ் இரண்டின் அடிப்படையிலும் மொழியியல் அறிஞர்கள் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடைதல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

நந்தி அருளாலே **மூலனை** நாடி (71:1)

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் வருகின்றன.

மாற்றிக் களைவீர் மறுத்து உங்கள் செல்வத்**தை** (346:3)

அருளுதல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் எட்டு இடங்களில் வருகிறது.

வான் ஏழ் உலகு உறு மா மணிகண்டனை (178:3)

பெருமை**யை** (54:4,159:3), தன்**னை** (172:2), ஈச**னை** (243:1, 246:1, கரு**வை** (272:3), நாத**னை** (309:3).

பெயர் + ஐ + ஒட்டு என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது. ஐ உருபு உம் என்ற ஒட்டையும் பயின்றுள்ளது.

ஈசன் அருளும் இறப்பும் பிறப்**பையும்** (471:1).

அழித்தல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஒன்பது இடங்களில் இடம்பெற்றுள்ளன.

கால**னை** காய்ந்து அங்கி யோகமாய் (149:3)

கால**னை** (309:1), பிரா**னை** (152:1,165:2), வரைய**யை**164:3), வேள்வி**யை**(165:4), தன்**னை**(174:3, 422:1), அரச**ரை** (412:2).

பெயர் + ப.உ + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

தீய வைத்து ஆர்மின்கள் சேரும் வினைதனை (239:1)

வி.எ + சாரியை + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

கூற்று உதைத்தா**னை** யான் கூறுகின்றேன (2:4)

ஆக்கல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் நான்கு இடங்களில் உள்ளது.

அதிபதி செய்து அவ் அளகை நக**ரை** (17:1)

நந்தி**யை** (140:1), தீயி**னை** 316:2), பின்**னை** (470:1)

இகழ்ச்சிப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் ஏழு இடங்களில் உள்ளன.

கல்லாத மூட**ரைக்** காணவும் ஆகாது (484:1)

புல்லறிவா**ளரை** (436:1), புலா**லை** (489:1), புலை**யரை** (489:1), மனை**யாளை** (491:2), சிந்தை**யை** (493:4), மனை**வியை** (495:1).

பெயர் + அத்து + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளன.

பொருள் கொண்ட கண்டனும் **போதத்தை** ஆளும் (493:1).

பெயர் + ப.உ. + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

ஆழ நடுவார் அளப்பு உறுவார்**களை** (498:2)

இடப்பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் நான்கு இடங்களில் உள்ளன.

என்**னை** நன்றாக இறைவன் படைத்தனன் (63:3)

தன்**னை** (63:4), ஒருவ**னை** (240:1), தம்**மை** (473:3)

பெயர் + ப.உ. + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

அவிமந்திரத்தின் அடுக்க**ளை** கோலி (162:2)

இடவாகுபெயர் பொருளில் : ஐ

பெயர் + இன் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

கண்ணனும் காய்கதிரோன் உலகி**னை** (358:1)

இரக்கப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெறுகிறது.

நல்லா**ரைக்** காலன் நணுகிநில்லானே (393:4)

உணருதல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

அன்பு இல் இறை**வனை** யாம் அறியோம் என்பர் (455:2)

உயர்வுப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் 32 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை (2:1)

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் மூன்று இடங்களில் வந்துள்ளன.

வேதத்தை விட்ட அறமில்**லை**; வேதத்தின் (85:1)

நாதத்**தை** (251:1), பற்றி**னை** 426:1)

உருவகப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெறுகிறது.

அத்திப் பழத்**தை** அறைக்கீ**ரை** வித்து உண்ண

கத்தி எடுத்தவர் காடு புக்காரே (333:3,4)

பெயர் + இன் + சாரியை என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

என் போன்மணிய**னை** எய்த ஒண்ணாதே (439:4)

உவமைப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் 13 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

பொன்னை ஒப்பு ஆகின்ற போதகத்தானே (தி.ம.6:4)

பெயர் + சாரியை +ஐ என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் உள்ளது.

பதியி**னை**ப் போல், பசு பாசம் அனாதி (113:2)

ஓண் சுடரானை (376:1)

எண்ணுப்பெயர் பொருளில் : ஐ

பெயர் + ஐ + ஒட்டு என்ற அமைப்பில் 2 இடங்களில் இடம்பெற்றுள்ளது. ஐ உருபு இரண்டு இடங்களிலும் உம் என்ற ஒட்டைப் பெற்று வருகிறது.

தேவர் பிரான், எம்பிரான், திசை பத்**தை**யும் (31:1)

ஏ**ழை**யும் (31:2)

ஏமாற்றுதல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவ**னைக்**

கள்ளத்தின் ஆரும் கலந்து அறிவார் இல்லை (407:1, 2)

ஒப்புப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் மூன்று இடங்களில் வருகிறது.

முன்**னை** ஒப்பாய் உள்ள மூவர்க்கும் மூத்தவன் (6:1)

தன்**னை** (6:2), பொன்**னை** (438:1)

கட்டளைப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

நில் என நிற்பித்த நீதியுள் ஈச**னை** (22:2)

தண்டனைப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

தத்தம் சமயத்தகுதி நில்லாதா**ரை** (402:1)

கலத்தல் பொருளில்: ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் இரண்டு இடங்களில் வருகிறது.

ஒட்டி உயிர்நிலை என்னும் காயப்**பை** (250:3)

நின்றா**னை** (3:1)

பெயர் + அத்து + விகுதி + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் இருக்கிறது.

கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்த**னை** (309:2)

வி.எ. + விகுதி + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

ஒக்க நின்றா**னை**, உவப்பு – இலி தேவர்கள் (3:1)

காணுதல் பொருளில்: ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் நான்கு இடங்களில் இடம்பெற்றுள்ளன.

அயலும் புடையும் எம் ஆதி**யை** நோக்கில் (10:1)

ஆதி**யை** (79:2), கூத்**தை** (129:3), காட்சி**யை** (477:1)

காத்தல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது.

சினம் செய்த நஞ்சுஉண்ட தேவர் பிரா**னை** (40:1)

அழ**லை** (167:3)

பெயர் +ஐ +ஒட்டு என்னும் அமைப்பில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளன. ஐ உருபு இரண்டு இடங்களிலும் உம் என்ற ஒட்டைப் பெற்று வந்துள்ளன.

ஆ**வை**யும் பா**வை**யும் மற்று (398:1)

அற**வோரை**யும் (398:1)

பெயர் + அத்து + ப.உ +ஐ + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது. ஐ உருபு உம் ஒட்டைப் பெறுகிறது.

தேவர்கள் போற்றும் திருவேங் கடத்தா**ரை**யும் (398:2)

காலம் குறித்த பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

விரும்புவர் முன்னென்**னை** மெல்லியன் மாதர் (354:1)

குறைதல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

துயக்கு உறு செல்வத்**தைச்** சொல்லவும் வேண்டா (343:2)

கொடைப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளன.

தக்கநல் சத்தி**யைத்** தான்கூறு செய்ததே (172:4)

பிறவி**யை** (226:2), பொன்**னை**(309:1)

வி.அடி + அத்து + ஆன் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளன.

வாள் கொடுத்தா**னை** வழிபட்ட தேவர்கள் (184:1)

கொல்லாமைப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

மற்றோர் அணுக்க**ளைக்** கொல்லாமை யெண்மலர் (487:2)

சினைப்பொருளில்: ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் மூன்று இடங்களில் உள்ளன.

தண் நின்ற **தாளைத் தலை**க்காவல் முன்வைத்து (111:2)

தலை**யை** (144:2,4)

பெயர் +இன் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்திப் பதுநந்தி தன்றிருந் தாளி**ணை** (139:1)

கடமைப் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் வந்துள்ளது.

மால்கொண்டு தேற**லை** யுண்ணு மருளரை (401:3)

தளர்தல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

பரு ஊசி ஐந்தும் பனித்த**லை**ப் பட்டால் (357:3)

தீவினைப் பொருளில் : ஐ

பெயர் +அத்து + ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

வெள்ளத்தை நாடி விடும் அவர் தீவி**னை** (407:3)

நினைத்தல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் ஆறு இடங்களில் இடம்பெற்றுள்ளன.

எண் அளந்து இன்னம் நினைக்கிலர் ஈச**னை** (12:2)

அர**னை** (64:3), அவ**னை** (79:4), பிரா**னை** (88:2), நிலை**யை** (479:1), உடம்**பை** (479:2) என்பன.

நீங்கல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்னும் அமைப்பில் இரண்டு இடங்களில் வருகிறது.

ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவ**னை** (20:2)

வித்**தை** (119:1)

பெயர் +அத்து+ ஐ என்னும் அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

ஓதத் தகும் அறம் எல்லம் உள; தர்க்க -

வாதத்**தை** விட்டு (85:2,3)

பெயர் +இன் +ஐ என்ற அமைப்பில் நான்கு இடங்களில் வருகிறது.

பேரினை நீக்கிப் பிணம் என்று பேர்இட்டு (318:2)

அழுக்கி**னை** (421:1), இளைப்பி**னை** (425:2), நெஞ்சி**னை** (494:4)

படைத்தல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் நான்கு இடங்களில் அமைந்துள்ளன.

சமைக்க வல்லா**னைச்** சயம்புஎன்று ஏத்தி (169:1)

தேவ**ரை** (255:2, 256:3), சீவ**ரை** (255:3)

பெயர் +இன் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

உற்று வனைவான் அவனே உலகினை (226:1)

பெயர் + ஐ + ஒட்டு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

முடிவும் பிறப்**பை**யும் முன்னே படைத்த (9.1)

பிறப்**பை**யும் (445:1)

பரப்புதல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

பூவின் மணத்**தை**ப் பொருந்திய வாயுவும் (265:1)

பிறவிப்பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வருகின்றன.

பின்**னை** நின்று என்னே பிறவி பெறுவது? (63:1)

முன்**னை** (63:2)

புகழ்தல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

கானக் களிறு கதறப் பிளந்தஎம்

கோனைப் புகழுமின் கூடலும் ஆமே (20:3,4)

புலம்பல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

பேதித்து அவனைப் பிதற்றுகின்றாரே (108:4)

போலித்தனம் குறித்த பொருளில் : ஐ

பெயர் + ஒ.உ+ ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற் (415:1)

போற்றுதல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் 10 இடங்களில் அமைந்துள்ளன.

நக்கன்என்று ஏத்திடும் நாதனை நாள்தோறும் (3:2)

இறைவனை (34:1,436:3,444:1), நந்தியை (36:1), தன்னை (37:2), புனிதனை (368:2), பரமனை (431:1), முதல்வனை (441:1), ஈசனை (444:3)

மறைத்தல் பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

பகல் - இடத்து என் மெய்யைப் போத விட்டானைப் (4:2)

முதற்பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் பத்து இடங்களில் இடம்பெற்றுள்ளது.

அகல் - இடத்தார் மெய்யை, அண்டத்து வித்தை (4:1)

மெய்யை (4:1,2), பிரசாபதியை (144:1), தன்னை (172:3), அரனை (184:2), காயப்பை (282:3), வறட்டை(312:1), செய்யை (362 :2,4)

பெயர் + ப.உ. + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

வரத்தின் உலகத்து உயிர்க**ளை** எல்லாம் (143:2)

வணங்குதல் பொருளில்: ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் பதினோரு இடங்களில் வருகின்றன. (3:3)

பக்கம் நின்றார் அறியாத பரம**னைப்**

புக்கு நின்று, உன்னி, யான் போற்றி செய்வேன் (3:3,4)

பெயர் + ப.உ. + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

பாசத்துள் அ**வை**த்து பரிவு செய்வார்களை (454:2)

வி.அ.+ ஆன் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

தொடர்ந்து நின்றா**னை**த் தொழுமின்; தொழுதால் (25:1)

வயது குறித்த பொருளில் : ஐ

பெயர் + ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

ஆய்ந்து அற்ற பின்**னை** அரிய கருமங்கள்; (353:2)

வீடுபேற்றுப் பொருளில்: ஐ

பெயர் + அத்து +ஐ என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

வேதத்**தை** ஓதியே வீடு பெற்றார்களே (85:4).

மூன்றாம் வேற்றுமை

தொல்காப்பியம் 'ஒடுவெனப் பெயரிய கிளவி' என்று உருபு அடிப்படையிலும் 'மூன்றாகுவதே' என்று எண்ணிக்கை அடிப்படையிலும் குறிப்பிடுகிறது. இலக்கணக் கொத்து பொருண்மை அடிப்படையில் 'கருவி வேற்றுமை' என்கிறது. இதனை மொழியியல் அறிஞர்களும் ஏற்றுள்ளனர். நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்கள் 'மூன்றாம்

வேற்றுமை' என்று பெயரிட்டுள்ளன. தொல்காப்பியம் 'ஒடு' என்ற உருபை இதன் உருபாகக் கூறுகிறது.

அடைதல் பொருளில்: ஆல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வருகிறது.

நந்தி அருள**ால்** மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன் (71:3)

திருவரு**ளால்** (409:3)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஆறு இடங்களில் அமைந்துள்ளன. ஆல் உருபு ஏ என்ற ஒட்டைப் பெறுகிறது.

நந்தி அருள**ாலே** மூலனை நாடினேன் (51:2)

அருள**ாலே** (71:1, 72:2), பாவடி**யாலே** (181:3), குருநெறி**யாலே** (387:2)

வி.அ. + சாரியை + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வருகிறது.

நாதன் நடத்**தால்** நயனம் களிகூர (140:3)

செய்தால் (395:4)

அருளுதல் பொருளில் : ஒடு

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் ஓர் இடத்தில் வருகின்றன. ஒடு உருபு உம் என்ற ஒட்டுப் பெற்று வருகிறது.

அதோமுகம் தன்னொ**டும்** எங்கும் முயலும் (190:2)

இழத்தல் பொருளில் : ஆல்

பெயர் + சாரியை + ஆல் என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

பால் ஒன்று பற்றி**னால்** பண்பின் பயன்கெடும் (462:2)

உடனிகழ்ச்சிப் பொருளில் : ஆல், ஒடு, ஓடு, உடன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் பதின்மூன்று இடங்களில் பயின்றுள்ளன.

பல்கின்ற தேவ ரசுரர் நரர்தம்பா

லொல்கின்ற வான்வழி **யூடு**வந் தேனே (76:3, 4)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் நான்கு இடங்களில் இடம்பெற்றுள்ளன. உடன் உருபு ஏ என்ற ஒட்டையும் ஒடு உருபு உம் என்ற ஒட்டையும் பெறுகிறது.

அரி பிரமன் தக்கன் அருக்க**னுட**னே (101:1)

தன்னொ**டும்** (200:3), வானொ**டும்** (201:1), மனத்தொ**டும்** (476:1)

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

கோது குலத்**தொடு** கூட்டிக் குழைத்தனர் (217:2)

வி.எ. + ப.உ+ உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது. ஒடு உருபு உம் என்ற ஒட்டை பெறுகிறது.

உற்றுநின்றாரொ**டும்** அத்தகு சோதியைச் (451:1)

உண்டாக்குதல் பொருளில்: ஆல்

பெயர் + ப.உ. + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் வந்துள்ளது. ஆல் உருபு ஏ என்ற ஒட்டைப் பெறுகிறது.

ஞானிக ளா**லே** நரபதி சோதித்து (397:3)

உயர்வுப் பொருளில்: உடன்

பெயர் + ப.உ. + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

மண்டி யவரு**டன்** வழி நடவாதே (317:4)

உவமைப் பொருளில்: ஆல், ஒடு

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது. ஒடு உருபு உம் என்ற ஒட்டைப் பெறுகிறது.

வையகத்தே மடவா**ரொடும்** கூடி என் (497:1)

பெயர் + சாரியை + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

கோல் ஒன்று பற்றினால் கூடா பறவைகள் (462:3)

எண்ணுப்பெயர் பொருளில் : ஒடு, ஆல், ஆன், உடன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஏழு இடங்களில் வருகின்றன.

மேற்றிசைக் குங்கிழக் குந்திசை யெட்**டொடு** (34:3)

அஞ்**சொடு**(91:2), ஐந்**தால்**(116:2), ஐந்**தான்**(116:4), ஐந்தொழி**லால்** (209:3), ஈரைந்**தொடு** (264:2), எட்**டுடன்**(266:3)

பெயர் + ஒடு + உம் என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

மேக்கு மிகஇன்ற எட்டுத் திசை**யொடும்** (204:3).

ஒப்புப் பொருளில் : ஒடு

பெயர் + ஒடு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வருகிறது.

சிவ**னொடு** ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை (5:1)

அவ**னொடு** (5:2)

கட்டளைப் பொருளில் : ஆல்

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் அமைந்துள்ளது. ஆல் உருபு ஏ என்ற ஒட்டைப் பெறுகிறது.

அயன் பணி கேட்பது அரன் பணியாலே (469:2)

கருத்தா பொருளில் : ஆல், ஒடு, ஓடு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஆறு இடங்களில் வருகின்றன.

என்னால் தொழப்படும் எம் இறை; மற்று அவன் (8:3)

தன்**னால்** (8:4), நாயக**னால்** (41:2), மலைய**னோடு**(52:3), சிறப்**பொடு** (67:2), நேரிழையா**ளொடு** (74:2)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் மூன்று இடங்களில் வருகிறது. ஒடு உருபு ஏ என்ற ஒட்டையும் ஆல் உருபு ஏ, உம் ஆகிய இரண்டு ஒட்டோடும் சேர்ந்து வருகிறது.

கொழுந்தண் பவளக் குளிர்சடை **யோடே** (55:3)

அவளா**லே** (212:2), வாய்மொழி**யாலும்** (9:1)

கருவிப் பொருளில் : ஆல், உடன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஆறு இடங்களில் வருகின்றன.

பொன்**னால்** புரிந்திட்டது பொற்சடை முடி (8:1)

மறுமழு**வால்** (155:4), கரகத்**தால்** (431:3), அருட்கண்**ணால்** (475:2), கயிற்**றால்** (488:2), பழத்**தால்** (494:4).

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

ஐம்புலன் + உருபு + ஒட்டு

அறிவு ஐம்புலனுடனே நான்றது ஆகி (117:1)

வி .எ. + ஆல் என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

உரையற்று உணர்வோர் உடம்பு இங்கு ஒழிந்**தால்** (132:3)

கலத்தல் பொருளில் : ஒடு, ஆல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வருகின்றன.

உரைக்கின்ற ஆசையும் ஒன்**றொடு** ஒன்று ஒவ்வாப் (245:2)

செம்**பால்** (270:2)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

உறைப்**பொடும்** கூடி நின்று ஓதலும் ஆமே (67:4)

பெயர் + அத்து + ஆல் என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

விஞ்ஞானக் **கன்மத்தால்** மெய் அகம் கூடிய (306:1),

பெயர் + அத்து +இன் + ஆல் என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

அஞ்ஞானக் **கன்மத்தினால்** சுவர்யோனி புக்கு (306:2).

கேட்டல் பொருளில்: ஒடு, ஆன்

பெயர் + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

வேதாந்தம் கேட்க விருப்**பொடு** முப்பதப் (380:4)

வி.அ. + சாரியை + ஆல் + ஒட்டு என்ற வகையில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது. ஆல் உருபு ஏ என்ற ஒட்டைப் பெறுகிறது.

செய்கையினாலே (434:2).

சினைப் பொருளில் : ஆல், ஒடு, ஓடு

ஆல் என்ற உருபு பெயர் + உருபு என்ற அமைப்பில் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளது.

பின்**னால்** பிறங்க பிறந்தவன்; பேர் நந்தி (8:2)

என்**பால்** (270:1), இன்**பால்** (334:3)

பெயர் + உருபு + ஒட்டு என்னும் அமைப்பில் என்ற ஓர் இடத்தில் வந்துள்ளது. ஒடு உருபு உம் என்ற ஒட்டைப் பெறுகிறது.

அங்கி உதயம்செய் மேல்பாலவ **னொடும்** (142:2)

பெயர் + சாரியை + உருபு என்னும் அமைப்பில் என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது.

கால் போதம் கையி**னோடு** அந்தச் சக்கரம் (171:2)

முகத்தால் (191:2),

தொழில் சார்ந்த பொருளில் : ஆல்

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் உள்ளது.

மறையோ ரவரே மறைய வரா**னால்** (388:1)

நட்புப் பொருளில் : ஆல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் வந்துள்ளது.

நன்**பால்** ஒருவனை நாடுகின்றேனே (270:4)

பெறுதல் பொருளில் : ஆல், ஒடு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஆறு இடங்களில் உள்ளன.

அத்தன் எனக்கு இங்கு அரு**ளால்** அளித்ததே (57:4)

அரு**ளால்** 92:1, 94:1, 98:1), பரி**வொடு** (152:4)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது.

நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றேன் (51:1)

களிப்**பொடும்** (246:3)

வழிபடுதல் பொருளில் : ஆல், ஒடு

பெயர் + உருபு என்ற வகையில் ஒரு இடத்தில் இடம்பெற்றுள்ளது.

அன்**போடு**ருகி அகம் குழைவார்க்கு அன்று (439:3)

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

ஏந்திய நாளில் இசையி**னால்** ஏத்துமின் (360:2),

பெயர் +ஆல் + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது. ஆல் உருபு ஏ என்ற பெற்றுள்ளது.

பத்திமை**யாலே** பணிந்து அடியார் தொழ (451:3)

வளர்த்தல் பொருளில் : ஆல்

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் ஒரு இடத்தில் வந்துள்ளது.

மயக்கத்**தால்** ஆக்கை வளர்க்கின்றவாறே (297:4)

வளர்தல் பொருளில் : ஆல்

பெயர் + சாரியை + உருபு + ஒட்டு என்ற வகையில் ஓர் இடத்தில் வந்துள்ளது. ஆல் உருபு ஏ என்ற ஒட்டைப் பெறுகிறது.

மருவி வளர்ந்திடும் மாயையி**னாலே** (294:3)

வாழ்த்துதல் பொருளில் : ஆல்

பெயர் + உருபு என்ற வகையில் ஒரு இடத்தில் வருகிறது.

வந்திப் பதுநந்தி நாமெமென் வாய்மை**யாற்** (139:3).

நான்காம் வேற்றுமை

தொல்காப்பியம் இவ்வேற்றுமையை 'குவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' என்றும் எண்ணிக்கை அடிப்படையில் 'நான்காகுவதே' என்றும் பெயரிட்டுள்ளது. வீரசோழியம், நன்னூல், பிரயோக விவேகம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், மூத்துவீரியம் ஆகிய மரபிலக்கணங்கள் 'நான்காம் வேற்றுமை' என்று குறிப்பிட்டுள்ளன. இலக்கணக்கொத்து 'கொள்வோன்' எனச்

சூட்டியுள்ளது. மொழியியல் அறிஞர்கள் இதனை 'கொடை வேற்றுமை' என்கின்றனர். வீரசோழியமும் பிரயோகவிவேகமும் வேற்றுமை உருபாகக் 'கு'வையும் சொல்லுருபாகப் 'பொருட்டு' என்பதையும் குறிப்பிடுகின்றன.

அருளுதல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் பதினான்கு இடங்களில் அமைந்துள்ளன.

வேந்தன் அமரர்**க்கு** அருளிய மெய்ந்நெறி (33:2)

பெயர் + ப.உ. + உருபு என்ற வகையில் இரண்டு இடங்களில் வந்துள்ளன.

பரிவுடையாளர்களு**க்குப்** பொய்யலன் ஈசன்

பரிவொடு நின்று பரிசறிவார்க்கே (152:3,4)

செய்வார்க**ட்குக்** (248:3)

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் மூன்று இடங்களில் வந்துள்ளன. கு உருபு உம் என்ற ஒட்டையும் ஏ என்ற ஒட்டையும் பெறுகிறது.

இறப்பு – இலி, யாவர்**க்கும்** இன்பம் அருளும் (24:2)

உலகிற்**கும்** (244:1), தேவர்**க்கும்** (244:1), எனக்கே (441:4),

அறிதல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் உள்ளது.

தாம் அறிவார்**க்குத்** தமர் பரன் ஆமே (418:4)

ஆக்கல் பொருளில்: கு

பெயர் + உருபு என்று ஓர் இடத்தில் உள்ளது.

மன்றத்தே நம்பிக்கு மாடம் எடுத்தது (322:1)

அழித்தல் பொருளில்: கு என்ற அமைப்பில் உள்ளது.

அங்கி அவ் ஈசற்**குக்** கை அம்பு தானே (230:4)

இகழ்ச்சிப் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

கல்லாத மூடர்**க்குக்** கல்லாதார் நல்லராம் (484:3)

பெயர் + சாரியை + உருபு என ஓர் இடத்தில் உள்ளது.

ஈத்தம் பழத்து**க்கு** இடர்உற்ற வாறே (491:4)

இடப்பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் இரண்டு இடங்களில் வந்துள்ளன.

ஞானத் தலைவிநன் னந்தி நகர்பு**க்கு** (75:1)

நகர்பு**க்கு** (429:2)

உயர்வுப் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் ஏழு இடங்களில் வருகின்றன.

கடந்து நின்றான் அவர்**க்கு** அப்புறம் ஈசன் (13:3)

உறவு**க்கு** (16:4), வன்னி**க்கு** (22:1), வினை**க்கு** (103:1), புந்தி**க்கு** (139:4), கொள்வார்**க்கு** (251:2), நாட்டு**க்கு** (326:1)

பெயர் + உருபு + ஒட்டு என ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது. கு உருபு உம் என்ற ஒட்டைப் பெற்று வரும்.

விளை**க்கும்** தவம்; அறம் மேல்துணை ஆமே (425:4)

உயிர்**க்கும்** (479:3), பூசை**க்கும்** (487:1), தூர்**க்கும்** (500:2)

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப் (438:3)

உரிமைப் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வருகிறது.

நால் - திசைக்கும் நல்ல மாதுக்கு நாதனை (2:2)

வேந்தனுக்கு (399:4)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது. கு உருபு ஏ, உம் ஆகிய இரண்டு ஒட்டைப் பெறுகிறது.

அந்தம்இல் ஈசன்அருள் எனக்கே என்று (26:2)

நின்றவர்க்கும் (475:1)

உருவகப் பொருளில் : கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

ஐவர்க்கொ ருசெய் விளைந்து கிடந்த (362:1)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது. இவ்வுருபு உம் என்ற ஒட்டைப் பெறுகிறது.

துடுப்புஇடு பானைக்கும் ஒன்றே அரிசி (366:1)

மூன்றிற்கும் (366:2).

உவமைப் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் மூன்று இடங்களில் உள்ளது.

பண்அகத்து இன்னிசை பாடல் உற்றானுக்குக் (30:3)

வல்லார்க்கு (41:2), ஆயிழை யார்க்கு (354:3)

உறவுப் பொருளில் : கு

பெயர் + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் உள்ளது.

காண நில்லாய், அடியேற்கு உறவு ஆர் உளர்? (28:1)

காக்கைக்கு(320:4)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

கிளைக்கும் தனக்கும் அக்கேடு – இல் புகழோன் (425:3)

எண்ணுப்பெயர் பொருளில் : கு

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது. கு உருபு உம் என்ற ஒட்டைப் பெறுகிறது.

பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும் (195:3)

எழுமைக்கும் (228:3)

ஏதுப் பொருளில்: கு

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் ஓர் இடத்தில் உள்ளது. கு உருபு ஏ என்ற ஒட்டைப் பெறுகிறது.

தேற்றுமின் என்றும்; சிவன்அடிக்கே செல்வம் (23:2)

ஐயப் பொருளில் : கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகின்றன.

வளி அறிவாளர்க்கு வாய்க்கினும் வாய்க்கும் (406:3)

ஒப்புப் பொருளில் : கு

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் மூன்று இடங்களில் வருகின்றன.

முன்னை ஒப்பாய் உள்ள மூவர்க்கும் மூத்தவன் (6:1)

மாலுக்கும் (106:3), பிரமற்கும் (106:3)

ஓதுதல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

வாய்**தற்கு** உரிப் பரமமந்திரம் ஆங்கு உன்னி (381:2)

கலத்தல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் இரண்டு இடங்களில் வருகிறது.

சித்து**க்குச்** சித்து அன்றிச் சேர்விடம் வேறு உண்டோ? (133:2)

சார்ந்தோர்**க்கு** (490:2).

காட்சிப் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் இரண்டு இடங்களில் உள்ளது.

கணக்கு அறிந்தார்**க்கு** அன்றிக் காண ஒண்ணாது (483:1).

அறிந்தார்**க்கு** (483:2)

காத்தல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

மறைஞ்சு அடம் செய்யாது வாழ்த்த வல்லார்க்குப்

புறம் சடம் செய்யான், புகுந்து நின்றானே (39:3,4)

கூறுதல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது.

மொழிந்தது மூவர்**க்கு** நால்வர்க்கு மீச (54:1)

நால்வர்**க்கு** (54:2)

கெடுதல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளது.

மன்னர்**க்குத்** தீங்குள்ள வாரி வளங்குன்றுங் (414:2)

வேந்தர்**க்கு**(415:2), நாட்டு**க்கு** (415:3)

கொடைப் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் ஒன்பது இடங்களில் வருகிறது.

அத்தன் எனக்கு இங்கு அருளால் அளித்ததே (57:4)

அச்சுதற்**கு**(153:3), பிரமற்**கு** (153:4), வண்மைக்**கு**(171:1),

பெயர் + ப.உ. + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் பயின்றுள்ளது.

காரிகையார்**க்குக்** கருணை செய்தானே (99:4)

தங்காதவர்களு**க்கு** (313:3)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் நான்கு இடங்களில் அமைந்துள்ளது.

யாவர்க்**கும்** ஆம் இறைவர்க்**கு** ஒருபச்சிலை (419:1,2,3,4),

திசைப் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது.

மேல் - திசைக்குள் தென்திசைக்**கு** ஒரு வேந்தனாம் (2:3)

திசைக்**கு** (53:1)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் உள்ளது. கு உருபு உம், உள் என இரண்டு ஒட்டுகளைப் பெறுகிறது.

நால் - திசைக்கும் நல்ல மாதுக்கு வேந்தனை (2:2)

திசைக்குள் (2:3)

தோன்றல் பொருளில்: கு

தளி அறிவாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றும்; (406:1)

தோன்றாப் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

குளி அறிவாளர்க்குக் கூடவும் ஒண்ணான்; (406:2)

நீங்கல் பொருளில் : கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

நாட்டுக்கு நாயகன் நம் ஊர்த் தலைமகன் (326:4)

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

திளைக்கும் வினைக்கடல் தீர்வு உறு தோணி (425:1)

நட்புப் பொருளில் : கு

பெயர் + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் வருகிறது.

சேயினும் நல்லன்; நணியவன் அன்பர்க்கு (7:3)

பிறப்புப் பொருளில் : கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளது.

கொண்டநல் வாயு விருவர்க்குங் குழறிடிற் (292:1, 3)

ஒருவருக்கு (295:2), மாதர்க்கு (289:4)

புலம்பல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

“எனக்கு இறை அன்புஇலன்” என்பர்; இறைவன் (21:3)

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் ஓர் இடத்தில் வருகிறது.

இகழ நின்றார்க்கும் இடும்பைக்கு இடமாம், (475:2)

முதற்பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் வந்துள்ளது.

விண்ணின்று இழிந்து, வினைக்கு ஈடாய் மெய்கொண்டு(111:1)

விதிப் பொருளில் : கு

பெயர் + உருபு என்றாமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

அவிழ்கின்ற ஆக்கைக்கு ஓர் வீடுபேறு ஆகக் (347:3)

வினாப்பெயர் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

தாரும் “அளவு ஏது எனக்கு” எனப் ஒண்பொருள் (348:2)

வேண்டுதல் பொருளில்: கு

பெயர் + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் உள்ளது

முத்திக்கு இருந்த முனிவரும் தேவரும்

ஒத்துடன் வேறாய் இருந்து துது செய்யும் (80:2, 3)

ஐந்தாம் வேற்றுமை

தொல்காப்பியம் ஐந்தாம் வேற்றுமையினை ‘இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி’ என்றும் ‘ஐந்தாகுதே’ எனவும் பெயரிட்டுள்ளது. பிற்கால மரபிலக்கணங்கள் அனைத்தும் ஐந்தாம் வேற்றுமை என்று கூறுகின்றன. உருபாக, இல், இன் என இரண்டு உருபினைக் குறிப்பிட்டுள்ளன.

அடங்குதல் பொருளில்: இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது.

அளி**யின்** அளிபோய் அடங்கியவாறும் (122:3)

முன்பிற் (448:4)

அணிதல் பொருளில் : இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

நூலுஞ் சிகையு நுவ**லின்** பிரமமோ(385:1)

அணைதல் பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற அமைப்பில்

இடிஞ்**சில்** இருக்க விளக்கொளி கொண்டால் (337:1)

முதற்கொள்**ளில்** (396:1)

அழித்தல் பொருளில்: இன், இல், உள்

இன், பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

பொங்கும் சலந்தரன் போர்சொல்ல, நீர்மை**யின்** (146:3)

வண்மை**யில்** (422:3)

பெயர் + சாரியை +உருபு என்ற வகையில் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளது.

வரத்**தின்** உலகத்து உயிர்களை எல்லாம் (143:2)

சினத்**துள்** (145:3), ஓமத்**துள்** (374:4)

இகழ்ச்சிப் பொருளில்: இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் மூன்று இடங்களில் வந்துள்ளது.

கொலை**யின்** பிழைத்த பிரசாபதியைத் (144:1)

உல**கின்** (481:3), பாசி**யின்** (498:1)

வி.அ. + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் வருகிறது.

படுவது செய்**யின்** செய்யின் – பசு ஆமே (435:4)

இடப்பொருளில்: இன், இல், உள், வழி, நின்று

பெயர் + உருபு என்ற அமைப்பில் பதினாறு இடங்களில் இடம்பெற்றுள்ளன.

சேர்ந்திருந்தேன் சிவபோதி**யின்** நீழலில் (61:3)

பதிவழி காட்டும் பகலவன் ஆமே (44:4).

மண்**ணில்** (65:3, 129:3, 130:3, 427:3), **உள்**நின்று (111:3), கண்**நின்று** (111:4), மன்**றுள்** (128:3), உள், வழி, நின்று போன்ற உருபுகள் ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் இடம்பெற்றுள்ளன.

பெயர் + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது

அன்பு உறு சிந்தை**யின்** மேல்எழும் அவ்ஒளி (449:1)

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் பதினாறு இடங்களில் அமைந்துள்ளது.

நந்தி அருளா அது என்செயும் நாட்டி**னில்**? (51:3)

நெஞ்சி**னுள்** (67:3), மார்க்கத்**தின்** (83:1), பொதுவி**னுள்**(116:3), உலகி**னில்** (158:2), மந்திரத்**தின்** (162:2), அண்டத்**துள்** (233:2),

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் நான்கு இடங்களில் வருகிறது.

அண்டத்தி **னுள்**ளுறு சீவனு மவ்வகை (275:3)

விண்ணி**னின்** (482:1), கண்ணி**னின்** (482:2), மண்ணி**னின்** (482:3)

பெயர் + சாரியை + உருபு + ஒட்டு என்ற வகையில் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது. ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வரும் உள் ஏ என்ற ஒட்டையும் இன் உருபு இல் என்ற ஒட்டையும் பெறுகின்றன.

வேங்கடத்**துள்**ளே விளையாடும் நந்தியை (364:2)

குளத்தி**னில்** (420:3)

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

வானில்நின்று ஆர்மதிபோல் உடல் உள்ளுவந்து (36:4)

விண்னின்று (111:1).

உண்டாதல் பொருளில் : இல், உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

உருவம் வளர்ந்திடும் ஒண் - திங்கள் பத்தில் (294:1)

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளது.

போகத்துள் 274:1)

ஏகத்துள் (274:3), மோகத்துள் (274:3)

உயர்வுப் பொருளில்: இன், இல், உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் பதினைந்து இடங்களில் வந்துள்ளன.

தப்புஇலா மன்**றில்** தனிக்கூத்துக் கண்டபின்

ஒப்**பில்** எழுகோடி யுகம் இருந்தேனே (65:3, 4)

நன்னூ**லின்** (82:1), வளப்**பின்** (70:4), அள**வில்**(101:1,4), சிந்தை**யுள்** (132:2), பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் பதினொன்று இடங்களில் இடம்பெற்றுள்ளது.

சித்தத்**தின்** உள்ளே சிறக்கின்ற நூல்களின் (57:1)

வேதத்**தின்** (57:2, 85:2, 87:1), நரகத்**தில்** (193:1), பரத்**தில்** (299:1), மாயத்**துள்** (381:4), அரச**னின்** (393), வாழ்வி**னில்** (443:3), அன்பி**னுள்** (446:3,4).

பெயர் + சாரியை + உருபு + ஒட்டு என்ற வகையில் ஓர் இடத்தில் வந்துள்ளது.

பரத்திலே ஒன்றாய், **உள்**ளாய், புறம் ஆகி (109:1)

பெயர் +ப.உ. + உருபு என்ற வகையில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது.

சித்தத்**தின்** உள்ளே சிறக்கின்ற நூல்களின் (57:1)

விந்துக்க**ளின்** (193:1)

உருவகப் பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

தஞ்ஞானம் மாயை**யில்** தங்கும் இருமலர்(305:2)

உவமைப் பொருளில்: இல், இன், உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் எட்டு இடங்களில் அமைந்துள்ளது.

சாந்து கமழும் கவரி**யின்** கந்தம் போல் (33:1)

செம்பொ**னின்** (39:2), மூலத்**தில்** (58:2), பளிங்**கில்** (112:4), கட**லில்** (409:1), புணர்ச்சி**யுள்** (450:1), சோற்**றில்** (473:1), கரும்பாலை**யின்** (497:3)

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

நீரி**னில்** பால்போல நிற்கின்ற நேர்மையைச் (259:3)

எண்ணுப்பெயர் பொருளில்: உள், இல்

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் மூன்று இடங்களில் வருகிறது.

நின்றனன் மூன்றினுள்; நான்கு உணர்ந்தான்; ஐந்து (1:2)

ஈரைந்தி**னுள்** (278:4), எட்டி**னுள்** (282:1)

பெயர் + சாரியை + உருபு + ஒட்டு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது. இல் உருபு ஏ என்ற ஒட்டைப் பெற்றுவருகிறது.

முத்தி முடிவி**தின்** மூவா யிரத்திலே (82:2)

எல்லைப் பொருளில்: கால்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது.

ஊர்த்துறைக் **காலே** ஒழிவர், ஒழிந்தபின் (330:2)

ஒப்புப் பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

மனை**யில்** இருந்தவர் மாதவர் ஒப்பார் (46:1)

கலத்தல் பொருளில்: இல், இன், உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஒன்பது இடங்களில் வந்துள்ளன.

புந்தி**யின்** உள்ளே புகுந்து நின்றானே (26:4)

புந்தி**யின்**(64:2), வெளி**யின்**(122:1), சுடர**ில்** (133:3), அன்**பில்** (202:1,448:3), உடல**ுள்**(227:3), அன்**பின்** (446:1), உணர்ச்சி**யுள்** (450:2)

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் மூன்று இடங்களில் வருகின்றன.

தவ யோகத்**துள்** புக்குத், தன்ஒளி தாயது (120:2)

அப்பி**னில்** (134:3), பாசத்**துள்** (248:1)

பெயர் + சாரியை + உருபு + ஒட்டு என்ற வகையில் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது.

பரத்திலே ஒன்றாய் **உள்**ளாய் புறம்ஆகி (109:1)

உள்ளத்**துளே** (223:3)

காத்தல் பொருளில்: இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

திகைத்த தெண்ணீ**ரின்** கடல் ஒலிஓசை

மிகைக்கொள, அங்கி மிகாமை வைத்தானே (169:3, 4)

கூறுதல் பொருளில்: இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வந்துள்ளது.

தெளிவு குரு**வின்** திருநாமம் செப்பல் (137:2)

கேட்டல் பொருளில்: இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வந்துள்ளது.

தெளிவு குரு**வின்** திருவார்த்தை கேட்டல் (137:3)

சடங்குப் பொருளில்: தலை (இல்)

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

நீர்த்**தலை** மூழ்குவர் நீதி இலோரே (330:4)

சினைப்பொருளில்: இல், உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஐந்து இடங்களில் உள்ளது.

உச்சி**யில்** (251:1)

சென்னி**யுள்** (279:3), உந்தி**யில்** (274:2), கொம்பில் (361:1), பா**லுள்** (319:2)

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் ஐந்து இடங்களில் வந்துள்ளது.

சிரத்தினில் (56:3)

துவாரத்**தின்** (149:2), கோசத்**துள்** (274:2), உதிரத்**தில்** (290:4), மூக்கி**னில்** (320:3)

தணித்தல் பொருளில்: இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

குதம்செய்யும் அங்கியின் கோபம் தணிப்பான் (271:3)

தோன்றுதல் பொருளில்: இல், இன், உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் மூன்று இடங்களில் உள்ளன.

முத்தீக் கொளுவி முழங்கு எரி வேள்வி**யுள்** (148:1)

மாயை**யின்** (219:4), நாடி**யில்** (273:1)

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் ஓர் இடத்தில் வருகிறது.

மனத்**தில்** எழுகின்ற மாய நன்னாடன் (21:1)

பெயர் + சாரியை + உருபு + ஒட்டு என்ற வகையில் ஓர் இடத்தில் அமைந்துள்ளது. இன் உருபு உள் ஒட்டைப் பெற்றுள்ளது.

மெலிந்து, சினத்தி**னுள்** வீழ்ந்து ஒழிந்தாரே (433:4)

நினைத்தல் பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் அமைகிறது.

பயன் அறிந்து அவ்வழி எண்ணும் அள**வில்** (105:1)

நீங்கல் பொருளில்: இல், உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

தன்**னின்** (138:3)

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் மூன்று வகையில் இடம்பெற்றுள்ளன.

சிவமாம் பரத்தி**னில்** சத்தி, சதாசிவம் (96:1)

அப்பி**னில்** (134:1), வகையி**னுள்** (248:3)

பெயர் + உருபு + ஒட்டு என்ற வகையில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது. இன் உருபு நின்று என்ற ஒட்டைப் பெறுகிறது.

விண்ணின்று நீர்வி**ழின்** மீண்டும் மண்ஆனாற்போல (316:3)

படைத்தல் பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற வகையில் மூன்று இடங்களில் வந்துள்ளது

வாதித்த இச்சை**யில்** வந்து எழும் விந்துவே (193:4)

திசை**யில்** (252:1), அசை**யில்** (252:4)

பிறத்தல் பொருளில்: இல், இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது.

பூண் இரண்டு ஒத்துப் பொருந்**தில்** அலியாகும் (287:2)

மண்**ணின்** (199:4)

பெயர் + சாரியை + உருபு என்ற வகையில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

காயத்**தில்** சோதி பிறக்கும், அக்காற்று இடை (199:2)

பாசத்**தில்** (296:2)

வி.அ. + சாரியை + உருபு என்ற அமைப்பில் மூன்று இடங்களில் அமைந்துள்ளது.

ஏற எதிர்க்**கில்** இறையவன் தானாகும் (267:1)

எதிர்க்**கில்** (267:2), எதிர்க்**கின்** (291:3)

பிறவி குறித்த பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

எத்தண்டமும் செயும் அம்மை**யில்** இம்மைக்கே (402:3)

பெறுதல் பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வந்துள்ளது.

தவமால் பிரமேசர் தம்**மில்** தாம்பெற்ற (96:3)

போற்றுதல் பொருளில்: உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வருகிறது.

வாழ்த்தவல்லார் மனத்**துள்** உறு சோதியை (38:1)

மறத்தல் பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் உள்ளது.

நீரி**னில்** மூழ்கி நினைப்பு ஒழிந்தாரே (318:4)

முதற்பொருளில்: இல், இன், உள்

பெயர் + உருபு என்ற வகையில் பத்து இடங்களில் இடம்பெற்றுள்ளன.

ஆதியுமாய் அரனாய், உட**லுள்** நின்ற (14:1)

உட**லுள்** (110:3), 251:1), தோற்வை**யுள்** (340:3), உட**லில்** (409:4, 410:1,2,3,4) பலா**வின்** (தி.ம.491:3),)

பெயர் + சாரியை + உருபு என்ற அமைப்பில் ஐந்து இடங்களில் அமைந்துள்ளன.

செப்பின், இச்சீவன் சிவத்**துள்** அடங்குமே (134:4)

உடம்பி**னின்** (228:1), பிண்டத்**துள்** (275:1,2), பையி**னில்** (357:1),

வணங்குதல் பொருளில்: இல், இன், உள், வழி, கால்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஐந்து இடங்களில் வந்துள்ளது.

தெளிவு குரு**வின்** திருமேனி காண்டல் (137:1)

துதிவழி நித்தலும் சோதிப் பிரானும் (44:3)

போதாந்தமாம் பரன்பால் புகப் புக்கக்**கால்** (390:3)

நினை**வுள்** (46:2), கன**லில்** (439:2).

இவ் அமைப்பில், உள், வழி, கால் ஆகிய உருபுகள் ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மனித வடிவம் குறித்த பொருளில்: இல், இன், உள்

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது.

பாய்கின்ற வாயு குறை**யின்** குறள் ஆகும் (289:1)

இளைக்**கின்** (289:2)

வயது குறித்த பொருளில்: இன்

பெயர் + உருபு+ ஒட்டு என்ற வகையில் இரண்டு இடங்களில் வந்துள்ளது. இன் உருபு இல், உள் ஆகிய ஒட்டைப் பெறுகிறது.

பாய்ந்தபின் நால் **ஓடின்** பாரினில் எண்பதாகும் (288:2)

ஆண்டி**னுள்** (336:3)

விரும்புதல் பொருளில்: இன்

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வந்துள்ளது.

கண்ணுதலான் ஒரு காத**லின்** நிற்கவும் (11:1)

வினாப்பொருளில்: இல்

பெயர் + உருபு என்ற அமைப்பில் நான்கு இடங்களில் அமைந்துள்ளது.

காக்கை கவ**ரில்** என்? கண்ணோர் பழிக்கில் என்? (340:1)

பழிக்**கில்** (340:1), பெய்**யில்** (340:2), பழிச்**சில்** (340:2).

ஆறாம் வேற்றுமை

தொல்காப்பியம் ஆறாம் வேற்றுமையினை 'அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' (தொல்.சொல்.79) என்றும் 'ஆறாகுவதே' எனவும் பெயரிட்டுள்ளது. பிற்கால மரபிலக்கணங்கள் அனைத்தும் ஆறாம் வேற்றுமை என்று பெயரிட்டுள்ளன. உருபாக, இல், இன் என இரண்டு உருபினைக் குறிப்பிட்டுள்ளன.

தற்கிழமைப் பொருளில் : அது

பெயர் + உருபு என்ற வகையில் நான்கு இடங்களில் அமைந்துள்ளது.

ஞால மறியவே நந்தி யரு**ளது** (81:2)

தன்**னது** சாயை (344:1), காண்ணது காண் ஒளி (344:4), நூ**லது** வேதாந்தம் (385:3)

பிறிதின் கிழமைப் பொருளில்: அது

பெயர் + உருபு + பெயர் என்ற அமைப்பில் ஓர் இடத்தில் வந்துள்ளது.

என்**னது**மாடு என்று இருப்பர்கள் ஏழைகள் (344:2)

ஏழாம் வேற்றுமை

இடப்பொருளில்: பற்றி, மேல் (கண் - பொருளில்)

பெயர் + உருபு என்ற வகையில் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது.

வான்**பற்றி** நின்ற மறைப்பொருள், சொல்லவும் (66:2)

ஆசந்தி**மேல்** (323:3)

உவமைப் பொருளில்: கண் (நின்று)

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் வருகிறது.

வான்**நின்று** அழைக்கும் மழைபோல், இறைவனும் (29:1)

ஆன்**நின்று** (29:3)

சினைப்பொருளில்: மேல் (கண் - பொருளில்)

பெயர் + உருபு என்ற அமைப்பில் ஓர் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

நந்திஇணை அடிநான் தலைமேற் கொண்டு(64:1)

தோன்றுதல் பொருளில்: கண்

பெயர் + உருபு என்ற அமைப்பில் இரண்டு இடங்களில் உள்ளது.

கானின்**கண்** நீரும் கலந்து கடினமாய்த் (196:2)

பூவின் **கண்** (196:4)

முதற்பொருளில்: பற்றி, கண், நின்று

பெயர் + உருபு என்ற வகையில் ஐந்து இடங்களில் வருகின்றன.

ஊன்**பற்றி** நின்ற உணர்வுஉறு மந்திரம் (66:3)

சுருதி(வேதம்) கண்(126:4), மானின்**கண்** (196:1), நெய்**நின்று** (372:1), மை**நின்று** (372:2).

திருமந்திரத்தில் திருமூலர் பல்வேறு வகையான பாடுபொருளில் கருத்துக்களைக் கூறுகிறார். அக்கருத்துக்களைக் கூறும் முறையில், பல உத்திகளைக் கையாண்டுள்ளார். உருபுகள் வருமிடங்களில் புதிய சொல் உருபுகளைப் படைத்துள்ளார்.

தொகுப்புரை

சாரியைகள்

- தொல்காப்பியர் புணரியலில் சுட்டியுள்ள சாரியைகளுள் திருமூலர் அன், அத்து, இன் ஆகிய சாரியையைகளை அதிகமான இடங்களில் பயன்படுத்தியுள்ளார். இச் சாரியைகள் பெரும்பான்மை பெயர்ச் சொற்களிலும் வினையாலணையும் பெயர்களிலும் சிறுபான்மை வினைமுற்றுச் சொற்களிலும் இடம்பெற்றுள்ளன. அச்சாரியைகள் பெயருக்கும் வினைக்கும் பெயருக்கும் விகுதிக்கும் பெயருக்கும் ஒட்டிற்கும் வினையடைக்கும் ஒட்டிற்கும் இடையில் வந்துள்ளன. வேதத்தினான் போன்ற சொற்களில் இரண்டு சாரியைகள் இடம்பெற்றுள்ளன. சொற்கள் சார்ந்து இயைந்து நிற்கத் துணை புரிவது சாரியையாகும்.

பெயர் விகுதிகள்

- பெயர் விகுதிகளைப் பொருத்தவரையில், ஆண்பால் சொற்கள் அதிகமாகவும் பெண்பாலுக்குரிய சொற்களைக் குறைவாகவும் திருமூலர் பயன்படுத்தியுள்ளார். பால் விகுதிகளுள் ஆண்பாலுக்கு

‘னகர’ விகுதியும் பெண்பாலுக்கு ‘ளகர’ விகுதியும் பலர்பாலுக்கு ‘அர்’ விகுதியும் வந்துள்ளன. ஓர் இடத்தில் மட்டும் பெண்பாலைக் குறிக்க ‘மெல்லியன்’ என்ற ‘னகர’ விகுதியைப் பயன்படுத்தியுள்ளார். பெண்பால் பன்மையில் ‘காரிகையார்களுக்கு’ என்ற ‘கள்’ விகுதியைச் சூட்டியுள்ளார். உயர்வுப் பொருளில் ‘அர்’ விகுதியைப் பயன்படுத்தியுள்ளார்.

வினைமுற்றுச் சொற்களில் கால இடைநிலைகளும் மூவிடங்களும்

வினைமுற்றுச் சொற்களுள் தன்மை, படர்க்கை சொற்களை அதிகமாகவும் முன்னிலைச் சொற்களைக் குறைவாகவும் பயன்படுத்தியுள்ளார். அச்சொற்களுள், இறந்தகாலத்தைக் குறிக்கும் ‘த், ட், ற், இன் ஆகிய இடைநிலைகளும் நிகழ்காலத்தைக் குறிக்கும் ‘கின்று’ என்ற இடைநிலையும் எதிர்காலத்தை உணர்த்தும் ‘ப், வ்’ ஆகிய இடைநிலைகளும் இடம்பெற்றுள்ளன. தன்மை, முன்னிலை, படர்க்கை வினைமுற்றுச் சொற்களுள், படர்க்கை வினைமுற்றுச் சொற்களை அதிகமான இடங்களில் பயன்படுத்தியுள்ளார். அச்சொற்களுள், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐம்பால்களும் முறையே ‘னகர’, ‘ளகர’, ‘அர்’ ‘துகர’ ‘னகர’ விகுதிகளையும் பயன்படுத்தியுள்ளார்.

திருமந்திரத்தில் முதல் 500 பாடல்களில் இறந்தகாலத்தைக் குறிக்கும் படர்க்கை வினைமுற்றுச் சொற்கள் அதிகமான இடங்களில் கையாண்டுள்ளார். மேலும், வினைமுற்றுச் சொற்களைக் கையாள்வதில் ஒரு தனி உத்தியைப் பயன்படுத்தியுள்ளார். அணிகளுள் முக்கிய அணியாகத் திகழ்வது ‘தீவக அணி’.

தீவக அணி என்பது ஒரு அறையில் உள்ள விளக்கு, இருந்த இடத்திலிருந்தே, எப்படி அவ்வறையில் உள்ள இருட்டைப் போக்குகிறதோ, அதுபோன்று, திருமூலர் ஒரே பாடலில், ஒரே காலத்தைக் குறிக்கும் ஒரே இடத்தைக் குறிக்கும் ஒரே வினைமுற்றுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அச்சொல்லே அப்பாடலுக்கு எழுவாயாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அச்சொல்லை,

பாடலில் முதலிலும் ஆக்குகின்றான், (260:1,2,3,4) இடையிலும் வைத்தான் (68:1,2,3,4) கடையிலும் அறிகிலே (78) பயன்படுத்தி, பொருளடிப்படையிலும் பாடலின் அமைப்புமுறையிலும் இயைபுத் தன்மையை உருவாக்கியுள்ளார் திருமூலர்.

இறந்தகாலத் தன்மை ஒருமை வினைமுற்றுகளுக்கு 'ஏன்' விகுதியையும் பன்மை வினைமுற்றுகளுக்கு 'ஓம்' 'ஆம்' விகுதியையும் எதிர்மறை வினைமுற்றுச் சொற்களுக்கு 'இலேன்' என்ற விகுதிகளையும் பயன்படுத்தியுள்ளார். முன்னிலை வினைமுற்றுச் சொற்கள் 'ஆய்' விகுதியையும் பன்மை விகுதிகளாக 'இர், ஈர், மின்' 'மின்கள்' ஆகிய விகுதிகளையும் பயன்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

'மின்' விகுதியை ஒரே தொடரில் மூன்று வினைமுற்றுச் சொற்களில் கையாண்டுள்ளார். படர்க்கை வினைமுற்றுச் சொற்களுள் பலர்பால் விகுதிகளுக்கு 'அர்', விகுதியையும் எதிர்மறைச் சொற்களுக்கு 'இலர்' விகுதியையும் கையாண்டுள்ளார்.

வேற்றுமையுருபுகளும் சாரியைகளும்

எட்டு வேற்றுமைகளுள் விளி வேற்றுமையின் அடிப்படையில் தொடர்கள் இல்லை. ஐ, ஒடு, கு, இன், அது, கண் ஆகிய வேற்றுமையுருபுகளை கொண்டு பல்வேறு வகையான பாடுபொருள்களை அமைத்துள்ளார். குறிப்பாக, இரண்டாம், நான்காம், ஐந்தாம் வேற்றுமைகளைக் கொண்டு அதிகமான பாடுபொருள்களை அமைத்துள்ளார் திருமூலர்.

குறிப்பாக, உருபுகளை அடிப்படையாகக் கொண்டு உவமை, உருவகப்பொருள்களை விளக்கியிருப்பது சிறப்புக்குரியது. ஆக்கல், அழித்தல், அடைதல் போன்ற பாடுபொருள்களில் இரண்டாம் உருபையும் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி போன்ற பாடுபொருள்களில் மூன்றாம் உருபுகளையும் நட்பு, திசைப் போன்ற பாடுபொருள்களில் நான்காம் உருபுகளையும் நீங்கல், ஒப்பு, ஏது போன்ற பாடுபொருளில் ஐந்தாம் உருபுகளையும் தற்கிழமை, பிறிதின் கிழமைப் பொருள்களில் ஆறாவது

உருபையும் உவமை, இடம் போன்ற பாடுபொருளில் ஏழாவது உருபுகளையும் பயன்படுத்தியுள்ளார். ஐந்தாம் உருபுப் பொருளில் 'உள்' என்ற உருபையும் ஏழாம் உருபுப் பொருளில் கண் மட்டும் அல்லாமல், நின்று, உள், மேல், போன்ற சொல்லுருபுகளையும் திருமந்திரத்தில் பயன்படுத்தியுள்ளார். இவ்வியலின் மூலம், திருமூலர் தத்துவம், மெய்ஞ்ஞானம் போன்ற துறைகளில் புலமைப் பெற்றவர் என்ற சிந்தனையோடு, மரபிலக்கணத்தில் ஆழ்ந்த புலமைப்பெற்ற ஒரு இலக்கணி என்ற கருத்தையும் மிகச் சிறந்த ஒரு மொழியியல் அறிஞர் என்ற சிந்தனையையும் அறியமுடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. தொல்.எழு.119
2. தொல்.எழு.120
3. தொல். சொல்.201
4. சொல்.தொல்.200
5. மேலது, 198
6. மேலது.112
7. தொல். வினை. 198
8. தொல்.எச்ச. 450
9. பொற்கோ, இக்காலத் தமிழ் இலக்கணம், ப.117
10. தொல். சொல்.62
11. மேலது.17
12. மேலது.64
13. தொல். சொல். 65
14. மேலது. 71

இயல் மூன்று

திருமந்திரத்தில் அசைநிலை, இசைநிறை இடைச்சொற்கள்

முன்னுரை

செய்யுளின்கண் சில இடங்களில் கருத்துப் பொருளுக்கும் பல இடங்களில் கருத்து பொருளில்லாதும் அசைநிலையாகவும், இசைநிறைத்துக் காணப்படுதலும் இவ் இடைச்சொற்களின் தன்மை ஆகும். அதிகபட்சமாக திருமந்திரம் நுணுக்கமானப் பொருளைக் கொண்டுள்ளதால் குறைந்த அளவிலே அசைநிலைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒருசில சொற்கள் பொருள் தரக்கூடிய அசைநிலை வகையில் காணப்படுகின்றன. இங்கு முதல் இயலில் குறிப்பிட்டுள்ளவாறு தொல்காப்பியர் கூறிய நூற்பா நினைவில் கொண்டு வரப்படுகிறது.

"கிளந்த அல்ல வேறுபிற தோன்றும்

கிளந்த வற்றியலான் உணர்ந்தனர் கொளலே"[1]

என்ற நூற்பாவிற்கு ஏற்ப இவ்வியலில் ஆழ்ந்த பொருளுடன் காணப்படுகிறது. இதனோடு திருமூலர் இயற்றிய திருமந்திரப்பாடல்கள் முழுமையும் கொண்டே பொருள் கொள்ளமுடிகிறது. ஒவ்வொரு சொல்லும் அதன் பயன் கருதி படைத்துள்ளார் என்பதை இவ்வாய்வின் மூலம் அறியப்படுகிறது.

மேலும் அசைநிலை இசைநிறை இவை இரண்டிற்கான பெயர், பொருள், வரையறை, எண்ணிக்கை, சான்று, இலக்கண நூலார், உரையாசிரியர்கள், மொழியியல் அறிஞர்கள் ஆகியோரின் கருத்துக்களோடு திருமந்திரத்தில் அசைநிலை, இசைநிறை இடைச்சொற்கள் பிற்கால இலக்கண அறிஞர்களின் விளக்கங்களை அடிப்படையாக வைத்து எந்த எந்தப்பொருளில் பயின்று வந்துள்ளன என்பதைக் கண்டறிந்து கூறும் விதமாக இவ்வியல் அமைக்கப்பட்டுள்ளது.

அசைநிலைச் சொற்கள்

அசைநிலைச் சொற்கள் என்று கூறப்படுவன பொருள் உணர்த்தாத சொற்களாகவும், செய்யுளில் சீர் நிரப்பி வருவனவாக வருவதால் அவை அசைநிலை என பெயர்பெற்றும் இருக்கின்றது. பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சேர்ந்து வரும்போது பொருள் உணர்த்தாது இவ்விரண்டோடு சார்த்திச்சொல்லப்பட்டு வருவதால் அசைநிலை எனக் கொள்ளலாம். ஆனால் அசைநிலையானது ஒருசில இடங்களில் சீர் நிரப்பவே என கருதுதல் பொருந்தாத ஒன்றாக திருமந்திரத்தில் காணப்படுகின்றன.

பொருள் தன்மை

அசைநிலை, சொற்களின் பொருள் தன்மையினை இலக்கண உரையாசிரியர்களும் அறிஞர்களும் அதன் பொருண்மை இயல்பினை விளக்குகின்றனர். மொழியியல் அறிஞர்களும், இக்கால அறிஞர்களான பொற்கோ போன்றோர்களும் அதன் பொருள் தன்மையை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அசைநிலை வரையறை

அசை என்பதற்கான வரையறையினைத் தொல்காப்பியம் செய்யுளியலில் எடுத்துரைத்துள்ளது. அசைநிலை, அசைச்சொல், உரையசை ஆகியவற்றின் முறையே அசை + நிலை, அசை + சொல், உரை + அசை என இரு சொற்களாகப் பிரிக்கலாம். இவை அனைத்திற்கும் முதன்மையானது அசை என்னும் சொல்லே ஆகும். இவற்றை வைத்து முதலில் 'அசை' என்னும் சொல் விளக்கப்படுகிறது.

அசை

தொல்காப்பியம் அசை என்பதற்கு வரையறையினை, அசை இன்ன வகைகளைக் குறிப்பிடுமிடத்துக் குறித்துள்ளது. அவற்றினை,

"குறிலே நெடிலே குறிலினை குறில்நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே"[2]

என்ற நூற்பாவின் வழி நோக்கலாம். குறில் தனித்தும் நெடில் தனித்தும் இரண்டு குறில் இணைந்தும் குறில் நெடிலோடு மெய் இணைந்தும் வருவது அசை ஆகும். அசையினைப் பிரிக்கும்போது தனிக்குறில் மொழி முதலில் பிரிக்கக் கூடாது என்பது முறை.

இடைச்சொல் வகைகளுள் ஒன்றாக வைக்கப்படும் அசைநிலைச் சொல்லை தொல்காப்பியம் **'உரையசை'** (தொல்.எழுத்து.225) **'உரையசைக் கிளவி'** (தொல்.எழுத்து.205) **'அசைநிலை'** (தொல்.சொல்.262) **'அசைநிலைக்கிளவி'** (தொல்.சொல்.267) **'அசைச்சொல்'** (தொல்.சொல்.273) **'ஈற்றசை'** (தொல்.சொல்.275) என்று பல பெயர்களில் அசைநிலைக்கிளவியை குறிப்பிட்டுள்ளதை இங்கு அறியமுடிகிறது. மேலும், நேமிநாதம் **அசை** எனவும் நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம் **அசைநிலை** என்றும் தொன்னூல் விளக்கம் **அசைநிறைப்பன** என்றும் குறிப்பிட்டுள்ளன.

"அசைநிலை தனக்கென பொருள் பெற்றிருக்காவிட்டாலும் பேசுபவனின் உணர்ச்சி வேறுபாடுகளை அறிந்துகொள்ள உதவுகிறது என்று அந்த கருத்தை உணர்ந்து கொண்டால் அசைநிலை பேசுபவனின் உணர்வைப் புலப்படுத்தும் பொருள் உடையது"[3] என்று செ.வை.சண்முகம் கூறியுள்ள இக்கருத்து முற்றிலும் ஏற்கக்கூடியது. ஏனெனில் அசைச்சொல்லானது அதன் உணர்ச்சிக்கே அதிகம் முக்கியத்துவம் கொடுக்கின்றது.

உரையாசிரியர்கள் கருத்துக்கள்

சேனாவரையர், அசைச்சொல்லின் தன்மையினை குறிப்பிடுகையில், "பொருளுணர்த்தாது பெயரோடும் வினையோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின் அசைநிலையாயிற்று"[4] என்கிறார்.

இளம்பூரணர் அசைநிலைச் சொற்களுக்கு விளக்கம் எதுவும் கூறாமல் அதற்கான இரண்டு சான்றுகளை மட்டும் தந்துள்ளார். "அசைத்தல் - சார்த்துதல். இவை பொருள் உணர்த்தாது 'அந்தில்' முதலாயின. 'புகழ்ந்திகுமல்லரோ பெரிதே', 'உரைத்திசினோரே' எனச்

சார்ந்த மொழியை வேறுபடுத்தி நிற்றலின் அசைநிலைச் சொல்லாயின"[5] என்பாரும் உளர்.

தெய்வச்சிலையார் பொருள்பட நில்லாது அசைநிலையாகி நிற்பன என்கிறார். நச்சினார்க்கினியர், "தமக்கோர் பொருளின்றித் தாம் சார்ந்த பெயர் வினைகளை அசையப்பண்ணும் நிலைமையவாய் வருவன"[6] எனச் செப்புகிறார்.

கல்லாடனார், "வழக்கின்கண் தமக்கு ஓர் பொருளின்றித் தாம் அடைந்த பெயர் வினைகளை அசையப்பண்ணி நிற்கும் நிலைமையவாய் வருவனவும், பெயர் பொருளிடத்துப் பொருளின்றி ஓரோர் அசையை நிறைத்தற் பொருண்மையவாய் வருவனவும்"[7] என்று இயம்பியுள்ளார்.

நன்னூல் உரையாசிரியர் ஆறுமுகநாவலர், "அசைநிலை என்பது பொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது"[8] என விளக்கமளிக்கிறார்.

ஏனைய இலக்கண உரையாசிரியர்கள் கூறியதை வைத்துப்பார்க்கும் போது அசைச்சொற்களுக்குப் பொருளில்லை என்று விளக்கம் கொள்ளலாம். ஆனால் ஒரு பாடலின் முழுநோக்கு மற்றும் தனிநோக்கு என்று பார்க்கும் போது ஒரு சில அசைச்சொற்களுக்குத் திருமந்திரத்தில் பொருள் பெறப்படுகிறது.

அசைநிலைச் சொற்களில் பிற்கால இலக்கண நூல்கள் புதிய இடைச்சொற்களைக் கூறுகின்றன. "தொல்காப்பியர் 24 அசைநிலைகளை இடையியலிலும், 8 அசைநிலைகளை உரியியலிலும் குறிப்பிட்டுள்ளார் என்று இசரயேல்"[9] கூறியுள்ளார். ஆனால் "இதனை மறுத்து தொல்காப்பியர் 23 அசைநிலைச் சொற்களை குறிப்பிடுவதாகக் குமாரசாமிராஜா குறிப்பிட்டுள்ளார்."[10] மேலும் "செயராமன் அசைநிலைகளாக 23 சொற்களை மட்டுமே குறிப்பிடுகிறார்."[11] ஆனால் தொல்காப்பியர் அசைநிலைகளாக 24 சொற்களைக் குறிப்பிட்டுள்ளார். இசரயேல் "ஆங்க" என்னும் சொல்லை இரண்டு முறை கூறி 24 சொற்களைக் சுட்டியுள்ளார். ஆனால் குமாரசாமிராஜாவும் செயராமனும்

“அம்ம” எனும் சொல்லை அசைநிலையாகக் கூறவில்லை. தொல்காப்பியர் அம்ம எனும் சொல்லை அசைநிலை என்று விளிமரபில்,

“அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்”[12]

என்ற நூற்பா மூலம் இதனை அசைச்சொல்லாகக் கருதலாம். இதனை தெய்வச்சிலையார் மட்டும் தமது உரையில் சுட்டிக் கூறியுள்ளார். ஆங்க எனும் சொல்லை இரண்டு முறை இசரயேல் கூறக் காரணம்,

“அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவி”[13]

“ஆங்க உரையசை”[14]

எனும் இரண்டு நூற்பாக்களைக் கொண்டு இசரயேல் “ஆங்க” எனும் சொல்லை இரண்டாகக் கணக்கிட்டுள்ளமையே ஆகும். மேலும் குமாரசாமிராஜா அந்தில் என்று தொடங்கும் நூற்பாவைக் கொண்டு இதனை இரண்டாகப் பகுக்கிறார். ஆனால் அந்தில் என்பது ஒரே இடைச்சொல்லாகும். எனவே தொல்காப்பியர் கூறிய அசைநிலைச் சொற்கள் 24 எனக் கருதலாம்.

1. மற்று
2. அந்தில்
3. ஆர்
4. ஏ
5. குரை
6. அம்ம
7. மா
8. மியா
9. இக
10. மோ
11. மதி
12. இகும்
13. சின்
14. யா
15. கா

16. பிற
17. பிறக்கு
18. அரோ
19. போ
20. மாது
21. ஆங்க
22. ஆக
23. ஆகல்
24. என்பது

மொழியியல் அறிஞர்

மொழியியல் அறிஞர்களில் மோ. இசரயேல், 'அசைச்சொற்கள்' என்ற கட்டுரையில் அசைச்சொற்கள் தரும் பொருளைக்கொண்டு அவற்றை நிரல்படுத்தியுள்ளார். அவை,

1. கவனத்தை ஈர்ப்பன - ஏ, மற்று, குரை, யா, கா, பிற, பிறக்கு, கண்டீரோ, கேட்டை
2. உணர்ச்சியை வெளிப்படுத்துவன - அந்தில், அரோ, கா, யா, போ, ஆக, ஆகல், என்பது, மாது
3. பொருட்சிறப்பு - ஏ, ஆர்
4. அன்பேவல் - கா, மதி, இகும், ஒ, மா
5. ஐயப்பாட்டைக் குறிப்பது - போலும்
6. பிற பொருளது - ஆங்க

மேலும் இவர் முன்னிலை அசைகளில் சில ஏவலை அன்போடு உணர்த்தப் பயன்படுகின்றன எனக் கூறுகிறார்."[15]

சான்று: மொழி**மோ – ஓ**

ஏகு**மதி** – மதி ஏவலை அன்போடு உணர்த்தும்

மேலும் முன்னிலை அசையினின்றும் ஏவலை பிரிக்காததாலும் ஏவலினின்றும் அன்பேவலைப் பிரிக்காததாலும் இலக்கண நூலார் முன்னிலை அசைகள் என்று அவற்றையும் வழங்குகின்றனர் எனவும் இவர் விளக்கமளிக்கிறார்.

தி. நடராசன் அவர்களும் மோ. இசரயேல் குறிப்பிட்ட கருத்தினையே விளக்குகிறார். அதாவது அசைச்சொற்கள் பொருள் உணர்த்தும் தன்மையை உடையது என்பதை, சங்க இலக்கியத்திலிருந்து சான்று கொடுத்துள்ளார்.

சான்று:

(i) உறுதிப்பொருள் – அம்ம (உண்டாலம்ம இவ்வுலகம்) புறம்.182

(ii) ஐயப்பொருள் – போலும் (உருகுவன் போலும் உடைத்து) கலித்.60

(iii) பின் எனும் பொருள் – பிறக்கு (மலை பிறக்கு ஒழிய) ஐங்.385

(iv) இரக்கப்பொருள் – அந்தோ (அந்தோ தானே அளியன் தாயே) நற்.32

மொழியியல் அறிஞர் தேவநேயமும் அசைச்சொற்களுக்குப் பொருள் உணர்த்தும் தன்மை உண்டு எனக் கூறுகிறார்."[16]

சான்று :

(i) அத்தை - அதை

(ii) இத்தை - இதை

(iii) பிறக்கு - பிற

(iv) குரை - பெருமை

என்று கூறியுள்ளார். இதனை கால்டுவெல் 'அதை' என்பது 'அத்தை' என்று சென்னையில் வாழக்கூடிய மக்களால் உச்சரிக்கப்படுகிறது என்கிறார்."[17] இதன் மூலம் 'அத்தை' என்ற அசைநிலைக்கு 'அதை' என்ற பொருள் என்பதை அறியமுடிகிறது. இவற்றை எல்லாம் வைத்துப்பார்க்கும் போது அசைச்சொற்களுக்குப் பொருளுண்டு என்பதை நோக்கத்தக்கதாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தொல்காப்பிய நூற்பாவான, **"அம்ம கேட்பிக்கும்"[18]** என்பதன் மூலம் அசைச்சொற்களுக்கு பொருளுண்டு என்பதைப் புலப்படுத்துகின்றன.

மேற்கூறப்பட்ட இலக்கண நூலார், உரையாசிரியர், மொழியியல் அறிஞர்களின் கருத்துக்கள் வாயிலாக அசைச்சொற்கள், பேசுபவனின் உணர்ச்சி மொழிக்கு பொருளுணர்த்தும் தன்மையுடையது என்ற முடிவுக்கு வழிகோலலாம்.

இலக்கண நூல்களில் அசைநிலைச் சொற்களின் எண்ணிக்கை

1. தொல்காப்பியம் - 32
2. நேமிநாதம் - 2
3. நன்னூல் - 39
4. இலக்கண விளக்கம் - 39
5. தொன்னூல் விளக்கம் - 42
6. முத்துவீரியம் - 24

அசைநிலையின் வகைகள்

அசைநிலையின் வகைகளை பல வகைகளில் பிரிக்கலாம். அதாவது,

1. அசைநிலை - அந்தில், ஆர், குரை, ஏ
2. வியங்கோளசை - மா
3. முன்னிலை அசை - மியா, இக, மோ, மதி, இகும், சின்
4. உரையசை - அம்ம, ஆங்க
5. தனியசை - யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது
6. பிரிவிலசை - ஆக ஆக, ஆகல் ஆகல், என்பது என்பது

எனத் தொல்காப்பியர் சுட்டியவற்றைத் தொகுத்து அளிக்கலாம். "ந.வீ செயராமன் அவர்கள் அசைநிலையின் வகைகளை,

1. தன்மை அசைநிலை
2. முன்னிலை அசைநிலை
3. படர்க்கை அசைநிலை
4. பிரிவில் அசைநிலை
5. வியங்கோள் அசைநிலை

6. பொது அசைநிலை

என்று வகைப்படுத்தி"[19] கூறியுள்ளார். மேற்கூறியவற்றிலிருந்து அசைநிலைகளைத் தொகுத்து, தொல்காப்பியர் கூறிய அசைநிலைகளை வைத்து மேலும் ஐந்து வகைப்படுத்தலாம்.

1. மூவிட அசைநிலை
2. பிரிவில் அசைநிலை
3. வியங்கோளசைநிலை
4. உரையசை நிலை
5. பொது அசைநிலை ஆகியனவாம்.

அசைநிலை பற்றி உரையாசிரியர்கள் கருத்துக்கள்

சேனாவரையர் கருத்தினோடு வெள்ளைவாரணர் அசைநிலைச் சொற்களுக்கு ஒன்றுபட்டு செல்கிறார். ஆனால் அசைநிலை என்பது காரணப்பெயர் என்ற, பெயர் வகையினைக் குறிப்பிட்டுள்ளார். ஆதித்தன், "ஓ! இவனா செய்தான் - இவ்வாறு பொருளற்று நிற்கும் அசைச்சொற்களும் என்று கூறுகிறார்."[20] இவருடைய எடுத்துக்காட்டில் குறிப்புப் பொருள் உள்ளது.

சிவலிங்கனார், "அசைநிலைக்கிளவியாகி வருவன: இதனை இரண்டு வகையில் கொள்க. 1. அசைநிலைக் கிளவியாகி வருவன 2. அசைநிலையாகி வருவன. அவை ஏ, ஓ முதலியன. அசைநிலையாகி வருவன. கிளவி (சொல்) ஆகி வருவன சொல் வடிவம் பெற்றன அவை போலும், (வைத்து என்பது திருநெல்வேலி மாவட்ட வழக்கில் வரும் இடைச்சொல்) முதலியன. பாண்டிச்சேரி என்றோர் ஊர் உண்டுபோலும். இதில் போலும் என்பது சொல் வடிவுள்ள அசைநிலை. 'பாண்டிச்சேரியில் வைத்து அவனைக் கண்டேன் இதில் வைத்து என்பது சொல் வடிவுபெற்ற அசைநிலை"[21] என்கிறார். இவருடைய கருத்தை ஆழ்ந்து நோக்கும் போது மொழியின் எழுத்துக்களாக இருந்து அசையை நிறைப்பது அசைநிலை எனவும், சொற்களாக இருந்து அசையை நிறைப்பது அசைநிலைக்கிளவி

என்பதும் பெறப்படுகிறது. இவருடைய கருத்து ஏற்கக்கூடியதாக இல்லை. அசைநிலை, அசைநிலைக்கிளவி இரண்டும் ஒன்றேயாகும். சான்றாகத் தொல்காப்பியம் யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என்னும் ஏழு சொல்லும் அசைநிலைக்கிளவி (தொல்.சொல்.279) என்கிறது. மேலும் ஆக, ஆகல், என்பது ஆகிய மூன்றையும் அசைநிலை (தொல்.சொல்.279) என்று குறிப்பிடுகிறது. இதில் எழுத்தும் சொல்லும் அடங்கியுள்ளது. எனவே தொல்காப்பியர் எழுத்தும் சொல்லும் அசைநிலைக்கிளவி, அசைநிலை என்று பல சொல் ஒரு பொருள் என்னும் நிலையில் பயன்படுத்தியுள்ளார் என்பது அறியமுடிகிறது.

"அசைநிலைக்கிளவி என்பது பிறபொருள் உணர்த்தாமல் செய்யுள் வழக்குப் பயிற்றுச் சீர்க்கு உறுப்பாகவும் சீராகவும் ஓசை நிரப்புவதற்கு வரும் சொல்லுறுப்பினை அசை என்பது மரபு. இதனை, 'இசை திரிந்திசைப்பினும் இயையுமன் பொருளே' (பொருளியல்-1) என்பதானும் அறிக. செய்யுள் அமைப்பு நோக்கிப் புலவரான் ஆக்கிக் கொள்ளப்படுதல் தோன்ற ஆகிவருநவும் என்றார். அசையாகித் துணைபுரிதலே இதன் பொருளாகும்."[22] என்று உரைக்கிறார்.

இலக்குவனார், "அசையை நிரப்பப் பயன்படும் வெற்றுச் சொற்களை (Empty Words) அசைநிலை"[23] என்கிறார்.

கமில்சுவலபில் தமது கட்டுரையில் அசைச்சொற்கள் வெறும் அசைநிலைகள் அல்ல என்றும் அவை பொருளைத் தெளிவுப்படுத்தவும் பொருட்சிறப்பு அளிக்கவும் பயன்படுகின்றன என்று சில சான்றுகளின் வழி விளக்குகிறார். மு.வரதராசனும் அசைநிலைகள் பொருள் குறிக்கும் தன்மையுடையன என்று கூறுகிறார்.

அசைநிலைகள் பொருள் இழந்து ஒட்டுக்களாக இருந்தன என்னும் கருத்தை தெ.பொ.மீனாட்சிசுந்தரனும் வலியுறுத்துகிறார். அவர் "அசைநிலைகள் என்பவை சொல்லாக்கக் கூறுகளாகவும் பிந்து நிலைகளாகவும் (Enclitics) வருவனவாகும். இடப்பெயர்களை எப்பொழுதாவது இவை குறிப்பால் உணர்த்துகின்றன என்பதைத் தவிர

இவற்றின் பொருள் இடிக்கப்பட்டு விட்டன என்றே கொள்ள வேண்டும்."[24] என்று விளக்குகிறார்.

அசையை நிரப்புவதற் பொருட்டு வழங்குதலேயன்றி, ஏதேனும் பொருட்குறிப்பு உடையனவாகவும் அமைந்துள்ளன என்பது தெளிவு. அவை கேட்போரின் கவனத்தை ஈர்ப்பதற்காக, உள்ள உணர்ச்சியை வெளிப்படுத்த, பொருட்சிறப்பைக் குறிக்க, ஏவலை அமைதியான முறையில் வெளிப்படுத்த பயன்படுகின்றன எனக் கூறலாம்.

இலக்கண நூல்கள் கூறும் அசைச்சொற்கள்

தொல்	நேமி	நன்	இல.வி	தொன்.வி	மூ.வீ
கா	ஏ	மன்	மன்	ஓ	ஏ
பிற	ஓ	ஓ	ஓ	ஏ	மற்று
பிறக்கு	(நூற்.	ஏ	ஏ	அத்து	அந்தில்
அரோ	76,79)	மற்று	மற்று	அந்தில்	ஆங்கு
போ		அந்தில்	அந்தில்	அன்று	ஆர்
மாது		ஆங்கு	ஆங்க	அம்ம	ஏ
மியா		கொல்	கொல்	ஆங்கு	குரை
இக		மா	மா	அரோ	மா
மோ		மியா	மியா	ஆம்	இகும்
மதி		இக	இக	ஆல்	மியா
இகும்		மோ	மோ	இட்டு	இக
சின்		மதி	மதி	இகும்	மதி
ஆர்		அத்தை	அத்தை	குரை	மோ
அந்தில்		இத்தை	இத்தை	கா	சின்
ஏ		வாழிய	வாழிய	இருந்து	ஆங்க
குறை		மாள	மாள	இன்று	போலி
அம்ம		ஈ	ஈ	ஓரும்	யா
ஆங்க		யாழ	யாழ	சின்	கா
போலும்		அம்ம	அம்ம	தம்	பிற
ஆக		யா	யா	தான்	பிறக்கு
ஆகல்		கா	கா	நின்று	அரோ
என்பது		பிறக்கு	பிற	தில்	மாது
கண்டீர்		அரோ	பிறக்கு	பிற	போ
கொண்டீர்		போ	அரோ	மன்	ஆக

சென்றது போயிற்று கேட்டை நின்றை காத்தை கண்டை (தொல். 257,262, 267,271, 274,276 277,279 280,426 426)		மான இகும் சின் குரை ஓரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று (நன். 422,423 432,433 435,437 441)	போ மாது இகும் சின் குரை ஓடு போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் என் ஆல் (இல.வி. 252,253 263,266 269,273 277)	மா மன்னோ மாது யா யாதோ போலும் போம் இத்தை அத்தை யாழ் இக மதி மான் ஆர் மோ மியா வாழிய (தொன்.வி. 131,132 137)	ஆகல் (மு.வீ.650 653, 657 659,664 666-668)

முன்னிலை அசைச்சொற்கள்

முன்னிலை மொழியைச் சார்ந்து வரும் அசைச்சொல்லை தொல்காப்பியம் முன்னிலை அசைநிலைச் சொற்களாக ஆறு வகைப்படுத்துகிறது. இதனை இலக்கண நூலார்கள்,

1. தொல்காப்பியம்(274) - 6
2. நன்னூல்(440) -10
3. இலக்கண விளக்கம்(276) -10
4. தொன்னூல் விளக்கம் (137) -10
5. முத்துவீரியம் (663) - 6

என்று கூறியுள்ளார்கள்.

முன்னிலை அசைச்சொற்கள்

தொல்காப்பியம்	நேமிநாதம்	நன்னூல்	இ.விளக்கம்	முத்துவீரியம்
மியா, இகு, மோ, மதி, ஆகும், சின்	-	மியா, ஆக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ	மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ	மியா, இக, மோ, மதி, இகும், சின்

இவ்வட்டவணையிலிருந்து மேலும் தொல்காப்பியம் எச்சவியலில் குறிப்பிடும் அசைச்சொற்களான கண்டீர், கொண்டீர், சென்றது, போயிற்று, கேட்டை, நின்றை, காத்தை, கண்டை, ஆகிய எட்டையும் யாரும் சுட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"மியாஇக மோமதி யிகுஞ்சின் னென்

மாவயி னாறு முன்னிலை யசைச்சொல்"[25]

என்ற நூற்பா மூலம் அறியலாம்.

சான்று :

1. மியா – கேண்**மியா**, சென்**மியா**
2. இக – கண்பனி யான்**றிக** வென்றி தோழி
3. மோ – காமம் செப்பாது கண்டது மொழி**மோ**
4. மதி – உரை**மதி** வாழியோ வலவ
5. இகும் – மெல்லப் புலம்ப கண்**டிகும்**
6. சின் – காப்பும் பூண்டி**சிற்** கடையும் போகலை (அகம். 7)

நேமிநாதம் அசைநிலைகளைப் பற்றிக் கூறவில்லை. ஆனால் நன்னூலும், இலக்கணவிளக்கமும் இகும், சின் என்ற இடைச்சொற்களைத் தவிர்த்து,

புதிதாக அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்ற ஆறு சொற்களைச் சேர்த்து பத்தாகக் கூறுகின்றது.

“மியாயிக மோமதி அத்தை இத்தை

வாழிய மாளஈ யாழமுன் னிலையசை”[26]

தொல்காப்பியம் கூறிய ஆறு சொற்களில் இகும், சின் ஆகிய சொற்கள் நன்னூலில் இடம்பெறவில்லை. ஆனால் முத்துவீரியம் தொல்காப்பியம் கூறிய ஆறு சொற்களை மட்டுமே கூறுகிறது. தொல்காப்பியம் இகும், சின் என்பதை தன்மை, படர்க்கையில் வருமென்று குறிப்பிட்டுள்ளது.

“அவற்றுள்

இகுமுஞ் சின்னு மேனை யிடத்தொடும்

தகுநிலை யுடைய என்மனார் புலவர்”[27]

இதனை இகும், சின் என்னும் இடைச்சொற்களுக்குப் புறநடையாகத் தொல்காப்பியம் கூறுகிறது. நன்னூல் கூறிய புதிய இடைச்சொற்களை அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்ற சொற்கள் சங்க இலக்கியத்திலேயே இடம்பெற்றுள்ளன.

சான்று:

அத்தை – நீலிஇயர் **அத்தை** நீயே என்றே (புறம்.375:16)

இத்தை – வேய்நரல் விடரக நீயொன்று பாடி**த்தை** (கலி.40:10)

வாழிய – உண்டுமன் **வாழிய** நெஞ்சே (குறுந்.199:2)

ஈ – சென்**றீ** பெருமநின் தகைக்குநர் யாரே (அகம் 46: 16)

யாழ – நீயே செய்வினை மருங்கிற் செலவயர்ந்தி **யாழ**நின் (கலி7:6)

நன்னூலும் இலக்கண விளக்கமும் புதிய இடைச்சொற்களைக் கூற அதற்குப்பின் தோன்றிய முத்துவீரியம் தொல்காப்பியத்தைப் பின்பற்றுகிறது. எனவே முத்துவீரியம் பெரும்பாலும் தொல்காப்பியத்தைத் தழுவிச் செல்கிறது. இகும், சின் பற்றி நன்னூலும், இலக்கணவிளக்கமும் குறிப்பிடவில்லை. ஆனால் அதற்குப்பின்

தோன்றிய முத்துவீரியம் இகும், சின் ஆகிய இரண்டு இடைச்சொற்களை தன்மை, படர்க்கையில் வருவதாக குறிப்பிடுகிறது.

"இகுமும் சின்னும் ஏனையிடத்தொடும் சிவணும்"[28]

இதில் 'இகும்' என்பது அன்பேவல் இடைச்சொல்லாக வரும் என்கிறார் இசரயேல். சின் என்பது அசைநிலை பெற்ற பதினான்கு சொற்களாக ஏறத்தாழ 42 இடங்களில் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சான்று :

கண்டிசின் (அகம்: 94) – கண்டு + இசின்

என்றிசின் (அகம்: 375) - என்று + இசின் என்று அறியலாம்.

மேலும் செ.வை.சண்முகம் "அசைநிலை தனக்கென பொருள் பெற்றிருக்காவிட்டாலும் பேசுபவனின் உணர்ச்சி வேறுபாடுகளை அறிந்துகொள்ள உதவுகிறது என்ற அந்தக் கருத்தை உணர்ந்து கொண்டால் அசைநிலை பேசுபவனின் உணர்வைப் புலப்படுத்தும் பொருள் உடையது"[29] என்கிறார். எனவே அசைநிலை என்பது ஒருவிதப் பொருளைச் சுட்டுகிறது எனலாம். பல இடங்களில் பொருள் உணர்த்தாமலும் வருமென்று கொள்ளலாம். தொல்காப்பியர் அசைநிலைகளை மூன்றாகக் கூறுகிறார். அவை,

1. அசைநிலைச் சொற்கள்
2. முன்னிலை அசைச்சொற்கள்
3. பிரிவில் அசைநிலைச்சொற்கள்

தொல்காப்பியம் அசைநிலைச்சொற்களாக ஏழு சொற்களைக் குறிப்பிடுகிறது. அவை யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என்பனவாகும்.

"யாகா
பிறபிறக் கரோபோ மசைநிலைக் கிளவி
மாயேழ் சொல்லு மசைநிலைக் கிளவி"[30]

என்று தொல்காப்பியம் கூறுகிறது. நேமிநாதம் அசைநிலைச் சொற்களைப் பற்றிக் கூறவில்லை. ஆனால் நன்னூல் அசைநிலைச்

சொற்களாகத் தொல்காப்பியம் கூறிய ஏழு சொற்களுடன் 13 புதிய சொற்களைச் சேர்த்து இருபதாகக் கூறுகிறது.

“யாகா பிறபிறக் கரோபோ மாதிகும்
சின்குரை ஓரும் போலும் இருந்திட்டு
அன்னுந் தாம்தான் கின்றுநின் றசைமொழி”[31]

என்று நன்னூல் கூறியுள்ளது. நன்னூல் புதிதாக கூறிய 13 சொற்கள் பின்வருமாறு,

1. இகும்
2. சின்
3. குரை
4. ஓரும்
5. போலும்
6. இருந்து
7. இட்டு
8. அன்று
9. ஆம்
10. தாம்
11. தான்
12. கின்று
13. நின்று

நன்னூல் கூறிய இகும், சின் என்ற சொற்கள் தொல்காப்பியத்தில் முன்னிலை அசைச்சொற்களாகக் கூறப்பட்டுள்ளன. குரை என்ற சொல்லும் இசைநிறை, அசைநிலைப் பொருளில் வருமெனக் கூறப்பட்டுள்ளது. எனவே நன்னூல் புதிதாக பத்து அசைநிலைச் சொற்களை மட்டுமே கூறுகிறது. இலக்கண விளக்கம், நன்னூல் கூறிய கின்று, நின்று என்னும் இருசொற்களுக்கு மாற்றாக என், ஆல் என்பனவற்றைக் கூறுகிறது. ஆனால் முத்துவீரியம் தொல்காப்பியம் கூறிய ஏழு அசைநிலைச் சொற்களை மட்டும் கூறுகிறது. இலக்கண

நூல்கள், தோன்றிய காலங்களுக்கேற்ப அசைநிலைச்சொற்கள் மாற்றம் பெற்று வந்துள்ளன. நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டு நூல்களும், தொல்காப்பியம் குறிப்பிடாத 12 சொற்களைக் கூறியுள்ளன. இதனை,

1. ஓரும் – "அஞ்சுவதும் **ஓரும்** அறனே ஒருவனை வஞ்சிப்பதும் **ஓரும்** அவா" (குறள் - 366)
2. போலும் – வருவென்ற கண்ணாய் வருந்தினை **போலும்**"
3. இருந்து – "நனவென்று எழுந்**திருந்தேன்"**
4. இட்டு – "நெஞ்சம் பிளந்**திட்டு** நேரா நடுவண்"(கலி.101:19)
5. அன்று – "தேவாதிதேவன் அவன்சேவடி சேர்தும் **அன்றே**"(சீவக சிந்தாமணி.1)
6. ஆம் – "**பணியுமாம்** என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" (குறள் – 987)
7. தாம் – "அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை (குறுந் 92:2)
8. தான் – "ஆம்பல் மலரினும் **தான்** தண்ணி யளே"
9. கின்று – யான்பிற னியன் வாழ்வானசைப் பட்டிருக்**கின்றேனே**" (சீவக.சிந் 1487)
10. நின்று – சுழலனடைந்த மன்றத தலந்தயரா**நின்றார்** நிழலடைந்தே நின்னை யென்றேத்தி (பு. பொ.வெ.மா. 3:7)
11. ஆல் – ஈங்கா யின**வா லெ**ன்றி சின் யானே" (நற்.55)
12. என் என்ற சொல்லிற்கு இலக்கிய சான்று கிடைக்கவில்லை.

இந்த 12 இடைச்சொற்களையும் பிற்கால இலக்கண நூல்கள் கூறிய புதிய இடைச்சொல்லாகக் கருதலாம். சங்க இலக்கியத்தில் புதியதாக இடம்பெறும் சொற்களாக கீழ்கண்டவற்றை மு. இசரயேல் குறிப்பிட்டுள்ளார்.

" ஓறும் : அஞ்சுவ **தோறும்** அறனே (குறள்.366)

தெய்ய : செய்யாதார் **தெய்ய** நீ பிணியும் நாடேன் (ஐங்.257)

தெய்யோ : பெயல் ஆன என்கண்ணே **தெய்யோ** (மேலது, 232)

தொறு : குன்று **தொறா**டலும் நின்றதன் பண்பே (திருமுருகு. 217)

தொறும் : பொழில் **தொறும்** (அகம்.251)

தோறும் : கனம் **தோறும்** (மதுரை. கா. 753)"[32]

இலக்கண நூலார்கள் குறிப்பிடும் அசைநிலைகள்

தொல்	நேமி	நன்	இ . வி	மு . வீ
யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது	-	யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒடும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று.	நன்னூல் கூறிய கின்று, நின்று - க்கு பதிலாக என், ஆல்	கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது

இலக்கண நூல்கள் குறிப்பிட்ட அசைச்சொற்கள் எல்லாவற்றிற்கும் திருமந்திரத்தில் சான்றுகள் கிடைக்கவில்லை. கிடைப்பனவற்றை கீழ்வருமாறு காணலாம்.

தொறும் - இடைச்சொல்

நக்கன் என்றேத்திடும் நாதனை நாள்**தொறும்** (3:2)

தேவர்கள் போற்றும் நாதனை நாள்தொறும் நினைத்துப் போற்றுவேன்.

கடம் **தொறும்** (131:4), அடி**தொறும்** (64:3)

தோறும் - இடைச்சொல்

பருவங்கள் **தோறும்** பயன்பல ஆன (207:3)

பருவங்கள் தோறும் பயன்கள் பல தரத்தக்கதாக இருக்கும்.

யா - இடைச்சொல்

தொல்காப்பியர் சுட்டாத கருணை பொருளில்

தாயினும் மும்மலம் மாற்றித் **தயா** என்னும் (114:3)

கா - அன்பேவல்

களிப்பொடும் **கா**தன்மை என்னும் பெருமை (246:3) (**கா**தன்மை - உள் அன்பு) உள் அன்போடு என்னும் பொருண்மை இடத்தில் வந்துள்ளன.

வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்**கா** (86:1)

பிற - பிறவாத

பிற என்னும் சொல் திருமந்திரத்தில் இரண்டு இடங்களில் பயின்று வந்துள்ளன.

"பிதற்று ஒழியேன் **பிற**வா வருவானை (37:2) பிறவாத வடிவம் உடையவன் பொருளில் வந்துள்ளது. இதில் பிறவாத பொருளை சுட்டியுள்ளது. இம்முன்னிலை அசைநிலைச் சொற்களில் பிறக்கு, அரோ, போ, மாது, இக, மதி என்னும் சொற்கள் திருமந்திரத்தில் பயின்று வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிவிலசைச் சொற்கள்

பிரிவில் அசைநிலைச் சொற்களில் தொல்காப்பியர் ஆக, ஆகல், என்பது என்ற மூன்றிடைச்சொற்களையும் பிரிவிலசைச் சொற்கள் என்று குறிப்பிடுகிறார். இதனை,

"ஆக ஆகல் என்பது என்னும்

ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை"[33]

என்ற நூற்பா மூலம் ஆக ஆக, ஆகல் ஆகல், என்பது என்பது என இரட்டிப்பாகி வரும் என்கிறார். மேலும் இம்மூன்று சொற்களும் உரைத்தற் பொருட்டும் இழித்தற் பொருட்டும் வரும் என்று சேனாவரையர் விளக்குகிறார். நச்சினார்க்கினியர், "தாஞ்சார்ந்த சொற்களின் பொருள்களைப் பரிதலின்றி உணர்த்தும்"[34] என்று கூற, அதனை மறுக்கும் தன்மையில் 'பெயரை விட்டுப்பிரியா அசைநிலை

என்பதே பொருள்' என்று உரைத்து இரட்டையாக இணைந்து நின்றால் அவற்றை உரைத்து 'இணைந்துவரு அசைநிலை' என்று கூற விழைகிறார்.

தொல்காப்பியர் ஆக, ஆகல், என்பது என்று மூன்று வகைகளில் குறிப்பிட முத்துவீரியம் (668) ஆக, ஆகல் எனும் இரண்டையும் பிரிவிலசை சொற்கள் என்கின்றது.

'பிரிவிலசைகள்' என்ற அசைநிலை இடைச்சொற்களை கூறுமிடத்து உரையாசிரியர்களிடையே இருவேறு கருத்துக்கள் தென்படுகின்றன. பிரிவிலசைகள் என்பதற்கு தொல்காப்பிய உரையாசிரியர்கள், இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனாவரையர் ஆகியோர்கள் "இரட்டித்து வரும்"[35] என விளக்கம் எழுதியிருக்கின்றனர். ஆனால் நச்சினார்க்கினியர் மட்டும் "தாம் சார்ந்த சொற்களின் பொருட்களைப் பிரிதல் இன்றி உணர்த்தும் அசைநிலையாம்"[36] என விளக்கமளித்து சான்றுகள் தருகிறார். இவர் கூறுவது ஏற்கத்தக்கதாக அமைகிறது. பிரிதலின்றி பொருள் உணர்த்தக்கூடியதாக வருகிறது.

சான்றுகள்:

1. ஆக - காரெதிர் கானம் பாடினேமாக (புறம்.144;3)
2. ஆகல் - அருளா யாகலோ கொடிதே (புறம்.144;1)
3. என்பது - எறிதிரை இமிழ்கானல் எதிர்கொண்டான் என்பதோ துறந்ததை (கலி.127;11-13)

இவருடைய கருத்தை பிரிவிலசைக்கு மிகவும் பொருத்த முடையது என்று தி. நடராஜன் சங்க இலக்கியச் சான்றாதாரங்களைக் கொண்டு நிறுவுகிறார்.

சான்றுகள்

1. "ஆக – யான் தனக்கு உரைத்தன **னாக** (குறுந்.265)
2. ஆகல் – அருளாய் **ஆகலோ** கொடிதே (நற்.195)
3. என்பது **–** சான்றோர் செல்வம் **என்பது** (நற்.210)"[37]

மேலும் தி. நடராஜன், 'பிரிவிலசைகள்' என்பது இரட்டித்து வரும் என ஒரு சில உரையாசிரியர்கள் தவறுபட உணர்ந்து விளக்கமளித்தமைக்குக் காரணம்,

"இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா"[38]

என்ற நூற்பாவில் கூறப்பட்டுள்ள, 'பிரிந்திசையா' என்பது, சொல்லாட்சியே என்கிறார். ஆனால் பொன்.கோதண்டராமன், 'ஆக' என்பது ஏழாம் வேற்றுமைப்பொருளில் வரும் ஒரு சொல்லுருபாகக் கொள்ளலாம் என்கிறார்.

'வளவன் அரசனாக இருக்கிறான்'

'வளவன் அன்பாகப் பழகுகிறான்'

'வளவன் கோபமாக இருக்கிறான்'

இவ்விடங்களில் அரசநிலையில், அன்புநிலையில், கோபநிலையில் எனப் பொருள் வரவால் 'ஆக' என்பது நிலை என்னும் பொருளில் வந்ததாகக் கொண்டு அதை ஏழாம் வேற்றுமையில் அடக்கலாம்"[39] என்கிறார். இக்கருத்து ஏற்கக்கூடிதாக இல்லை. இதனால் 'ஆக' என்பது அசைநிலை இடைச்சொல்லாகவே வரும் எனக் கருத முடிகிறது.

ஆக (உயர்வு பொருள்)

திருமந்திரத்தில் ஆக என்னும் சொல் உயர்வு சிறப்புப்பொருளில் பயின்று வந்துள்ளது. இவை15 இடங்களில் பயின்று வந்துள்ளன.

"அதுபதி**யாக** அமருகின்றானே" (18:4)

"அப்பரி**சாக** அமர்ந்திருந்தாரே" (124:4)

இவ்வரிகளில் பிரிவிசைச்சொல்லாக பயின்று வந்துள்ளது.

"என்னை நன்**றாக** இறைவன் படைத்தனன்

தன்னை நன்**றாக** தமிழ்ச்செய்யு மாறே" (63:3-4)

இவற்றில் ஆக எனும் சொல் நன்றாக என்னும் உயர்வு பொருண்மையில் வந்துள்ளன.

"மண் முத**லாக** வகுத்துவைத் தானே" (283:4)

மூலாங்க**மாக** (74:3), கூறாங்க**மாக** (89:2), போதக**மாக** (192:2), வல்லது**வாக** (194:3), வீடுபே**றாக** (347:3),

இப்பாடல் வரியில் வேதங்களை (தத்துவங்களை) நிலம் முதல் நாதம் வரை (36) என வகுத்து வைத்துள்ளதை குறிப்பிட்டு அதன் பொருண்மை நிலையை காண்பிக்கிறது.

ஆக - பிறிது பொருள்

பேறங்க **மாகப்** விளைவுசெய் தப்புறம் (89:3)

அங்கு – அசைநிலை

இவ்விடைச்சொல் மூன்று இடங்களில் பயின்று வந்துள்ளன.(42:3)

உனரடி செய்**தங் கொ**ருங்கவல் லார்க்குச்

தானமர்ந் தோருந் தனித்தெய்வ **மற்றி**ல்லை (103:7)

மனம் ஒருமைப்பட்டுத் தியானிப்பவர்க்கு சிவபெருமான் அவருள் நிறைந்து நிற்பான். இதில் அங்கு அசைநிலையாக வந்துள்ளது.

நின்**றங்கி**ளைக்கின்ற (99:2), கலந்**தங்கு** (189:3), வண்**டுங்கி**னமலர் (367:1)

அன்றே – அசைநிலை

ஆணவ மாதி யடைந்தகன் றோ**ரன்றே** (307:3)

சகலம், சுத்தம், பரம் முதலிய அவத்தை வகைகளையும் கடந்தோர் சிவமேயாகி விடுவர்.

ஆங்கு - அசைநிலை

ஆங்கு என்ற அசைநிலை இடைச்சொல் நான்கு இடத்தில் வந்துள்ளன.

தம்தவ நற்கரு மத்துநின் **றாங்**கிட்டு (379:3)

தவமாகிய நல்லச் செயலைத் தவறாது செய்யப்படுவது.

ஆங்குநெரித்து (154:3), **ஆங்கு**யிர் (201:4), நின்**றாங்கு** (420:3)

மேலும் சொற்கள் பயின்று வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆகல், என்ற சொல் திருமந்திரத்தில் பயன்படுத்தவில்லை.

ஆம் - அசைநிலை

இகழ நின்றார்க்கும் இடும்பைக்கு இட**மாம்** (475:2)

சிவனை இகழ்ந்து உரைப்பாருக்கு துன்பத்திலும் துன்பம் வந்து சேரும்.

ஆல் – அசைநிலை

மிதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி

யுதாசனி யாது உடனேயிருந் தோ**மால்** (73:4)

இங்கு பதி, பசு, பாசம் ஆகியவற்றோடு இருந்தோம் என்க. இதில் வரக்கூடிய ஆல் என்பது அசைநிலையில் வந்துள்ளது.

ஆர் – அசைநிலை

முடிசேர் மலைம**கனார்** மகள் ஆகித் (151:2)

மலைமகனாரின் மகள் (பர்வதராஜன் மகள்)

இங்கு - அசைநிலை

இங்கு என்ற சொல் ஒரு இடத்தில் மட்டும் அசைநிலைச்சொல்லாக வந்துள்ளது.

கோலிங்க மஞ்சருள் கூடலு மாமே (183:4)

சிவபெருமான் எல்லாவற்றிலும் கலந்தவனாய் அவற்றைக் கடந்து தன்னை வழிபடுவார்க்கு அருளுபவன்.

என அசைநிலை

என என்ற சொல் அசைநிலையில் ஒரு இடத்தில் மட்டும் பயின்று வந்துள்ளது.

மலம் களைந்தா**மென** மாற்றி அருளி(116:1)

சிற்றம்பலத்தில் நடனமிடும் சிவபெருமான், உன் மலங்களை நீக்குகிறோம் என்று கூறி, அவ்வாறே நீக்கித் தன்னைத் தந்தான்.

ஏ - அசைநிலை

யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை **தானே** (419:4)

காட்டுகி**லானே** (54:4)

உண்ணும் வேளையில் ஒரு கைப்பிடி அரிசி அல்லது உணவு எடுத்து அனைவராலும் கொடுக்க இயலும். தான் என்பது அசைநிலையாக வந்துள்ளது.

ஓரும் - அசைநிலை

தானமர்ந் **தோருந்** தனித்தெய்வ மற்றில்லை (103: 7)

இதில் வரும் ஓரும் அசைநிலையாகப் பயின்றுள்ளது.

மற்று - அசைநிலை

தானமர்ந் தோருந் தனித்தெய்வ **மற்றி**ல்லை (103: 7)

சிவனைத் தவிர பிற கடவுளை எல்லாம் நினைக்க இங்கு யாருமில்லை. **மற்ற**வ்வி (97:3)

கண்டீர் - அசைநிலை

மண்ணொன்று **கண்டீர்** இருவகைப் பாத்திரம் (107:3)

இதில் மண் என்பது ஒன்றுதான். அதில் வனையும் பாத்திரம் இருவகை. மண்ணைச்சுட்டு பாத்திரம் வனையலாம். பிறகு அதுவே உடைந்து நீரில் கரைந்து மண்ணாகவே போய்விடும். இதில் இருவகைப் பாத்திரம் என்பது ஆண், பெண் ஆகும்.

தான் - அசைநிலை

ஈசன் உறவுக்கு எதிர்இல்லை **தானே** (16:4)

மக்கள் சிவபெருமானை ஏனைய தேவருடன் ஒப்புமை வைத்து எண்ணினாலும் அவனுடன் கொள்ளும் உறவே சிறந்தது. அதற்கு எதிர் இல்லைதான் என்ற பொருளில் அசைநிலையாக தான் என்ற சொல் வந்துள்ளது.

வாழி - அசைநிலை

தொல்காப்பியர் சுட்டாத வாழி என்ற பொருளில் அசைநிலையாக வந்துள்ளது.

வாழி சதுமுகன் வந்து வெளிப்படும் (185:2)

இதனோடு அத்தை, இத்தை, இக போன்ற அசைநிலைகள் பயின்றுவரவில்லை.

இசைநிறைச் சொற்கள்

இடைச்சொற்களின் பாகுபாட்டில் இசைநிறைச்சொற்கள் ஐந்தாவது இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. செய்யுளில் இசையை நிறைவிக்க வரும் சொற்களை இசைநிறைச்சொற்கள் என்று இலக்கண நூல்கள் இவற்றிற்கு இலக்கணம் கூறுகின்றன. இலக்கண நூற்கள் இசைநிறைச் சொற்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. அனைத்து இலக்கண நூற்களும் (தொல்.சொல்.250, நேமி.50, நன்.420, இல.வி.251, தொன்.வி.130 மு.வீ.644) இடைச்சொல்லின் பகுப்புகளுள் ஒன்றாக 'இசைநிறை' யைக் குறிப்பிடுகின்றன. நேமிநாதம் (75) மட்டும் 'இசைநிறை' எனக் குறிப்பிட்டிருந்தாலும் அது எப்பொருளில் வருமெனக் குறிப்பிடவில்லை.

உரையாசிரியர்கள்

இசைநிறைக்கு, சேனாவரையர், "செய்யுட்கள் இசைநிறைத்து நிற்றலின் இசைநிறையாயின"[40] என்று கூறுகிறார். 'செய்யுளுக்கு இசைநிறைத்தலே பொருளாக வருவன"[41] என நச்சினார்க்கினியர் விளக்கமளிக்கிறார். கல்லாடனார் இசைநிறையின் இயல்பினைக் குறிப்பிடுகையில், 'பெயர்பொருளிடத்து பொருளின்றி ஓரோர் அசையை நிறைத்தல் பொருண்மையாய் வருவன"[42] என்கிறார். தெய்வச்சிலையார் விளக்கிக் கூறுகையில், "இசைநிறைக் கிளவியாகி வருநவும் என்பது அசைநிலைக் கிளவி போலப் பிரிந்து நில்லாது ஒரு சொல்லோடு ஒற்றுமைப்பட்டு இசைநிறைத்தல் பொருட்டாகி நிற்பன"[43] என்று உரைக்கின்றார்.

சான்று :

'ஏஎ இவளொருத்திப் பேடியோ' – இதில் 'ஏ'கவனத்தை ஈர்க்கும் பொருளில் வருகின்றது. 'ஏஎ' என நெடில் குறில் என்னும் வரன்முறையில் இருப்பதைத் தொல்காப்பிய உரைகாரர்களில் தெய்வச்சிலையார் மட்டும் இரண்டையும் நெடிகளாகவே 'ஏஎ' எனக்"[44] குறிப்பிடுகின்றார். குரை

என்னும் சொல்லை தொல்காப்பியமும் (சொல்.272) முத்துவீரியமும் (661) இசைநிறைப்பொருளில் வருமெனக் குறிப்பிடுகின்றன.

"ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண்டாகும் இயற்கைய வென்ப"[45]

சான்று

'அளிதோ தானேயது பெறலருங் **குரை**த்தே'

'பெறலருங் குறைத்தே'

என்ற பாடலை வைத்துப் பார்க்கும்போது 'குரை' என்பது வியப்புப் பொருளில் வருவதை அறிய முடிகின்றது. 'ஒடு' என்ற சொல் இசைநிறைப் பொருளில் வரும் என்பதற்கு உரையாசிரியர்கள் குறிப்பிடும் எடுத்துக்காட்டை பார்க்கும்போது இசைநிறைகளுக்குப் பொருள் இல்லை என்றும் அவை இசையை நிறைக்கவே வருகின்றன என்றும், அவற்றின் பண்பாகக் கொள்ளமுடிகின்றது. தெ.பொ.மீனாட்சிசுந்தரன் பழங்காலத்து வடிவங்களை மீட்டுருவாக்க உதவும் மூலங்கள் என இசைநிறைகளைக் குறிப்பிடுகின்றார். அவர் கருத்து பின்வருமாறு, "இசைநிறைகள் என்பவையும் சொற்களும் அமையும் இடைநிலைகளாகும். அவற்றின் பொருள் முழுவதும் இழக்கப்பட்டுவிட்டதால் அவை இசைமைக்காகச் சொற்களின் நீட்சியுடைய மாற்று வடிவங்களாக வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் வழங்குகின்றன. 'அர்' எனும் இசைநிறை 'உள்ளினர் - அரோ - உள்ளினரோ' என்பதில் வருவதை நோக்குக. 'குரை' என்னும் இசைநிறை 'சொல்லுங்குரைத்து' என்பதில் வருவதை நோக்குக. பழங்காலத்துத் துணைவினைகளும் விகுதிகளுமாக இவை இருக்கலாம். பழங்காலத்து வடிவங்களை மீட்டுருவாக்க உதவும் மூலங்கள் இவைகளாகும்."[49] என இசைநிறைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து மொழிக்கு இடையில் வருவனவற்றிற்கு உரைப்பதாகவே அவர் கூறும் சான்றுகள் வழி அறிய முடிகிறது. திருமந்திரத்தில் இசைநிறைச்சொற்கள் ஓரிரு சொல் மட்டுமே பயின்றுவந்துள்ளன.

குரை - இடைச்சொல்

திருமந்திரத்தில் குரை என்னும் சொல் ஒரு இடங்களில் வந்துள்ளன. ஒன்று இசைநிறைத்தும் மற்றொன்று பொருள் தன்மையிலும் காணப்படுகிறது.

குறைந்தடைந்து ஈசன் **குரை**கழல் நாடும் (39:1) (கழல் ஒலிக்கும் திருவடி)

இதில் குரை என்பது இசைநிறைப்பொருளாகப் பயின்று வந்துள்ளது. இதனை குறைந்து அடைந்து நாடும் கழல் எனக்கூட்டுக என்று சுப அண்ணாமலை தமது பதிப்பில் மொழிந்துள்ளார். இவற்றிலிருந்து குரைவராமலும் இருக்கலாம் என்பது புலப்படுகிறது. ஆகவே இந்த இடத்தில் குரை என்பது இசைநிறைக்காக பயன்படுத்தியுள்ளார் என்பது திண்ணம்.

ஓமத்துள் அங்கி **குரை**கட றானே (377:4)

ஓமத்துள் வளரும் நெருப்பையும் கடலோடு சேர்த்து இசைநிறைத்து கூறப்பட்டுள்ளது எனலாம்.

ஒடு, தெய்ய

நன்னூலும், இலக்கண விளக்கமும் ஒடு, தெய்ய எனும் இரண்டு புதிய இடைச்சொற்கள் இசைநிறை மொழியாக வருமெனக் கூறுகின்றன.

"ஒடுவும் தெய்ய இசைநிறை மொழியே"[47]

இந்த இரண்டு இடைச்சொற்களும் தொல்காப்பியர் காலத்திற்குப் பின் புதியதாகத் தோன்றியனவாகும். இவை இரண்டும் திருமந்திரத்தில் பயின்றுவரவில்லை என்பது அறியத்தக்கது. திருமந்திரத்தில் அவ்வளவாக இசைநிறைச்சொற்கள் எதுவும் முதல் ஐந்நூறு பாடல்களில் பயின்று வரவில்லை என்பது இவ்வாய்வின்வழி அறியத்தக்கது.

தொகுப்புரை

தொல்காப்பியர் அசைநிலைகளாக 24 சொற்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் முன்னிலை அசைநிலைகள், பிரிவில் அசைநிலைகள் அடங்கும்.

நன்னூல், தொல்காப்பியம் கூறாத 18 இடைச்சொற்களைப் புதியதாக விளக்குகிறது . இலக்கண விளக்கம், நன்னூலைப் பின்பற்றி இந்த 18 சொற்களுடன் புதியதாக இரண்டு சொற்களைச் சேர்த்து 20 ஆகக் கூறுகிறுது.

நேமிநாதம், முத்துவீரியம், தொல்காப்பியம் கூறிய அசைநிலைகளை மட்டுமே கூறுகின்றன. எனவே இந்த இரண்டு இலக்கண நூல்களும் புதிய இடைச்சொற்களைக் கூறவில்லை என்பது அறியப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் கூறிய அசைநிலை 23 உடன் ஆங்க என்ற சொல்லை இரண்டுமுறை கூறி 24 என மு. இசரயேல் கூறியுள்ளார். இதனை நீக்க 23 சொற்களேயாகும். இதனை குமாரசாமிராஜாவும், செயராமனும் “அம்ம” எனும் சொல்லை நீக்கி 23 சொற்களாகக் கூறுகின்றனர்.

முன்னிலை அசைச்சொற்களாக ஏழு சொற்களைத் தொல்காப்பியம் கூறுகிறது. நன்னூல், தொல்காப்பியம் கூறாத பத்துப் புதிய அசைநிலைச்சொற்களையும் இலக்கண விளக்கம், தொல்காப்பியம் கூறாத 12 சொற்களையும் கூறியுள்ளது.

தொல்காப்பியம் சுட்டாத இசைநிறைகளாக ஒடு, தெய்ய என்ற சொற்களைப் புதியதாக நன்னூலும், இலக்கண விளக்கமும் புலப்படுத்துகின்றன.

பிற்கால வழக்கில் வழங்கும் இடைச்சொற்களாக கூட, ஆவது, எனும், ஆகிலும், ஆயினும், மட்டும், மாத்திரம், மாத்திரமே, டேய், எலே, அடி, ஏடி போன்ற 13 சொற்களை ச. அகத்தியலிங்கம் செப்பியுள்ளார்.

அ.கி. பரந்தாமன் புதிய இடைச்சொற்களாக வாள, அம்மா, இனி, அந்தோ, ஐயா, சிச்சீ, முன், பின் போன்றவற்றைக் கூறியுள்ளார். தொல்காப்பியர் கூறிய இடைச்சொற்களில் ஒள, என்பது என்ற இரண்டும்

பிற்காலத்தில் வழக்கு இழந்துவிட்ட இடைச்சொற்களாகக் காணப்படுகிறது.

இவ்வாய்வின் முடிவில் அசைநிலைச்சொற்கள் குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. இசைநிறைச்சொற்கள் பயின்றுவரவில்லை. அந்த வகையில் திருமூலர் ஒருவிதத்தில் எல்லாச் சொற்களையும் பொருள் தன்மையிலேயே கையாண்டுள்ளார். இதன்மூலம் சொற்களுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்துத் திருமந்திரப்பாடலை படைத்துள்ளார் என்பது இவ்வாய்வைக் கொண்டு தெரிந்து கொள்ளப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. தொல்.சொல்.117
2. ச.வே.சு. தொல். பொருள். 1261.
3. செ.வை.சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு, ப.57
4. சேனா. தொல். சொல்.250
5. ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம் உரைவளம் இடையியல், ப.21
6. மேலது, ப.24
7. மேலது, ப.26
8. ஆறுமுகநாவலர், நன்னூல், சூத்.420
9. மு.இசரேயல், இடையும், உரியும், ப.8
10. குமாரசாமிராஜா, இடைச்சொல் பற்றித் தொல்காப்பியர், பக். 248-249
11. ந.வீ.செயராமன், இடைச்சொல் பற்றித் தொல்காப்பியர், பக்.260-261
12. தொல். சொல்.153
13. மேலது. 262
14. மேலது. 269
15. மோ. இசரயேல், முன்னிலை அசைகள், பக். 247-252
16. ஞா.தேவநேயன், ஒப்பியல் மொழி நூல், ப.307
17. கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், பக்.600 -611
18. சேனா.தொல்.சொல்.276
19. ந.வீ.செயராமன், இடைச்சொல் பற்றித் தொல்காப்பியர், ப.2
20. மேலது, ப.29
21. சிவலிங்கனார், இடையியல் உரைவளம், ப.43
22. மேலது, ப. 47
23. மேலது, ப.36

24. தெ.பொ.மீனாட்சி சுந்தரம், தமிழ் மொழிவரலாறு, ப.87
25. தொல். சொல். 274
26. நன். சொல்.440
27. தொல்.சொல்.275
28. மேலது. 275
29. செ.வை.சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு தொகுதி –III, ப.160
30. தொல்.சொல்.279
31. நன். 441
32. மு. இஸ்ரேல், இடையும் உரியும், ப.23
33. தொல்.சொல்.280
34. சிவலிங்கனார், சொல் உரைவளம் இடையியல், ப.135
35. இளம்.தொல்.சொல்.275,
36. தெய்.சொல்.279,
37. சேனா.280
38. நச்.தொல். சொல்.282
39. தி.நடராஜன், ஆக, ஆகல், என்பது என்னும் இடைச்சொற்கள், பக்.701-706
40. தொல்.சொல்.48
41. பொன்.கோதண்டராமன், இலக்கண உலகில் புதியபார்வை, பக்.94-102
42. சேனா. தொல்.சொல். 252
43. நச்.தொல்.சொல். 252
44. கல். தொல்.சொல். 252
45. தெய். தொல். சொல். 249
46. தெய். தொல்.சொல். 268

47. தொல்.சொல். 272

48. தெ.பொ. மீனாட்சி சுந்தரம், தமிழ் மொழிவரலாறு, ப.51

49. மணிவாசகன், நன்.436

இயல் நான்கு

திருமந்திரத்தில் தத்தம் குறிப்பு, ஒப்பியல், பிற இடைச்சொற்கள்

தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ள இடைச்சொல் வகைகளுள் ஆறாவது வகையாக தத்தம் குறிப்புச்சொற்கள் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியத்தை பின்பற்றி நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய இலக்கண நூல்களும் இவ்வகையைச் சுட்டியுள்ளன. இவற்றுள் நன்னூலும், தொன்னூல் விளக்கமும் சற்று மாறுபட்டு காணப்படுகின்றன. அதாவது, தத்தம் குறிப்புச் சொற்களை, 'தத்தம் பொருள்', 'குறிப்பு' என இரண்டாகப் பகுத்து இவ்விரு இலக்கண நூல்கள் இயம்புகின்றன. ஆனால் இவ்விரு நூல்கள் 'குறிப்பு' என்பது என்னவென்றும் குறிப்பு பொருளில் வரும் இடைச்சொற்கள் எவை என்பதையும் குறிப்பிடவில்லை.

இடையியல் என்னும் இயலில் தொல்காப்பியம் 'தத்தம் குறிப்புச்சொற்கள்' என இடைச்சொல்லின் வகைகளுள் ஒன்றாகக் கூறியுள்ளதே தவிர அதற்கான வரையறையோ விளக்கத்தையோ தரப்படவில்லை. மாறாக இவ்வியலில் சில சொற்களையும் சில எழுத்துக்களையும் குறிப்பிட்டு அவற்றிற்குப் பொருள் வரையறுத்துள்ளது.

தத்தம் பொருள் தரும் குறிப்புச் சொற்களாக தொல்காப்பியம் குறிப்பிடுவன; மன், தில், கொன், உம், ஓ, ஏ, என, என்று, எற்று, மற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், அந்தில், ஆங்க, கொல், எல், ஆர், அம்ம, ஒள, எனா, என்றா, உந்து, ஓடு என்பனவாகும், (சொல். 252-260, 262-270, 276, 281, 289, 292, 294)

நேமிநாதம் கூறுவன: உம், மன், கொன், தில், என, என்று, மன்ற, தஞ்சம், என்றா, எனா, ஓ, ஏ என்பனவாகும். (நூற்.76-79)

நன்னூல்: ஏ, ஓ, என, என்று, உம், எனா, என்றா, ஓடு, தில் என இயம்பியுள்ளது.

இலக்கண நூல்களில் தத்தம் பொருள் தரும் குறிப்புச்சொற்கள்

தொல்	நேமி	நன்	இல. வி	தொ.வி	மு.வீ
மன் தில் கொன் உம் ஏ என என்று எற்று மற்று மற்றை(யது) மன்ற தஞ்சம் அந்தில் ஆங்க கொல் எல் ஆர் அம்ம ஒள எனா என்றா உந்து ஓடு (252-260) (262 - 270) 276, 281, 289, 292, 294	உம் மன் கொன் தில் என என்று மன்ற தஞ்சம் என்றா எனா ஓ ஏ (76 - 79)	ஏ ஓ என என்று உம் என என்றா ஓடு தில் மன் மற்று மற்றைய(யது) கொல் அந்தில் ஆங்கு அம்ம உந்து (422 - 425) 428, 431, 434, 437, 438, 441)	ஏ ஓ என என்று என்றா ஓடு மன் தில் கொன் மற்றை (யது) மன்ற தஞ்சம் அந்தில் அம்ம கொல் மற்று எற்று (252, 253, 255, 256, 259, 263 - 271, 273, 274)	ஏ ஓ என என்று உம் எனா என்றா ஓடு (131–134, 136)	மன் தில் கொன் ஓ ஏ என என்று மற்றை (யது) மற்று எற்று மன்ற தஞ்சம் ஆங்கு கொல் எல் அம்ம ஆர் உம் (645–659, 664)

தத்தம் பொருள் உணர்த்தும் குறிப்புச்சொற்களும் பொருளும்

வ.எ.	சொ.	தொல்	நேமி	இல.வி	தொன்.வி	மு.வீ
1.	மன்	கழிவு, ஆக்கம், ஒழியிசை (252)	கழிவு, ஆக்கம், ஒழியிசை (77)	கழிவு, ஆக்கம், ஒழியிசை (263)	-	ஆக்கம், ஒழியிசை, கழிவு (645)
2.	தில்	விழைவு, காலம், ஒழியிசை (253)	விழைவு, காலம், ஒழியிசை(77)	விழைவு, ஒழியிசை (264)	-	விழைவு, காலம், ஒழியிசை 647)
3.	கொன்	அச்சம், பயமிலி, காலம், பெருமை (254)	காலம், பெருமை, அச்சம், பயனின்மை (77)	அச்சம், பயமிலி, காலம், பெருமை (265)	-	அச்சம், பயமிலி, காலம், பெருமை (647)
4.	உம்	எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் (255)	தெரிநிலை, ஆக்கம், சிறப்பு, அச்சம், முற்று, எண், எதிர்மறை, ஐயம் (76)	எதிர்மறை, சிறப்பு, எண், எச்சம், முற்று, (256) ஆக்கம், தெளிவு (134)	எதிர்மறை , எச்சம், முற்று, அளவை, ஐயம், சிறப்பு, ஆக்கம் (648)	எதிர்மறை, எச்சம், முற்று, எண், தெரிநிலை, ஐயம்
5.	ஓ	பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு (256)	சிறப்பு, வினா, தெரிநிலை, எண், எதிர்மறை, ஒழியிசை, ஈற்றசை (79)	ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறைதெரி நிலை, கழிவு (253)	பிரிப்பு, அசைநி லை, ஒழிவு, எதிர்மறை வினா, தெளிவு, கழிவு, சிறப்பு (132)	தெரிநிலை, எதிர்மறை, சிறப்பு, பிரிநிலை, ஒழியிசை, வினா (649)
6.	ஏ	தேற்றம், வினா, பிரிநிலை,	தேற்றம், வினா, எண், பிரிநிலை, ஈற்றசை .(76)	தேற்றம், வினா, எண், பிரிநிலை, எதிர்மறை,	-	எண், பிரிநிலை, தேற்றம்,

		எண், ஈற்றசை. (259)			ஈற்றசை (252)		வினா (650)
7.	**என**	வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர்(258, 259)	வினை, பெயர், எண், இசை, குறிப்பு, பண்பு (78)	வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு (424)	வினை, பெயர், குறிப்பு, இசை, பண்பு, எண் (255)	உவமை, எண், குணம், வினை, பெயர், குறிப்பு, இசை (133)	எண், குறிப்பு, இசை, பண்பு, வினை, பெயர் (651)
8.	**என்று**	வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர்(258, 259)	வினை, பெயர், எண், இசை, குறிப்பு, பண்பு (78)	வினை, பெயர், எண், இசை, குறிப்பு, பண்பு (424)	வினை, பெயர், குறிப்பு, இசை, பண்பு, எண் (255)	உவமை, எண், குணம், வினை, பெயர், குறிப்பு, இசை வினைமாற்று (133)	எண், குறிப்பு, இசை, பண்பு, வினை, பெயர் இசைநிலை (653)
9.	**மற்று**	வினைமாற்று, அசைநிலை (262)	-	வினை மாற்று, அசைநிலை, பிறிது (433)	-	வினைமாற்று	இசைநிலை (653)
10.	**எற்று**	இறந்த பொருள் (263)	-	-	-	-	இறந்த பொருள் (654)
11.	**மற்றையது**	இனங் குறித்தல் (264)	-	இனங்குறித்தல் (434)	இனங்குறித்தல் (268)	-	இனங்குறித்தல் (658)
12.	**மன்ற**	தேற்றம் (265)	தேற்றம் (78)	-	தேற்றம் (270)	-	தெளிவு (655)

13.	**தஞ்சம்**	எண்மை (266)	எண் (78)	-	எண்(27)	-	எண்(655)
14.	**அந்தில்**	இடம், அசைநிலை (267)	-	அசைநிலை, இடம் (437)	அசைநிலை, இடம் 273)	-	அசைநிலை, இடம், (657)
15.	**கொல்**	ஐயம்	-	ஐயம், அசைநிலை (435)	ஐயம், அசைநிலை (269)	-	ஐயம் (658)
16.	**எல்**	இலக்கம் (269)	-	-	-	-	விளக்கம் (658)
17.	**ஆர்**	இயற்பெயர்ப் பின்வரும் (270)	-	-	-	**-**	இயற்பெயர் பின்வரும் (659)
18.	**அம்ம**	கேட்பிக்கும் (275)	-	கேட்பித்தல், உரையசை (436)	கேட்பித்தல், அசைநிலை (274)	**-**	**-**
19.	**ஒள**	குறிப்பின் இசையால் வேறுபடும்(281)	-	-	-	**-**	**-**
20	**எனா**	எண் (289)	எண் (78)	எண் (438)	எண் (259)	எண் (136)	**-**
21	**என்றா**	எண் (289)	எண் (78)	எண் (438)	எண் (259)	எண் (136)	
22	**உந்து**	திரிந்து வருதல் (292) உரை யாசிரியர்	-	-	-	-	**-**
23	**ஒடு**	எண் (294)	-	எண் (429)	எண் (259)	எண் (136)	**-**

'தொல்காப்பியம் தத்தம் குறிப்பால் பொருள் செய்குவன' என்னும் வகையுள் முதலாவதாகக் குறிப்பிடும் இடைச்சொல் மன் ஆகும். இவ்விடைச்சொல் கழிவு, ஆக்கம், ஒழியிசை என்னும் மூன்று குறிப்புப் பொருளைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அவை,

"கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவி என்று

அம்மூன்று என்ப மன்னைச் சொல்லே"[1]

எனும் நூற்பாவழி அறியலாம். ஆனால் நன்னூல், தொல்காப்பியம் கூறும் மூன்று பொருளோடு மிகுதி, நிலைபேறு, அசைநிலை என்னும் மூன்றினையும் சேர்த்து ஆறு பொருளில் வரும் என்றுரைக்கிறது. நேமிநாதமும் முத்துவீரியமும் தொல்காப்பியம் கூறுவனவற்றை அப்படியே பின்பற்றுகின்றன. இலக்கணவிளக்கம் தொல்காப்பியம் குறிப்பிடுவதோடு அசைநிலையினையும் சேர்த்து நான்கு என்று குறிப்பிடுகிறது.

"மன்னே அசைநிலை ஒழியிசை அசைநிலை

கழிவு மிகுதி நிலைபேறு ஆக்கம்"[2]

எனும் நூற்பாவழி நன்னூலார் விளம்பியுள்ளார். இன்றைய ஆய்வில் 'மன்' இடைச்சொல்லை ஆய்வு செய்த இசரயேல் மிகுதி, உறுதி ஆகிய இரண்டையும் சேர்த்து ஏழாகக் கூறியுள்ளார். மேலும் உறுதி, மிகுதி ஆகிய பொருள்களில் சங்க இலக்கியத்தில் வந்துள்ளன என்ற கருத்தினையும் பதிவு செய்துள்ளார்.

1. கழிவு – சிறியகள்பெறினே எமக்கீயும் **மன்**னே (புறம்.235)
2. ஆக்கம் – பண்டுகாடு**மன்** இனிக்கயல் பிறழும் வயலாயிற்று
3. ஒழியிசை – கூரியதோர் வாள்**மன்**
4. அசைநிலை – என்னை **மன்!** நின் கண்ணால் (கலி.39)
5. மிகுதி – **மன்**னு மாதர் பெருங்கற் பென்றறிந்தேன் (சிலம்பு.73:4)
6. நிலைபேறு – மன்னா உலகத்து **மன்**னுதல் குறித்தோர் (புறம்.165:1)

7. உறுதி – உறுவது ஒன்று உண்டு**மன்** (குறுந்.303)

தொல்காப்பியத்திலிருந்து நன்னூல் மிகுதியாக மூன்று பொருள்களைக் கூறுவதை, நம் ஆய்வின் மூலம் "மன்" இடைச்சொல்லின் வளர்ச்சி நிலையெனக் கொள்ளலாம். ஆனால் இலக்கண விளக்கம் மிகுதி, நிலைபேறு என்னும் பொருள்களை ஒழித்து அசைநிலையை மட்டும் கூறுகிறது. எனவே இலக்கண விளக்க ஆசிரியர் மிகுதி, நிலைபேறு என்னும் இரண்டையும் ஆக்கம் என்னும் பொருளில் அடக்கி கூறியுள்ளார் என மொழியலாம். எனவே இலக்கண விளக்கம் இலக்கியப் பயன்பாட்டைக் கொண்டு "மன்" என்னும் சொல்லிற்குப் பொருள் கூறியுள்ளது. பிற்காலத்தில் "செ.வை.சண்முகம் 'மன்' என்னும் சொல் தேற்றப் பொருளில் வரும் என்றும், 'மன்' என்னும் சொல் மன்ற என்னும் இடைச்சொல்லின் மாற்று வடிவம் என்றும்"[3] கூறுகிறார். எனவே,

"மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்"[4]

என்னும் நூற்பாவால் "மன்ற" என்பது தேற்றப்பொருளில் வருமெனத் தொல்காப்பியம் சுட்டுகிறது. தேற்றப்பொருளில் "மன்ற" என்னும் சொல் மன் என்னும் சொல்லின் மாற்று வடிவமென செ.வை.சண்முகம் குறிப்பிட்டதற்குச் சான்றாக,

"உறுவது ஒன்று உண்டுமன்"[5]

என்னும் அடிகளை எடுத்துக்காட்டி 'மன் உண்டு' என்பதற்கு உறுதியாக உண்டு என்ற பொருள் புலப்படுகிறது. அது வினையடையாக அமைந்துள்ளது. எனவே மன் உண்டு என்பதே உண்டுமன் என்று மாற்றம் பெற்றுள்ளது. எனவே இதன் கருத்து மேற்கூறிய தொல்காப்பிய நூற்பாவழி அமைந்துள்ளது என்று தெளியலாம். மோ. இசரயேல் உறுதிப் பொருளில் வழங்குவதைக் கூறி "உறுவது ஒன்று உண்டுமன்" என இதே சான்றைக் காட்டியுள்ளார். செ.வை. சண்முகம் கூறிய தேற்றப் பொருளையும், இசரயேல் கூறிய உறுதி என்ற தெளிவுப்பொருளையும்

ஒரே பொருளாகக் கூறமுடியும். அதாவது தெளிவு என்பதும் தேற்றம் என்பதும் தெளிவு என்ற பொருளையே தருகின்றது எனக்கொள்ளலாம். மேலும் தேற்றம், தெளிவு இரண்டும் உறுதிப் பொருளில் வரும் என்றும் கூறமுடியும். திருமந்திரத்தில் வரும் மன் இடைச்சொல்லின் பொருண்மை நிலையை இங்கு காணலாம்.

மன் - இடைச்சொல்

மன் - ஆக்கம்

"வந்த மடமேழும் **மன்**னுஞ்சன் மார்க்கத்தில்

முந்தி யுதிக்கின்ற மூலன் மடவரை" (83:1)

அதாவது, சைவ-சிவ நெறி பரப்ப வந்த திருமடங்கள் ஏழு. அந்த ஏழு மடங்களுள்ளும் நிலையான சன்மார்க்க நன்னெறியில் நின்று திருத்தொண்டு செய்ய முதன்முதலாகத் தோன்றியது திருமூலரின் திருமடமாகும். இவ்வரியில் நிலையான சன்மார்க்க நெறி தோன்றியது என்னும் ஆக்கப்பொருளில் வந்து பொருள் உணர்த்தியுள்ளது.

மன் – ஆக்கம், சிறப்பு

இதில் மன் என்ற சொல் இரண்டு பொருளிலும் பயின்றுவந்துள்ளது.

காயம் இரண்டுமை கலந்து கொதிக்கி**னும்** (16:2)

பெருங்காயமும், கத்தூரியும் கலந்து கொதிக்க வைத்தால், பின்னதன் கத்தூரியின் மணமே மிகுந்து நிற்கும். அதே போல் சிவனை ஏனைய பிற தேவர்களுடன் ஒப்ப வைத்து எண்ணிலாலும் சிவனுடன் கொள்ளும் உறவே சிறந்தது என்று, ஆக்கப்பொருளிலும் சிறப்புப்பொருளிலும் வந்துள்ளது.

மன் - அழிவு

திருமந்திரத்தில் அழிவுப் பொருளில் ஒரு பாடல் பயின்று வந்துள்ளது.

"புறம் அறியார் பலர் பொய்மொழி கேட்டு

மறம் அறிவான் பகை**மன்**னி நின்றேனே" (429:4)

வெளிப்புறத்தையும் நெருங்க இயலாதவர், நல்ல அறச் செயல்களைச் செய்யத் தெரியாதவர்கள், சிவபரம்பொருளின் திருவடி நினைத்துப் போற்றும் பக்தி வழியை அறிய மாட்டார்கள். இவர்கள் பலரது பொய்களை நம்பி மிக்க பகையைத் தேடிக்கொண்டு வாழ்கின்றவர்கள் அவனுடைய குணம், செயல்களால் யாவரும் சிவனுக்கு நிலையான அழிவுக்கு பகையாவர்.

மன் - பெருமை

திருமந்திரத்தில் தொல்காப்பியர் சுட்டாத பெருமைப் பொருளில் மன் பயின்று வந்துள்ளது.

"பணிகிணும் பார்மிசைப் பல்லுயிர் ராகித்

தணிகினும் **மன்**னுட லண்ணல்செய் வானே" (229:4)

என்ற பாடலடியில் பணிந்து தொழுதால் பிறவி தோறும் பொன்னிறமான நல்ல உடம்பளித்து சிவபெருமான் உதவி நிற்பான். அவனை அடைந்தால் நமக்கு பயன் மட்டுமே கிடைக்கும். ஆகையால் இதில் வரும் மன் என்ற சொல் சிவபெருமானை வணங்கும் பெருமை பொருளில் வருகிறது என்று மணிவாசகம் உரையின் மூலம் அறியப்படுகிறது.

தஞ்சம் - இடைச்சொல்

தஞ்சம் என்னும் சொல் எளிமை என்னும் பொருளைத் தரும் என்கிறது தொல்காப்பியம். இலக்கணவிளக்கமும், முத்துவீரியமும் இச்சொல்லைப் பற்றி விளக்குகின்றன. ஆனால் நேமிநாதமும்,

நன்னூலும் இதனைப் பற்றிக் கூறவில்லை. இச்சொல்லானது திருமந்திரத்தில் இடைச்சொல்லாக புலப்படவில்லை. தஞ்சம் அடைதல் (அ) புகலிடம் என்ற பொருளில் வந்துள்ளது.

திருவடியே **தஞ்சம்** முட்டொளி வார்க்கே (136:4)

என்ற பாடல் அடியில் மெய்ப்பொருள் அறிவு பெற்றோருக்கும் சிவனின் திருவடியை அடைவது எளிமை என்று பொருளில்லாது தஞ்சம் அடைதல் என்று வந்துள்ளது.

உம் - இடைச்சொல்

உம் என்னும் இடைச்சொல் எட்டுப்பொருளில் வரும் என தொல்காப்பியர் சுட்டியுள்ளார். அவை எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்பனவாகும். இதனை,

"எச்சம் சிறப்பு ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை யாக்கமென்று
அப்பால் எட்டே உம்மைச் சொல்லே"[6]

இந்நூற்பா வழி அறியலாம். இலக்கியங்களில் பயன்படும் இடைச்சொற்களில் உம்மைச் சொல்லே மிகுதியானது என்று சா.வே.சு கூறியுள்ளார்."[7]அது முற்றிலும் உண்மை. ஏனெனில் திருமந்திரத்திலும் அதிகப்படியாக பயின்று வந்துள்ள இடைச்சொல் உம் இடைச்சொல்லே ஆகும். மேலும் உம் என்னும் இடைச்சொல் சங்க இலக்கியத்திலும் அற இலக்கியத்திலும் அதிகமாக பயின்று வந்துள்ளதை 'பத்துப்பாட்டில் இடைச்சொற்கள்', 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடைச்சொற்கள்' என்ற ஆய்வுத் தலைப்பு மூலம் பல்வேறு இடங்களில் அதிகப்படியாக பயின்று வந்துள்ளதை முன்னோடி ஆய்வுகளை வைத்து தெரிந்துகொள்ள முடிகின்றன.

பிற்கால இலக்கண நூல்களான நன்னூல், நேமிநாதம், இலக்கண விளக்கம், முத்துவீரியம் போன்றவை உம்மைச் சொல்லை எட்டாகப்

பகுக்கின்றன. ஆனால் நன்னூல் மட்டும் தொல்காப்பியர் கூறிய "எண்" எனும் பொருளுக்கு அளவை என்னும் மாற்றுப்பொருளைக் கூறுகிறது.

"எதிர்மறை சிறப்புஐயம் எச்சம்முற்று அளவை"[8]

இதற்கு உரையெழுதிய நன்னூல் உரையாசிரியர்கள் எண் என்பதும் அளவை என்பதும் ஒன்றே எனக் கூறியுள்ளனர். இவை முற்றிலும் பொருந்தாது. காரணம் "எண்" என்பது வேறு, அளவை என்பது வேறு. எண் என்பது எண்ணிக்கையிலும், அளவை என்பது அளத்தல் தன்மையிலும் (நாழிகை, கலம்) அமையும் என்பதைக் குறிக்கிறது. ஆகவே தொல்காப்பியர் கூறிய எண்ணும்மை நன்னூலார் காலத்தில் வழக்கிழந்து அளவைப் பெயராக மாற்றம் பெற்றுள்ளது என்பது நம்மால் அறியமுடிகிறது. மேலும் உம் என்னும் இடைச்சொல் இக்காலத்தில் புதிய பொருள்களில் வழங்குவதை எஸ். ஆரோக்கியநாதன் சுட்டிக்காட்டியுள்ளார். அவை எங்கே, எப்பொழுது, எப்படி, எல்லாம், யார் போன்ற வினாச்சொற்களுடன் உம் என்னும் இடைச்சொல் இடம்பெறுகிறது என்கிறார்.

சான்று : "எங்கே – எங்கே**யும்** போவேன்?

எப்படி – எப்படி**யும்** கொடுக்க மாட்டான்?

யாரும் – யா**ரும்** வரமாட்டான்

எல்லாம் – எல்லா அறையை**யும்** பெருக்கினான்?"[9]

சிறப்பு - உம் விதி

உம் வரும் இடைச்சொல்லை தொல்காப்பியர் கிளவியாக்கத்திலே கூறியுள்ளார்.

"இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு

வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்"[10]

இந்நூற்பா இவையெனத் தெளிவாகத் தெரிந்த சினைகிளவிக்கும் முதற் கிளவிக்கும் "உம்" கொடுக்க வேண்டும் என்கிறது. இதற்குச் சான்றாக

உரையாசிரியர்கள், முடிவு பெறும் வகையில் உம் உம்மை வரும் என்கின்றனர்.

"பன்னிரு **கையும்** பாற்படயியற்றி"[11]

"முரசு முழங்குதானை **மூவரும்**கூடி"[12]

என்பவற்றைச் சான்று காட்டியுள்ளனர். இதில் 'பன்னிருகையும்' என்பதில் முருகன் பன்னிரு கைகளை உடையவன் எனத் தெளிவாக கூறுவதற்காக "உம்" இடம் பெற்றுள்ளது எனலாம். இரண்டாவது சான்றில் "மூவரும்" என்னும் சொல் மூவேந்தர் எனத் தெளிவாகக் காட்டுகிறது. இதே போன்று சேனாவரையரும்,

சான்று; "இருநிலம் அடிதோதலிற் திருமகளும்
அல்லள் அரமகளும் அல்லள் இவள்
யாராகும்"[13]

தெளிவாக இச்சான்றை எடுத்துக்காட்டி தெரிநிலை என்பது தெளிவுப் பொருளில் உணர்த்தும் எனக் கூறியுள்ளார். இனித் திருமந்திரத்தில் உள்ள உம் இடைச்சொல்லை அறியலாம்.

உம் - உயர்சிறப்பு

திருமந்திரத்தில் சிவபரம்பொருளின் பெருமையைக் கூறுவதால் பெரும்பான்மையும் உயர்வு சிறப்பு உம்மையையே பெற்று வந்துள்ளன.

"சிவனொடொக் குந்தெய்வந் தேடி**னும்** இல்லை
அவனொடுப் பார்இங்கு யாவ**ரும்** மில்லை" (5:1, 2)

இப்பாடலின் மூலம் சிவபெருமானுக்கு நிகராக வேறு எந்த தெய்வமும் ஒப்பிடும் அளவிற்கு இல்லை என்று உயர்சிறப்பில் எடுத்து காண்பிக்கப்பட்டுள்ளது.

"அற்ற**மும்** நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத**மும்** அளித்தான் எங்கள் நந்தியே" (56:2-3)

நான் நினைக்கும் வண்ணமே எனக்கு உண்மை ஞானத்தினை நல்கி, என் தலையினில் பாத கமலத்தினைச் சூட்டினான் என்று உயர்சிறப்பு பொருளில் பயின்று வந்துள்ளது.

துதிவழி நித்த**லும்** சோதிப்பிர**ானும்** (44:3)

நாளும் சிவனை வாழ்த்தினால் நம் வலக்கண் ஆகிய சூரியனை நிலைப்படுத்தி அவனைக் கொண்டு நம் உச்சந்தலையில் உள்ள சகஸ்ராரத்தை நம் உயிருணர்வு சென்றடைய வழிக்காட்டுவான் எனும் உயர்ச் சிறப்பில் வந்துள்ளது.

உம் - சிறப்பு

"ஓம்மே**வும்** ஓம ஆகுதி அவிஉண்ணவே" (393:4)

மந்திரத்தின் சிறப்பு பொருள்.

முற்றும்மை

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்க

னிந்திரன் சோமன் பிரம னுருத்திரன்

கந்துருக் காலாங்கி கஞ்சன் மலைனோ

டிந்த **வெழுவரும்** எண்வழி யாமே" (52:4)

இப்பாடலில் வரும் எழுவரும் என்பது முற்றும்மையைப் பெற்று வந்துள்ளது.

"முன்னையொப் பாயுள்ள மூவர்க்**கும்** மூத்தவன்" (6:1)

எனும் பாடலில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரியும் மூவருள் சிவனே தலைவன் என்று தெளிவாக மூவர்க்கும் என சுட்டியதால் இவை முற்றும்மை பெற்றுள்ளது.

"பருவூசி **ஐந்தும்** பறக்கும் விருகம்"

பருவூசி **ஐந்தும்** பனித்தலைப் பட்டாற்" (357:2,3) (ஐந்தும் – ஐம்பொறி)

எச்சவும்மை

உறைப்பொடும் கூடி அடிதோறும் **ஓதலும்** ஆமே (67:4)

இவற்றில் இறந்ததும் தழிவிய எச்ச உம்மையைப் பெற்றுள்ளது.

தா**னும்** நின்றான் தழல்தான் ஒக்கும் (36:2)

இப்பாடல் வரியில் எதிரது தழுவிய பெயரெச்ச உம்மையைப் பெற்று வந்துள்ளது.

எண்ணும்மை

திருமந்திரத்தில் எண்ணும்மை எனும் இடைச்சொல் அதிகமாக பயின்று வந்துள்ளது. மேலும்,

"பெற்ற**மும்** மா**னும்** மழு**வும்** பிரிவற்ற

தற்பரன் கற்பனை ஆகும் சராசரத்து" (56:1)

எனும் பாடல் வரியில் காளையும், மானும், மழுவும் என்று எண்ணிக்கை அடிப்படையில் எண்ணும்மை பயின்று வந்துள்ளது.

அண்டத்து அமரர் தலைவ**னும்** ஆதி**யும்** (200:2)

ஆகாய**மும்** பூமி**யும்** காண அளித்தலே (211:4)

மேலும் முழுநோக்குத் தன்மையில் கீழ்வரும் பாடல் அடிகளில் எண்ணும்மை வந்துள்ளது.

அன்**பும்** அறி**வும்** அடக்க**மு**மாய் நிற்கும்

இன்பமும் இன்பக் கவி**யுமா**ய் நிற்கும்

முன்புஉறு கால**மும்** ஊழி**யு**மாய் நிற்கும்

அன்புஉற ஐந்தில் அமர்ந்து நின்றானே" (225:1,2,3,4)

ஐம்பூதங்களிலும் அவ் அவற்றின் இயல்பாய் நிற்கும் இறைவன், மக்களிடத்தும் அன்பு, அறிவு, அடக்கம் என்ற நற்பண்புகளாக நிற்கிறான். இவற்றுள் அன்பு பக்தியும், அறிவு ஞானமும், அடக்கமும் தவமும் உண்டாக வழி வகுக்கும். இவை உண்டாயின் இன்பம் எய்தி பேரின்பம் தரக்கூடிய சிவச்சேர்க்கையும் எய்தும்.

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பமும்

தருமம் செய்யாதவர்கள்தம் பால ஆகும் (430:1)

இவ்வடிகளில் தருமம் செய்யாதவர்கள் இருமல், சோகை, ஈளை, வெப்பம் என்ற பல நோய்களுக்கு உட்படுவார் என்று எண்ணிக்கை அடிப்படையில் எண்ணும்மை இடைச்சொல் வந்துள்ளது.

ஆக்கவும்மை

ஆக்கப் பொருண்மையில் உம் இடைச்சொல் பயின்று வந்துள்ளது.

ஆங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்

.....

எங்கும் வளம்கொள் இலங்கொளி தானே (142:1)

இப்பாடலில் அகத்தியன் வளர்க்கும் யோகியால் (அகத்தியன் - உள்ளே அக்கினிகாரியம் செய்யும் யோகி) சிவபெருமான் சோதியாகத் தோன்றி எங்கும் காட்சியளிப்பார் என்று ஆக்கத்தின் பொருண்மையில் வந்துள்ளது.

ஒளித்துவைத்தேன் உள்உற உணர்ந்து ஈசனை

வெளிப்பட்டு நின்றருள் செய்திடும் ஈண்டே (246:2)

இப்பாடல் அடியில் ஈசனை என் உயிருணர்வால் உணர்ந்து, என்னுள் நின்றவனாகவே அனுபவித்தேன். மேலும் என் அன்பு பெருகி வெளிப்படுமாயின் என் விருப்பப்படி இங்கே அவன் வெளிப்பட்டு அருள் தருவான் என்னும் ஆக்கப் பொருளில் இயம்பியுள்ளது.

தெரிநிலை உம்மை

காரணன் அன்பில் கலந்தெங்கும் நின்றவன்

நாரணன் நின்ற நடுவுடலாய் நிற்கும்

பாரணன் அன்பின் பதம்செய்யும் நான்முகன் (202:1,2,3)

சிவனே எங்கும் வியாபித்தவன். தூலவுடம்பு, நுண்ணுடம்பு, குணவுடம்பு, கஞ்சுக உடம்பு, காரணவுடம்பு என்ற ஐவகை உடம்புகளுள், முதல்

மூன்றில் மால் இருப்பான். இதில் பிரம்மன் முதல் உடம்பில் மட்டும் என்று தெளிவாக இரண்டு இடைச்சொல்லைக் கொண்டு ஆக்கப் பொருளிலும், தெரிநிலைப் பொருளிலும் பயின்றுள்ளது.

துறந்தான் வழிமுதல் **சுற்றமும்** இல்லை

இறந்தான் வழிமுதல் **இன்பமும்** இல்லை (423:1,2)

இப்பாடலடிகளில் துறவிக்கு உறவினர் இல்லை. அறத்திலிருந்து தவறியவனுக்கு இன்பம் இல்லை என்று தெரிநிலைப் பொருளில் பயின்று வந்துள்ளது.

எதிர்மறை உம்மை

அணுகினும் சேயவன் அங்கியின் கூடி (229:1)

இறைவன் உயிர்களுடன் ஒன்றாய் இருப்பினும் அவற்றினும் வேறாய் அவற்றால் அணுக இயலாது நிற்பவன் என்று எதிர்நிலைப் பொருளில் வந்துள்ளது.

என இடைச்சொல்

என என்னும் தத்தம் குறிப்புச்சொல் வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் என்ற ஆறு பொருளில் வருமென தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதில் தொன்னூல் விளக்கம் மட்டும் **உவமை** என்ற பொருண்மையை சேர்த்துக் கூறுகின்றது. மற்ற இலக்கண நூல்கள் தொல்காப்பியத்தை பின்பற்றி கூறுகின்றன. இவ் இடைச்சொல்லை,

"வினையே குறிப்பே இசையே பண்பே

எண்ணே பெயரோடு அவ்வறு கிளவியும்

கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி"[14]

என்ற நூற்பா மூலம் நோக்கலாம். இனி திருமந்திரத்தில் உள்ள என என்னும் இடைச்சொல்லின் பொருண்மையைக் காணலாம்.

வினை

"நில்**லென** நிற்பித்த நீதியுள் ஈசனை" (22:2)

இப்பாடல் அடியில் சர்வ வல்லமைக் கொண்ட சிவபெருமான் கடலின் நடுவில் தீக்கடவுளை நிறுத்தினான் என்று சிவனின் வினைச் செயலைக் குறித்து வந்துள்ளது.

குறிப்பு

"வீழித் தலைநீ விதித்திது தா**வென**" (185:3)

எனும் வரியில் உலகத்தைப் படைத்துத் தா என்று பிரம்மனிடம் சிவபெருமான் குறிப்பு பொருளில் கூறுவதாக அமைகிறது.

எண் - எண்ணிக்கையில்

"பதிபசு பாசம் **என**ப் பகர்மூன்றிற்" (113:1)

இப்பாடல் வரியில் வந்துள்ளது.

பெயர்

"நந்தியருளான் மெய்ஞ் ஞானத்துள் ணண்ணினே

நந்தி அருளா**மென** நானிருந் தேனே" (71:4)

மேலும்,

"நடுவுநில் லாதிவ் வுங்கஞ் சரிந்து

கெடுகின்றது எம்பெருமா**னென** ஈசன்" (141:2)

என்னும் பாடல் அடிகளில் நந்தி, எம்பெருமான் என்று பெயர் பொருண்மையில் என என்னும் இடைச்சொல் பயின்று வந்துள்ளது.

என்று - இடைச்சொல்

என்று என்னும் இடைச்சொல் என, என்னும் இடைச்சொல்லுக்குரிய ஆறு பொருளிலேயே வரும் எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது. அவை,

பெயர்

"ஏத்தியும் எம்பெருமான் **என்று** இறைஞ்சியும்" (38:3)

“எண்கடல் சூழ் எம்பிரா**னென்று** இறைஞ்தவர்” (168:2)

இப்பாடல் அடிகளில் என்று என்னும் இடைச்சொல் எம்பிரான், எம்பெருமான் என, சிவனின் பெயர் தன்மையில் வந்துள்ளன.

வினை

வருத்தம் செய்தா**னென்று** வானவர்வேண்டக்

குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே (143:2)

இதில் அந்தகன் என்பவன் உயிர்களைத் துன்புறுத்தினான் என்று வினைக்குறிப்பில் சுட்டியுள்ளது.

எண்

இன்ப மிட**ரென் றி**ரண்டுற வைத்தது (434:1)

இதில் இன்பம், துன்பம் என்று எண்ணிக்கை அடிப்படையில் வந்துள்ளது.

இசை

ஏது பணி**யென்** றிசையு மிருவருக்கு (217:3)

இவ்வரியில் பிரம்மனும், திருமாலும் சிவனிடம் முறையாக பணிந்து ‘எம் பணி யாது’ என்று இசைந்து கேட்கும் பொருண்மையில் வந்துள்ளது. அதனோடு தொல்காப்பியர் சுட்டாத வினாப் பொருளிலும் என்று என்னும் இடைச்சொல் வந்துள்ளமை குறிப்பிடப்படுகிறது.

ஒடு - இடைச்சொல்

என, என்று போன்ற இடைச்சொற்களைப் போலவே ஒடு என்ற இடைச்சொல்லுக்கும் வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் ஆகிய ஆறு பொருளில் வரும் என்கிறது தொல்காப்பியம்.

பெயர்

சிவ**னொடு** ஒக்கும் தெய்வந்தேடினு மில்லை (5:1)

இவற்றில் சிவனொடு ஒக்கும் தெய்வம் எங்கும் தேடிப் பார்த்தாலும் இல்லை என்று பெயர்ப் பொருளில் ஒடு வந்துள்ளது.

எண்

விழுந்தது இலிங்கம் விரிந்தது யோனில்

ஒழிந்த முதலைந்தும் ஈரைந்**தொடு** ஏறிப் (264:2)

மேற்கண்ட வரியில் ஞானேந்திரியம் - 5, கண்மேந்திரியம் - 5, பூதம் - 5 என்று 15 தத்துவங்களுடன் சுக்கிலம் பொழிந்தது என்று எண்ணிக்கை அடிப்படையில் ஒடு என்னும் இடைச்சொல் பயின்று வந்ததுள்ளது.

பண்பு

வேதாந்தம் கேட்க விருப்**பொடு** முப்பதப்

போதாந்த மான பிரணவத்துள் புக்கு (380:1)

வேதாந்தத்தின் பயனை விருப்பம் கொண்டு கேட்கும் அன்பர்களின் பண்பு நிலையை வெளிக்கொணர்கிறது.

ஓகாரம் - இடைச்சொல்

ஓகார இடைச்சொல் என்பது பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு என்ற ஆறுபொருளில் இடம்பெறுவதை தொல்காப்பியம் சுட்டுகிறது. இதனை,

"பிரிநிலை வினாவே எதிர்மறை யொழியிசை

தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ

யிருமூன் றென்ப வோகா ரம்மே"[15]

இந்நூற்பா வழி தெளியலாம். இதற்குப் பின் தோன்றிய நேமிநாதம், பிரிநிலை என்னும் பொருளைக் கூறவில்லை. ஏனைய ஐந்து பொருளுடன் எண், ஈற்றசையை இணைத்து ஏழாகக் கூறுகின்றன.

"சிறப்பும் வினாவுந் தெரிநிலையும் எண்ணும்

உறுப்பின் எதிர்மறையி னோடும் - வெறுத்த

ஒழியிசையும் ஈற்றசையும் ஓகாரஞ் சொல்லா"[16]

இந்நூற்பா நன்னூல், தொல்காப்பியம் கூறிய பிரிநிலையானது நேமிநாதம் காலத்தில் இடம்பெறவில்லை. ஆனால் நன்னூலிலும்,

இலக்கண விளக்கத்திலும் இடம்பெற்றுள்ளன. எனவே ஓகார இடைச்சொல் கால மாற்றத்திற்கேற்ப மாறி வந்துள்ளது. நேமிநாதம் கூறும் ஈற்றசை, எண் என்பனவற்றை நன்னூலும், இலக்கணவிளக்கமும் கூறவில்லை. தொல்காப்பியம் கூறிய ஆறு பொருளுடன் கழிவு, அசைநிலை என்ற இரண்டையும் இணைத்து எட்டாகக் கூறியுள்ளது.

"ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை

கழிவு அசைநிலைப் பிரிப்புஎன எட்டுஓவே"[17]

என்ற நூற்பாவின் வகைகளை இலக்கண விளக்கம் கூறுகிறது. நேமிநாதம் கூறிய பிரிநிலையை நன்னூலும், இலக்கண விளக்கமும் கூறுகின்றன. எனவே கழிவு, அசைநிலை என்பது இதன் வளர்ச்சி நிலையாக நன், இலக்கண விளக்கம் கூறுகின்றன. "ச.வே.சு ஓகாரம் என்பது ஐயப்பொருளில் இடம்பெறுவதாக சுட்டுகிறார்."[18] இசரயேல், "வியப்பு, ஐயம், அசைநிலை"[19] என்னும் பொருளில் ஓகாரம் வருவதாகக் குறிப்பிடுகிறார்.

ஓகாரம் - சிறப்பு

கொழுந்தண் பவளக் குளிர்சடை **யோ**டே (55:3)

பவளம் போன்ற நல்ல குளிர்ந்த சடைமுடியோடு இருக்கக்கூடியவன் என்று சிறப்பு ஓகாரம் பெற்றுள்ளது.

வினா ஓகாரம்

சித்துக்குச் சித்தன்றச் சேர்விடம் **வேறு உண்டோ?** (133:2)

இதுவன்றி **வேறு உண்டோ?** (135:2)

அண்டத்தின் கூறாகிய அனு

சிறப்பு, தெரிநிலை ஓகாரம்

சித்தர் சிவலோகம் இங்கே தரிச்சித்**தோர்**

சத்தமும் சத்தமுடிவும் தம்முட் கொண்**டோர்**

நித்தர், நிமலர், நிராமயர், நீள் பர

முத்தர், தம் முத்திமுதல் முப்பத்தாறே (123:1, 2)

என்ற பாடல்களில் சிறப்பு, தெரிநிலை பொருளில் பயின்றுவந்துள்ளது.

ஏகாரம் - இடைச்சொல்

ஏகார இடைச்சொல் தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என்ற ஐந்து பொருளைக் குறிக்குமெனத் தொல்காப்பியம் சுட்டுகிறது.

"தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே"[20]

நேமிநாதம் தொல்காப்பியம் கூறிய பிரிநிலைக்குப் பதிலாக எதிர்மறையை இணைத்து ஐந்தாகக் கூறுகிறது. மேலும்,

"தேற்றம் வினாஎண் எதிர்மறையுந் தேமொழியாய்
ஈற்றசையும் ஏகாரம்"[21]

என்று நேமிநாத இலக்கணக் காலத்தில் வழங்கிய எதிர்மறையை நன்னூலும் இலக்கண விளக்கமும் கூறவில்லை. தொல்காப்பியம் கூறிய ஐந்துடன் இசைநிறையை இணைத்து ஆறாகக் கூறுகின்றன.

"பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை என ஆறு ஏகாரம்மே"[22]

இதற்குப்பின் எழுந்த முத்துவீரியம் தொல்காப்பியம் கூறிய ஐந்தை மட்டும் கூறுகிறது. மேலும், ஏகார இடைச்சொல் வளர்ச்சிப் பெற்றுள்ளதை,

1. தேற்றம் - உண்**டே** மறுமை எனத் தெளிவின்கண் வருதலின் தேற்றேகாரம்
2. வினா - நீ**யே** கொண்டாய் வினாப்பொருள் உணர்த்தும் ஏகாரம்
3. பிரிநிலை பிரிநலை - அவருள் இவ**னே** கல்வன் எனப் பிரித்தலின்
4. எண் - நில**னே** நீ**ரே** தீ**யே** வளி**யே** என

வந்ததால் எண்ணேகாரம்

5. ஈற்றசை - கடல்போல் தோன்றல காடிறந்தோ**ரே** (அகம்.1)

6. எதிர்மறை - தூற்றா**தே** தூரவிடல்

7. இசைநிறை - **ஏஎ** இவளொருத்தி பேடியோ (சீவக. சிந் 652)

இன்றைய வழக்கில் ஏகார இடைச்சொல் பல பொருள்களில் இடம்பெறுவதைப் பொற்கோ அவர்கள் கூறியுள்ளார்."[23] அவர் சுட்டிய 20 பொருள்களில் இலக்கண நூல்களில் இடம் பெறுவதைத் தவிர்த்து கீழ்க்கண்ட பொருள்களைக் கூறலாம்.

1. கருதல்
2. விலக்கு
3. மிகை
4. புறக்கணிப்பு
5. முடிப்பு
6. யாப்புறவு
7. தொடர்ச்சி
8. கவர்ச்சி
9. விருப்பு
10. துணிவு
11. கையறவு
12. ஒப்புதற்குறிப்பு
13. ஒப்புமைநோக்கு
14. ஒருமைநாட்டம்
15. கழிந்ததற்கிரங்கல்
16. எய்துவஞ்சல்
17. எடுத்துமொழிதல்

என்ற 17 பொருளில் வரும் என்கிறார்.

ஏகாரத்திற்குச் சிறப்பு விதி

ஏகாரம் வரும் இடங்களைக் கொண்டு சில சிறப்பு விதிகளைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. ஏகாரம் ஈற்றசையில் வரும்பொழுது ஒருமாத்திரையும் பெற்று வரும் எனக் கூறுகிறார்.

சான்று

"கடல்போல் தோன்றல காடிறந்தோரே"[24]

என்று இச்சான்றைக் காட்டி இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார் போன்ற உரையாசிரியர்கள் ஏகாரம் ஈற்றசையில் ஒரு மாத்திரையில் ஒலிக்கும் என்று கூறியுள்ளனர். ஆனால் நச்சினார்க்கினியர், சில பாடல்கள் மூன்று மாத்திரையாகவும், இரண்டு மாத்திரையும் பெற்று வருவதாகக் கூறுகிறார். "கடல்போல் தோன்றல காடிறந்தோரே" என்ற அதே சான்றினை எடுத்துக்காட்டி இவை மூன்றனும் ஒலிக்கும் என்கிறார்.

"ஓகாரம் இரண்டு மாத்திரையில் இருந்து ஒரு மாத்திரையாய் ஒலிப்பதால் இதனை ஏகாரக்குறுக்கம் என்று சச்சிதானந்தம் கூறுவதாகச் சிவலிங்கனார் தனது உரைவளத்தில் குறிப்பிட்டுள்ளார்."[25] ஏகார இடைச்சொல் "எண்" என்னும் பொருண்மையில் வரும் பொழுது ஏகாரம் வரவில்லையென்றாலும் வந்ததாகக் கொள்ள வேண்டும் என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. எனவே,

"எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்

எண்ணுக் குறிதியலும் என்மனார் புலவர்"[26]

எனும் நூற்பாவிற்குச் சான்றாக மலை நிலம் பூவே என்பதில் மலையே, நிலமே, பூவே என இறுதியில் ஏகாரம் பெற்றுவரும் என்றுக் கூறப்பட்டுள்ளது. மேலும், இசைநிறை, அசைநிலையாகவும் இடம்பெறுமெனத் தொல்காப்பியம் சுட்டுகிறது. இவற்றை,

"ஏவும்.....இசைநிறை அசைநிலை"[27]

என்ற நூற்பாவழி ஏகாரம் இசைநிறை, அசைநிலையில் இடம்பெறும் என்கிறது. ஆனால் இசைநிறை என்பது ஏகாரப்பொருண்மையில் வருமென்று நன்னூலில் சுட்டப்படுகிறது. எனவே நன்னூல் நூற்பா மேற்காணும் தொல்காப்பிய நூற்பாவை ஒட்டி எழுந்ததாகும். மேற்கண்ட நூற்பாவின் உரையில் இளம்பூரணர் நிரல்நிறையாகக் கொண்டு 'ஏ' என்பது இசைநிறையிலும், குரை என்பது அசைநிலையிலும் வருமெனக் கூறுகிறார். ஆனால் சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்கள் ஏ, குரை என்ற இரு சொற்களும் அசைநிலையாகவும், இசைநிறையாகவும் வருமெனக் கூறியுள்ளனர். ஆகவே இந்நூற்பாவானது தொல்காப்பியத்தில் ஏகாரம் வளர்ச்சி பெற்றுள்ளதைக் கூறுகிறது. மேலும் திருமந்திரப் பாடல்கள் பெரும்பாலும் ஏகாரப் பொருண்மைக் கொண்டே முடிந்துள்ளன. இவை திருமந்திரத்தின் தனிச்சிறப்பாக ஒவ்வொரு பாடலிலும் ஏகாரம் பெற்று அதிலும் தேற்றேகாரம், பிரிநிலை ஏகாரம் இருநூற்றுக்கும் அதிகமாக பயின்று வந்துள்ளன. இதனோடு இரண்டு இடைச்சொற்கள் இணைந்தும் வந்துள்ளன. இது திருமூலரின் எண்ணில் அடங்காத தனிச்சிறப்பு என்றும் கூறலாம்.

தேற்றம் – ஏகாரம்

மேல் – திசைக்குள் தென்திசைக்கு ஒரு வேந்தனாம்
கூற்று உதைத்தானை யான்**கூறுகின் றேனே** (2:4)

தென் திசைக்குத் தலைவனாக விளங்கக்கூடிய சிவபெருமான், எமனை உதைத்தவன். ஆகையால் அவனைப் போற்றி வணங்குகின்றேனே என்று தேற்றப்பொருளில் வந்துள்ளது.

விண்ணளந்தான் தன்னை மேல்அளந்தார் இல்லை
கண்ணளந்தான் எங்கும் கடந்துநின் **றானே** (12:4)

இப்பாடல் அடியில் சிவன் எப்பொருளிலும் கலந்து அவற்றைக் கடந்தும் விளங்குகின்றான் என்று தேற்றப்பொருண்மையில் பயின்றுள்ளது.

தேற்றம் – சிறப்பு ஏகாரம்

ஊழிக் கதிரோன் ஒளியை **வென்றானே** (185:4)

மேலும்,

எட்டும் என்ஆருயிராய் நின்ற ஈசனை

மட்டுக் கலப்பது மஞ்சனம் **ஆமே** (456:4)

என் உயிராக உள்ள அவனைக் கலந்து தேன் போலும் இன்பத்தை அனுபவித்தலே அவனுக்குச் செய்யும் அபிடேகம் ஆகும் என சிறப்பு பொருளில் பயின்றுவந்துள்ளன.

வினா – ஏகாரம்

கோது குலாவிய கொன்றைக் குழல் – சடை

மாது குலாவிய வாள்நுதல் பாகனை

யாது குலாவி அமரமும் தேவரும்

கோது குலாவிக் குணம் **பயில்வாரே?** (15:4)

இப்பாடல் அடியில் சடையில் கொன்றை மாலை அணிந்தவன். உமை ஒரு பாகன். மூவரும் தேவரும் இவனது பித்தினையே குணமாகக் கொண்டாடிச் சார்வது எதற்காக? என்று முழுநோக்குத் தன்மையில் வினா ஏகாரத்தைப் பெற்றுள்ளது.

பின்னை நின்று **என்னே** பிறவிபெறுவது? (63:1)

இதில் என்னே என்பதன் மூலம் வினா ஏகாரத்தைப் பெற்றுள்ளது.

பரவப் படுவான் பரமனை ஏத்தார்

இரவலர்க்கு ஈதலை ஆயினும் ஈயார்

கரகத்தால் நீர் அட்டிக் காவை வளர்க்கார்

நரகத்தே நிற்றிரோ **நன்னெஞ்சினீரே?**

இறைவனை வணங்காமலும், வறியவர்க்கு ஈயின் தலையளவு உள்ள உணவு கொடுக்காமலும், நீர் ஊற்றிச் சோலையை வளர்க்காமலும் இருக்கின்றீர்களே! நீவிர் நரகம் புக விரும்புவீர்களா? என வினா ஏகாரத்தைப் பெற்றுள்ளது.

பிரிநிலை ஏகாரம்

ஒன்றவன் **தானே** இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழுஉம்பர்ச்
சென்றனன் தான் இருந்தான் **உணர்ந்தெட்டே** (1:4)

இப்பாடல் அடிகளில் சிவன் ஒன்றாய் உள்ளவன். அவனது சக்தியை வேறாகக் கருதினால் சக்தி, சிவன் என இரண்டாக உள்ளவன். மூன்றாவது ஆன்மாவினுள் நிற்கின்றான். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை உணர்பவன். புலன் ஐந்தும் வென்றவன். வன்னம், பதம், மந்திரம், கலை, புவனம், தத்துவம் என்னும் அத்துவாவாக விரிந்தவன். ஏழு உலகத்தையும் கடந்தவன் என்று பிரிநிலைப்பொருளில் வந்துள்ளது.

ஆயத்தை அச்சிவம் தன்னை அகோசர
வீயத்தை முற்றும் **விளங்கியிட்டேனே** (69:4)

அதாவது முதலில் நான் விளங்கியே பின் விளக்குவேன் என்று பிரிநிலைப் பொருளில் வந்துள்ளது.

தேற்றம், பிரிநிலை ஏகாரம்

சீலாங்க வேதத்தைச் செப்ப**வந் தேனே** (74:4)

நான் இந்தப் பூவுலகில் வந்திருந்த காரணம் என்ன தெரியுமா எனக் கேட்டுத் திருமூலர் கூறுகிறார். நீலவண்ண நேரிழையாள் சக்தியுடன் உலகத் தோற்றத்திற்கு மூல காரணமாம் ஆனந்த நடனத்தின் அரும் பொருளாய் வந்த ஞான வேதத்தைச் சொல்வதற்காகத்தான் என்று

தேற்றத்திலும் பிரிநிலைப் பொருண்மையிலும் இப்பாடல் சான்று தருகிறது.

ஈற்றசை ஏகாரம்

அத்துள்ளே வாழும் அரசன் புறப்பட்டால்

மத்தளி மண்ணாய் மயங்கிய **வாறே** (363:4)

மண்ணாலாகிய மனித உடல் மண்ணோடு மண்ணாகக் கலந்து விடும். மத்தளி என்பதற்கு மண்ணாளாகிய உடம்பு என்று பொருள்.

உடலில் புகுந்தமை ஒன்று **அறியாரே** (409:4)

சுழுமுனை நாடியின் வழியே மேலே ஏற்றி, புருவ மத்தியில் ஒளியாகக் காண முயலுவோருக்கு இணையானவர் இல்லையே என்று ஈற்றசையில் வந்துள்ளது.

அன்பின் கலவிசெய்து ஆதிப்பிரான் வைத்த

முன்பிற் பிறவி முடிவது **தானே** (448:4)

முடிவு, முடிவின் பயனை எய்துவது எனும் பொருளில் ஈற்றசையாக பயின்றுள்ளது.

தொல்காப்பியர் கூறாத புதுவித இடைச்சொல்லும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன.

சுட்டு ஏகாரம்

நானு மிருந்தேனற் போதியின் **கீழே** (75:4)

இதில் போதி மரத்தின் கீழே திருமூலர் யோக நிலையில் இருந்தார் என்று போதியின் கீழே என்று சுட்டு ஏகாரப்பொருண்மையின் வந்துள்ளது. அவ்வானவர**ாலே** (105:4)

எதிர்மறை ஏகாரம்

நான் தெய்வம் என்று நமன் **வருவானே** (424:4)

இவற்றில் எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது.

உம்மை இறந்தது தழுவிய ஏகாரம்

பொங்கி மிகாமைவைத் தான்பொருள் **தானுமே** (68:4)

மற்று - இடைச்சொல்

இவ்விடைச்சொல் தனிநிலையில் நின்று குறிப்புப் பொருள் தரும். இது வினைமாற்று, அசைநிலை ஆகிய இரண்டு பொருள்களில் வருமென்று தொல்காப்பியம் கூறுகிறது. இலக்கண விளக்கம், தொல்காப்பியம் குறிப்பிட்டவற்றையே பின்பற்றுகிறது. நன்னூல் கூறுவதனையும் ஏற்றுப் புதிதாகப் **பிறிது** என்னும் பொருளையும் சேர்த்துக் கூறுகிறது. முத்துவீரியம் வினைமாற்று, அசைநிலை என்னும் பொருளைக் குறிப்பிடுகிறது. நேமிநாதம், தொன்னூல் விளக்கம் ஆகியவை இவ்விடைச்சொல் பற்றிக் குறிப்பிடவில்லை.

உரையாசிரியர்களில் நச்சினார்க்கினியர் தொழில், இடம், காலம் என்னும் மூன்றினிலும் 'மற்று' வரும் என்கிறார். மேலும் 'மற்று' பிறிது பொருளில் வரும் என்பதற்கு உதாரணமும் தந்துள்ளார். எனவே அவர் வினைமாற்று, அசைநிலை, பிறிது, தொழில், இடம், காலம் என்னும் ஆறு பொருள்களைக் குறிப்பிடுகிறார் என்பது தெளிவு.

"மாற்றென் கிளவி வினைமாற்று அசைநிலை
அப்பால் இரண்டென மொழிமனார் புலவர்"[28]

இந்நூற்பாவின் உரையில் சேனாவரையர் பின்வரும் சான்றுகளைக் கொண்டு விளக்குகிறார்.

வினைமாற்று: "**மற்ற**றிவாம் நல்வினை"[29]

அசைநிலை: "அது**மற்ற**வலங் கொள்ளாது நொது மற்கமழும்"[30]

இவ்வரிகள் அசைநிலையாக வந்துள்ளது என்கிறார். மேலும் சிவலிங்கனார், "மற்று என்பது நீயிது செய்யவில்லையென்றால் **மற்று**யார் செய்தார்"[31] என்னுமிடத்து யார் என்று குறித்து பிறர் என்னும்

பொருள் தருகிறது. எனவே மற்று என்பது பிறர், பிறிது என்னும் பொருள்களைத் தருவதாகக் செப்புகிறார்.

"பத்துப்பாட்டில் இடைச்சொற்கள்" என்னும் ஆய்வில் 'மற்று' என்பது சங்க இலக்கியங்களில் வினைமாற்று, அசைநிலை, பிறிது என்னும் மூன்று பொருள்களில் பயின்று வந்துள்ளதை எடுத்துக்காட்டியுள்ளது. இப்போது திருமந்திரத்தில் மற்று இடைச்சொல் பின்வருமாறு இங்கு விளக்கப்படுகிறது.

வினைமாற்று

வினைமாற்று என்பது ஒரு வினையை (நிகழ்ச்சியை) மாற்றியுரைக்கும் வகையில் வரும் குறிப்புப்பொருள் ஆகும். வினைமாற்று பொருள் தரும். மற்று என்னும் இடைச்சொல் திருமந்திரத்தில் ஆறு இடங்களில் பயின்று வந்துள்ளது.

சான்று: "யென்னால் தொழப்படு யெம்மிறை **மற்ற**வன்

றன்னாற் றொழப்படு வாரில்லை தானே" (8:3)

என்ற வரியில் என்னால் தொழப்படும் எம் இறைவன் சிவபெருமான். மற்று அவனால் தொழப்படும் இறைவன் என்று எவரும் இல்லை.

மற்றவர் (329:3), மற்றோரார்(263:2), மற்று அறவோரையும் (398:1), மற்றண்ணல் (426:4).

மற்று – பிற உள்ளன

குறையோர்தன் **மற்று**ள்ள கோலா கலமென் (388:3)

மற்றொன்று (459:4), **மற்றோ**ர் (228:2, 487:2),

பிறிது பொருள்

"முயலும் முயலின் முடிவும் **மற்றா**ங்க

பெயலும் மழைமுகில் பேர்நந்தி தானே" (10:3)

மற்றும் - பிறிதுபொருள்

மற்றும் பலதிசை காணார் மதியிலோர் (485:3)

கல்வி கற்றும் சிவஞானம் பெறாத மூடர்கள் மலம் நீங்கி முயற்சி மேற்கொள்ளமாட்டார். **மற்றும்** (226:4) ஒன்றனை குறிக்க இங்கு பிறிதுப்பொருள் பயன்பட்டுள்ளது.

மற்றைய – இடைச்சொல்

மற்றைய எனும் சொல் ஒரு இடத்தில் வந்துள்ளது.

மற்றைய மூன்றும் மாமாயோதயம் விந்து (210:2)

சுத்த, அசுத்த, பிரகிருத ஆகிய மூன்று மாயை என.

அந்தில், ஆங்க இடைச்சொல்

அந்தில் என்பது ஆங்கு என்னும் இடப்பொருளையும், அசைநிலைப் பொருளையும் பெறும் என்று தொல்காப்பியம் மொழிகிறது.

ஒப்பின் வழியால் பொருள் செய்குவன

உவம உருபு

ஒரு பொருளை மற்றவரிடத்து தெரிவிக்க விரும்பும் போது தெரிந்த பழைய பொருளோடு போல, புரைய, ஒப்ப, மான, இயைப, ஆங்க போன்ற இணைப்புச் சொற்களால் ஒப்பிட்டு விளக்குவதே உவமையாகும். உவமையின் நோக்கமானது பொருளைப் புலப்படுத்துவதும், அணியாக அமைவதும் அதன் வளர்ச்சியென நாம் அனைவரும் அறியவேண்டியச் செய்தியாகும். "இதனாற் பயன் என்ன என்பதோ எனின் புலன் இல்லாதன புலனாதலும் அலங்காரமாக்கிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தாலும்"[32] என்று உவமையின் பயனை இளம்பூரணர் விளக்குவர். உவமையையும் பொருளையும் இணைக்கும் சொற்கள் உவமை உருபுகள் எனப்படும். வேறுபட்ட பொருள்களுக்கிடையே நிலவும் ஒப்புமையை விரிந்தும் மறைந்தும் நின்று புலப்படுத்தும் செயலை உவம உருபுகள் செய்கின்றன.

மேலும் உவம உருபுகளைத் தொல்காப்பியர், 'உவமம்' என்றும் 'உவமை' என்றும் 'கிளவி' என்றும் குறிப்பிடுகிறார். இதனை,

“ஆறா றுவமையும் அன்னவை பிறவும்

கூறுங்காலைப் பல்குறிப் பினவே”[33]

“கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்”[34]

“அன்னஎன் கிளவி பிறவொரும் சிவணும்”[35]

போன்ற நூற்பாக்களின் வாயிலாகத் தெளியலாம். தொல்காப்பிய உரையாசிரியர்கள் உவம உருபுகளைச் சொற்கள் என்றே வழங்குகின்றனர். “இஃது உவமையுணர்த்தும் சொற்களை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று”[36] என்று இளம்பூரணரும், “இஃது உமத்தினையும் பொருளினையும் ஒப்பிடுங்கால் இடைவரும் சொல் இணைத்தென்கின்றது.”[37] என்று பேராசிரியர் கூறுகிறார். மேலும் தொல்காப்பியர் உவம உருபுகளை இடைச்சொற்களில் ஒன்று என வரையறுக்கிறார். இதனை,

“அவைதாம்

அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப

என்ன மான என்றவை எனாஅ

ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க

என்ற வியப்ப என்றவை எனாஅ

எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்

கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅ

காய்ப்ப மதிப்ப தகைய மருள

மாற்ற மறுப்ப ஆங்கவை எனா

புல்ல பொருவ பொற்ப போல

வெல்ல வீழ ஆங்கவை என்னஅ

நாட நளிய நடுங்க நந்த

ஓடப் புரைய என்றவை எனாஅ

ஆறாறு அவையும் அன்ன பிறவும்

கூறுங்காலைப் பல்குறிப் பினவே”[38]

என்ற நூற்பா மூலம் தொல்காப்பிய உவமவியலில் கூறப்பட்டுள்ள முப்பத்தாறு உவம உருபுகளும் இடைச்சொற்கள் என்று தொல்காப்பியர் மொழிந்து, மேலும் வினை, பயன், மெய், உரு என நான்காக பகுத்தும் காட்டுகிறார்.

வினை உவம உருபு - அன்ன, ஆங்க மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்கு

பயன் உவம உருபு- எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ

மெய் உவம் உருபு- கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப

உரு உவம உருபு - போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த

என்று வரையறுத்துள்ளார். இந்நான்கு வகை உவம உருபுகளும் மரபின் வழிவந்து அவற்றின் பொருள் உணர்த்தி நிற்கும். இதனோடு இடைச்சொல்லில் வரும் உவம உருபுகள் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றிற்கு ஏற்றார் போல் பொருள் தந்து விளங்கும். இவ்வாறு நான்காக பகுத்து அவற்றுள் முப்பத்திரெண்டு உவம உருபுகளை நான்கீழ் எட்டு எட்டாக வகுத்தத் தொல்காப்பியர்,

1. ஒன்ற
2. என்ற
3. மாற்ற
4. பொற்ப
5. நாட
6. நடுங்க

என்ற ஆறு உருபுகளை எந்த பாகுபாட்டிற்குள்ளும் சேர்க்காமல் பொது நிலையிலேயே விட்டுவிட்டார்.

தொல்காப்பியம் கூறியுள்ள உவம உருபுகளை - அன்ன, ஆங்க, இறப்ப, உறழ, என்ன, என்ற, எள்ள, ஏய்ப்ப, ஒப்ப, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஓட, கள்ள, கடுப்ப, காய்ப்ப, தகைய, நளிய, நடுங்க, நந்த, நாட, நேர, நிகர்ப்ப, புல்ல, புரைய, போல, பொருவ, பொற்ப, மருள, மதிப்ப, மான, மாற்ற, வியப்ப, விழைய, வீழ, வெல்ல, நோக்க, மறுப்ப ஆகிய முப்பத்தெட்டு உவம உருபுகளும் சொல்முறையில் வரும் இடைச்சொற்களாக இங்கு இடம்பெறுகின்றன.

உவம உருபுகளின் பட்டியல்

எண்	வினை	பயன்	மெய்	உரு
1.	அன்ன	எள்ள	ஏய்ப்ப	ஒப்ப
2.	ஆங்க	கள்ள	ஒட்ட	காய்த்த
3.	இறப்ப	புல்ல	ஒடுங்க	நந்த
4.	உறழ	பொருவ	ஓட	நளிய
5.	என்ன	மதிப்ப	கடுப்ப	நேர
6.	தகைய	விழைய	நிகர்ப்ப	போல
7.	நோக்கு	வீழ	புரைய	மறுப்ப
8.	மான	வெல்ல	மருள	வியப்ப

உவம உருபு விளக்கப்பெறுமிடம்

உவம உருபுகளை இடைச்சொல் வகைகளுள் ஒன்றாக, அனைத்து இலக்கண நூல்களும் சுட்டிக்காட்டவில்லை என்பது இவ்வாய்வின் மூலம் அறியத்தக்கது. மேலும், நேமிநாதம் “உருபு” என்றே குறிப்பிட்டுச் செல்கிறது. இந்நூலில் இவை வேற்றுமை உருபையே உணர்த்துகின்றது எனலாம். காரணம் சாரியை, உருபு என்று இரண்டாவதாக குறிப்பிட்டு இருப்பதால் இவை இடைச்சொல்லின் வகை ஆறு என்று சுட்டுகிறது.

மேலும் பொருளதிகாரம் இயலையும் தனித்து அமைக்கப்படவில்லை. ஆகையால் 'உருபு' வேற்றுமை உருபு என்று நேமிநாதம் கொள்ளப்படுகிறது.

தொல்காப்பியம் (பொருள்.286) இலக்கண விளக்கம் (642), தொன்னூல் விளக்கம் (155) ஆகிய நூற்கள் உவம உருபுகள் பற்றி பொருளதிகாரத்தில் விளக்க, நன்னூல் மட்டும் சொல்லதிகாரம் பொதுவியலில் (367) சுட்டுகின்றது.

இலக்கண நூற்களில் உவம உருபுகள்

தொல்		**நன்னூல்**	**இலக்கண விளக்கம்**	
அன்ன	வெல்ல	போல	போல	வெல்ல
ஏய்ப்ப	வீழ	புரைய	மறுப்ப	வீழ
உறழ	நாட	ஒப்ப	காய்ப்ப	ஒன்ற
ஒப்ப	நளிய	உறழ	நேர	நடுங்க
என்ன	நடுங்க	மான	நளிய	ஏர
மான	நந்த	கடுப்ப	நந்த	ஏற்ப
ஒன்ற	ஓட	இயைய	கடுப்ப	என்ற
ஒடுங்க	புரைய	ஏய்ப்ப	ஏய்ப்ப	நாட
ஓட்ட	நோக்க	நேர	மருள	மாற்ற
ஆங்க	காய்த்த	நிகர	புரை	பொற்ப
என்ற	போல	அன்ன	ஒட்ட	ஆர
வியப்ப	பொருள். நூற். 286. 38 உவம உருபுகள்	இன்ன	ஒடுங்க	அமர
எள்ள		(நூற்.367) 12 உவம உருபுகள்	ஓட	அனைய

விழைய			நிகர்ப்ப	எதிர
விறப்ப			அன்ன	ஏண
நிகர்ப்ப			ஆங்கு	இையய
கள்ள			மான	இகல
கடுப்ப			விறப்ப	துணைப்ப
காய்ப்ப			என்ன	மலைய
மதிப்ப			உறழ	தூக்க
தகைய			தகைய	செத்த
மருள			நோக்க	கெழுத
மாற்ற			எள்ள	ஏர்
மறுப்ப			விழைய	நகை
புல்ல			புல்	மிகு
பொருவ			பொருவ	சிவண்
பொற்ப			கல்ல	நிகர்
			மதிப்ப	இன்ன
				நூற்.642 (58 உவம உருபுகள்)

தொன்னூல் விளக்கம் (151, 155) அகத்திணையின் பன்னிரு பிரிவுகளில் உவமையினை ஒன்றாகக் குறிப்பிட்டு, விளக்கினாலும் உவமஉருபுகளின் பட்டியல் என்று எதுவும் தரப்படவில்லை.

தொல்காப்பியத்தில் பெரும்பாலான எல்லா உவம உருபுகளும் (நூற்.286) அகர இறுதிப் பெற்றுள்ளன. இலக்கண விளக்கம் 58 உவம உருபுகளை (நூற். 642) அ, உ, ர், ண் எனும் பல ஈறுகளில் அமைகின்றன. தொல்காப்பியம் (பொருள்.286) கூறாத 'இன்ன' என்ற உருபினை அதற்கு பின் வந்த நன்னூல் (367) கூறுகின்றது. இலக்கண விளக்கமும் 'இன்ன'

என்பதை செப்புகின்றது. மேலும் தொல்காப்பியம் கூறாத 28 உவம உருபுகளை இலக்கண விளக்கம் குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியம் (பொருள்.311) எடுத்துரைப்பது போல தொன்னூல் விளக்கம் (328) உவம உருபுகள் இரண்டு, மூன்று சேர்ந்து வரலாம் என்கிறது. அதாவது,

"அடுக்கிய தோற்றம் எனச் சுட்டுவதையே"[39]

"பலவும் இணைந்து தம்முள்

ஒப்புமை தோன்றச் செப்புவது அணியே"[40]

என்ற நூற்பாவால் அறியலாம். "அன்னவை பிறவும்" (தொல்.பொருள்.286) என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதற்கு உரையாசிரியர் இளம்பூரணர் அதற்கு குறிப்பிடும் உவம உருபுகளாக நோக்கு, நேர, அன்ன, அற்று, இன், ஏந்து, ஓர், சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர"[41] என்று செப்பியுள்ளார்.

பிற என்பதற்கு பேராசிரியர், "நேர, நோக்கு, துணைப்ப, மலைய, ஆர, அமர, அனைய, ஏர, ஏர்ப்ப, செத்த, அற்று, கெழுவ, ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வரும் உருபுகள் உவம உருபாக வரும்போது ஏனைய உருபுகளுக்கு இல்லாத தனித்தன்மை பெறும் என்ற குறிப்பு ஒன்றையும்"[42] சுட்டுகிறார்.

முத்துவீரியம் (643) இடைச்சொல்லின் வகைகளுள் ஒப்பு உருபுகளை உட்படுத்திக்கூறினாலும், உவமஉருபு பற்றிய விளக்கமோ, வகையோ எதுவும் எடுத்துரைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உவம உருபுகளுக்கு நச்சினார்க்கினியர் சுட்டும் வேறு பெயர்களாக, "உவம வாசகம், உவமச்சொல், ஒப்பு அல்லது ஒத்தல், பொரு"[43] என்று டாக்டர் க. ஆறுமுகன் உவமச்சொற்கள் என்ற தலைப்பில் ஆய்வுக்கோவையில் காண்பித்துள்ளார்.

உவமைத்தோற்றம் வினை, பயன், மெய், உரு என்ற நான்கும் (தொல்.பொருள்.276) தேற்றேகாரம் கொடுத்துக் கூறுவதால் அந்நான்கிற்கும் இன்ன உருபுகளே வரும் என்று வரையறைப்படுத்தி உருபுகளின் அடிப்படையில் தொல்காப்பியர் உவமைகளை வகைப்படுத்தும் கொள்கையுடையவர் என்ற செய்தி புலனாகிறது. ஆனால் பிற்கால இலக்கண நூலாரின் போக்கு, தொல்காப்பியரின் (தொல்.பொருள்.293) உவமைத் தொகையையும் விரியையும் சேர்த்து உருபு அடிப்படையில் உவமை எட்டு வகைப்படும் எனக் குறிப்பிடுகின்றனர்.

"தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே"[44] என்ற நூற்பாவிற்கு இளம்பூரணர், உருபுகளின் வரையறை மாறிவரும் மரபைக் குறிப்பதாக உரையெழுதுகிறார். பேராசிரியர், தொல்காப்பியர் உருபு வரையறை கூறுவதற்குக் காரணம் கூறும் நூற்பாவாக அதனைக் கருதி உரை எழுதுகிறார்."[45] இவர் கூறும் காரணங்களால் உவமஉருபுகள் தொடக்கத்தில் பொருளைக் குறிக்கும் சொல் நிலையிலேயே ஆளப்பட்டன என்ற உண்மையை அறியமுடிகிறது. 'கடுப்ப' எனும் சொல் 'ஐயப்பட' என்ற பொருளை உடையது. அதனை மெய் உவமத்திற்கு உரியதாகத் தொல்காப்பியர் மொழிகிறார். இதுவோ, அதுவோ என்ற ஐய பொருட்களின் உருவத்தில், தான் தோன்றுமாதலால் மெய் உவமத்திற்கு கடுப்ப எனும் சொல் வரையறை செய்யப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து உவமஉருபுகள் தொடக்கத்தில் பொருளைக் குறிக்கும் சொல் நிலையில் இருந்துவந்து அவை நாளடைவில் உருபுநிலை அடைந்தது என்ற உண்மைப் புலப்படுகிறது.

டாக்டர் அர.சிங்காரவடிவேலன், சங்க இலக்கியங்களில் பயிலுகின்ற உவமயுருபுகளின் இயல்புகளைத் தொல்காப்பியத்தோடு ஒப்பிட்டு ஆராய்கையில் தொல்காப்பிய வரையறைப்படியும் அதனை

மீறியும் உவமஉருபுகள் சங்க இலக்கியத்தில் ஆளப்படுகின்றதை எடுத்துக்காட்டுகிறார். அவற்றில் சில,

சான்றுகள்:

1. வினை: பலர்புகழ் ஞாயிறு கடற்கண் **டாங்கு** (திருமுரு.2)
2. பயன்: விண் **பொரு**புகழ் விறல்வஞ்சி (புறம்.11:6)
3. மெய்: வேய்**மருள்** பணைத்தோள் நெகிழ (அகம்.1:8)
4. உரு: தன்சொல் உணர்ந்த மேனி

   பொன்**போற்** செய்யும் ஊர்ககிழ வோனே' (ஐங்.4:3-4)

ஆகியனவாகும். திருமந்திரத்தில் தொல்காப்பியர் கூறிய அனைத்து உவம உருபுகளுக்கும் திருமந்திரத்தில் சான்றுகள் கிடைக்கவில்லை.

அன்ன

"போந்து இவ்வுலகைப் பிறர்கொள்ளத் தான்கொள்ளப்

பாய்ந்த புலி**யன்ன** பாவகத் தானே" (400:3-4)

இதில் புலியோடு மன்னனை ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. அதாவது வேந்தனின் செயல் (வினை) புலியோடு ஒப்பிடப்படுகிறது.

மான

மான என்னும் உவம உருபு திருமந்திரத்தில் ஒரு இடத்தில் மட்டும் பயின்று வந்துள்ளளது.

"போதாந்த **மான** பிரணவத் துட்புக்கு" (380:2)

போதாந்தம் என்று சொல்லக்கூடிய அகர, உகர, மகரமாக அறிவின் எல்லையான அனைத்தும் 'ஓம்' என்னும் பிரணவத்துள் நின்று நாதம், வேதம், ஞானம் எல்லாவற்றிற்கும் தலைவனாக விளங்கும் சிவனை யாரும் சுட்டி அறியாது உயிருணர்வால் 'கண்டு' இன்புறுவார்கள்.

ஒடுங்க

"புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்புபோல

வுணர்ச்சியு ளாங்கே **யொடு**ங்கவல் லார்க்குக்" (450:1-2)

அதாவது புணர்ச்சியின் போது மனைவியின்பால் கொண்ட அன்பினால் வரும் உணர்வில் ஒன்றி நிற்பது போல் இறைவனிடம் அன்பு கொண்டு, உணர்வால் அவனோடு ஒன்றி நிற்கக்கூடியவர்க்கு அனைத்திலும் இன்பம் மட்டுமே என்பது முற்றிலும் உண்மை. இதில் வரக்கூடிய ஒடுங்க என்பது மெய் உவமையாகும்.

என்ன (ஒருமை வினை)

"யாணிப்பொன் மன்றினு ளாடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழு**தென்ன** பேறுபெற் றாரே" (129:3-4)

என்றும்,

"அடிசேர்வ **னென்ன**வெம் மாதியை நோக்கி
முடிசேர் மலைமகனார் மகள் ஆகித்" (151:1)

இப்பாடலில் உமையவள் பருவதராசனின் மகளாகப் பிறந்து, பார்வதி என்ற பெயருடன் வளர்ந்து, சிவபெருமானைக் கணவனாக அடைவதற்கு தவம் செய்தாள். இதில் ஒருமை வினை உவமை பெற்று வந்துள்ளது.

"மன்றத்தே நம்பிக்கு மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற்று ஏறினான்
மன்றத்து நம்பிமுக் கோடி வழங்கினான்
சென்று அத்தா**னென்ன** திரிந்திலன் றானே" (322:4)

என்ற பாடல் வரியில் நம்பி(க்கு)யின் சிறப்பால் ஊர்ப் பொதுவிடத்தில் அவனுக்கு அரண்மனை கட்டப்பெற்றது. அவன் பல்லக்கில் சென்று பெருவாழ்வு வாழ்ந்தான். பின்பு கொடை வள்ளலாக விளங்கினான். இப்போது இறந்து பிணமானான். பிறகு அனைவரும் சென்று 'எம் தலைவா' என்றழைத்தும் அவன் மீளவில்லை. இவற்றில் படர்க்கை வினை உவமஉருபு பெற்றுள்ளது.

ஒப்பு

முன்னை**யொப்** பாயுள்ள மூவர்க்கும் மூத்தவன்

தன்னை**யொப்பா** ரென்று மில்லாத் தலைமக

னன்னையப் பாவென்னி லத்தனு மாயுளன்

பொன்னை**யொப்** பாகின்ற போதகத் தானே" (6:1-2-4)

தம்முள் ஒத்த மும்மூர்த்திகட்கும் (காத்தல், அழித்தல், படைத்தல்) இணையற்ற தலைவன். மேலும் சிவனே அம்மை, அப்பன் என்று அழைக்கும் அன்பர்க்குத் தாயாகித் தந்தையுமானவன். இவன் எப்படிப்பட்டவன் என்றால் யானைத்தோற் போர்வையை உடைய சிவபெருமான். எனவே பொன்னை (உலோகம்) உவமையாக்கிப் பொன் போன்றவர் என்று செப்பியுள்ளார். ஆதலால், வினை, பயன், மெய், உரு என நான்கு உவம உருபுகளும் இப்பாடலில் பயின்று வந்துள்ளது.

"மனையி லிருந்தவர் மாதவ **ரொப்பர்**" (46:1)

தியானம் செய்து நேசிப்பவர் மனையில் இருந்து இல்லறம் பூண்டு வாழ்ந்தாலும் அவர்கள் பெரிய தவம் செய்த முனிவர்களை ஒப்பர். இதில் இல்லற மனிதரும், முனிவரும் ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

போல

"நெறியறி யாதுற்ற நீராழம் **போல**

வறிவறி வுள்ளே யழிந்தது **போல**" (117:2, 3)

என்ற பாடலில் உயிர்களின் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக மகிழ்வான செயல்களில் ஈடுபட்டுச் சேரும்வழி தெரியாமல் அதாவது ஆழமான குளத்தில் மூழ்கிக் கரையேறத் தெரியாமல் இருப்பவனைப் போல (அறிவின் ஐம்புலன்களின் கட்டுண்டு அவற்றின் மயக்கத்திலிருந்து விடுபடும் வழியறியாது இவற்றிற்கு குளத்தின் உள்ளே மூழ்கிக் கரையேற அறியாமல் இருப்பவனைப் போல.

"பெயற்கொண்டற் **போலப்** பெருஞ்செல்வ மாமே" (343:4)

இவ்வரியில் முழுநிலவாகிய சந்திரனும் ஒருநாள் இருளை அடையும். (தேய்பிறை) அதைப் போன்று செல்வமும் வறுமையை வந்தடையும். ஆதலால் தேவர்களே நீங்கள் தலைவனாகிய ஈசனை நாடுங்கள் அவர் தங்களுக்கு அருள் மேகமானது மழை தருவது போலச் சிவனும் நமக்கு அருளைப் பொழிவான் என்று ஒப்பிட்டுள்ளது.

என்ற

வம்பள மேனி யறுமுகன் போயவர்

தம்பகை கொல்லென்ற மலர்மிசை மேலய

னென்றிவ ராகி யிசைந்திருந் தானே" (247:4)

இதில் உருத்திரன், திருமால், பிரம்மன் ஆகிய மூவரையும் உள்நின்று இயங்குகின்றான் என்பதில் உரு உவம உருபு அறியப்படுகிறது.

மாற்ற

மாற்ற எனும் உவம உருபு திருமந்திரத்தில் பயன் உவமஉருபாக ஒரு பாடலில் காணப்படுகிறது.

"மருள்கொண்ட சிந்தையை **மாற்ற**கி லாரே" (493:4)

உலகில் பொருள் பெண்ணாசை கொண்டவர்களை எப்போதும் மாற்ற முடியாது. அவர்கள் எப்போதும் மயக்க சிந்தனையிலே இருப்பர். அவர் அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் அவர்களைத் திருத்தவே முடியாது என்ற செயல்தன்மையில் மெய் உவமஉருபு பயின்றுவந்துள்ளது.

நாட (மெய் உவம உருபு)

கெடுவதும் ஆவதும் கேடில் புகழோ

னடுவல்ல செய்தின்ப **நாட**வு மொட்டா (435:2)

இதில் நன்மை - தீமை, அழிவு - ஆக்கம் இவை இரண்டிற்கும் இறைவனாகிய சிவபெருமானே பொறுப்பு. இவனுடைய நீதியில் நடுநிலைமையிலிருந்து தவறி வாழ்ந்தவனுக்கு ஒருபோதும் இன்பம்

அடைய (நாட) விடமாட்டான். ஆகவே இவற்றில் வரும் நாட மெய் உவம உருபைப் பெற்றுள்ளது.

நாட (வினை உவம உருபு)

சென்றா ரிருவர் திருமுடி மேற்செல

நன்றாங் கழலடி **நாட**வொண் ணாதே (180:4)

இப்பாடல் வரியில் சிவபரம்பொருளின் ஆதியும் அந்தமும் எவராலும் காணமுடியாது. அதனை ஆராய்ந்து அறிவதற்கும் அரிதானது. இதனாலோ என்னவோ பிரம்மனும், திருமாலும் அவனது அடிமுடி தேடிச்சென்று, இந்த வடிவத்தைக் கண்டு தம் செயலுக்கு அஞ்சினார்கள் போலும் என்று வினையாகிய செயலை குறிப்பிடுவதால் நாட என்பது வினை உவம உருபைக் கொண்டுள்ளது.

பிற இடைச்சொற்கள்

நன்னூலில் இடைச்சொற்கள்

இடைச்சொற்கள் என்னென்ன பொருளில் வரும் என்பதை நன்னூல் 14 பொருளைத் தருகின்றது.

1. தெரிநிலை
2. தேற்றம்
3. ஐயம்
4. முற்று
5. எண்
6. சிறப்பு
7. எதிர்மறை
8. எச்சம்
9. வினா
10. விழைவு (விருப்பம்)
11. ஒழியிசை

12. பிரிப்பு

13. கழிவு

14. ஆக்கம்

போன்ற சொற்கள் பயின்று வருகின்றன. இவை,

- தத்தம் பொருள் தரும் இடைச்சொற்களாகும். மேலும் தமக்கென்று பொருளை உணர்த்துவதற்காக அமைவன. இதனோடு மேலும் சில இடைச்சொற்களை,
- சுட்டுப்பொருள் – அ, இ, உ (அவன், இவன், உவன்)
- வினாப்பொருள் – எ, ஏ, யா, ஆ (எவன், ஏது, யாவன், அவனா)
- இடப்பொருள் – காலம், முன்வினை, முன்பின்
- இடப்பன்மை – தொறும், தோறும்

  தொழில் பயில்வு
- பயினின்மை பொருள் – வாளா, சும்மா
- இரக்கப்பொருள் – ஐயோ, அந்தோ
- அச்சப்பொருள் – கூகூ, ஐயோ
- இகழ்ச்சி பொருள் – சீ, சீசீ, சீபோ

குறிப்பினால் வரும் இடைச்சொற்கள்

- ஒலிக்குறிப்புப் பொருள் - அம்மென, துடுவென, ஒல்லென, களகளவென,
- அச்சக்குறிப்பு பொருள் - திக்கென, திடுக்கென, துண்ணென
- விரைவுக்குறிப்புப் பொருள் - பொள்ளென, சரேலென, பட்டென, கதுமென, பொருக்கென.

வ.எண்	**தொல்.சொல் (நன். கூறாதவை)**	**தொல்.கூறாத இ.சொ (நன்.கூறியவை) புதியதாக**
1	ஆக	அத்தை

2	ஆகல்	அன்று
3	ஆர்	ஆம்
4	எல்	இட்டு
5	எற்று	இத்தை
6	என்பது	இருந்து
7	ஏ (நன்றே, அன்றே) குறிப்பு	ஈ
8	ஓ (அன்னோ, அன்றோ) குறிப்பு	ஓரும்
9	ஒள	கின்று
10	கொன்	தாம்
11	தஞ்சம்	தான்
12	மன்ற	தெய்ய
13		மாள
14		யாழ
		வாழிய
		நின்று

தொல்காப்பியம் கூறாத பிற இடைச்சொற்கள் என்பதை, முதல் இயலில் கண்டோம். அதனோடு பிற்கால மொழி வளர்ச்சிக்கு ஏற்ப புதிய இடைச்சொற்கள் தோன்றியுள்ளன. இவை மக்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இடைச்சொற்கள் பிற்காலத்தில் இணைப்பு உறுப்புகளாப் பயன்படுகின்றன”[46] என்று ச. அகத்தியலிங்கம் கூறியுள்ளார். இவர் புதிய இடைச்சொற்களாக கூட, ஆவது, எனும், அதிலும், ஆயினும், மட்டும், மாத்திரம், மாத்திரமே, எல்லாம் போன்ற சொற்களையும்,

விளிச்சொற்களான டேய், எலோ, அடி, ஏடி போன்ற சொற்களையும் கூறியுள்ளார்.

சான்று :

1. கூட – இராமன் வந்தால் **கூட** நான் வரமாட்டேன்
2. ஆவது – கண்ண**னாவது** வருவான்
3. ஏனும் – அவ**னேனும்** வருவான்
4. ஆகிலும் – கண்ண**னாகிலும்** வருவான்
5. ஆயினும் – கண்**ணாயினும்** வருவான்
6. மட்டும் – அவன் **மட்டும்** வருவான்
7. மாத்திரம் – அவன் **மாத்திரம்** வந்தான்
8. எல்லாம் – அவன் **எல்லாம்** வரமாட்டான்

விளிச்சொற்களான டேய், ஏலே, அடி, எடி என்ற சொற்களுக்குச் சான்று காணப்படவில்லை. காரணம் இச்சொற்கள் ஒருவனை அழைக்கும் பொழுது கூறப்படுவனவாகும். மேலும் இலக்கியங்களில் வழங்கும் புதிய இடைச்சொற்களாகப் பின்வருவனவற்றை அ.கி.பரந்தாமன்"[47] குறிப்பிட்டுள்ளார்.

1. வாள
2. சும்மா
3. இனி
4. அந்தோ
5. ஐயோ
6. சிச்சீ
7. முன்
8. பின்
9. சும்மா
10. ஆயினும்

11. தொறும்

12. தோறும்

இவற்றில் அந்தோ, ஐயோ, சீச்சீ, அம்மா போன்ற சொற்களை வியப்பு இடைச்சொல்லாகக் கூறலாம்.

சான்று : 1. அந்தோ – அந்தோ! அவனால் அந்நாடு அழிந்தது

2. ஐயோ – ஐயோ! இப்படி விழுந்தானே

3. சிச்சீ – சிச்சீ, சிச்சீ கெட்டப்பழக்கம் இது

4. அம்மா – அம்மா! என்று விழுந்தான்.

இவை இன்றைய வழக்கில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இடைச்சொற்கள் எழுத்து வடிவில் மட்டுமல்லாமல் பேச்சு வழக்கிலும் மிகுதியாகப் பயன்படுவதை மேற்கண்ட சான்றுகள் கூறுகின்றன.

திருமந்திரத்தில் பிற இடைச்சொற்கள்

இவற்றை நன்னூல் விளக்கி கூறியுள்ளதை முன்பே தெளிவாக இடம்பெற்றுள்ளது. தற்போது இதனை திருமந்திரத்திரல் சான்றோடு காணலாம். எந்தவொரு பொருளையும் செயலையும் நபரையும் சுட்டிக் காண்பிக்கும் தன்மையைப் பெற்று வருவது சுட்டுப்பொருள் ஆகும்.

அ

அ என்ற சுட்டிடைச்சொல் 24 இடங்களில் பயின்று வந்துள்ளன.

ஆயத்தை **அ**ச்சிவன் தன்னை யகோசர (69:3)

அங்கு

வானொரு கூறு மருவியு மங்கு**ளன்** (110:2)

வானவர்களுள்ளும் கலந்து கடவுளாக அங்கு விளங்குகிறார்.

சென்**றங்கு** (135:1), நீர்மையி**னங்கு** (146:4) **அங்கு**ளன் (363:3)

அது

கலந்**தது** நீர தடம்பிற் கறுக்கும்

கலந்**தது** நீர தடம்பிற் சிவக்குங்

கலந்**தது** நீர தடம்பில் வெளுக்கும்

நீரனல் காற்**றது** வாமே.”(410-1,2,3,4)

அதுமிகும் (16:2)

பெருங்காயமும் கத்தூரியும் கலந்து கொதிக்கினும் மணம் மிகுந்து வரும்.

அப்புறம் - பிறகு

அப்புறம் என்ற இக்கால வழக்குச்சொல் பயன்படுத்தியுள்ளார். இவை நான்கு இடங்களில் பயின்றுவந்துள்ளன.

வேறங்க மாக விளைவுசெய் **தப்புறம்** (89:3)

இருவினைக்கு **அப்புறம்** (103:1), மேலெழுந்**தப்புறம்** (168:3), சென்**றப்புறம்** (170:1)

அப்போதே

உடையும் மனிதனார் போகும் **அப்போதே** (339:3)

அவரது உடலின் நடுவே இருந்து இடம் வலமாக மாறி இயங்கும் மூச்சுக்காற்று உலாப் போகும் அப்போதே உடையும்.

அவை

குடமுடைந் தா**லவை** யோடென்று வைப்ப

உடலுடைந் தாலிறைப் போதும்வை யாரே (331:3)

குடம் உடைந்தால் அவை ஓடென்றாவது வைப்பர் . ஆனால் மனிதன் இறந்தால் அதுபோன்று வைக்கமாட்டார்.

தான்**அவை** (228:1) **சந்தவை** (332:1), உதிக்க **அவை** (374:3), மா**மவை**நீக்கி (490:1)

ஆகிய

எண்ணிக்கை அடிப்படையில் இணைக்கும் பொருளில் வந்துள்ளது

அறியீர் உடம்பினின் **ஆகிய** ஆறும் (278:1)

ஆகிலும்

சாலுமவ் வீசன் சலவிய னாகிலு (355:3)

ஆகும்

எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சுட்டியுள்ளது.

அஞ்ஞானர் மூவரும் **ஆகும்** பதின்மராம் (300:3)

ஆண்டு

ஈறும் பிறப்பும் **ஓராண்டெனும்** நீரே (341:4)

ஆவதும்

ஒன்றனுக்கு ஆகி வருவது ஆவதும் ஆகும்.

கூறும் கருமயிர் வெண்மயிர் **ஆவதும்** (341-3)

இளமை கழிந்து முதுமை ஆவதும் எல்லாரும் அறிந்த உண்மைக்கு ஆகி வந்துள்ளது.

ஆய எனும் சொல்

பெருநெறி **யாய** பிரானை நினைந்து (88:2)

பேருணர்வால் உணரப்படுபவன் தேவபிரான். இதில் ஆய என்பது இடைச்சொல்லாக வந்துள்ளது.

ஆய் எனும் சொல்

நால்வரும் தேவ**ராய்** நாதரா னார்களே(9:4)

ஆயினும்

பயனின்மை பொருளில் வந்துள்ளது.

“இலைநல **வாயினு** மெட்டி பழுத்தாற்

குலைநல வாங்கனி கொண்டுண லாகா” (494:1)

அதாவது எட்டிப்பழத்தின் இலை அழகாக இருப்பினும் அதன் பழத்தை யாரும் உண்ணமாட்டார்கள் என்று எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது.

எப்பரிசு **ஆயினும்** (35:3), ஆயினும் ஈசன் (7:2), தொகுத்திடு**மாயினும்** (94:2), இறைவனேயாயினும் (479:3), இலைநல**வாயினும்** (494:1),

இ

இவ்விடைச்சொல் எட்டு இடங்களில் வந்துள்ளன.

வேயி னெழுங்கனல் போலே**இம்** மேனியுங்

கோயி லிருந்து குடிகொண்ட கோனந்தி (114:2)

மூங்கிலினுள் மறைந்திருக்கும் நெருப்புப் போல இம்மேனியும் அருட்சக்தி பெற்று மனதை கோயிலாக்கி குடியேறும் சிவபெருமான் தாயினும் மிக்க மேன்மையுடையவன்.

இங்கு

இங்கு என்ற என்ற சுட்டிடைச்சொல் இங்கே, இப்போது எனும் பொருண்மயில் ஆறு இடங்களில் வந்துள்ளன.

அவனொடு ஒப்பர் **இங்கு** யாவருமில்லை (5:2)

சிவனொடு ஒப்பிட்டு கூற இங்கு யாவருமில்லை என்ற பொருளில் வந்துள்ளது.

இது (ஊர்)

இதுவூர் ஒழிய இதணம் – அதுயேற்றி (328:2)

இது (என்பார்)

நீசர் அதுஇது என்பார் நினைப்பிலார் (103:3)

இருவினைப் பயனைக் கடந்தவர் சிவபெருமான். இதனை அறியாத அறிவிலோர் இதனை மறந்து அது தெய்வம் இது தெய்வம் என்று கூறுவர் என்ற பொருளில் இது பயன்பட்டுள்ளது.

இது (உலகம்)

இதுபதி ஏலம் கமழ்பொழில் ஏழும் (18:1)

இவை - சிறப்பு

வைத்த சிறப்புத் தரு**மிவை** தானே (82:4)

இவை ஞானாந்தக்கது (490:4)

உள (இடப்பொருண்மையில்)

ஐந்து தலைப்பறி யாறு சடை**யுள** (323-1)

கள்

கள் பன்மைப்பொருளில் வந்துள்ளது

விஞ்ஞானர் ஆதி**கள்** ஒன்பான் வேறுஉயிர்களே (305:4)

கீழ் (இடப்பொருண்மைரில்)

"அதோமுகங் **கீழ**ண்ட மான பிராண" (190-1)

நன்றே

அருளும் பினையவன் மாதவ **நன்றே** (242:4)

நில்லிடும்

நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே (488:4), நில்லுங்கள் இச்சொல் அரிய வினை வடிவமாக காணப்படுகிறது.

பின்

வினைத்தன்மையைக் கொண்டு வந்துள்ளது.

முதற்கிழங் காய முளையாய் முளைப்**பின்** (298:2)

மேல் (இடப்பொருண்மையில்)

மேலுள கூரை பிரியும் பிரிந்தபின் (319:3)

மேன்மேல் (அடுக்குத் தன்மையில்)

"துன்புறு காலத் துரிதவர **மேன்மேல்**" (325-3)

போலே - போல

வேயின் எழுங்கனல் **போலே**இம் மெய்யெனுங் (114:1)

போலும்

ஒப்புமைப் பொருளில் வந்துள்ளது.

உலைதந்த மெல்லரி **போலும்** ததுவே (231:3)

உலையில் இட்ட அரிசி போல இவ்வுலகம் நிலைமாறும்.

போலவே

மாதா பிதா வழி **போலவே** (286:3)

புரை

இருமையும் கெட்டுஇருந் தார்**புரை** அற்றே (131:4)

இம்மை மறுமைகளில் பெறுவன பற்றியும் கருத்தின்றி, மாசற்ற மனத்துடன் உள்ளனர்.

மாலை - சிறப்பு

மறுமழுவால் வெட்டி **மாலை** பெற்றேனே. (155:4)

தந்தையின் காலை வெட்டி, சிவனால் மகனாக ஏற்கப் பெற்று, அவனுடைய நிருமால்யங்களை அணியும் பேறு பெற்றான் என்று சிறப்பு பொருளில் மாலை வந்துள்ளது.

மாலை படுவதும் வாழ்நாள் கழிவதும் (355:2)

இதில் மாலை என்பது நாளைக் குறிக்கும் சொல்லாக வந்துள்ளது.

அழிந்து போன இடைசொற்கள்

தொல்காப்பியர் கூறிய ஒள, என்பது, என்னும் சொற்கள் பிற்கால இலக்கண நூல்களில் எதிலும் குறிப்பிடவில்லை. ஒள இடைச்சொற்கள் பிற்காலத்தில் வழக்கிழந்துவிட்டன போலும்.

தொகுப்புரை

- மன் என்னும் சொல் கழிவு, ஆக்கம், ஒழியிசை எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது. இச்சொல் பிற்கால நூல்களில் இந்த மூன்று பொருளுடன் அசைநிலை, மிகுதி, நிலைபேறு ஆகியவற்றைச் சேர்த்து ஆறாகக் கூறுகிறது. மு. இசரயேல்

இதனுடன் உறுதி என்பதைச் சேர்த்து ஏழாகக் கூறியுள்ளமை தெளியப்பட்டுள்ளது.

- உம் எனும் இடைச்சொல்லை அனைத்து இலக்கண நூல்களும் எட்டாகக் கூறுகிறது. ஆனால் நன்னூல் மட்டும் தொல்காப்பியம் கூறிய எண்ணும்மைக்குப் பதிலாக அளவைப் பொருளைக் கூறியுள்ளது. இச்சொல் பிற்காலத்தில் வினாப் பொருளாகவும் பயன்படுகிறது. திருமந்திரத்தில் அதிகமாக உம் இடைச்சொல் பயின்றுவந்துள்ளன.
- ஓகார இடைச்சொல் ஆறுபொருளில் இடம்பெறுவதாகத் தொல்காப்பியம் சுட்டுகிறது. ஆனால் நன்னூல், இலக்கண விளக்கம் போன்றவை இச்சொல் எட்டுப்பொருளில் இடம்பெறுமெனக் கூறுகின்றன. பிற்காலத்தில் ஐயப்பொருளில் இடம்பெறுவதை ச.வே.சு சுட்டிக்காட்டியுள்ளார்.
- ஏகார இடைச்சொல் ஐந்து பொருளில் வருமெனத் தொல்காப்பியம் கூறினாலும் அதனுடன் இசைநிறையை இணைத்து ஆறாக இலக்கண விளக்கமும், நன்னூலும் கூறுகிறது. ஏகாரம் பல பொருளில் வழங்குவதைப் பொற்கோ குறிப்பிட்டுள்ளார். 99% சதவிகிதம் ஏகாரம் கொண்டு முடிந்துள்ளமை திருமந்திரத்திற்கு தனிச்சிறப்பு எனலாம்.
- மற்று எனும் சொல் தொல்காப்பியத்தில் வினைமாற்று, அசைநிலை என்ற பொருளில் வருமெனக் கூறியுள்ளார். ஆனால் நன்னூலார் காலத்தில் மூன்றாக பிறிது என்ற சொல்லைச் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.
- கொல் எனும் சொல் தொல்காப்பியர் காலத்தில் ஐயப்பொருளை மட்டும் தருகிறது. ஆனால் நன்னூலார் காலத்தில்

அசைநிலையாகவும் வருகிறது. திருமந்திரத்தில் கொல் என்ற சொல் தொல்காப்பியர் கூறிய விதிப்படி பயின்றுவரவில்லை.

- பிற இடைச்சொற்களான அ, இ, எ, அது, இது, அங்கு, இங்கு, அவை, இவை, ஆங்க, ஆகிய, அந்த, இந்த, மேலே, அப்போதே, போலே, போலும், முன், பின், ஆக, மேல், கீழ் ஆய, ஆய், ஆகவே, ஆயினும், மேல், கீழ், மேன்மேல், போலும், போலவே, கள், உள, ஆகிய இடைச்சொற்கள் கண்டறிந்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் பேச்சு வழக்கில் இன்று இருக்கக்கூடிய அப்புறம், வந்து போன்ற இடைச்சொல்லை திருமூலர் பயன்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. தொல். சொல்.247
2. நன். 432
3. செ.வை. சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு, ப.200
4. தொல்.சொல்.265
5. குறுந். 199 :1
6. தொல்.சொல். 255
7. ச.வே.சு., இலக்கணத் தொகை, சொல்.ப.290
8. நன். 452
9. எஸ். ஆரோக்கியநாதன், உம் என்னும் இடைச்சொல், ப.6
10. தொல்.சொல்.34
11. திருமுரு. பா.118
12. புறம்.35
13. சேனா. தொல்.சொல். உரை. நூற்.34
14. தொல். சொல்.258
15. மேலது. 256
16. நேமி.79
17. நன்.423
18. ச.வே.சு, இலக்கணத்தொகை, சொல்.296
19. இசரயேல், இடையும் உரியும், ப.21
20. தொல். சொல். 257
21. நேமி.76
22. நன்.422
23. பொற்கோ. இலக்கண உலகில் புதிய பார்வை, ப.110-111
24. குறுந்.226
25. சிவலிங்கனார், உரைவளம் இடையியல், ப.168

26. தொல்.சொல்.288

27. மேலது.272

28. மேலது.262

29. நாலடி. 9:1

30. குறுந். 12

31. சிவலிங்கனார், உரைவளம் இடையியல், ப.87

32. இளம். தொல். பொருள் உரைவளம்.122

33. தொல்.பொருள்.286

34. மேலது. 287

35. மேலது.288

36. இளம். தொல். பொருள். உவமையியல் உரைவளம், ப.67

37. பேரா. தொல். பொருள். உவமையியல் உரைவளம், ப.71

38. ச.வே.சு., தொல். உவம. நூற்.1232.

39. மேலது. 1257

40. தொன்.வி.நூற்.328

41. இளம். தொல். பொருள்.182

42. பேரா. தொல். பொருள். 182

43. டாக்டர் க. ஆறுமுகன், ஆய்வுக்கோவை, ப.212

44. இளம்.தொல். பொருள்.288

45. பேரா. தொல். பொருள். 299

46. ச. அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல், ப.273

47. அ.கி. பரந்தாமன், நல்லதமிழ் எழுத வேண்டுமா, ப.110

நிறைவுரை

மொழியியல் அடிப்படையில் சாரியை, வினைசெயல், வேற்றுமை, அசைநிலை, இசைநிறை, தத்தம் குறிப்பு, உவம உருபு ஆகியன அடிப்படையில் மொழியின் முக்கிய பங்கிற்கும் அதன் வளர்ச்சிக்கும், வழிவகுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட **'திருமந்திரத்தில் இடைச்சொற்கள்'** என்ற இந்த ஆய்வின் பொதுவான முடிவுகள் பின்வருமாறு தொகுக்கப்படுகின்றன.

மந்திரம் என்ற சொல்லாட்சி தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்களில் கூறப்பட்ட வாய்மொழி, அங்கதம் ஆகிய சொல்லாட்சிகளோடு தொடர்புடையது என்று உரையாசிரியர்கள் கூறுகிறார்கள். மந்திரம் என்பது வாய்மொழியைக்காட்டிலும் சற்று உயர்ந்து காணப்படுவதை (சான்றோரால்) திருமந்திரத்தில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

சொல்லின் - பொருள், வரையறை, வகைகள், உரையாசிரியர்களின் பாகுபாடுகள் ஆகியவற்றோடு சொல்லிலக்கணம் கூறும் இலக்கண நூல்களின் பட்டியல்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இடைச்சொல்லைப் பற்றி முதன் முதலில் கூறிய நூல் தொல்காப்பியம். பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது இடைச்சொல் என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதையே உரையாசிரியர்களும் மொழிகின்றனர். மொழிக்கு முன்னும் பின்னும் பெரும்பான்மை இடையில் வந்து தோன்றுவதால் இடைச்சொல்லாயிற்று என்பது ஒரு சாரார் கருத்தாக இருக்கிறது. பெயருக்கும் வினைக்கும் இடையில் தோன்றுவதால் இடைச்சொல்லாயிற்று என்பது வேறுசாரார் கருத்து என்ற இரு கருத்தை இவ்வாய்வு மூலம் அறியமுடிகிறது. இவ்விரு கருத்துக்களில் இரண்டாவது இடம்பெறும் கருத்தே பொருந்துவதாக இங்கு உரைக்கப்படுகிறது.

தொல்காப்பியம், இடைச்சொற்களை பொருண்மைகளாக சுட்டி இருந்தாலும் பிற்காலத்தில் அவை மாற்றம் அடைந்துள்ளன. தமிழ் இலக்கண நூற்கள் இடைச்சொல்லை விளக்கிக் கூறுவதில் மூன்றுவித பண்பை (போக்கை) கடைப்பிடிக்கின்றன. இந்த மாற்றங்கள்,

'**முன்னோர் மொழிப் பொருளைப் பொன்னே போல் போற்றுதல்**'

என்றும்,

"**கிளந்த அல்ல வேறுபிற தோன்றினுங்**

கிளந்த வற்றியலான் உணர்ந்தனர் கொளலே"

என்ற நூற்பாவாலும்,

"**பழையன கழிதலும் புதியன புகுதலும்**

வழுவல கால வகையினானே"

இந்நூற்பாவிற்கு ஏற்ப இடைச்சொற்களின் கூடுதல் எண்ணிக்கையாக 83 சொற்களை தொல்காப்பியம் முதல் பிற இலக்கண நூல்களோடு நிகண்டுகளின் இடைச்சொற்களையும் கண்டறிந்து தொகுத்து அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. அதனோடு இடைச்சொற்களின் வகையாக ஒரு சொல் ஒரு பொருள், ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள், பல சொல் பல பொருள் எனப்பகுத்துக் காட்டப்பட்டுள்ளன.

சுப. அண்ணாமலை செய்த திருமூலரின் திருமந்திர மூல பாட ஆய்வுப்பதிப்பின் முதல் 500 பாடல்களிலிருந்து தொல்காப்பியர் கூறிய ஏழு வகையான இடைச்சொற்களைக் கண்டறிந்து விளக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் இடைச்சொற்களை ஏழு வகைப்படுத்தினாலும் பின் வந்த இலக்கண நூலார்கள் இதன் வகையை மிகைப்படுத்தியும் குறைத்தும் கூறியுள்ளனர். மேலும் உரையாசிரியர்கள் இந்த ஏழு வகை

இடைச்சொற்களை ஏற்றுக் கொண்டாலும் இதன் உட்பகுப்பிற்கு (அ) உட்பிரிவுக்கு மாறுபட்ட கருத்தைக் குறிப்பிடுகின்றனர்.

இடைச்சொல்லின் எண்ணிக்கையை வகைப்படுத்திக் கூறுவதில் தொல்காப்பியத்தை இலக்கண விளக்கமும், நன்னூலை தொன்னூல் விளக்கமும், நேமிநாதத்தை முத்துவீரியமும் **தத்தம் குறிப்பு, உவம உருபு** தவிர மற்றவற்றை ஏற்றுக் கொள்கின்றன. இது போன்ற இடைச்சொற்களின் எண்ணிக்கையை பகுத்துப் பார்க்கும்போது தொல்காப்பியத்தை விட இலக்கண விளக்கம் அதிகமாக கூறியுள்ளது. அதாவது தொல் (47) இடைச்சொற்களும் இலக்கண விளக்கம் (53) எனவும் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் புணரியலில் சுட்டியுள்ள சாரியைகளுள் அன், அத்து, இன் ஆகிய சாரியையைகள் அதிகமான இடங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதில் வரும் சாரியைகள் பெரும்பான்மை பெயர்ச் சொற்களிலும் வினையாலணையும் பெயர்களிலும் சிறுபான்மை வினைமுற்றுச் சொற்களிலும் இடம்பெற்றுள்ளன. அச்சாரியைகள் பெயருக்கும் வினைக்கும், பெயருக்கும் விகுதிக்கும், பெயருக்கும் ஒட்டிற்கும், வினையடைக்கும் ஒட்டிற்கும் இடையில் வந்துள்ளன. இரண்டு சாரியைகள் வரும் சொற்களும் இதில் காணப்பட்டுள்ளது. சான்று: **வேதத்தினான்** போன்ற சொற்களில் இரண்டு சாரியைகள் இடம்பெற்றுள்ளன.

பெயர் விகுதிகளைப் பொருத்தமட்டில் ஆண்பால் அதிகமாகவும் பெண்பால் மிகவும் குறைவாகவும் வந்துள்ளதன. பெண்பாலுக்கு ஒரு இடத்தில் மட்டும் 'ளகர' விகுதிக்கு பதிலாக மெல்லியன் என்ற னகர விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

கால இடைநிலை சொற்களில் முன்னிலைச்சொற்கள் குறைவாக உள்ளன. தன்மை, படர்க்கைச் சொற்கள் நூற்றுக்கும் மேற்பட்டு காணப்படுகின்றன.

வினைமுற்றுச் சொற்களைக் கையாளுவதில் திருமூலர் ஒரு தனி உத்தியைப் பயன்படுத்தியுள்ளார். அணிகளுள் முக்கிய அணியாகத் திகழ்வது 'தீவக அணி'. ஒரே பாடலில், ஒரே காலத்தைக் குறிக்கும் ஒரே இடத்தைக் குறிக்கும் ஒரே வினைமுற்றுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அச்சொல்லே அப்பாடலுக்கு எழுவாயாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அச்சொல்லை, பாடலில் முதலிலும் **ஆக்குகின்றான்** (260:1,2,3,4) இடையிலும் **வைத்தான்** (68:1,2,3,4) கடையிலும் **அறிகிலே** (78) பயன்படுத்தி, பொருள் அடிப்படையிலும் பாடலின் அமைப்பு முறையிலும் இயைபுத் தன்மையை உருவாக்கியுள்ளார் என்பது தனிச்சிறப்பிற்குரியது.

வேற்றுமை உருபுகளில் ஐந்தாம் வேற்றுமை 'இன்' அதிகமாக பயின்று வந்துள்ளது. திருமூலர் உருபுகளை அடிப்படையாகக் கொண்டு உவமை, உருவகப்பொருள்களை விளக்கியிருப்பது மேலும் திருமந்திரத்திற்கு உயர் சிறப்புப்பெற்று விளங்குகிறது. இரண்டாவது இயலின் மூலம் பக்தி, தத்துவம், மெய்ஞானம், யோகா போன்றவற்றோடு மரபிலக்கணத்தில் ஆழ்ந்த புலமைப் பெற்ற மொழியியல் அறிஞர் என்பதையும் இவ்வாய்வில் அறியமுடிகிறது.

தொல்காப்பியர் குறிப்பிட்ட எல்லா அசைநிலைச் சொற்களும் திருமந்திரத்தில் பயன்படுத்தவில்லை. மனிதனின் உணர்ச்சிக்கு வழிவகுத்து அசைச்சொற்கள் முக்கியமான சொல்லாகக் காணப்படுகிறது. இதனோடு பிற இடைச்சொற்களாக அ, இ, அது, இது, அவை, இவை, அங்கு, ஆங்கு, இங்கு, மற்று போன்ற அசைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் அசைச்சொற்கள் திருமந்திரப் பாடலில் அதிகமாக வரவில்லை என்பது அறியத்தக்கன. அரோ, போ, மதி, இக, இகும், சின் போன்ற சொற்கள் பயின்றுவரவில்லை. இசைநிறைச்சொற்கள் இரண்டு இடங்களில் மட்டும் பயின்று வந்துள்ளன. பெரும்பாலும் இசைநிறைச்சொற்கள் திருமந்திரத்தில் இல்லை என்பது திண்ணம்.

தத்தம் குறிப்புச் சொற்களில் ஏகார இடைச்சொல்லும் உம் இடைச்சொல்லும் மட்டுமே திருமந்திரத்தில் அதிகமாக பயின்று வந்த சொற்கள் ஆகும். திருமந்திர ஐந்நூறு பாடல்களில் இரண்டில் மட்டும் இறுதியில் ஏகாரம் (பா.எண் 73,128) பயின்று வரவில்லை என்பது அறியத்தக்கது.

ஏகார இடைச்சொல் ஐந்து பொருளில் வருமெனத் தொல்காப்பியம் கூறுகிறது. அதனுடன் இசைநிறையை இணைத்து ஆறாக இலக்கண விளக்கமும், நன்னூலும் கூறுகின்றன. ஏகாரம் பல பொருளில் வழங்குவதைப் பொற்கோ அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மேலும் திருமந்திரத்தில் உள்ள இடைச்சொற்கள் தேற்றம், பிரிநிலை ஆகிய இரண்டும் அதிகமான பாடல்களில் ஒன்றாகவே வந்துள்ளன. தொல்காப்பியர் குறிப்பிடாத ஏகார இடைச்சொற்களும் பயின்று வந்துள்ளன. சா: சுட்டு ஏகாரம். மேலும் அம்ம, ஒள, உந்து, கொன், தில், எற்று போன்ற சொற்கள் திருமந்திரத்தில் பயின்று வரவில்லை.

உவம உருபுகளிலும் போல, ஒப்ப, அன்ன, ஒடுங்க, மான, நாட போன்ற சொற்களே பயின்று வந்துள்ளன.

இக்காலத் தமிழின் வளர்ச்சிநிலைக்கு ஏற்ப கி.பி. ஆறாம் நூற்றாண்டிலே திருமூலர் கையாண்டுள்ளார் என்பது மிகவும் வியப்பிற்குரியதாகவே தென்படுகிறது. சான்றாக, **அப்புறம்**, **சும்மா**, **வாள**, **இட்டு**, **வந்து**, **மாலை**, **அப்போதே**, **தொறும்**, **தோறும்** போன்ற சொற்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் ஒரே சொல்லைப்

பயன்படுத்திப் பொருளின் ஆழத்தை விளக்குவதும் அடுக்கத்தொடரில் இரண்டு முறை ஒரே சொற்களை பயன்படுத்துதலும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக **நித்தலும் நித்தலும்** ஆகும். சில சூத்திரங்கள் தேவையின் பயன்பாடு கருதியும் முக்கியத்துவம் கருதியும் பயன்படுத்தியுள்ளமை இவற்றின் வழி அறியமுடிகிறது.

எனவே திருமந்திர இடைச்சொற்களை ஆராய்ந்ததில் பெயருக்கும் வினைக்கும் இடைச்சொற்கள் இன்றியமையாத தன்மையாக விளங்குவதை அறியமுடிகிறது. மேலும் திருமூலர் எந்த அளவிற்கு சொல்லின் பொருண்மை நோக்கிற்கும் அதன் புரிதல் தன்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்து இடைச்சொற்களைக் கையாண்டுள்ளார் என்பதை இந்த ஆய்வு வைத்து தெளிய முடிகின்றது.

மேலாய்வுக்களங்கள்

1. இவ்வாய்வின் பல பகுதிகளில் 'மேலாய்வுக்குரியன' இவை தனித்தனி ஆய்வுக்கட்டுரைகளாக விரித்துரைக்கக் கூடியவை.
2. இதுவரை திருமந்திரத்தில் வினைச்சொற்கள் ஆராயப்பட்டுள்ளது. மேலும் பெயர், உரி ஏனைய இரண்டு வகையான சொற்களையும் திருமந்திரத்தில் ஆராய்ந்து முழுமையான சொல்லின் இலக்கணம் ஒன்றைத் தொகுக்கலாம்.
3. மொழி வரலாற்று நோக்கில் திருமூலரின் காலத்தில் ஏற்பட்ட மொழி மாற்றங்ளை உய்த்துணர்ந்து, இதனோடு திருமந்திரத்தின் காலச் சிக்கலைத் தீர்மானிக்கவும் இது போன்ற இலக்கண ஆய்வுகள் முற்றிலும் துணைபுரியும்.
4. திருமந்திர சொல்லடைவு என்ற அடிப்படையில் பெயர், வினை, இடை, உரி என சொல்லிலக்கண அடிப்படையில் ஆராயலாம். இவ்வாய்வு பிற்காலத்தில் தெளிவான திருமந்திர இலக்கண அகராதிக்கு வழிவகுக்கும்.

துணைநூற் பட்டியல்

முதன்மைத் தரவுகள்

ஆசிரியர்	நூல்
சு.ப. அண்ணாமலை.,	**திருமந்திரம் மூலப்பாட ஆய்வு பதிப்பு** இந்திய பண்பாடு-ஆராய்ச்சி நிறுவனம் திருவான்மியூர், சென்னை-600 041.
சேனாவரையர்(உரை).,	**தொல்காப்பியம், சொல்லதிகாரம்** சாராதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், ராயப்பேட்டை, சென்னை- 600 014.
மாணிக்கவாசகன்.ஞா.,	**திருமூலர் திருமந்திரம்** **மூலமும் – விளக்க உரையும்** உமா பதிப்பகம் சென்னை- 2016.

துணைமைத் தரவுகள்

அகத்தியலிங்கம்.ச.,	**தொல்காப்பிய உருவாக்கம்,** மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.2001
…….,	**தமிழ்மொழி அமைப்பியல்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை.2002
அறவாணன்.க.ப..,	**தொல்காப்பிய களஞ்சியம்** **தொகுதி** - 1 பாரி நிலையம் சென்னை - 1875.

ஆண்டியப்பன். தே., **காப்பியர் நெறி,**
எழுத்தியல்,
வெற்றிவேல் பிரசுரம்,
மதுரை.1977.

....., **காப்பியர் நெறி சொல்லியல்**
முத்து பதிப்பகம்
விழுப்புரம்.1977

இசரயேல். மோ., **இடையும் உரியும்**
சிந்தாமணி வெளியீடு
மதுரை.1977

இராசமாணிக்கனார். மா., **தமிழ் இலக்கணம்.,**
(மூன்றாம் இளங்கலை வகுப்பிற்கு),
நேஷனல் பப்ளிகேஷிங் கம்பெனி,
சென்னை.1967.

இராசாராம்.சு., **இலக்கணவியல்**
காலச்சுவடு பதிப்பகம்,
சென்னை- 2010

இலக்குவனார். சி., **தொல்காப்பிய ஆராய்ச்சி**
அபிராமி பதிப்பகம்
சென்னை.2005

இளங்குமரன்.இரா., **இலக்கண வரலாறு**
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை.2007

இளம்பூரணார் (உரை)., **தொல்காப்பியம் (எழுத்து)**
சாராத பதிப்பகம்
ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு
இராயப்பேட்டை
சென்னை - 600 014.

….., **தொல்காப்பியம் - பொருளதிகாரம்,**
திருநெல்வேலி,தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்,
ஆழ்வார்பேட்டை,
சென்னை.1953

இன்னாசி.சூ., **சொல்லியல்**
அபிராமி பதிப்பகம்
சென்னை.1985

கோதண்டராமன். பொன்.
பொற்கோ. டாக்டர்., **இலக்கண களஞ்சியம்,**
ஐந்திணைப் பதிப்பகம்,
திருவல்லிக்கேணி,
சென்னை.600 005.

….., **இலக்கண நோக்கில் புதிய பார்வை,**
பாரிநிலையம்,
69. பிராட்வே,
சென்னை.600 001.

கணேசையர்., **தொல்காப்பியம் - சொல்லதிகாரம்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சி.ஐ.டி கேம்பஸ்,
சென்னை. 2007

குணவீரபண்டிதர்., **நேமிநாதம்,**
அருள்வேல் அச்சகம்,
சென்னை-2004.

சண்முகம்.செ.வை., **தொல்காப்பிய தொடரியல்,**
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.2004.

....., **சொல்லிலக்கணக் கோட்பாடு – I**
அனைத்திந்திய மொழியியற்கழகம்,
அண்ணாமலை நகர்.1984

சொல்லிலக்கணக் கோட்பாடு – II
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.1986

....., **சொல்லிலக்கணக் கோட்பாடு – III,**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.1992.

சண்முகம்பிள்ளை.மு. பேரா., **தொல்காப்பியமும் தமிழ்மொழி வரலாறும்**
பாரிநிலையம்,
184\88, பிராட்வே
சென்னை – 600 108.

சிவலிங்கனார்., ஆ., **தொல்காப்பிய உரைவளம் கிளவியாக்கம்,**
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.1986

....., **தொல்காப்பிய உரைவளம் வேற்றுமையில்,**
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.1986

....., **தொல்காப்பிய உரைவளம் பெயரியல்,**
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.1986

....., **தொல்காப்பிய உரைவளம் வினையியல்,**
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.1986

….., **தொல்காப்பிய உரைவளம் இடையியல்**,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.1986

….., **தொல்காப்பிய உரைவளம் உரியியல்**,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.1986

….., **தமிழ்மொழி இலக்கண உணர்வுகள்**,
கபிலன் பதிப்பகம்,
புதுச்சேரி.2005.

சுப்பிரமணிய பிள்ளை.கா., **இலக்கிய வரலாறு**
காவ்யா பதிப்பு,
குறுத்துத்தெரு,
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,
சென்னை.2005

சுப்ரமணியன்.ச.வே.,
(தொகு..) **தமிழ் இலக்கண நூல்கள்**,
மணிவாசகர் பதிப்பகம்,
இரண்டாம் பதிப்பு
சென்னை. 2009

சுபாஷ் சந்திரபோஸ்., **சொல்லியல் ஆய்வுகள்**,
மெய்யப்பன் தமிழாய்வகம்,
சிதம்பரம்.2000.

சுயம்பு.பெ., **இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி**,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.2009

தெ.பொ.மீ., **தமிழ் மொழி வரலாறு**,
காவ்யா பதிப்பு,
கோடம்பாக்கம், சென்னை.2005

நச்சினார்க்கினியர்(உரை)., **சொல்லதிகாரம் உரை – தொல்காப்பியம்**
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
இரண்டாம் பதிப்பு - 2007
சென்னை.

நாராயண வேலுப்பிள்ளை., **திருமந்திரம்,**
எம்.வர்த்தமானன் மதிப்பகம்,
சென்னை.1997

தேவநேயப் பாவாணர்.ஞா., மொழிஞாயிறு **இயற்றமிழ் இலக்கணம்,**
தமிழ்மண் பதிப்பகம்,
இராயப்பேட்டை,
சென்னை.600 014.

நுஃமான், எம்.ஏ., **அடிப்படைத் தமிழ் இலக்கணம்,**
அடையாளம் வெளியீடு
திருச்சி.2007

பரமசிவம்.சொ., **நற்றமிழ் இலக்கணம்,**
பட்டுப் பதிப்பகம்,
ஆறாம் பதிப்பு.
சென்னை.2006

புலவர் குழு (ப.ஆ) **பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயப் புலவர் இயற்றிய சிவஞானமுனிவர் திருத்திய விரித்தியுரையும்,**
கழக வெளியீடு
சென்னை. 1974

மல்லிகா.பா **இலக்கண மரபில் இடைச்சொல்,**
பாஸ்கரன் வெளியீடு,
பாலக்காடு,
மதுரை.1981.

வரதராசன்.மு., **மொழி வரலாறு**,
பாரிநிலையம்
மறுபதிப்பு,
சென்னை. 2009

....., **மொழிநூல்**,
பாரிநிலையம்
மறுபதிப்பு
சென்னை.2009

வெள்ளைவாரனார்.க., **தொல்காப்பியம் – நன்னூல் ஒப்பீடு**,
தஞ்சைப் பல்கலைக்கழகம்.
தஞ்சை,1971.

வேல்முருகன்.ப. முனைவர்., **தமிழ் மரபிலக்கணங்களில்**
இடைச்சொற்கள் – ஓர் மதிப்பீடு
தி பார்க்கர் 293, அகமது வணிக வளாகம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை
இராயப்பேட்டை,
சென்னை – 600 014.

அகராதி நூல்கள்

இலம்போதகன்., **திவாகர அகராதி**,
முல்லை நிலையம்
சென்னை. 2005

கண்ணப்பமுதலியார். து. பாலூர்., **தமிழ் இலக்கிய அகராதி**,
திருவள்ளுவராண்டு 2041,
ரேவதி அச்சகம்,
கிழக்கு சி.ஐ.டி நகர்,
சென்னை-600 035.

கந்தையா. ந.சி., **செந்தமிழ் அகராதி**,
189- இராயப்பேட்டை ரோடு,
மயிலாப்பூர்,
சென்னை – 600 004.

கதிரைவேற்பிள்ளை. நா.,

தமிழ் மொழி அகராதி,
(செம்பதிப்பு**)**
சாராத பதிப்பகம்,
சென்னை.600 014.

கிரியாவின் தற்கால தமிழகராதி.,

தமிழ் - தமிழ் - ஆங்கிலம்,
24, கிழக்குத்தெரு,
திருவான்மியூர்,
சென்னை.600 041.

சங்கரலிங்க முதலியார்.எஸ். நெல்லை.,

வெள்ளிவிழா தமிழ்ப்பேரகராதி,
தமிழ்மண் பதிப்பகம்,
தியாகராய நகர்,
சென்னை.600 017.

சந்தியா நடராஜன்.,

தரங்கம்பாடி தமிழ் அகராதி என்கிற பெப்ரிசியஸ் அகாரதி,
சந்தியா பதிப்பகம்,
அசோக் நகர்,
சென்னை.600 083.

சந்திரசேகரப் பண்டிதர்.,

யாழ்ப்பாண அகராதி,
தமிழ்மண் பதிப்பகம்,
சிங்கார வேலன் தெரு,
தியாகராய நகர்,
சென்னை.600 017.

சுப்ரமணியன்.ச.வே.,

மெய்யப்பன் தமிழகராதி,
மணிவாசகர் பதிப்பகம்,
சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை.600 108.

மெய்யப்பன்., **தமிழ் அகராதி,**
மணிவாகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு,
சென்னை. 600 108.

ஆய்வுக் கட்டுரைகள்

ஞானமூர்த்தி.ஏ., **தொல்காப்பியம், நன்னூல், இலக்கணவிளக்கம் இடைச்சொல் ஓர் ஒப்பாய்வு,**
இலக்கண ஆய்வுக்கட்டுரைகள்,
அண்ணாமலை பல்கலைக்கழகம்,
சிதம்பரம். 1974.

சண்முகம்.செ.வை., **இடைச்சொல் உரையாசிரியர் நோக்கு,**
இந்தியத் தமிழாசிரியர் மன்றம்,
மதுரை.1987

செயராமன்.ந.வீ., **இடைச்சொல் பற்றித் தொல்காப்பியர் (கட்டுரை),**
தொல்காப்பிய மொழியியல்,
அண்ணாமலை பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.1972

சிவகாந்தன், கே.ஆர் **சித்தர்கள் தத்துவமும் யோக நெறிகளும் திருநெல்வேலி,**
தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற்பதிப்புக்கழகம்,
சென்னை.

மாணிக்கவாசகம். இரா., **திருமந்திர ஆராய்ச்சி,**
அன்னை அபிராமி அருள்,
சென்னை.1982

சிவகாந்தன், கே.ஆர்., **சித்தர்கள் தத்துவமும் யோக நெறிகளும்** திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

ஞானமூர்த்தி.ஏ., **தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம் – இடைச்சொல் ஓர் ஒப்பாய்வு,** இலக்கண ஆய்வுக்கட்டுரைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.1974

தியாகராஜன்.வே., (பதி.), **இலக்கண கட்டுரைகள்,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.2007

மாணிக்கவாசகம். இரா., **திருமந்திர ஆராய்ச்சி,** அன்னை அபிராமி அருள், சென்னை.1982

ஆய்வேடுகள்

தியாகு., **நெடுநல்வாடையில் இடைச்சொற்கள்,** இளநிலை ஆய்வாளர், (நிறைஞர்) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.2011

கீதா., **தொல்காப்பியத்தில் இடைச்சொற்கள்** முனைவர் பட்ட ஆய்வாளர், (நிறைஞர்) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.05

பின்னிணைப்புகள்

கால இடைநிலைகள்

தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் - ஏன்

(74:4, 76:4), ஏத்து**வேன்** (92:4), உணர்ந்**தேன்** (231:2), கலந்**தேன்** (279:4), கெட்**டேன்** (295:4), அறிந்**தேன்** (223:4, 457:1,2, 259:4), கண்**டேன்** (452:1,2,3,4), கற்**றேன்** (457:4).

தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று விகுதிகள்

நில்**லேன்** (28:2), அறிகி**லேன்**(78:3), விட்டி**லேன்** (310:1,2),

நிகழ்காலம்

கூறு**கின்றேன்** (2:4), நாடு**கின்றேன்** (155:4), பிதற்று**கின்றேன்** (59:1), செப்பலு**ற்றேன்** (64:4), விளம்பு**கின்றேன்** (77:4)

எதிர்காலம்

செய்**வேன்** (3:4), குடு**வன்** (49:1), வைப்**பன்** (49:1), பாடி**வன்** (49:2), ஆடு**வன்** (49:3), நாடு**வன்** (49:3), ஏத்து**வன்** (92:4)

தன்மை பன்மை வினைமுற்று விகுதிகள் - ஓம்

இறந்தகாலம்

வந்**தோம்** (70:4), களைந்**தாம்** (116:1), அறி**யோம்** (455:2)

முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் - ஆய்

நில்**லாய்** (28:2)

முன்னிலை பன்மை வினைமுற்று விகுதிகள் – ஈர், மீன்

கண்**டீர்** (316:1), கொள்**ளீர்** (313:4, 344:4, 494:4), களை**வீர்** (346:3), நில்ல**மின்** (416:1), வன்**மீன்** (416:2), உண்**மின்** (416:4, 417:2, 468:3), இடு**மின்** (417:1), என்னன்**மின்** (417:1), போற்ற**மின்** (417:2), உண்ணன்**மின்** (417:3), எண்ணு**மின்** (435:3), தொழு**மின்** (459:3), பற்று**மின்** (465:1), ஓது**மின்** (468:3), கேண்**மின்** (468:3), தேடு**வீர்** (500:2), ஏத்து**மின்** (500:3).

ஆண்பால் (படர்க்கை) வினைமுற்று விகுதிகள் அன், ஆன் உருபுகள்

இறந்தகாலம்

அளந்**தான்** (12:1,3,4, 214:2), நின்**றான்** (12:4), புணர்ந்திருந்**தான்** (25:4), வைத்**தான்** (43:4, 8:1,2,3,4, 169:4, 239:4, 272:4, 283:4), புகுந்**தான்** (45:4, 457:3), அருள்புரிந்**தான்** (55:1, 166:4), அளித்**தான்** (56:4, 120:4, 121:1,2,3,4,), மொழிந்**தான்** (83:4), பெற்**றான்** (96:4, 155:4), செய்**தான்** (99:4, 109:4, 143:3, 144:4, 146:4, 154:4, 188:1, 261:4, 234:4, 276:4, 286:4, 355:4), அறுத்**தான்** (111:4, 112:1,2, 356:3, 396:4), பதித்**தான்** (112:4), களைந்**தான்** (116:3), நயந்**தான்** (116:4), கொன்**றான்** (143:4,170:4), இருந்**தான்** (144:2,466:4), கொண்**டான்**(145:4), கொடுத்**தான்** (153:4, 184:4), வெகுண்**டான்** (157:4), அலர்ந்திருந்**தான்** (160:4, 163:4), வந்**தான்** (160:4), விளிந்**தான்** (165:3), அமர்ந்திருந்**தான்** (191:4), உமிழ்ந்**தான்** (200:1), உணர்ந்**தான்** (201:4), அமர்ந்**தான்** (202:4), படைத்**தான்** (214:1), கடந்**தான்** (214:3), நவின்**றான்** (257:4), இசைந்திருந்**தான்** (247:4), அகன்**றான்** (257:1), வனைந்**தான்** (322:3), எடுத்துரைத்**தான்** (414:4), தெரிந்துரைத்**தான்** (415:4), துறந்**தான்** (423:1), இறந்**தான்** (423:2), மறந்**தான்** (423:3), அறிந்**தான்** (423:4), அமைந்தொழிந்**தான்** (262:4), கட்டுரைத்**தான்** (411:4)

நிகழ்காலம்

அருளுகின்**றான்** (22:4, 217:4), அமருகின்**றான்** (18:4), மூட்டுகின்**றான்** (280:2), ஆலிக்கின்**றான்** (159:4)

எதிர்காலம்

அறிவிப்**பான்** (117:4), காண்**பான்** (128:1), படைப்**பான்** (197:4), அறி**வான்** (208:1,2, 429:4), செய்**வான்** (229:4), வனை**வான்** (226:1,2, 277:2), கற்பிப்**போன்** (கற்பிப்பவன்) - (314:), உணர்**வான்** (365:1,2), வரு**வான்** (424:4)

படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதிகள்

இறந்த காலம்

நின்**றார்** (3:3, 23:4, 27:4, 208:4, 218:4, 301:4, 375:4, 468:4), அறிந்தவர்**கள்** (10:3, 485:4), இறந்**தார்** (11:2), அளந்**தார்** (12:3), பெற்**றார்** (85:4, 129:4,

130:1,2,3,4), உரைத்த**னர்** (92:3), அடைந்த**ார்** (104:4), தரிசித்**தோர்** (123:1), அமர்ந்திருந்த**ார்** (124:4, 437:4), கண்ட**ார்** (126:4, 127:1,2,3,4), தெளிந்த**ார்** (165:1), குழைத்த**னர்** (217:2), கண்டிருந்த**ார்** (309:1), கொண்டிருந்த**ார்** (309:2), நின்றிருந்த**ார்** (309:3), சென்றுணர்ந்த**ார்** (309:4), உணர்ந்த**ார்** (309:4), ஒழிந்த**ார்** (318:4, 321:4, 358:4, 433:4, 496:4), உண்டார் (321:1), கொண்ட**ார்** (321:2), வைத்த**ார்**(321:1), படுத்த**ார்** (321:4), அட்டினார்**கள்** (323:4), வைத்தார்**கள்** (325:4), ஓட்டெடுத்த**ார்** (327:4), வைத்த**னர்** (333:2), இளைத்துவிட்ட**ார்** (482:4), ஒன்றன்**பால்.**

நிகழ்காலம்

அரற்று**கின்றார்** (176:4), வளர்க்**கின்றார்** (293:4), வைக்**கின்ற**னர் (320:4), பாடு**கின்றார்** (335:3), போ**கின்றார்** (460:1), உணர்**கின்றார்** (460:2), மயங்கு**கின்றார்** (462:4), வாழ்**கின்றார்** (478:1)

எதிர்காலம்

குன்**றுவர்** (413:2), தயங்கு**வார்** (29:2), ஒழி**வார்** (323:2), மூழ்கு**வர்** (330:4), நண்ணு**வர்** (315:4), விரும்பு**வர்** (354:1), உறுவார்கள் பயில்**வார்** (358:3), வீழ்**வர்** (359:4), உணர்**வார்** (365:4), உண்ணு**வர்** (370:2), அறுப்போர்கள் (379:4), நடப்**பார்** (432:1,2,3.)

வேற்றுமை உருபுகள்

எழுவாய் வேற்றுமை

களிம்பு அறுத்தான் (112:1, **சுளிம்பு** அறுத்தான் (112:2), **புலம்** களைந்தான் (116:3), **சீக்கை** விளைந்தது (320:1) **ஆக்கை** பிரிந்தது (320:2), அலகு பழுத்தது (320:2), **பந்தல்** பிரிந்தது (325:1), **கூடம்** கிடந்தது (335:1), முட்டை பிறந்தது (336:1), வேட்கை மிகுத்தது (349:1)

இரண்டாம் வேற்றுமை உருபுகள்

அடைதல் பொருளில் : ஐ (11 இடங்களில்)

தலைவ**னை** (81:4, 375:2), பதியி**னை** (113:4), மனத்**தை** (150:1), ஆதி**யை** (151:1), பழியாள**னை** (170:3), ஒருவ**னை** (270:4), ஈச**னை** (279:4), விகிர்த**னை** (391:3), சிந்தை**யை** (449:4)

உயர்வுப் பொருளில் : ஐ (32 இடங்களில்)

தன்**னை** (12:3, 147:1), பாக**னை** (15:2), ஒருவ**னை** (20:2, 149:1), அப்ப**னை** (35:1, 352:1), நந்தி**யை** (35:1, 353:3), வள்ள**லை** (35:2), முதல்வ**னை** (35:2), அரியா**னை** (37:1), உருவா**னை** (37:2), சோதி**யை** (38:1, 451 :1, 456:1), தீர்த்த**னை** (38:2), நாதர**ை** (50:1), பெருமை**யை** (77:1, 456:2), அவ**னை** (100:4), பரப்பி**னை** (283:3), நாத**னை** (376:1, 380:3), பிரா**னை** (408:1), பெருமா**னை** (426:1), அண்ண**லை** (445:4), நம்ப**னை** (453:1), தலைவ**னை** (453:2), இன்ப**னை** (453:2), அன்ப**னை** (453:4).

உவமைப் பொருளில் : ஐ (13 இடங்களில்)

நந்தி**யை** (29:3), அமுத**னை** (35:1), குசவ**னை** (252:3), முட்**டை** (297:1), பா**லை** (312:2), கோ**னை** (343:3), உல**கை** (400:3), ஆதி**யை** (243:2, 475:3, 476:3), மாக்க**ளை** (488:1), தேமாங்கனி**யை** (492:1).

வணங்குதல் பொருளில் : ஐ (11 இடங்களில்)

பாக**னை** (15:2), தன்**னை** (24:3, 42:1, 440:1, 3), நந்தி**யை** (26:3), பிரானை (47:1), முதல்வ**னை** (47:1), அமர்ந்தோ**ரை** (107:4), நாத**னை** (364:1), கூத்த**னை** (364:1)

மூன்றாம் வேற்றுமை

உடனிகழ்ச்சிப் பொருளில் :ஆல், ஒடு, ஓடு, உடன் (13 இடங்களில்)

மூவ**ரோடு** (104:1), ஒன்**றொடு** (104:2), அய**னொடு** (105:2), உல**குடன்** (1130:4), அண்ட**மொடு** (187:1), ஆதி**யோடு** (192:1), உட**லோடு** (214:4, 215:4), பூ**வுடன்** மொட்டு (281:1), சித்**தொடு** (303:1), உடம்**போடு** (350:1), கரும்**பொடு** (403:3), கண்ணி**யொடு** (449:1).

நான்காம் வேற்றுமை

அருளுதல் பொருளில் :கு (11 இடங்களில்)

தோளிக்கு(41:4) , வல்லார்க்கு (42:3,48:2), நால்வர்க்கு (55:4), நமக்கு (120:4), தனக்கு (128:1), இருவருக்கு (217:3), உலகுக்கு (251:3), உயிர்க்கு (288:2), நினைப்பவர்க்கு (355:4), கூரவல்லார்க்கு (447:3), கொள்வார்க்கு (463:1), மாதவர்க்கு (470:3).

கொடைப் பொருளில்: கு

மாலு**க்கு** (173:2), சத்தி**க்கு**(173:3), விட்டோர்**க்கு** (313:3), இரவலர்**க்கு** (431:2), பிறவிக்கு (448:1)

ஐந்தாம் வேற்றுமை

இடப்பொருளில்: இன், இல், உள், வழி, நின்று

வேள்வி**யுள்**(159:1), வேள்வி**யில்**(174:2), தன்**னில்** (212:1), திருமன்**றுள்**(121:3), கருக்கோளை**யுள்**(260:3), கோயிலுள்(327:2), அறை**யில்** (492:2), குண்டத்**தின்** (233:4), மூலத்**தின்** (261:1), பாரி**னில்** (294:2), நிலத்**தில்** (296:3), உள்ளத்**தின்** (405:1, 407:1), பள்ளத்**தில்** (407:4), சகலத்**தின்** (300:2), நரகத்**தின்** (489:3).

உயர்வுப் பொருளில்: இன், இல், உள்

அளப்**பில்** (170:2), தூரத்**திற்**(195:1), அனாதி**யில்** (232:2), நெஞ்**சில்** (232:4), ஆற்றலின் (234:1), பிறவி**யில்** (285:1), வாய்மை**யில்** (388:2), கருத்**தில்** (458:3)அன்**பில்** (485:4).

உம் – இடைச்சொல்

சிறப்பு உம்மை

சாந்து கமழ**ும்** (33:1), உமை காண ஆடி**டும்** (128:3), பொன்மன்றினூள் **ஆடும்** (129:3)

எண்ணும்மை

பகலிடத்தும் இரவும் (4:3), ஞாயி**றும்** திங்க**ளும்** தையல**ும்** (9:2), அயல**ும்** புடை**யும்** முயல**ும்** (10:1), மண் உறுவார்க**ளும்** வான் உறுவார்க**ளும்** (11:2), அமர**ும்** தேவ**ரும்** (15:3, 168:1), என்று எண்ணி**னும்** (16:3), முடி**வும்** பிறப்பை**யும்** (19:1), இடி**யும்** முழக்க**மும்** (19:3), அல்**லும்** பகல**ும்** (22:4), போற்றிசைத்**தும்** இகழ்ந்**தும்** (23:1), மண்ணகத்தான் ஒக்**கும்** விண்ணகத்தான் ஒக்கும் வேதத்தினான் ஒக்**கும்** (30:1,2), எட்டொ**டும்** (34:3), போந்**தும்** இருந்**தும்** (33:4), மூவர்க்**கும்** நால்வர்க்**கும்** (54:1), இறப்**பும்** பிறப்**பும்** (54:2), இர**வும்** பகல**ும்** (59:2), அருக்க**னும்**

சோமனும் (58:3), அகலமும் நீளமும் (77:2), முனிவரும் தேவரும் (80:2), பாட்டும் ஒலியும் பரக்கும் ஆட்டும் (90:1, 4), மாரியும் கோடையும் ஏரியும் (91:1), ஆரியமும் தமிழும் (99:3), அவிழ்கின்றவாறும் அதுகட்டுமாறும் போகின்றவாறும் (100:1), இளமையும் அந்தமும் (101:1), காலமும் நாளும் (101:2), ஆதிபிரானும் அணிமணிவண்ணமும்(102:1), விந்துவும் நாதமும் (104:3), வானவர் என்றும் மனிதர் என்றும் (107:1), சூரியகாந்தமும் சூள்பஞ்சும் (115:1), முப்பதும் ஆறும் (124:1), அங்கியும் நாளும் (133:3), எலும்பும் கபாலமும் (175:2, 3, 4), பிரமனும் மாலும் பிரானும் (176:1), தாணுவும் ஞாயிறும் தண்மதியும் (179:3), தலைவனும் ஆதியும் (200:2), போக்கும் வரவும் (204:1), ஆகாயமும் பூமியும் (211:4), நாதன் ஒருவனும் நல்ல இருவரும் (211:1), அன்பும் அறிவும் அடக்கமும் (225:1), இன்பமும் இன்பக்கவியும் (225:2), சாலும் குடமும் (226:3), இறைஞ்சினும் வேட்சியும் (246:1), நாகமும் எட்டுடன் நாலுபுரவியும் (266:1), உடல் வைத்தவாறும் உயிர் வைத்தவாறும் (279:1), ஆண்மிகிலாணாகும் பெண்மிகிற் பெண்ணாகும் அலியாகும் (287:1,2) முழுநோக்கு குறளாகும், முடமாகும், கூனாகும் (289:1), பெண்டிரும் மக்களும் (317:2), விரதமும் ஞானமும் (317:3), கண்ணாளும் மாடும் (324:3), குழலியும் மாடும் மனையும் (328:1), சுற்றமும் பெண்டிரும் மாக்களும் (330:1), அத்திப்பழமும் அறைக்கீரை நல்வித்தும் (333:1), மேலும் கீழும் (334:1), உடலும் உயிரும் (338:2), குடையும் குதிரையும் கொற்றவாளும் (339:1), ஈறும் பிறப்பும் (341:2), அருளும் அரசனும் ஆணையும் தேரும் (342:1), செல்வமும் மாடும் (347:1), கண்ணனும் காய்கதிரோனும் (358:1), விண்ணுறுவாரையும் வினைவுறுவாறையும் (358:1), வானும் நிலனும் (369:1), அரசனும் காலனும் (393:1), வாடும் புவியும் மன்னனும் (396:2), ஆவையும் பாவையும் அறவோரையும் திருவோடத்தாரையும் (398:1,2), முக்தியும் செல்வமும் (399:1), பள்ளமும் மேடும் (405:3), கிளைக்கும் தனக்கும் (425:1), மாளும் துணையும் (433:3), கெடுவதும் ஆவதும் (435:1), இடுவதும் ஈவதும் (435:1), இருத்தியும் வைத்தும் (444:2), நித்தலும் துஞ்சும் பிறப்பையும் (445:1), இகழ்ந்ததும் பெற்றதும் (447:1), பிறப்பும் இறப்பும் (455:1,3), எல்லியும் காலையும் (460:2), அறம்கேட்டும், மறம் கேட்டும், புறம் கேட்டும், திறம் கேட்டும் (467:1,2,3,4) முழுநோக்கு. அருளும் இறப்பும் பிறப்பையும் (471:1), விழுப்பமும் கேள்வியும் ஒழுக்கமும் (472:1,2), உயிரும் உடம்பும் (474:1), வினைக்கும் துயர்க்கும் (480:1), தீபமும் சித்தமும் (487:3), நூலும்

சிகை**யும்** (385:1), மந்தி**யும்** சந்தி**யும்** (389:4), முக்தி**யும்** சித்தி**யும்** (390:4), எல்லி**யும்** காலை**யும்** (460:2),

முற்றும்மை

நாள்தொ**றும்** (3:2), யாவ**ரும்** (5:2), கா**யம்** இரண்**டும்** (16:1), பொழில் ஏ**ழும்** (18:1), பரிகாரமுற்**றும்** (25:2), திசைப்பத்தை**யும்** (31:1), உலகு ஏழை**யும்** (31:2, 68:2), கீழ்திசையெட்டொ**டும்** (34:3), நல்**கும்** (41:2), பன்னா**ளும்** (42:2), எண்ம**ரும்** (50:4), எழுவ**ரும்** (52:4), நால்வ**ரும்** (53:1), எட்டுத்திசை**யும்** (55:1), அறுபத்தறு**வரும்** (91:3), பதினெட்டுப்பாடை**யும்** (93:3), ஒன்றா**கும்** (104:2), இருமை**யும்** கெட்டு (131:4), ஐந்**தும்** (133:1, 155:2, 196:3, 212:4, 264:2, 275:1, 357:1,2,3), இருபது தோ**ளும்** (154:1), ஒன்ப**தும்** (164:1), ஏ**ழும்** (171:4, 257:1), எண்திசை தாங்**கும்** (187:1), ஐந்துக்**கும்** (195:3), உலகு ஏ**ழும்** (200:1, 214:1, 216:1,2,3, 254:1, 255:1, 464:3), எட்டுத்திசையொடும் (204:1), செகமுற்**றும்** (207:2), ஐவ**ரும்** (209:1, 324:2), மூன்**றும்** (210:2, 251:3), எட்**டும்** (223:1, 232:1, 266:1, 273:1, 456:3), எழுமைக்**கும்** (228:3), மூன்றி**லும்** (231:1), மூவ**ரும்** (242:1, 300:2,3), எட்டுத்திசை**யும்** (250:1), ஐம்பெ**ரும்** (256:1), பதினெட்**டும்** (266:1), முப்ப**தும்** (276:3), ஆ**றும்** (278:1), ஆயு**ளும்** (288:1), இருவர்க்**கும்** (292:1), இருவ**ரும்** (296:1), நால்வ**ரும்** (300:1), ஒன்பது வாய்த்த**லும்** (325:2), முப்பத்தறுவ**ரும்** (327:1), ஒப்ப அனைவ**ரும்** (327:4), மாநிலம் முற்**றும்** (331:1), பருவூசி பை**யும்** (357:4), எண்ணு**ரும்** (358:4), ஈரெண்கலை**யும்** (359:1), திசைப்பத்**தும்** (365:1), பானைக்**கும்** (366:1), மூன்றிற்**கும்** (366:2), நாள்க**ளும்** (366:4), இரண்**டும்** (393:2), நீக்**கும்** (425:2), உரைசெய்**யும்** (458:3), கழிந்த**றும்** (459:2), காண**வும்** (484:1).

ஆக்கவும்மை

மூலத்துவாரத்து **மூளும்** (149:1) – எழுந்தருளுதல், மாயா விருத்த**மும்** (24:4), தேவனை ஏத்தி**யும்** (38:3), பதிவழி காட்**டும்** (44:4), உரோமம் ஒளிவி**டும்** (58:4), இமையவர் ஏத்தும் (62:3), துதி செய்யும் (:), ஆரியன் செப்பும் (132:2), உதயம் வளர்க்கும் (142:1), எங்**கும்** கலந்து (146:1), அந்தம் இல்லானும் (158:4), சேவடி ஏத்தும் (181:4), வலம்வ**ரும்** (183:4), வளர்ந்திடும் சக்தி**யும்** (198:2), இவ்வுலகம் படைக்**கும்** (200:4), எங்**கும்** நின்றவன் (202:1), ஆக்க**மும்** சிந்தையது (204:2),

உள்ளுயிர்க்**கும்** உணர்வே (227:3), ஆர்மின்கள் சேரு**ம்** (239:2), செய்திடும் (246:2), உலகு ஆக்கும் (253:2), கரு**வும்** உருவாம் (268:2), எங்கும் புகுந்து (271:2), பெருகும் குணங்கள் (278:2), கலந்து பிறந்திடும் (281:2), எங்கும் பரந்து (281:4), நின்று அளிக்கும் (298:2), அதுவாய் நிற்கும் (298:4), கருவாகிய காலத்**தும்** (310:1), துணையாய் நிற்**கும்** (442:2),

உம் – தெரிநிலை, ஆக்கம்

உருவம் வளந்**திடும்** (294:1), திரித்துப் பிற**க்கும்** (299:4),

உம் – தெரிநிலை

தெளிந்தார் கலங்**கினும்** (165:1), செய்தான் அறி**யும்** (188:1), எல்லாம் விளைக்**கும்** (207:2), புகுந்து அறி**யும்** (208:4), சிவமா**கும்** உண்மையே (237:4), தீயினைச் சேர்ந்த**தும்** (316:1), மீண்**டும்** மண் ஆனாற் (316:2).

ஏகாரம் - இடைச்சொல்

தேற்றம்

போற்றி செய்**வேனே** (3:4), தாமரை**யானே** (5:4), தண்கடல் ஆ**குமே** (9:4), கடந்து நின்**றானே** (12:4), அமருகின்**றானே** (18:4), பேணி நின்**றானே** (21:4), அருளுகின்**றானே** (22:4), புகுந்துநின்**றானே** (26:4), ஆங்கே உயிர்க்கின்ற**வாரே** (36:4), புகுந்துநின்**றானே** (39:4), நிறைந்த நின்**றானே** (41:4), மேவி நின்**றானே** (47:4), கடந்து எய்தலா**மே** (48:4), நாதரானார்**களே** (53:4), நால்வர்க்கு அருள்புரிந்**தானே** (55:4), சடை**யோடே** – ஓ (56:4), ஒளிவிடும் **தானே** (58:4), இறைவனும் **ஆமே** (59:4), சேர்ந்திருந்**தேனே** (60:4), நந்தி இணையடிக்**கீழே** (62:4), செப்பலுற்**றேனே** (64:4), யுகம் இருந்**தேனே** (65:4), தலைபடு**தானே** (66:4), பயன் அறி**வாரே** (80:4), மூவாயிரத்**திலே** (82:4), சொன்மொழிந் **தானே** (83:4), மெய்ப்பொருள் காட்ட**வே** (86:4), கண்ணனும் **ஆமே** (87:4), வேதாந்தம் ஒது**மே** (88:4), பெருக்குகின்**றாரே** (89:4), அரும்பொருள் கேட்ட**தே** (91:4), அறம்சொன்ன **வாறே** (93:4), எழுத்தது ஆ**குமே** (94:4), ஓங்கிநின் **றானே** (சிறப்பு) (95:4), சொல்லும் மகு**டமே** (உயர் சிறப்பு) (97:4) , நீர்மேல் எழுத்**தே** (98:4), கருணை செய்**தானே** (சிறப்பு) (99:4) உணர்தலும் **ஆமே** (100:4), அவ்வானவர**ாலே** (105:4), கழிவு செய்**தானே** (109:4), சலமயன் **ஆமே** (110:4), களிம்பு அறுத்**தானே** (111:4),

பதித்தான் **பதியே** (112:4), எழும் சூரி**யனாமே** (114:4), அறிந்**ததே** (116:4), சோ**ம்பே** (125:4), தூக்**கமே** (126:4), பேறுபெற்**றாரே** (129:4), பேசாப்பெரு**மையே** (உயர்சிறப்பு) (130:4), கலந்து அசத்**தாமே** (132:4), ஆண்டு கொள் அப்**பிலே** (133:4), சீவத்தில் அடங்**குமே** (134:4), திருவடி **தானே** (135:4), முட்டொளி வார்**க்கே** (136:4), சிந்தித்தல் **தானே** (137:4), எம்பிரானை சந்தித்**தே** (138:4), போயடைந்தார் வி**ண்ணே** (140:4), முன் இரு என்**றானே** (141:4), இலங்கு ஒளி **தானே** (142:4), கைக்கொண்டு கொன்**றானே** (143:4), சந்தி செய்**தானே** (144:4), உதிரம் கொண்**டானே** (145:4), நலமாய் இருந்**ததே** (149:4), கொறுக்கே அமர்**ந்தே** (150:4), பக்தி செய்**தானே** (151:4), பரிசறிவார்**க்கே** (152:4), நின்மலன் **தானே** (154:4), மாலைப் பெற்**றானே** (155:4), எழுக என்**றானே** (156:4), அருள் புரிந்**தானே** (158:4), அலர்ந்திருந்**தானே** (163:4), அருள் புரிந்**தானே** (166:4), அங்கி மிகாமை வைத்**தானே** (169:4), உடை**யானே** (உயர்சிறப்பு) (171:4), தான் கூறுசெய்**ததே** (172:4), மண் **ஆமே** (175:4), அரற்றுகின்**றாரே** (176:4), ஆண்மையாலே (178:4), நின்**றானே** (உயர்சிறப்பு) (179:4), தன்மையது **ஆமே** (182:4), கூடலும் **ஆமே** (183:4), ஒளியை வென்**றானே** (உயர்சிறப்பு) (185:4), தலைவனும் **ஆமே** (190:4), சாத்துமான் **ஆமே** (195:4), புவ**னமே** (196:4) , அப்புண்ணியன் **தானே** (197:4), எழும் பூ**விலே** (198:4), பிறப்பு **ஆமே** (199:4), படைக்கும் பொ**ருளே** (200:4), தெளிந்**தேனே** (203:4), நன்று உயிர்ப்**பானே** (205:4), அளித்**தலே** (211:4), செய்**வாரே** (212:4), போதமும் **ஆமே** (213:4), உயிர் **தானே** (214:4,216:4), நின்**றானே** (215:4), அருளுகின்**றானே** (218:4), வினையவல்**லானே** (226:4), அம்பு **தானே** (230:4), கோலிக் கொண்**டாளே** (233:4), அருள் உண்**மையே** (235:4, 236:4), சிவமாகு உண்**மையே** (237:4), அப்பா**ழிலே** (238:4), ஆக்**குமே** (241:4), ஆகி நின்**றானே** (255:4,256:4), ஆவது அறிந்**தே** (260:4), ஓடி விழுந்**த்தே** (263:4), உள்ளம் ஒளித்**தே** (264:4), கொண்ட **போதே** (265:4), பேரரசு ஆளு**மே** (267:4), சொ**ல்லே** (269:4), நாடுகின்**றேனே** (270:4), சுடாமல் வைத்**தானே** (272:4), அது **ஆமே** (273:4), முட்டை செய்**தானே** (274:4), விளைந்தது **தானே** (277:4), ஆனது பிண்**டமே** (278:4), கை கலந்**தேனே** (279:4), பற்**றுமே** (281:4), கா**ணுமே** (282:4), வகுத்து வைத்**தானே** (283:4), வகுத்திருந்**தானே** (284:4), மாண்பது **ஆமே** (285:4), ஆண்**மையே** (286:4),

பாய்ச்சலும் **ஆமே** (288:4), பார்க்**கிலே** (289:4), குழவிக்**கே** (290:4), தால்வினை உ**ள்ளே** (293:2), பால்வளர்ந்து**ள்ளே** (293:3), போல்வளர்ந்து**ள்ளே** (293:4), உரு **ஆமே** (293:4), ஓதலும் **ஆமே** (296:4), வளர்க்கின்ற**வாறே** (297:4), ஆப்பி**ரானே** (298:4), திருவளு**ளாலே** (299:4), மன்**றதே** (322:4), நடக்கின்ற**வாறே** (326:4), ஓட்டெடுத்**தாரே** (327:4), தீவைத்தார்**களே** (335:4), கூப்பிடு**மாறே** (338:4), ஆருயி**ராமே** (339:4), செல்வம் **ஆமே** (343:4), கண்டு கொள்**ளிரே** (344:4), **ஆமே** (346:4,395:4), கூறலும் **ஆமே** (348:4), இன்பம் செய்**தானே** (355:4), விரும்புவன் **நானே** (356:4), இரந்து கண்**டேனே** (360:4), மேல் சென்ற**னவே** (366:4), கடல் **தானே** (377:4), அறுப்போர்**களே** (379:4), இன்புற்வார்**களே** (380:4), தூய்மறையோர்க்**கே** (381:4), அந்தண**ராமே** (388:4), பண்**ணுமே** (389:4), திருவுடை**யோரே** (391:4), தான**ன்றே** (396:4), நாட்டிற்**கே** (397:4), பாவகத்**தானே** (400:4), வேந்தன் க**டனே** (401:4,402:4), கழுமணி **ஆறே** (404:4), சிந்தையு**ளானே** (406:4), பந்தருள் **ஆமே** (407:4), புண்ணியன் **ஆமே** (408:4), தாற்றது**ஆமே** (410:4), நந்தியெடுத்துரைத்**தானே** (414:4), நந்திதெரிந்துரைத் **தானே** (415:4), தலைப்பட்ட **போதே** (416:4), காலம் அறி**மினே** (417:4), பரன் **ஆமே** (418:4), இன்னுரை **தாதே** (419:4), செய்யும் **நீரே** (422:4), மேல்துணை **ஆமே** (425:4), வழிகொள்ளு **மாறெ** (426:4), ஓங்கி நின்**றாரே** (432:4), அது **ஆமே** (435:4), விற்குறி **ஆமே** (436:4), அன்பே சி**வம்** (437:2), பேரன்பு **தானே** (438:4), அன்பினில் நின்**றானே** (442:4), விண்ணவர் **கோவே** (444:4), துணை **ஆமே** (446:4), நாடு மின் **நீரே** (449:4), முன்பு நின்**றானே** (451:4), அன்பின் உ**ளானே** (452:4), மஞ்சனம் **ஆமே** (456:4), உள ஆகு**மே** (458:4), மனவிளக்கு **ஆமே** (459:4), நல் கல்**வியே** (461:4), மயங்குகின்றார்**களே** (462:4), தண்மை வல்**லானே** (464:4), உற்றுநின்**றாரே** (465:4), பற்றது **ஆமே** (469:4), ஆதபி**ரானே** (470:4), பிறப்பில்லை **தானே** (474:4), பசு **ஆமே** (475:4), அற்ற**வாறே** (492:4), இயங்குகின்றார்க்**கே** (499:4).

தேற்றம், பிரிநிலை

யான் கூறுகின்**றேனே** (2:4), இல்லை **தானே** (8:4), நந்தி**தானே** (10:4), அருள் பெறலா**மே** (35:4,38:4), அறிவது **தானே** (49:4), எண்மரும் **ஆமே** (50:4), அருளால் அளித்**ததே** (57:4), நாமங்கள் ஓதி**யே** (61:4), ஓதலும் **ஆமே** (67:4),

விளங்கியிட்**டேனே** (69:4), வந்**தோமே** (70:4), செப்பவந் **தேனே** (74:4), வான்வழி ஓடுவந்**தேனே** (76:4), விளிம்புகின்**றேனே** (77:4), தேடுகில்**லேனே** (78:4), நண்ணுவ நன்**றே** (81:4), தருமவை **தானே** (82:4), நிராமயத் **தோரே** (84:4), வீடு பெற்றார்**களே** (85:4), இரக்கல் உற்**றாரே** (90:4), நந்தி பெற்**றானே** (96:4), அறிய நின்**றானே** (101:4), பிணங்குகின்றார்**களே** (102:4), குருபரன் **ஆமே** (117:4), வித்து **ஆமே** (118:4), சிவயோகியர்**களே** (119:4), நமக்கு அளித்**தானே** (120:4), அருள்வெளி **தானே** (121:4), சிவசித்தர் **தாமே** (122:4), அமர்ந்திருந்தாரே (124:4,437:4), அட்டினார்**களே** (333:4), பக்கல் தாழகி**லாவே** (430:4), கல்வி கற்**றேனே** (457:4), காண ஒண்**ணாதே** (479:4), இருத்**தலே** (490:4), அற்ற**போதே** (500:4).

பிரிநிலை

எட்**டே** (1:4), நீங்கி நின்**றேனே** (4:4), கண்டு நின்**றானே** (13:4), ஈசன் அருள் எனக்**கே** (26:4), வணங்கி நின்றார்க்**கே** (27:4), விளங்க வைத்**தானே** (43:4), மனம் புகுந்**தானே** (45:4), இன்பம் **தானே** (46:4), நான் இருந்**தேனே** (51:4,71:4), என்வழி **ஆமே** (52:4), தூர் அறிந்தார்**களே** (103:4), பெயர் **தானே** (104:4), நல்கிடு என்**றானே** (106:4), உணர்வது **தானே** (107:4), பிதற்றுகின்**றாரே** (108:4) , பசு , பாசம் நில்**லாவே** (113:4), ஆழி செய்**தானே** (146:4), சினஞ்செய்த **போதே** (157:4), அழிந்த நல்**லோரே** (161:4), கொடியது **வாமே** (162:4), பொன்றும் படிக்**கே** (164:4), விருத்தி கொண்**டானே** (170:4), தரித்தனன் கோல**மே** (173:4), உக்கரத்**திலே** (174:4), விரிசடையோற்**கே** (187:4), விந்து**வே** (193:4), ஆதி இ**வனே** (217:4), அண்ணல் செய்**வானே** (229:4), அறி**போரை** (242:4), சுகமறிந்**தேனே** (259:4), ஒன்று செய்**தானே** (276:4), கால் ஏக்**கிலே** (291:4), அழுது அகன்றார்**களே** (325:4), அகன்**றாரே** (328:4), கேடு அறி**யிரே** (336:4), கைவிட்ட**வாறே** (345:4), மறையோர்கள் **தாமே** (381:4), மீளா நர**கமே** (398:4), ஆறில் ஒன்று **ஆமே** (399:4), கல்வி இ**லோரே** (405:4), பயன் அறி**யாரே** (420:4), அளவு அறி**யாரே** (423:4), பகைமன்னி நின்**றானே** (429:4), எய்த ஒண்**ணாதே** (439:4), அன்பு

எனக்**கே** (441:4), அகலிடம் **தானே** (443:4), காணகி**லாரே** (477:4), கலப்பு அறி**யாரே** (478:4), கருத்தறி**யாரே** (484:4), இடர் உற்ற**வாரே** (491:4), மாற்றகி**றாரே** (493:4).

பிரிநிலை, தேற்றம்

தமிழ் செய்யு**மாறே** (63:4), பத்தியி**னாலே** (72:4), ஏத்துவன் **நானே** (92:4), அற்ற மலங்க**ளே** (115:4), முப்பத்**தாறே** (123:4).

ஈற்றசை

இல்லை **தானே** (16:4), கூடலும் **ஆமே** (20:4), காதலித்**தானே** (30:4), பாடலும் **ஆமே** (31:4), வாள் கொடுத்**தானே** (153:4), ஓடிவந்**தானே** (160:4), தூமொழி**யாலே** (165:4), அஞ்சல் என்**றானே** (167:4), பொய் மொழிந்**தானே** (177:4), நாட ஒண்**ணாதே** (180:4), அதே முகம் **ஆமே** (189:4), அமர்ந்திருந்**தானே** (191:4), திகழ் நா**தமே** (192:4), தூராதி தூர**மே** (194:4), படைத்**தானே** (254:4), பாகம் செய்**தானே** (261:4), பன்றியும் **ஆமே** (266:4), ஆ**னதே** (268:4), ஒழிந்**தானே** (271:4), எவ்**வாறே** (295:4), கிடந்தொழிந்**தாரே** (321:4), விடைகொள்ளு**மாறே** (324:4), ந**ன்றே** (342:4), கைவிட்ட **வாறே** (349:4), ஈர்ந்தொழிந்**தானே** (358:4), மயங்கிய**வாறே** (363:4), ஒன்று அறி**யாரே** (409:4), முடிவது **தானே** (448:4).

வினா ஏகாரம்

என்னே பிற**வி** (63:4), உணரலும் **ஆமே** (79:4), அறி**வாரே** (294:4), நன்னெஞ்சி**னிரே**? (431:4).

எதிர்மறைப் பொருள்

யாரறி **வாரே** (147:4), நணுகிநில்**லானே** (393:4), நமன் வரு**வானே** (424:4).

பிற இடைச்சொற்கள்

அ - சுட்டிடைச்சொல்

அச்சடைமுடி (5:4), **அப்**பரிசு (35:4), அப்பொதியின் **கீழே,** (75:4), **அப்**பொதுவினுள் (116:3), **அப்**பெரும்பேறு (130:3), **அப்**பினிற் (134:1,3), **அத்**தீயினுள் (148:4), அப்புவனம் (197:4), அவ்வழி (228:3), **அவ்**விடம் (238:1), **அவ்**வண்ணம் (249:4), **அச்**சோதிதன் (286:4), **அச்**சகலத்தர் (305:3), ஒன்பதுபேரும். **அப்**பெண்டிரு (317:2), அப்**போதே** (339:3), **அத்**தண்சுடர் (376:3), **அத்**தன்சிவன் (402:2), **அவ்**வேந்தன் (402:4), **அக்**கேடு (425:3), **அவ்**வொளி (449:1), **அத்**தகு (451:1), **அக்**குழி (500:2, 4).

இ - சுட்டிடைச்சொல்

இவ்வுலகம் (141:1), **இவ்**வுலகத்து (169:2), **இக்**காயப்பை (250:3), உடம்பு. **இவ்**வுலகை (400:3).

இங்கு

எனக்**கிங்கு** (57:4), மாலாங்கனே**யிங்கு** (74:1), வண்மைக்**கிங்கு** (171:1), **இங்கி**ல்லை (335:1), என்னா**திங்கு** (422:1)

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவு இலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே.

Please SCAN to read:
திருமந்திரம்

ISBN 978-93-950540-0-3